# ஸ்ரீ ஆக்னேய புராணாந்தர்கதமான

# துலாகாவேரி மாஹாத்மியம்.



भागीरथि नमस्तुभ्यं । विष्णुपादाब्जसंभवे ।
भक्ताभीष्टप्रदे देवि । गङ्गे त्रिपथगामिनि ॥

உ

ஸ்ரீ கிருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ ஆக்னேய புராணாந்தர்கதமான
# துலாகாவேரி மாஹாத்மியம்.

இஃது
மதுரை, பிரம்மஸ்ரீ புரோஹிதம்
ராம. சே. கிருஷ்ணய்யங்கார் அவர்களால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இந்நூலானது
பிரம்மஸ்ரீ புரோஹிதம் கி. விடோபாச்சாரியார்
அவர்களால் பரிசீலிக்கப்பட்டு
வெளியிடப்பட்டது.

ஸார்வரிஹு ] 1960. [ ஐப்பசி மீ

உ

# முகவுரை.

மஹா தபஸ்ரேஷ்டரான அகஸ்திய மஹாமுனிவர், தனது கருணையுள்ளத்தால் பவக்கடலில் சுழலுகின்ற மாந்தர்களைக் கரையேற்ற, ஹரிச்சந்திர மஹாராஜனுக்கு எடுத்துரைத்த, **துலாகாவேரி** மாஹாத்மியம் என்ற திவ்யசரிதையை, வடமொழியிலுள்ள **ஆக்கினேய புராணத்திலிருந்து** தமிழ் மொழியில் உள்ள ஏட்டுப் பிரதியை அனுசரித்து வசன ரூபமாக எழுதி அச்சிட்டு வெளியிடவேண்டுமென்று அநேகர் வேண்டுகோளுக்கிணங்கி, இப்புத்தகம் **ஈஸ்வரி ஸ்ரீமதிகள் அவர்களின்** பொருளுதவியினால், தரும விநியோகத்தின் பொருட்டு, சுருக்கமாகவும் பொருட்சுவை குறையாமலும், இஃது மதுரை, பஞ்சாங்க கணனம் பிரம்மஸ்ரீ புரோஹிதம் கி. விடோபாச்சாரியாரவர்களின் பரிசீலனை பெற்றும், **பிரம்மஸ்ரீ புரோஹிதம் வெ. ராமய்யங்கார் அவர்கள்** உதவியாலும், எனக்குத் தெரிந்தவரையிலும் எழுதி அச்சிட்டு வெளியிட்டிருப்பதை, குணகுணங்களை ஆராய்ந்தறியத்தக்க மஹான்கள் இந்நூலில் ஏதேனும் பிழையிருப்பின் க்ஷமித்து ஆதரிக்க வேண்டுகிறேன்.

இப்படிக்கு,

**புரோஹிதம் ராம, சே, கிருஷ்ணய்யங்கார்,**

**மதுரை.**

ஸ்ரீ பு. ராம. சே. கிருஷ்ணய்யங்கார் எழுதிய

## துலாகாவேரி புராணத்தை வியந்து

### இராமநாதபுரம் வித்வான் V. K. ஸ்ரீனிவாஸய்யங்கார் அவர்கள் இயற்றிய சிறப்புரை.

வெண்பா.

---

செய்யதுலாக் காவேரிச் சீரதனைப் பாரறிந்து
உய்யத் தமிழ்மொழியில் உன்னதமாய்ச்—செய்தளித்தார்
வையம் புகழ்கூடல் வாழ்கிருஷ் ணய்யங்கார்
மெய்யன் புடனே விழைந்து.

மன்னுவிடோ பாச்சாரி வாழ்ராம அய்யங்கார்
என்றதிரு நாமம் இணைந்துவளர்—கின்றவரின்
தன்துணையாற் காவேரி தன்சரிதம் கிர்ஷ்ண வள்ளல்
இன்றச்சிட் டீந்தார் இனிது.

---

### மதுரை, செந்தமிழ்க்கல்லூரி மாணவர் ஸ்ரீ பி. கே. இராசாராம் இயற்றிய

எண்சீர் ஆசிரிய விருத்தம்.

---

பூவிரிந்து மணங்கமழும் மலர்மாலை கொண்ட
புகழ்சோழர் அரசிருந்த எழில்நாட்டி லோடும்
காவிரியின் புகழ்க்கதையைப் படிக்கின்ற மக்கள்
களிப்பெய்தி எந்நாளும் இன்பமுடன் வாழ,
நாவலரும் புகழ்பாடும் பாவலனின் பின்னே
நயந்தேகிச் சென்றவனும் நான்மறையைக் காத்த
மாவலனும் திருமாலே, மருள்தீர்த்து வண்ண
மலர்க்கண்ணால் அருள்செய்க, அருள்செய்க! மாதோ.

உ

ஸ்ரீஜெகதீஸ்வரி.



**வித்வான் V. K. S. அவர்கள் இயற்றிய சிறப்புரை**

**வெண்பா.**

தக்கபுக ழீஸ்வரி தன்குடும்ப ஸ்ரீமதிகள்
மக்களக மெல்லா மணந்துய்ய—மிக்கநிதி
தந்துதுலாக் காவேரி தன்சரிதை யிங்கொளிரத்
தந்து மகிழ்ந்தனரே தாம்.

மதுரை, ஸ்ரீ ஈஸ்வரி குடும்பத்தினர்களுக்கும், இப்புண்ணிய துலாகாவேரி மாஹாத்மியத்தை அச்சிட்டு வெளியிடப் பொருளுதவி செய்த ஸ்ரீமதிகளுக்கும், ஸ்ரீ இராமநாதருடைய அருளால், யான் என் மனமார்ந்த ஆசியைக் கூறுகிறேன்.

இப்படிக்கு,

வித்வான் V. K. ஸ்ரீனிவாஸய்யங்கார்,

இராமனுதபுரம்.

ஓம் தத் ஸத்.

ஸ்ரீ

ஸ்ரீ வேங்கடேஶாய பரப்ரஹ்மணே நம:



# ஸ்ரீ ஆக்னேய புராணாந்தர்கதமான

# ஸ்ரீ துலாகாவேரி மாஹாத்மியம்.

शुक्लांबरधरंविष्णुं शशिवर्णंचतुर्भुजम् ।
प्रसन्नवदनंध्यायेत् सर्वविघ्नोपशान्तये ॥

ஶுக்லாம்ப3ரத4ரம்விஷ்ணும் ஶஶிவர்ணம்சதுர்பு4ஜம் ।
ப்ரஸன்னவத3னம்த்4யாயேத் ஸர்வவிக்4னோபஶாந்தயே ॥

அகஸ்திய நாரதர்களால் ஹரிச்சந்திர மகாராஜனுக்குத்
துலாகாவேரி ஸ்நாந மகத்துவம்
விதிக்கப்பட்டது.

# 1-வது அத்தியாயம்.

श्री शूतः ॥

धर्मवर्माथराजर्षिन्निचुळापुरवल्लभः ।
भूयःपप्रच्छतंनत्वा दाल्भ्यंभागवतोत्तमम् ॥

*ஸ்ரீ ஸூதர் :*

*த[4]ர்மவர்மாத[2]ராஜர்ஷிர்நிசுளாபுரவல்லப[4]: |*
*பூ[4]ய:பப்ரச்ச[2]தம்நத்வா தா[3]ல்ப்[4]யம்பா[4]க[3]வதோத்தமம் ||*

---

*ஸ்ரீ ஸூதபுராணிகர் சௌநகாதி ருஷிகளை நோக்கிச் சொல்லுகிறார்: உறையூர் நகருக்கு அரசரான தர்மவர்மா என்பவர் பாகவதோத்தமரான தால்பிய மகாருஷியைப் பணிந்து, அனந்த திவ்விய சரித்திரத்தைச் சிரவணித்துப் பின்னும் தர்மவர்மா என்பவர் தால்பிய முனிவரைப் பார்த்து வினவியதாவது:— "சுவாமி! பிராணிகள் அனைவரும் எந்த உபாயத்தினால் இவ்வுலகில் அளவற்ற செல்வத்தையும், சத்புத்திரரையும், ஆயுள் விருத்தியையும் பெற்று மகாசுகசாலிகளாய் இருப்பார்கள்? எவ்விதத்தினால் சகல பாபங்களும் நிவாரணமாகும்? திருமகள் கேள்வனை திருமாலிடத்தில் பக்தியுண்டாவது எங்ஙனம்? எவ்வித தர்மம் செய்வதனால் அக்கடவுள் சந்துஷ்டியடைந்து, மனிதர்களுக்குப் பக்தியையும் முக்தியையும் அளிக்கக் கிருபை கூறுவார்? மேலும், பாபமே ரூபமாயிருக்கிற இக் கலியுகத்தில் கேவலம் பஞ்சமகா பாதகர்களாயிருந்தபோதிலும் அவர்களது பாபங்களையெல்லாம் போக்கி, அவர்களை முக்தியடையச் செய்விக்கவல்ல உபாயம் யாது? இவைகளையெல்லாம் தமது சிஷனை அடியேனுக்குத் தேவரீர் கருணை கூர்ந்து ஸவிஸ்தாரமாய்க் கூறியருள வேண்டும் என்று கேட்கவே, பிராம்மணோத்தமரான தால்*

ஷியரும், தர்மவர்மாவை நோக்கி, ஓ! இராஜசிரேஷ்டரே! உமக்குப் பகவானுடைய திவ்ய சரித்திரங்களைக் கேட்க வேண்டுமென்கிற ஆசை அதிகமாயிருப்பதினால், அவைகளைத் தெரிந்தவரை யான் உனக்கு வெகு சந்தோஷத்துடன் சொல்லுகின்றேன் கேளும்.

## ஹரிச்சந்திரன் கிந்தமரை அவமதித்த பாவம் போக்கிக்கொண்டது.

முன் ஒருகாலத்தில் குருக்ஷேத்திரத்திரத்தில் சத்திய சந்தனாகிய ஹரிச்சந்திர மகாராஜன் அநேக ரிஷிகளின் முன்னிலையில் அகஸ்தியமாமுனிவரை நோக்கி, இதே விஷயத்தைக் கேட்க அகஸ்தியரும் அதனைச் சவிஸ்தாரமாய்ச் சொல்லியருளினார். அதனை யான் இப்பொழுது நன்றாய் உமக்குப் புகலுகின்றேன்; கேட்பீராக:— முற்காலத்தில் அயோத்திமா நகரத்திற்கு அரசனாய் எங்கும் புகழ்பெற்று வாழ்ந்திருந்த ஹரிச்சந்திர மகாராஜன் அசுவமேத யாகத்தைச் செய்யக் கருதி, மகாபுண்ணிய க்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திர மென்னுமிடத்திற்குச் சென்று, அங்கிருந்த சௌநகாதி முனீஸ்வரர்களைக்கிட்டி, மனக்களிப்புடன் அவர்கள் அனைவரையும் நமஸ்கரித்து, மிக வணக்கத்துடன் நின்றான். அங்ஙனம் நின்ற அரசனை அவ்வுத்தம முனிவரர்கள் பார்த்து, ஹே ஹரிபக்த சிரோன்மணியான ஹரிச்சந்திர மகாராஜனே வருவாயாக; உனது நாட்டிலுள்ள பிரஜைகள் யாவரும் சுகமாயிருக்கிறார்களா? உனது பகைவர் எல்லோரும் உன்னால் ஜயிக்கப்பட்டு வருகிறார்களா? தனதான்யாதி கோசங்களும் சேனைகளும

அபிவிருத்தியடைந்து வருகின்றனவா? பந்துக்களையும் நேசர்களையும் பரிபாலித்து வருவதோடு, குடிகளிடத்தில் ஆறிலொரு கடமைவாங்கி அவர்களைப் போஷித்து வருகிறாயா? ஏனெனில் யாவனொருவன் தனது குடிகளைப் பாது காக்காமலிருக்கிறானோ அவன் ஓர் பிரம்ம கல்பம்வரையில் பலவித நரகானுபவங்களை அனுபவித்துக் கடைசியில் நீச யோனியில் பிறப்பான். அப்படி அல்லாமல் குடிகளை முறைப்படிப் பாதுகாத்துப் பிராமண பக்தி மேலிட்டிருப் பவனெவனோ அவன் பெரும்புகழையும் நீடியவாழ்வையும் அடைவான். மேலும் நீயோ பிராமண பக்தியுடையவனா யும், பொறுமை, தவம், ஈகை, உறுதி, வீரம் முதலியவை களுக்கு இருப்பிடமாயும், நல்லோர்களால் கொண்டாடப் பட்டவனாயும் இருக்கிறாய்; உனக்கு யாது குன்றயிருக்கின் றது? என்றிவ்வாறு அவனைப் புகழ்ந்து கொண்டாடிப் பின், அம் முனிவர்கள் எல்லோரும் அவனுக்குத் தருமத் தின்படி அதிதி பூஜையியற்றி ஆசனமொன்றளிக்க, அரச னும் அதில் இருந்துகொண்டு அவர்களை நோக்கி, பக்தி யுடன் வணங்கி, "அடிகளே! தபோமூர்த்திகளும் லோக பூஜ்ஜியருமான தேவரீரைத் தரிசித்தமாத்திரத்தில் நான் தன்யனும், அருள்பெற்றவனும், பரமபவித்திரனுமாயி னேன். தாங்களெல்லோரும் இவ்வுத்தம க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருப்பீரென்றே இங்கு வந்தேன். அடியேன் விண்ணப்பமொன்றுண்டு. அதனைச் செவிசாய்த்து அதற் கிணங்குமாறு செய்தருளவேண்டும். ஓ விப்பிரோத்தமர் களே! கடுமையான குடும்ப பந்தங்களை எவ்வாறு கடப் பேன்? புத்தி முக்திகள் எவ்வாறு லபிக்கும்? சிரஞ்சீவி பதம் எப்படி லப்தமாகும்? குலவிருத்தியாவது எங்ஙனம்?

எந்த உபாயத்தினால் ஸ்ரீ ஹரியானவர் பிரீதியடைந்து சகலபாக்கியத்தையும் அருளுவர்? இதனை யோசித்து, தருமசாரமான ஒன்றினை எனக்கு உபதேசிக்க வேண்டும்" என்று வினயபூர்வகமாய்க் கேட்டனன்.

அவர்களும் அவனை நோக்கி, இராஜசிகாமணியே! இப்பொழுது நீ தர்மபுத்தியோடு கேட்டவை மிகவும் சிறந்தன. நீ அசுவமேத யாகத்தை முறைப்படி செய்வாயாகில், அதனால் ஜகதீசன் அதிக திருப்தியடைந்து, இவ்வுலகத்தில் சகலவித நன்மைகளையும் கொடுத்து, மறுஜன்மத்தில் மோக்ஷசாம்ராச்சியத்தையும் அளிப்பார். மேலும், இந்த வேள்வியைச் செய்பவன் பிரமஹத்தியாதி பாபங்களைச் செய்திருந்தபோதிலும், அவைகள் நீங்கிப் பரிசுத்தனாவான் என்றார்கள். இதனைக்கேட்ட அரசனும் அவர்களை நோக்கி, "தபோதனர்களே! தேவரீர் கட்டளையிட்டபடியே அடியேன் அசுவமேத யாகத்தை இந்த க்ஷணமே செய்ய விருப்பமுள்ளவனாயிருக்கிறேன். ஆனாலும் சகலமும் தெரிந்த நீங்கள்தான் அதனை முறைப்படி செய்வித்துக்கொடுத்து அடியேனைக் கிருதார்த்தனாகச் செய்ய வேண்டும்" என்று பணிந்து வேண்டிக்கொண்டான். இத்தருணத்தில் அங்கு நைமிசாரணியவாசிகளான ரிஷிகள் பலரும் சூதபுராணிகரை முன்னிட்டுக்கொண்டு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் யாவரெனில், வசிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காஸ்யபர், பிருகு, விசுவாமித்திரர், துர்வாஸர், ஹாரீதர், அத்திரி, மங்களர், வீதிஹோத்திரர், காவலர், மார்க்கண்டேயர், அஸிதர், கண்வர், ஸிதர், யாஜர், உபயாஜகர், பரத்வாஜர், கௌதமர், பைலவர், பராசரர்,

வியாசர், சாதாதபர், முத்கலர், மௌத்கலர், கஷவர், வால்மீகர், வாருணர், அகஸ்தியர், மதங்கர், ஜாதகர்னர், ஸுதீக்ஷணர், சதாநந்தர், சத்தியவிருத்தர், சத்பதபஸ், ஆசுரி, நாரதர், கவிதௌமியர், ஆங்கிரசு, காளிந்தர், மாண்டவியர், கர்க்கர், கதக்ஷதர், ஹோரதா, தூமகேது, ஜலப்லவர், ஊர்த்துவதேஜஸ், மகாதேஜஸ், சங்கர், விதிதர், போதாயனர், யாக்கியவல்கியர், யக்ஞியகேது, மரு, க்ரது, புலஸ்தியர், புலகர், கௌசர், ஆச்வலாயனர், ஆபஸ்தம்பர், யக்யராசி, மரீசி, பப்ரு, முதலானவர்கள்தாம். இவர்களுள் சிலர் சகல வேத வேதாந்த தத்துவங்களை கரைகண்டவர்களாயும், சிலர் சன்னியாசிகளாயும், சிலர் வானப்ரஸ்தர்களாயும், சிலர் பிர்ம்மசாரிகளாயும், சிலர் வாயு பக்ஷணர்களாயும், சிலர் உதிர்ந்த இலைகளைப் பக்ஷிப்பவர்களாயும், சிலர் சமதமாதி குணங்கள் பொருந்தினவர்களாயும் இருந்தார்கள். இம்முனிகணங்கள் தங்கள் தங்கள் சிஷ்யப்ரசிஷ்யர்களுடன் குருக்ஷேத்திர வாசிகளான ரிஷிகளிடத்தில் துலாகாவேரி மகத்துவத்தைக் கேட்கும்படிவர, அவர்கள் வரவைக் கண்டவுடன் குருக்ஷேத்திரவாசிகளான ரிஷிகளும் எதிர் சென்று அழைத்துவந்து, அவரவர்களைத் தக்க ஆசனங்களில் இருக்கச்செய்து அர்க்ய, பாத்ய, ஆசமநீயாதி உபசாரங்களைச் செய்து, ஒருவர்க்கொருவர் குசலப்பிரசினை செய்துகொண்டார்கள். பின்பு ஹரிச்சந்திர மகாராஜனும் அங்கு வந்த முனிவர்கள் எல்லோருக்கும் வந்தனம் புரிந்து சொன்னதாவது:—

"ஓ! மகாரிஷிகளே! அடியேன் யாது தவம் செய்தேனோ நீங்கள் எல்லாம் திருக்கூட்டத்துடனே இங்கு இப்பொழுது எழுந்தருளப்பெற்றேன். இன்று அடியே

னுடைய ஜன்மம் ஈடேறிற்று. அடியேனுடைய பிதிர்க்களும் திருப்தியடைந்தனர். தங்களைத் தரிசித்த அடியேனுக்கு ஸாக்ஷாத் மகாவிஷ்ணுவே பிரத்தியக்ஷமானார் போலும். கேவலம் மூடனும் ஐசுவரிமத்தனுமான அடியேனுக்குச் சாதுக்களான தங்களுடைய திவ்ய சாணாரவிந்த தரிசனங் கிடைத்தது ஜன்மாந்திரத்தில் செய்த புண்ணிய பலன்தான்" என்று பலவாறு கொண்டாடிக் கைகட்டி வாய்புதைத்து நின்றான். உடனே ரிஷிகளும் அவனை நோக்கி, வாராய் ஹரிச்சந்திர ராஜனே! வசிஷ்டசிஷ்யனான உனக்கு நாங்கள் சொல்லத்தக்கது ஒன்றுமில்லை. இதோ! இந்த ஆசனத்தில் அமருவாய்; என்று அவனுக்கு ஓர் ஆசனம் கொடுக்க, அதில் அவன் உட்கார்ந்தபின், சௌநகர் என்னும் ரிஷியானவர் நாரதர் அகஸ்தியர் இவ்விருவரையும் நோக்கி, "ஓ! அகஸ்திய நாரதர்களே! இவ்வரசன் இப்பொழுது அசுவமேத யாகஞ் செய்யக்கருதி இங்கு வந்திருக்கின்றான்; இவனோ மகாதயவுடையவன்; தர்மிஷ்டன்; சத்தியவிரதன்; என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம். நீங்களும் இப்பொழுது இங்கு தற்செயலாய் வந்திருக்கிறீர்கள். ஆகையால் அவனது யாகத்தை நிறைவேற்ற வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

இதைக்கேட்ட நாரத அகஸ்தியர்களும் அவரை நோக்கி, முனிவரே! இவ்வரிச்சந்திர ராஜன் மிக்க புண்ணியவான்; அசுவமேத யாகம் புரிய யோக்கியமானவன்தான் சந்தேகமில்லை. ஆகிலும் இவன் முன்னம் விசுவாமித்திரரிடத்தில் கடன்பட்டு, அவரால் துரத்துண்டு, காடு காடாய்

அலைந்து, பசிதாகத்தினால் வருந்தி, மனஞ்சோர்ந்து இருக்குங்காலத்தில், அங்குத் தவம்புரிந்துகொண்டிருந்த சிந்தமர் என்னும் ரிஷீஸ்வரரைக்கண்டு தனது புத்தி சுவாதீனமில்லாமலிருந்தபடியால் அவருக்கு மரியாதை செய்யாமல் வாளாவிருந்துவிட்டான். அந்த ரிஷியும் தனது ஞான திருஷ்டியால் இவனது நிலைமையை முற்றுமுணர்ந்து, தம்மை அவமரியாதைசெய்ததற்காக இவன்மீது கோபிக்காமல் இருந்துவிட்டனர். இவன் அந்தப் பிராமணோத்தமரை அவமதித்தது புத்தி பூர்வகமாயிராதிருந்தபோதிலும், பிராமணாபசாரம் பொல்லாதது; யாவனொருவன் மனோவாக்குக் காயமென்று சொல்லப்படுகிற திரிகரணங்களினாலும் ஓர் பிராமணனை அவமதிக்கின்றானோ அவன் பிர்ம்ம ராக்ஷஸனாய்ப் பிறந்து திரிவான். அவன் புத்திபூர்வகமாய்ச்செய்த அபசாரத்திற்குப் பிராயச்சித்தம் இல்லை. இவனோ அபுத்திபூர்வகமாய்ச் செய்தபடியால், அதற்கு ஓர் பிராயச்சித்தஞ் செய்துவிட்டால் அந்த தோஷம் நீங்கிவிடும், பின்பு யாகம் செய்ய இவனுக்கு அதிகாரமுண்டாகும். அப்படிப்பட்ட பிராயச்சித்தமெதுவென்றால், துலாமாஸமென்கிற ஐப்பசி மாதத்தில் காவேரி மகாநதியிலும், வைகாசி மாதத்தில் நர்மதா நதியிலும், ஒருதரம் ஸ்நாநஞ்செய்தால் முற்கூறிய பிராமணாபசாரம் நீங்கி, யாகம் செய்வதற்குத் தகுதியுடையவனாவான். இந்தக் காவேரி நதிக்குத் துலா மாதத்தில் என் அவ்வளவு மகிமையென்றால், இவ்வுலகிலுள்ள அறுபத்தாறுகோடி தீர்த்தங்களும் மற்றும் பதினான்கு லோகங்களிலுமுள்ள புண்ணிய தீர்த்தங்களும் இக்காவேரி நதியில் தமது பாவங்களை நிவர்த்தித்துக்கொள்ளுதற்கு அம்மாதத்தில் வந்து சேருகின்றன. ஆதலால் அந்த மாதத்தில்

இந்நதியில் ஸ்நாநஞ் செய்பவருக்குச் சகலவித இஷ்டசித்திகளும் உண்டாவதுந்தவிர மோக்ஷப்பிராப்தியுமுண்டாகும். இந்தக் காவேரியென்னும் மகா புண்ணிய நதியின் மகிமையை ஆயிரம் நாக்குகளையுடைய ஆதிசேஷன் பதினாயிர வருடம்வரையில் வர்ணித்தும் அவனால் கூடாமற் போய்விட்டது. கேவலம் மகா பாபிஷ்டனாயிருக்கிறவன் இந்நதியில் ஸ்நாநஞ்செய்து மூன்று ராத்திரி தீர்த்தவாசஞ் செய்வானேயானால், அவன் செய்த பாபங்களெல்லாம் பஞ்சாய்ப் பறந்தோடிப்போகுமென்றால், சாபாகிதனை ஒருவன் ஸ்நாநஞ் செய்தாலவனுக்கு நற்கதி கிடைக்குமென்பதற்குச் சந்தேகமுண்டோ? மேலும் ஸஹ்யபர்வதந் தொடங்கிச் சமுத்திரவரையிலும் இம் மஹாநதியினது இருகரைகளிலும் அநேக விஷ்ணு க்ஷேத்திரங்களும், சிவ க்ஷேத்திரங்களும், ரிஷிகளின் திவ்வியாச்சிரமங்களும் நிறைந்திருக்கின்றன. பிர்ம்மா விஷ்ணு மகேஸ்வரர்களென்னும் திரிமூர்த்திகளுந்தவிர இம் மூன்றுலகங்களிலுள்ள மற்றெவரும் அநேக கோடி யுகம்வரையில் வர்ணித்தாலும் அவர்களால் துலாகாவேரியின் மகிமை இன்னதென்று சொல்வதற்கு முடியாது. காவேரியின் அலைகளெல்லாம் ஒவ்வொரு உத்தம நதிகளாகும். மணல்களெல்லாம் தேவ சமூகங்களாகும். இதில் ஆடினால் சகலதீர்த்த ஸ்நாந பலனுண்டாகும். பூமியிலுள்ள புழுதிகளும், புற்களும், ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களும், மேகத்தினின்றுபெய்கின்ற மழைத்துளிகளும் எவ்வளவோ அவ்வளவு கோடிக் கணக்கிலடங்கிய புண்ணிய தீர்த்தங்கள் துலாமாதத்தில் இந்தக் காவேரியை வந்தடைகின்றன. காவேரியில் தளிக்கும் ஒவ்வொரு திவலையும் ஒவ்வொரு நதிகளேயாம். இந்நதி

யில் துலா மாதத்தில் ஸ்நாநமுடித்தவன் தனது துன்பங் களைப்போக்கி முராஹரியின் திவ்ய பாதங்களை அடை கின்றான். ஆகையால் ஓ பாமகிரேஷ்டனே! நீயும் துலா மாதத்தில் காவேரி ஸ்நானம் செய்வாயாகில் இஷ்டசித்தி யைப் பெறுவாயென்பதில் தடையில்லை, என்று இவ்வாறு உரைத்த அகஸ்திய நாரதர்களிருவரையும் ஹரிச்சந்திரன் பணிந்து "ஓ ரிஷீஸ்வரர்களே! உங்களுக்குத் தாஸனான அடியேன் கொண்டிருக்கிற ஓர் எண்ணத்தைக் கருணைக் கடலான நீங்கள் எப்படியாவது நிறைவேற்றி வைக்க வேண்டும். நீங்கள் இப்பொழுது சொன்ன துலாகாவேரி யின் மகிமையை அடியேனுக்கு நன்றாய் விரித்துரைக்க வேண்டும். துலாமாதத்தில் காவேரியிலும், வைகாசி மா தத்தில் நர்மதையிலும் ஸ்நாநஞ்செய்யும் விதம் எப்படி? அவற்றின் பலன் யாவை? பன்னிரண்டு மாதங்களில் இவ் விரண்டு மாதங்களுக்கு மட்டும் அப்படிப்பட்ட மகிமை எப்படி வந்தது? இவைகளுக்கு அதிதேவதைகள் யாவர்? அப்பொழுது தானம் செய்ய வேண்டிய வஸ்துக்கள் எவை? இது விஷயம் அடியேனுக்கு ஸவிஸ்தாரமாய்க் கூறவேண் டும்" என்று மிக்க வணக்கத்துடன் கேட்டனன்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில் முதல் அத்தியாயம் முற்றிற்று.

---

## 2-வது அத்தியாயம்.

# காவேரி மகத்துவம் கேட்கும் முறை.

இவ்வாறு ஹரிச்சந்திர மகாராஜனால் வினவப்பட்ட அகஸ்திய மகாரிஷியும் அகமகிழ்ச்சியுடன் அவனை நோக்கி, ஓ! மகாராஜனே நீ இப்படித் துலாகாவேரியினது சிறப்பைப்பற்றி எங்களைப் பிரச்னை பண்ணினதற்காக, உன்னை வெகுவாய் மெச்சினோம். யாவனொருவன் துலாகாவேரி ஸ்நாநஞ்செய்து, அந்த மகாத்மியத்தின் ஒரு அத்தியாயத்தையாவது ஒரு சுலோகத்தையாவது பக்திசிரத்தையுடன் படிக்கிறானோ அல்லது கேட்கிறானோ அவனடையும் புண்ணிய பலத்தை அளவிட்டுரைக்க ஸாக்ஷாத் மகாவிஷ்ணுவைத்தவிர வேறெவராலும் முடியாது. பூர்வ ஜன்ம புண்ணியத்தின் பிரபாவத்தினால் உனக்கு இப்படிப்பட்ட மகாரிஷிகளாகிய சாதுக்களுடைய சகவாசங் கிடைத்தது. ஒருவன் அநேக ஜன்மங்களிற் செய்துவந்த உத்தம விரதங்கள் தக்கள் வேதாத்யயனம் முதலான ஸத்கர்மங்களால் சாதுக்களுடைய சகவாசத்தைப் பெறுகிறான். அந்த சாதுக்களுடைய சேர்க்கையினால் புண்ணிய கதாச்சிரவணத்தில் புத்தியுண்டாகிறது. அப்படிப் புண்ணிய கதைகளைக் கேட்பதினால் மனோவாக்குக் காயம் என்ற மூன்று கரணங்களினால் உண்டாகின்ற தோஷங்கள் நசிக்கின்றன. இப்படி நிர்த்தோஷனாய் விட்டமாத்திரத்தில், அவன் மனதுக்கு ஓர் தெளிவு பிறக்கின்றது. இங்ஙனம் மனசு தெளிவுற்றவுடனே அவன் ஹரியினது பாத கமலங்களை இடைவிடாது தியானஞ் செய்கிறான். இங்ங

-னம் ஒருக்கால் தியானம் செய்தவனுக்குப் புருஷோத்தம ஞன பகவான் பிரசன்னமாகித் தமது சாரூப்யத்தை அளிக்கின்ருர். ஆகையால் அரசனே! நீ இனி எப்பொழுதும் சாதுக்களோடு சேர்ந்திருக்கவேண்டியது. யான் நீ கேட்டபடி துலாகாவேரியின் மகிமையைத் தெரிந்தமட்டும் விஸ்தாரமாய்ச் சொல்லுகின்றேன். அதாவது துலா காவேரியினுடைய ஜலத்திவலைகள் ஒவ்வொன்றும் புண்ணிய தீர்த்தங்கள். அந்நதியிலுள்ள மணல் எல்லாம் தேவதைகள். ஆகையால்தான் இக்காவேரி நதியானது மற்ற நதிகளைக்காட்டிலும் மிகச் சிறந்ததாயிற்று. தர்மார்த்த காம மோக்ஷமென்னும் நான்குவித புருஷார்த்தங்களுக்குள் மிகவும் உத்தமமான மோக்ஷமென்னும் புருஷார்த்தமானது இதனுல் இலபிக்கும். துலாமாசத்தில் சகல புண்ணிய தீர்த்தங்களும் இதில் சங்கமமாகிறபடியால், அப்பொழுது இதில் ஸ்நாநஞ் செய்பவர் பஞ்சமகாபாதகராயிருந்தபோதிலும் அவர்களுடைய பாபங்களையெல்லாம் போக்கி, அவர்களுக்கு அசுவமேத யாக பலனையளிக்கின்றது. அந்த துலாமாசத்தில் பூலோகத்திலுள்ள மகரிஷிகளும் பரலோகத்திலுள்ள தேவாதி பிதிர்க்களும் இக்காவேரியை வெகுவாய் கொண்டாடுகிருர்கள். யாவனொருவன் துலாமாசத்தில் காவேரியில் மூன்று நாள் ஸ்நானஞ் செய்கிருனே அவன் சகல பாபங்களும் நீங்கி, விஷ்ணுலோகத்தை அடைகின்றனன். பின்னும் எவனொருவன் காவேரி நதியில் மாசி மாதத்திலும் ஐப்பசி மாதத்திலும் ஸ்நாநஞ் செய்கிருனே அவன் மூன்றுகோடி குலங்களோடு பிர்ம்மலோகத்தில் சுகித்திருப்பான். துலாமாசத்தில் எவன் சற்பாத்திரமறிந்து அன்னதானமும் அல்லது பிதிர்க்களை உத்தேசித்து

சிராத்த முதலியவையும் செய்கின்றானோ அவனுடைய பிதிர்க்கள் கற்பகோடிகாலம் வரையில் திருப்தியடைகிறார்கள் என்று வேதங்களே முறையிடுகின்றன. மேலும், துலாமாசத்தில் பிரம்மா முதலான தேவர்களும், சப்தமாத்ருகளும், சகல அப்ஸரஸுகளும், பார்வதியும், சரஸ்வதியும், இலக்ஷ்மியும், இந்திராணியும், ரோகிணி தேவியும் இன்னும் சகல தேவஸ்திரீகளும் இந்தக் காவேரியில் ஒவ்வொரு தினமும் வந்து ஸ்நானம் செய்கிறார்கள். பலவாறு சொல்லுவதில் பிரயோஜனம் யாவை? மனிதர்களுக்குப் புத்தியையும் முக்தியையும் கொடுப்பதற்கென்றே பிரமதேவர் நதிகளுக்குள் சிறந்ததாக இக் காவேரியைச் சிருஷ்டித்திருக்கின்றார். யாவனொருவன் இந்தக் காவேரியின் சங்கமத்தில் விசேஷமாய்த் துலாமாசத்தில் தினந்தோறும் ஸ்நாநஞ் செய்கிறானோ அவன் தன்னையும் தன்னைப் பெற்றாரையும் தனது மனைவியைச் சேர்ந்த பந்துக்கள் ஆகிய மூன்று வர்க்க பந்துக்களையும் உத்தாரகம் பண்ணுகிறான். மேலும், காவேரியின் கரையருகில் இருக்கின்ற விருக்ஷங்கள், மிருகங்கள், பக்ஷிகள் இவைகள்கூட அந்நதியினது குளிர்ந்த ஜலக்காற்று மேலேபட்டு முக்தியடைகின்றனவென்றால், பகுத்தறிவுடைய மனிதர்கள் பக்தி சிரத்தையுடன் அதில் ஸ்நாநம் செய்வார்களேயானால் அவர்கள் முக்தியடைவார்கள் என்பதற்குச் சந்தேகமுண்டோ? ஆயிரம் முகங்களையுடைய ஆதிசேஷனே துலாகாவேரி மகத்துவத்தை உள்ளபடி வர்ணிக்க சக்தியற்றவனானால், அத்தை யான் எங்ஙனம் வர்ணிக்கக்கூடும். ஆகிலும் தெரிந்தவரை சங்கிரகமாய்க் கூறுகிறேன்: காவேரி மகாநதியின் மகத்துவம், வித்துவான்களுடைய மகிமை, திருத்துழாயின்

மகிமை, கங்கையின் மகிமை, ஏகாதசியில் உபவாசமிருப்பதன் மகிமை, திருத்துழாயால் பகவானுடைய மூர்த்தங்களாகிய சாளக்கிராம சிலைகளை ஆராதிப்பதனால் உண்டாகும் மகிமை, இவை எல்லாவற்றையும் சொல்வதற்கு ஆதிசேஷனொருவனே தக்கவன். ஆகிலும், சக்கிராயுததாரியான ஸ்ரீ ஹரிக்கு உவப்பை உண்டுபண்ணத்தக்க காவேரியின் வைபவத்தை மாத்திரம் யான் தெரிந்தமட்டில் இப்பொழுது உனக்குச் சொல்லுகிறேன்; சற்று சாவதானமாய்க் கேட்பாயாக. ஒருவன் காவேரியை மனதினால் ஸ்மரித்தாலும், வாயினால் துதித்தாலும், கண்களால் தரிசித்தாலும், காதுகளால் கேட்டாலும், கைகளால் ஸ்பரிசித்தாலும், அந்த ஜலத்தில் ஸ்நானஞ் செய்தாலும், அவை அவன் ஜன்மாந்திரத்தில் செய்த புண்ணியத்தின் பலனென்றே நினைக்க வேண்டும். எவன் இக்காவேரியில் ஐப்பசி, வைகாசி, மாசி இந்த மாதங்களில் ஸ்நானஞ் செய்கின்றானோ அவன் அடையும் பலத்தை உரைக்க ஸ்ரீமந் நாராயண மூர்த்தியே தக்கவராவார். ஸ்ரீ மகாவிஷ்ணுவின் திருப்பாதப் பெருவிரலிலிருந்து உற்பவித்த கங்கையானது எப்படி நதிகளுக்குள் சிறந்ததோ அதுபோல், புஷ்பங்களுக்குள் துளசியும், யக்கியங்களுக்குள் பஞ்சமகாயக்ஞமும், விரத தினங்களுக்குள் ஏகாதசியும், தேவர்களுக்குள் ஸ்ரீமந்நாராயணனும், எழுத்துக்குள் பிரணவமும், மந்திரங்களுக்குள் அஷ்டாக்ஷரமும், வேதங்களுக்குள் சாமவேதமும், ஏகாதச ருத்திரர்களுள் சங்கரனும், பிராம்மண ஸ்திரீகளுக்குள் அருந்ததியும், ஸ்திரீகளுக்குள் இலக்ஷ்மியும், தானங்களுக்குள் அன்னதானமும், கிரகங்களுக்குள் சந்திரனும், தேஜசுக்குள் சூரியனும், யக்கியங்களுள் மனோ

யக்யமும், பூஜைகளுக்குள் விஷ்ணுபூஜையும், ஆச்ரமத்தில் கிருகஸ்தாச்சிரமும், ஜாதியில் பிராம்மண ஜாதியும், பொறுமையில் பூதேவியும், அஸ்திரங்களுக்குள் பிரம்மாஸ்திரமும், புண்ணிய க்ஷேத்திரங்களுக்குள் ஸ்ரீரங்க க்ஷேத்திரமும், பரிசுத்தஞ் செய்வதில் இராமசேதுவும், சூக்தங்களில் புருஷ சூக்தமும், பசுக்களுள் காமதேனுவும், சதுர்யுகங்களுள் கிருதயுகமும் எப்படி உத்தமோத்தமமானவைகளோ அப்படியே காவேரி மகாநதியானது மற்ற எல்லா நதிகளுக்குள் மிகச்சிறந்தது. கங்கைநதியை கீர்த்தனஞ் செய்வதாலும், தனுஷ்கோடியைத் தரிசிப்பதாலும், இராமாயணத்தைச் சிரவணம் பண்ணுவதாலும் முக்தியுண்டாகின்றது. காவேரியோ தன்னை ஸ்மரிப்பவர்களுக்கு முக்தியைத் தருகின்றது. ஸேது தொடங்கிக் கைலாசம் வரையில் நீளத்தில் லட்சம் யோஜனையும் அகலத்தில் ஒன்பதினாயிரம் யோஜனை விஸ்தீர்ணமுள்ள இத்தேசந்தான் கர்ம பூமியென்று சொல்லப்படுகிறது. இதன் நடுவுள்ள பூமி முற்றும் புண்ணிய கர்மாவுக்குக் காரணமானது, இது தவிர மற்ற பூமி முற்றும் போகத்தைத் தரத்தக்கது. அநேககோடி ஜன்மங்களில் செய்த புண்ணியத்தினால் ஒருவனுக்கு நரஜன்மம் கிடைக்கின்றது. அப்படி அநேககோடி ஜன்மத்தில் செய்த புண்ணியவசத்தால் பிராமண ஜன்மம் கிடைக்கின்றது. அந்தப் பிராமண ஜன்மமெடுப்பதிலும் இந்தப் புண்ணிய பூமியில் பிராமணனாய் வந்து பிறப்பது ஏதோ காகதாளீயமென்னும் நியமப்படி தற்செயலாய் லபிக்கின்றது. ஆகையால், உலகத்தில் மனித ஜன்மம் எடுத்தும் எவனொருவன் காவேரியில் ஸ்நாநம் செய்யவில்லையோ அவன் கர்த்தபத்திலும் கேடானவன்.

அதிலும் முக்கியமாய் எவன் துலாமாசத்தில் காவேரி ஸ்நாநஞ் செய்கிருனே அவன் தவம், தானம், வேதாத்தியயனம், விரதம், ஒன்றும் செய்யவேண்டியதில்லை. ஒருவன் காவேரியில் ஒருதடவை ஸ்நாநம் செய்வானேயாகுல் அவன் உடனே சாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணனுகவே ஆய் விடுகிருன். மற்ற விரதங்களில் ஏதேனும் கிஞ்சித்து லோபம் நேரிட்டால் பிராயச்சித்தம் செய்ய வேண்டும். காவேரி ஸ்நானத்திற்கோ அப்படியில்லை.

மந்திரம் மௌனம் நியமாதிகளில்லாமல் தூஷ்ணி ஸ்நானமொன்றே ஸப்த ஜன்ம பாவங்களையும் போக்கி விடும். நியமத்தோடு இந்த ஸ்நாநஞ்செய்தால் மாதுரு பிதுர் வர்க்கங்களில் ஏழு தலைமுறைகளை உத்தரித்துச் சுத்தமாக்கும். இனி துலாகாவேரியில் ஸ்நானம் செய்யும் விதியை விவரிப்பேன் கேளும். ஒருவன் இரவில் பிராம்ம முகூர்த்தமென்னும் நான்காவது யாமத்தில் எழுந்திருந்து ஸ்ரீமத் கமலாஸமேதனை ஸ்ரீமந் நாராயணனைத் தியானஞ் செய்து பின்பு கைகால் சுத்திசெய்து தந்ததாவனம்பண்ணி காவேரியை மனதினுல் தியானித்துக்கொண்டே அகமருஷண ஸூக்தத்தோடு ஸ்நாநஞ் செய்ய வேண்டும். பின்பு புஷ்பாஞ்சலியால் காவேரியை அர்ச்சித்து, ஸ்ரீரங்கநாதனையும் நமஸ்கரித்து மகா பரிசுத்தனுய் ஜலத்தில் இருந்து கொண்டே அர்க்கியம் கொடுத்து ஆசமனஞ்செய்து, கரையில் வந்து, தவளவஸ்திரத்தைத் தரித்து, புண்டரம் புனைந்து, சந்தியாவந்தனம் முதலிய நித்திய விதிகளையும் முடிக்கக்கடவன். பின்னர் ஸ்நாநஞ் செய்பவர் எல்லோரும் ஒன்ருகக்கூடி ஓர் சுத்தமான இடத்தில் திவ்வியமான

ஆஸனமிட்டு அதின்பேரில் சுத்தமாயும், வெளுப்பாயும், மிருதுவாயும், அழகாயுமிருக்கின்ற வஸ்திரத்தைப் பரப்பி அதின்மேல் ஜிதேந்திரியனையும், பரிசுத்தனையும், வேத வேதாந்தங்களின் உட்பொருளை யுணர்ந்தவனையும், ஸதாசார சீலனையும், பதினெண் புராணங்களையு முணர்ந்தவனையு மிருக்கிற ஒரு மஹானை உட்காரச்செய்து, அன்னவரை மனிதரென்று பாவிக்காமல் சாக்ஷாத் வியாஸ பகவானே என்று நினைத்துக்கொண்டு, எல்லோரும் அந்த மஹானுன பௌராணிகரை நோக்கி, ஓ பிராம்மணோத்தமரே! இப்போது நாங்கள் துலாகாவேரியின் மகத்துவத்தைக்கேட்க விருப்பமுள்ளவர்களாயிருக்கிறோம். ஆகையால் தேவரீர் கிருபை கூர்ந்து, அதனை அடியவர்களாகிய எங்களுக்கு உரைத்தருளவேண்டும், என்று பிரார்த்திக்கவேண்டும். அந்த பிராம்மணோத்தமர், புராணபடனம் செய்து முடியும் வரை, நீங்கள் பக்தி சிரத்தையுடன், மௌனமாகக் கேட்க வேண்டும். பிறகு அவருக்குத் தம்மாலியன்றவரை தக்ஷிணை கொடுத்து அன்னவருடைய ஆசீர்வாதத்தைப் பெறவேண்டும். இதனுல் யாவரும் சாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணருடைய சரணாரவிந்தத்தையடைய ஹேதுவாகும். ஹே ராஜன்! இப்போது காவேரியில் ஸ்நாநம் செய்வதற்கும், செய்பவர்களுக்கும், சில நியமங்களுண்டு. அதாவது எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதல், பகலில் உறங்குதல், சௌளம் பண்ணிக்கொள்ளுதல், ஆசாரமின்றி அன்னம் புசித்தல், தாம்பூலம் தரித்தல், அகால சம்போகம் செய்தல், துஷ்டர் சகவாசம், வீண் பேச்சுகள் பேசுதல், பாயில் படுத்தல், பரான்ன போஜனம் செய்தல், இவைகளை அறவே விலக்கவேண்டும். தவிர, பெரும்பூசிணிக்காய்,

வெள்ளரிக்காய், கத்தரிக்காய், மொச்சை, கொள்ளு, உழுந்து, காராமணி, கொத்துக்கடலை, துவரை, கீரைத் தண்டு, தோசக்காய், சுரைக்காய், முருங்கக்காய், சக்கரை பூசிணி, பீர்க்கங்காய், இன்னும் வெண்கல பாத்திரத்தில் சமைத்தல், பாத்திரத்தில் உண்ணுதல், அந்தி சந்தி நேரத்தில் புசித்தல், சோற்றின் அடிக்காந்தல், கருணைக்கிழங்கு, இலந்தை, குழந்தைகள் சாப்பிட்ட சேஷம், பழைய அன்னம், எருமைப்பால், ஆட்டுப்பால், சுவாமிக்கு நிவேதனம் பண்ணாத நைவேத்தியம், ஸ்திரீகள் சாப்பிட்ட சேஷம், சூத்ர சேஷான்னம், மயிர் விழுந்த அன்னம், சிரார்த்த சேஷான்னம் முதலியவைகளை புசிக்கலாகாது. ஹே! ராஜன்! உலகத்தில் கஷ்டப்படாமல் புண்ணியம் சம்பாதிக்க முடியாது. ஆகையால் காவேரி ஸ்நாநம் செய்பவர்கள் இத்யாதி நியமத்தோடு இருக்கவேண்டும். முன் சொன்ன நியமங்களைத் தவறி நடப்பவன் மறுஜன்மத்தில் பன்றியாய்ப் பிறப்பான். அப்படிக்கின்றி நியதியோடு துலா காவேரி ஸ்நாநஞ் செய்பவன், சாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணருக்குப் பாத்திரமான வைகுண்ட பதவிக்கு உரியவனாவான் என்பதற்கு அணுவளவும் சந்தேகமில்லை. ஆகையால் அரசனே! மலமூத்திரங்களுக்கு உறைவிடமாயும், நீர்க்குமிழிபோன்ற இத்தேகம் நிலையற்றது. தென் திசைக்கதிபனான எமதர்மராஜனே மனிதர் உயிரைக் கவர்ந்துபோக எப்போது சமயம் வாய்க்குமென்று வழி பார்த்துக்கொண்டிருக்கின்றனன். மேலும் மனிதனுடைய வாழ்நாட்களைக் குறைக்குவதற்கென்றே உதயம் அஸ்தமனம் என்ற இரண்டு சத்துருக்கள் தினமும் ஏற்பட்டிருக்கிறார்கள். ஆகையால் வீணாகக் காலம் போக்கலாகாது.

தேகமோ நமக்கு சுவாதீனமாய் இருக்கின்றது. பஞ்சேந்திரியங்களும் பழுதில்லாமல் இருக்கின்றன. புண்ய நதிகளோ நமக்கு வெகு சுலபமாகக் கிடைக்கக்கூடியவைகளாயிருக்கின்றன. அப்பேர்ப்பட்ட நதிகளில் ஸ்நாநம் செய்தால் குளிராதிருக்கும்படியும், அதற்கு ஏற்பட்டிருக்கிற காலமும் சரத்காலமுமாயிருக்கின்றது. ஆகையால் மகாப்பாபியான ஒவ்வொருவனும் நித்திரையென்னும் இருளைப் போக்கி பஞ்சபஞ்ச உஷக்காலத்தில் எழுந்திருந்து காவேரியில் பக்தியுடன் ஸ்நாநஞ்செய்து காலைக்கடனை நிறைவேற்றுகின்றவன் நிஷ்களங்கனாகி சாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணருடைய பாதாரவிந்தத்தை அடைவான் என்பதற்கு சந்தேகம் இல்லை என்று, தனது வலக்கையையுயர்த்தி முக்காலும் சத்தியமாய்ச் சொல்லுகிறேன். கேளும் மஹாராஜனே என்றுரைத்து, பின்னும் சொல்லத்தொடங்கினார்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில் இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## 3-வது அத்தியாயம்.

## சந்திரகாந்தை வித்தியாவதி என்பவர்களின் உபாக்கியானம்.

கேளும் ஹரிச்சந்திர மகாராஜனே, நீ எவ்விதத்திலும் பிரயத்தனம் செய்து துலா காவேரி ஸ்நாநம் செய்ய வேண்டும். இந்தக் காவேரியின் மகிமையை உனக்கு இன்னும் சொல்லுகிறேன் கேளும். அதாவது மாத்ரு

ஹத்தி, பித்ருஹத்தி, பிராம்மணஹத்தி, கோஹத்தி, கர்ப்ப ஹத்தி, ஸ்திரீஹத்தி, சிசுஹத்தி முதலியவைகளைச் செய்த வர்களும், குருபத்னீ கமனம் புரிந்தவர்களும், வேதாத் தியயன சூன்யராயிருப்பவரும், சுராபானம் செய்பவரும் ஆகிய இவர்கள் எல்லோரும், காவேரி நதியில் ஒரு தடவை ஸ்நாநம் செய்தால், உடனே பிரம்மலோகமடைந்து, அங் கிருப்பவர்களால் சதா கொண்டாடப்படுவார்கள். காவேரி நதிக்குப்போய் ஸ்நாநம் செய்ய சக்தியற்றவர்களாய் இருப்பவர்கள், அம்மகா நதியின் தீர்த்தத்தைக் கொண்டு வரச்செய்து ஸ்நாநம் செய்யவேண்டும். சீதஜலம் உடம் புக்கு ஒத்துக்கொள்ளாதபக்ஷத்தில் வெந்நீராகச் செய்து ஸ்நாநம் செய்யலாம். அதற்கும் சக்தியில்லையேல் காவேரி மாகாத்மியமாகிய இப்புராணத்தை வாசிக்கின்றவருக்கு தம் சக்திக்குத்தக்கபடி, தனங்கள் ஈந்து பூஜிக்கவேண்டும். இது செய்யவும் அசக்தராயிருந்தால், பிறரைக் கொடுக் கும்படிச் சொல்லி வாக்குச் சகாயம் செய்யவேண்டும். தவிர ஸ்திரீகள், பாலர்கள், ஹீன ஜாதியில் பிறந்தவர்கள் இவர்கள் எல்லோரும், காலையில் எழுந்திருந்து யாதொரு மந்திரமுமின்றி, மௌனமாய் காவேரி ஸ்நாநம் செய்ய வேண்டும். யாவனொருவன் காவேரியில் ஸ்நாநம் செய்து தில அக்ஷதைகளால் தேவ, ரிஷி, பித்ருக்களை உத்தேசித் துத் தர்ப்பணம் செய்கிறானோ, அவனுடைய பிதிர்க்களும், தேவர்களும், ரிஷிகளும், யக்ஷ, கின்னர, கிம்புருஷ, கந்தர் வர்களும் பஹு திருப்தியடைகின்றார்கள்.

அந்தத் துலா மாதத்தில் செய்யவேண்டிய உத்தம தானங்களையும், தானம் கொடுக்கும் விதிகளையும் சொல்லு

கிறேன் கேளும். ஒருவன் துலா காவேரி ஸ்நானம் செய்தவுடன் நல்லாடை உடுத்தி நெற்றியில் கந்தமோ, விபூதியோ, நாமமோ தரித்து, தனது நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஏக மனதாக தன் சக்திக்குத் தகுந்தவாறு சத்பிராமணர்களுக்கு அடியில் விவரிக்கப்படும் தானங்களைச் செய்வதுமன்றி, பிதிர் கர்மானுஷ்டானங்களை அனுசரித்து அந்தக் காலத்தில் விருத்தியான பதார்த்தங்களைக்கொண்டு, விப்பிரர்களுக்குச் சிரார்த்தம் செய்பவன், இகபோக சுகங்களையெல்லாம் அனுபவித்து இறுதியில் பிரம்மலோகத்தையடைந்து பூஜிக்கத்தகுந்தவனாய் இருப்பான். விஷ்ணுவாலய, சிவாலயங்களில், நெய்யையாவது எண்ணெயையாவது வார்த்து தீபமேற்றி வைப்பவன், சூரியலோகத்தையடைந்து அங்குள்ள போகங்களை வெறுக்க அனுபவித்து, இறுதியில் இவ்வுலகில் சுத்தஞானியாய் ஜனிப்பான்.

எவனொருவன் அனேக தனதானிய சம்பத்துக்கள் அடைந்து தான தர்மம் செய்வதில் உலோபத்துவம் செய்கிறானோ, அவன் பிரம்ம ராக்ஷஸனாகப் பிறப்பான். துலா மாதத்தில் எவன் ஒருவன் மிகவும் தரித்திரனான ஓர் அந்தணனுக்கு வஸ்திர தானம் செய்கின்றானோ, அவன் அதிக பாக்யசாலியாயும் பூரண ஆயுசுடன் இருந்து, பின் சந்திரலோகத்தை அடைகின்றான். எவன் பிராம்மணனுக்கோ அல்லது ஏழைக் குடும்பஸ்தனுக்கோ பூமி அல்லது கிருஹம் தானம் செய்கிறானோ, அவன் இகபோகங்களை நன்றாக அனுபவித்து இறுதியில் பிரம்மலோகமடைந்து பற்பல சுகானுபோகம் அனுபவித்தப் பின் பூமியில் சாம்

ராட்டாய் பிறப்பான். தனதான்யங்களை தானம் கொடுப்பவன், குபேரனுக்குத் தோழனாய் ஜனிப்பான். மறையோனுக்கு மது தானம் செய்கின்ற ஒருவன், அவன் மலடனாயினும் ஜன்மந்தோறும் சத்புத்திரனாகவும், பூபதியாகவும், பிறப்பான். எவன் ஓர் ஏழையான வேளாண்மைத் தொழில் செய்பவனுக்கு, எருதுகளை தானம் செய்கிறானோ அவன் கோலோகத்தில் நல்ல சுகானுபவம் பெறுவான். எவன் கன்றோடு பசுவை தானம் கொடுக்கிறானோ, அவன் மகா சுகசாலியாய் பித்ரு லோகம் அடைவான். மஹிஷ தானம் செய்பவன், அவனுக்கும் அவன் வம்சத்தாருக்கும் மிருத்யு பயம் என்பதே அணுகாது. தவிர, அவன் சந்ததியாரும் க்ஷீணிக்காத சதாயுசைப் பெறுவார்கள். எவன் விதை தானம் செய்கிறானோ, அவன் வெகு புத்திரர்களை அடைந்து தீர்க்காயுசையும் பெற்று மறு ஜன்மத்தில் திவ்ய ஸ்திரீகளுடன் கூடிப் பின்னர் ஓர் கிராமாதிபதியாய்ப் பிறப்பான். எவன் தரித்திரனான ஒரு பிராம்மணனுக்கு தண்டுல தானம் செய்கிறானோ, அவன் வீட்டில் கலி புருஷன் அணுகான். எவன் கதலீபல தானம் கொடுக்கிறானோ, அவன் அரம்பையோடு சுகித்திருப்பான். எவன் தேங்காயுடன் தாம்பூல தானம் செய்கிறானோ, அவன் அரம்பை முதலிய அப்ஸரஸுக்களோடு சுவர்க்கத்தில் விளையாடிக் கொண்டிருப்பான். கஸ்தூரி, கற்பூரம், சந்தனம் முதலான வாசனைத் திரவியங்களை தானம் செய்கின்றவன் சுவர்க்கத்தில் தேவஸ்திரீகளுடன் சுகித்து மறுபடியும் பூமியில் சார்வபௌமனாய்ப் பிறப்பான். பசும்பால், நெய், தயிர் இவைகளைத் தானம் செய்பவன், பசு புத்திராபிவிருத்தியுடையவனாய்ப் பூர்ணாயுசையடைவான். நெல்விக்

காய், மா முதலிய பதார்த்தங்களை தானம் செய்கிறவன், தத்துவ ஞானம் நிலைபெறப் பெற்று பாகவதோத்தமனுவான். எவன் பிதிர்க்களை உத்தேசித்துத் திலதானம் செய்கிறானோ, அவன் பிதிர்க்களுக்கு கயா ஸ்ரார்த்தம் செய்த பலனைப் பெறுவான். ஏழையாயும் குடும்பியாயும் குளிரால் வருந்துகின்றவருமான பிராம்மணனுக்கு, படுக்கை, தலையணை, கம்பளம், துப்பட்டி, போர்வை முதலியன தானம் செய்கின்றவன், தேவ ஸ்திரீகளுடன் சுகித்திருப்பான். தவிர, வாயுரோக முதலியவற்றினின்றும் விடுபடுவான். குடை தானம் செய்பவன், உத்தம மங்கையர்களுடன் உப்பரிக்கையின் மேலிருந்து சந்தோஷிப்பான். எவன் அரங்கநாதர் அர்ச்சனைக்கு மல்லிகை, தாழம்பூ, பாடலம், இன்னும் அந்நதியின் கரையில் பூத்திருக்கும் சுகந்த புஷ்பங்களைக் கொண்டுவந்து சமர்ப்பிக்கின்றானோ, அவன் அனேக சுகபோகங்களை யனுபவித்துக் கடைசியில் பிரஹ்மலோகமடைந்து, அங்கு வெகுநாள் வாசஞ்செய்து, மீண்டும் விஷ்ணு பக்தனாகவும், தனிகனாகவும், சற்புத்திரவானாகவும் பூலோகத்தில் வந்து ஜனிப்பான். எவனொருவன் உத்தம பிராம்மணனுக்கு இரண்டு யக்ஞோபவீதம் தானம் செய்கிறானோ, அவன் பத்து ஜன்மம்வரையில் மகா வேதவித்தான பிராம்மணோத்தமனாகவே பிறப்பான். ஓர் பிரஹ்மச்சாரிக்கு மௌஞ்ஜி தானம் செய்கின்றவன், ரோகமற்றவனாயும் சகல கலைகளை உணர்ந்தவனாயும் இருப்பான். எவன் பூணூலுக்காகப் பருத்தி தானம் செய்கிறானோ, அவன் குஷ்டரோகத்தினின்று விடுபட்டு நல்ல பிராஹ்மண ஜன்மம் பெறுவான். யாவனொருவன் ஒரு விஷ்ணு பக்தனுக்குத் திருத்துழாய் தானம் செய்கின்றானோ, அவன்

அடைவதற்குரிய லோகங்களையடைந்து பின்பு பூலோகத்தில் சார்வபௌமனாக வந்து பிறப்பான். சமித்து தானம் செய்கிறவன் அக்னிஹோத்திரம் செய்பவனாகப் பிறப்பான். யாவனொருவன் துலா மாதத்தில் காவேரி தீர்த்தம் ஆடி ஷட்ரசோபேதமான அன்னதானம் செய்கிறானோ, அவன் சாக்ஷாத் தேவனே. பயறு, உளுந்து, தேன், எண்ணெய், மிளகாய், வெல்லம், கடலை, சர்க்கரை, நெய் முதலிய பதார்த்தங்களை தன் சக்திக்கு இயன்றமட்டும் தானம் கொடுக்கின்றவன், சுவர்க்கம் முதலிய மேலுலகங்களை அடைவான். எவன் துலா மாசத்தில் திருவரங்க மாநகரில் காவேரி ஸ்நானம் செய்கிறானோ அவனடையும் பலத்தைச் சொல்ல ஸ்ரீ ஹரியே தக்கவர். ஹே ராஜன்! ஒரு துர்நடத்தையுள்ள பிராஹ்மண ஸ்திரீயானவள் காவேரியில் ஸ்நானம் செய்து சுவர்க்கமடைந்து பின்பு விஷ்ணு பக்தையாய்ப் பிறந்து பூலோகத்தில் சிலகாலம் வாசம் செய்து பின்பு விஷ்ணுலோகம் அடைந்தாள். தவிர மூன்றரை கோடி புண்ணிய தீர்த்தங்களும் கடவுளின் கட்டளையால் துலா மாசத்தில் கங்கையை முன்னிட்டுக்கொண்டு காவேரியில் வந்து சேருகின்றன. எவனொருவன் ஒரு சித்தியைப் பெறுவதற்கு நூறு வருஷம் நியமத்துடன் இருந்து அச்சித்தியைப் பெற்றாலும் துலா மாசத்தில் காவேரியில் ஒரு தடவை ஸ்நானம் செய்தால் அந்த சித்தி உடனே இலபிக்கும்.

ராஜன், ஒரு காலத்தில் கங்கையானவள், பிராஹ்மனை அடைந்து சுவாமி, என்னுடைய தீர்த்தத்தில் அநேக பாபிகள் ஸ்நானஞ்செய்து அவர்கள் செய்த பாபங்கள் எல்

லாம் என்னையே வந்தடைகின்றன. அதனால் நான் மஹா பாபிஷ்டையானேன். இப்பாபங்களை எங்ஙனம் நிவர்த்தி செய்துகொள்வேன்? என்று வணங்கி வேண்டிக்கொள்ள, அது கேட்ட பிரஹ்ம தேவரானவர், மனம் கனிந்து கங்கையே, நீ துலா மாதத்தில் அரங்கநாதனுடைய சந்நிதியில் காவேரியில் ஒரு தடவை ஸ்நானம் செய்வாயேயானால் உன் பாபங்கள் தொலைந்து நீயும் பரிசுத்தையாவாய் என்று நியமித்தருளினார். அதே பிரகாரம் கங்கையும் பிரதி வருடமும் துலா மாதத்தில் காவேரியில் ஸ்ரீரங்கநாதருடைய சந்நிதியில் பிரதி தினமும் ஸ்நானம் செய்து வருகிறாள். காவேரியில் யாதொரு நியமமுமின்றி, கேவலம் முசலத்தைப்போல விழுந்து, ஸ்நானம் செய்கின்றவனே தன் ஏழு தலைமுறைப் பாபங்களைப் போக்குவானென்றால் பக்தி சிரத்தையுடனும், நியமத்துடனும், துலா காவேரி ஸ்நானம் செய்பவன், கோடி குலங்களின் பாபங்களைப் போக்குகின்றானென்பதற்குச் சந்தேகமென்னை? என்று இங்ஙனம் சொன்ன அகஸ்திய முனிவரைப் பார்த்து ஹரிச்சந்திரன் மேலும் கேட்கின்றான்;

ஓ சுவாமி, முனி சிரேஷ்டரே, சிறிது நேரத்திற்கு முன்பு ஒரு துஷ்ட பிராம்மண ஸ்திரீயானவள் காவேரி ஸ்நானம் செய்து சுவர்க்கமடைந்தாளென்று தாங்கள் உரைத்தீர்களே அந்த ஸ்திரீ யாவள்? அவள் கணவன் யார்? மகா துர்நடத்தையுள்ளவளும் பாபியுமான அம்மடந்தை, எவ்வாறு நல்லுலகமெய்தினள்? இதனை அடியேனுக்கு சவிஸ்தாரமாய் எடுத்துச் சொல்லவேண்டும். உலகங்களை அநுக்கிரஹிப்பவரும், நிர்ஹேதுவாய் எங்களைப்

போன்றவர்களிடம் தயையுடையவருமான உங்களை யொத்த முனிசிரேஷ்டர்களே எங்களைப்போன்ற மாணாக்கர்களுக்கு அதிரகசியங்களை உபதேசிப்பர். ஆகையால் தாஸனான என்னிடம் தயைகூர்ந்து கூறியருளவேண்டும். தங்கள் பாதகமலங்களுக்கு அனேக வந்தனம் செய்கிறேன் என்று வேண்டிக்கொள்ளவே, அகஸ்தியரும் மகா சந்தோஷத்துடன் சொல்லத்தொடங்கினார்.

கேளும் ஹரிச்சந்திர மஹாராஜனே! ரிஷபாத்திரிக்குச்சமீபத்தில் கிருதமாலா என்னும் நதி தீரத்தில் மதுரை என்றொரு அழகிய நகரம் உண்டு. அந்நகர் அநேக ரத கஜ துரக பதாதியென்னும் சதுரங்க சேனைகளால் சூழப்பட்டும், ஆழ்ந்த அகழிகளாலும் உயர்ந்த மதில்களாலும் மாடமாளிகை கூடகோபுரங்களால் பிரகாசித்தும், பிராஹ்மக்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் என்ற நான்கு வருணத்தாரால் நிறைந்ததுமாயிருந்தது. அப்பட்டணத்தில் நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்துநான்கு கலை ஞானங்களையும் ஐயந்திரிபறக் கற்றவராயும், சாந்தரும், சர்வகுணசீலரும், சீதோஷ்ண சுகதுக்க லாபாலாபம் ஜயாபஜயங்களில் அதீதப்பட்டவராயும், மஹாவிஷ்ணு பக்தராயும், வந்த அதிதிகளையெல்லாம் பூஜிப்பவராயும், நிர்வைரியாயுமிருந்த வேதராசியெனப் பெயர்பெற்ற ஓர் அந்தணச்சிரேஷ்டர் இருந்தார். அன்னாருக்கு அதி ரூபலாவண்யவதியாயும், யௌவனவதியாயும், மஹா பதிவிரதாசிரோன்மணியாயும் விளங்காநின்ற, சந்திரகாந்தையென்ற ஓர் தர்மபத்தினியிருந்தனள். அவள் தனது கணவனை சாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணனாகப் பாவித்து, அன்னவருக்குக் கைகால்

பிடித்தல் முதலிய சிசுருஷைகளைச் செய்துகொண்டு வந்தனள். அப்படி இருக்குங்காலத்தில் இவளுடைய வீட்டிற்கு அடுத்த வீட்டில், ஒரு பார்ப்பினி குடியிருந்தாள். அவளோ தன் புருஷனைக் கொன்றவளும், விகார ரூபமுடையவளும், அனேக பெண்களின் கற்பைக் கலைத்தவளும், வியபிசாரியுமான வித்யாவதியென்னும் அந்த பார்ப்பினி, குடிலவிர்த்தியும் சபல புத்தியும் கெட்ட எண்ணமும் கொண்டு இந்த சந்திரகாந்தையினது கற்பு நிலைமையைக் கெடுக்க நினைத்து ஓர் நாள் அவள் வீட்டிற்குச் சென்று அவளை நோக்கி சில வசனங்களைச் சொல்லுகிருள்.

"ஓ! என் கண்ணுக்குக் கண்ணுகிய சந்திரகாந்தையே! நான் உனக்கு ஒரு ஹித வசனம் கூறுகிறேன். அதாவது, உன் இரகசிய விஷயங்கள் ஏதேனுமிருந்தால் என்னிடம் கூறுவாய். தவிர, நின் கணவன் விருத்தனுயிருத்தலால் உனக்கு வசமாயிருக்கிறுனே? நீயோ அதிக சௌந்தரியவதியாயும் யௌவனவதியாயு மிருக்கின்றனை. உனக்கு எந்தப் புருஷன் பேரிலாவது இஷ்டமிருந்தால் உடனே எனக்கு ரகசியமாய்த் தெரிவி. யான் உனது இஷ்டத்தைப் பூர்த்தி செய்து வைக்கிறேன். ஸ்திரீகளுக்கு யௌவனம் எப்பொழுதும் சாஸ்வதமல்ல; காலதேசங்களும் என்றும் ஒரே விதமாயிராது; ஆகையால், நமக்கு யௌவனப்பருவம் இருக்கிறவரையில் நாம் ஒருவருக்குங் கட்டுப்படாமல், இஷ்டப்படி சம்போக சுகபோகங்களை அநுபவிக்கவேண்டும். ஆகையால், உனக்கு இஷ்டம் இருந்தால் சொல்; நான் அதற்கு வேண்டிய உபாயங்களை செய்கின்றேன்" என்றுள். இக்கொடிய வசனமாகிய நாராசம்

காதில் பட்டவுடனே சந்திரகாந்தையானவள் கோபமும் வெட்கமுமுற்றவளாய், அந்த வித்தியாவதியை நோக்கி "என்னடி துஷ்டை! நீ என்னிடம் வாய் கூசாமல் தகாத வார்த்தைகளைச் சொல்லுகின்றனை? உனக்குத் தகுந்த பதில் சொல்லாமல் இருப்பேனாகில் என்னையும் எல்லோரும் துஷ்டையென்று சொல்லும்படி அபாண்டமான வியபசாரப் பட்டத்தை நீ எனக்குக் கட்டிவிடுவாய். அதற்காகப் பயந்து உனக்கு மறுமொழி சொல்லுகிறேன் கேள். எப்பொழுதும் ஸ்திரீகள் மாதவிடாயான ஐந்தாம் நாள் தொடங்கிப் பதினாறு நாள் வரையில் தன் புருஷனோடு சம்போகிக்க ஏற்ற காலம். இதன் மத்தியில் நிஷித்தமான தினங்களைத் தள்ளிச் சுத்தமான தினங்களில்தான், நாயகரும் சேரவேண்டும். இப்படிப்பட்ட இல்லற தருமத்தினால் அந்தத் தம்பதிகள் நற்பதவியையடைகிறார்கள். அவ்வாறே சகல கலைகளையுமறிந்த எனது பிராணநாதர், நிஷித்த தினங்களைத் தள்ளி சுத்தமான தினங்களில் என்னுடன் கூடுகிறார். இங்ஙனம் சுத்தமான தினங்களில் சேர்ந்து, உற்பத்தியான புத்திரன் தீர்க்காயுளாயும், வித்துவானாயும், பாக்கியசாலியாயுமிருப்பான். அப்படிக்கின்றி நிஷித்த தினங்களில் சேர்ந்து, உற்பத்தியான புத்திரன் கேவலம் பாபியாயும், அற்பாயுசாயும், தாய் தந்தையருக்கு அதிக துக்கத்தை விளைவிப்பவனாயுமிருப்பான். என்று பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். நிஷித்த தினங்கள் எவையெனில்: ஷஷ்டி, அஷ்டமி, ஏகாதசி, துவாதசி, சதுர்தசி, அமாவாசை, பௌர்ணிமை, மாதப்பிறப்பு, சிரார்த்த தினம், ஜன்ம நக்ஷத்திர தினம், திருவோண நக்ஷத்திர தினம், விரத தினம், அந்தி சந்தி

காலம் இவைகளே. இக்காலங்களில் ஸ்திரீ சம்போகம், க்ஷௌரம், அப்பியங்க ஸ்நாநம், பல் தேய்த்துக்கொள்ளல் ஆகிய இந்நான்கு செய்கைகளையும் புரியலாகாது. அப்படி தவறி நடப்பவன் சதுர்வேதியாயிருந்தபோதிலும், சோமயாகம் செய்தவனாயிருந்தபோதிலும், எரிநரகத்திற்கு ஆளாவான். வித்யாவதியே! நான் உனக்குக் கிருகஸ்த தர்மத்தைச் சுருக்கமாய்ச் சொன்னேன். ஆகையால், ஸ்திரீகள் கேவலம் காமாந்தர்களாயிராமல் குறித்த தினங்களில் தம் தம் கணவர்களுடன் கூடியிருக்கவேண்டியது. இனிமேல் என்னிடம் இப்பேர்ப்பட்ட அவதூறான மொழிகளை உரைக்கவேண்டாம்'' என்றாள்.

யாவற்றையும் கேட்ட வித்யாவதி தந்திரமாக மறுபடியும் அவளுக்குப் போதிக்கத் தொடங்கினதாவது: ''அடி! அசட்டுப்பெண்ணே! இதோ பார். கொஞ்சம் என் வார்த்தையைக் கேள். நீ இந்த இளமைப் பருவத்தில் தன் இஷ்டப்படி வேண்டிய இன்ப சுகங்களையனுபவிக்காமல் இருந்துவிட்டாயேயானால், பின்பு, இன்னும் சொற்ப காலத்தில் இந்த யௌவனம் போய், அங்கங்களெல்லாம் வற்றி அழகு குன்றிப்போய்விட்டால் உன்னை யார் இலக்ஷியம் பண்ணுவார்கள்? அப்பொழுது நீ இந்த இன்ப சுகங்களை நுகர விரும்பினால் எங்ஙனம் கிடைக்கும்? அஃதிருக்க; நீ ஏதோ உன் புருஷன் உன்னிடத்தில் மகா விசுவாசம் வைத்திருக்கிறான் என்றும், குறித்த சில தினங்கள் மட்டுமே, உன்னுடன் இருப்பதாகவும் சொல்லவந்தாயே, உன் புருஷனுடைய நடத்தையெல்லாம் நான் அறிவேன்; சொல்லுகிறேன் கேள். அவன் உன்னிலும் அதிக ரூப

சௌந்தர்யமுடைய ஓர் தாசியை வைத்துக்கொண்டிருக்கிறான். நீ கள்ளம் கபடில்லாமல் வெளுத்ததெல்லாம் பால் என எண்ணியிருப்பதால், அவன் செய்யும் சூதும் வாதும் உனக்குத் தெரியவில்லை. உனது புருஷன் விடபுருஷர்களில் தலைமையானவன். நீ சுத்த பேதையாயிருப்பதால் அதை அறிந்துகொள்ள முடியவில்லை. மேலும் ஒன்று சொல்லுகிறேன் கேள். உன் புருஷன் அடிக்கடி ஸ்திரீ சங்கமம் செய்யாமல் இருந்தால் ரோகியாய்விடுவான். உன் புருஷனோ பொல்லாத காமப்பித்தன். ஆகையால் உனது நாயகன் குறித்த சில தினங்களில்மட்டும் உன்னோடு கூடுவது உண்மையேயானால், அவன் இப்பொழுது நோயாளியாய் இருக்கவேண்டுமே; அப்படிக்கில்லையே, மேலும் உன் புருடன் என்னிடத்தில் நேரே, தான் ஒரு தாசியை வைத்துக்கொண்டிருப்பதாயும், தான் அவளிடத்தில் தினம் போவதாயும் சொல்லியிருக்கிறான். நீ எனக்கு உண்மையுள்ள சிநேகிதியாகையால் அந்த இரகசியத்தை நான் ஒளியாமல் உன்னிடத்தில் சொல்லிவிட்டேனம்மா, அப்புறம் உன்பாடு, நான் வருகிறேன் என்று விரைந்து செல்ல, சந்திரகாந்தை என்பவள், அடி வித்தியாவதி, இங்கே வா. நீ இனிமேல் இப்பேர்ப்பட்ட அநீத வார்த்தையை என்னிடம் கூறுதே. நானும் தரும சாஸ்திரம் வாசிப்பதைக் கேட்டு சில விஷயங்கள் தெரிந்துகொண்டிருக்கிறேன் ஆகையால், எனது பர்த்தாவானவர் அதிசுந்தராகயிருந்தாலும் சரி, விடராயிருந்தாலும் சரி; புண்ணியசாலியாயிருந்தாலும் சரி, பாபியாயிருந்தாலும் சரி, மூடராயிருந்தாலும் சரி; எனக்கு அவரைத் தவிர வேறு தெய்வம் கிடையாது. அடியே! நற்குடியில் பிறந்த பெண்

கள் தன் கணவன் வீட்டிலும் கணவரிடத்திலும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை நீ அறியவில்லை போலும். இதோ நான் சொல்லுகிறேன் கேள். அதாவது,

कार्येषु दासी करणेषु मन्त्री रूपेषु लक्ष्मीः क्षमया धरित्री।
स्नेहे च माता शयने तु वेश्या षट्कर्मयुक्ता कुलधर्मपत्नी ॥

கார்யேஷு தா³ஸீ கரணேஷு மந்த்ரீ
ரூபேஷு லக்ஷ்மீ: க்ஷமயா த⁴ரித்ரீ ।
ஸ்னேஹே ச மாதா ஸயனே து வேஸ்யா
ஷட்கர்மயுக்தா குலத⁴ர்மபத்னீ ॥

என்று நீதிசாஸ்திரத்தில் சொல்லியபடி பெண்கள் வீட்டில் பணிப்பெண்போலவும், கார்யாலோசனையில் மந்திரி போலவும், ரூபத்தில் மஹாலக்ஷ்மிபோலவும், பொறுமையில் பூதேவிபோலவும், ஸ்நேகத்தில் தாய்போலவும், படுக்கையில் வேஸிபோலவும், இவ்வாறு வகையாய் கணவன் விஷயத்தில் பிரவர்த்திப்பவள் குலஸ்திரீயாவாள் என்பது தெரிந்துகொள். ஆகையால் ஸ்திரீகள் தன் புருஷன், எப்பேர்ப்பட்டவனாக இருந்தபோதிலும் அவனையே தெய்வமெனக் கொள்ளவேண்டும். தவிர, நியமம், விரதம், குரு சேவை, சுவாமி சேவை எல்லாம் புருஷனே தவிர வேறு யாருமில்லை; அப்பேர்ப்பட்ட ஸ்திரீகளுக்கு ஹரிபக்தி கூடத் தேவையில்லை. அப்படி பதிபக்தி இல்லாமல் எவள் அவனைக் கண்டவாறு நிந்தித்துக்கொண்டிருக்கிறளோ அவள் அநேக ஜன்மம் வரையில் நாயாய்ப் பிறப்பாள். என்று இவ்வாறு உரைத்த சந்திரகாந்தையை நோக்கி, மறுபடியும் வித்தியாவதி, "அடி! சந்திரகாந்தி பொருக்

திய முகத்தையுடைய எனது பிரிய சகியே! ஒரு சிறு விஷயம் எடுத்துச் சொல்லுகிறேன். அதாவது சுவர்க்க லோகத்தில் கிருதாசி, மேனகை, அரம்பை, ஊர்வசி, திலோத்தமை, சுகேசி, மஞ்ஜுகோஷா, புஞ்சிகஸ்தலை என்ற அநேக தேவதாசிகள் தங்களுக்கு இஷ்டர்களான புருஷர்களுடன் கூடி சுரதக்கிரீடானுபவத்தை இஷ்டப்படி அநுபவித்து வருகின்றனர் என்று கேள்விப்படுகின்றோமல்லவா; ஆகையால் இம்மையிலும் மறுமையிலும் இவ்வாறு நாம் நம் இஷ்டப்படியிருந்து சுகம் அனுபவிப்பதுதான் சுகமாகும். அப்படிக்கன்றி புண்ணியமென்றும் பாபமென்றும் சுவர்க்கமென்றும் நரகமென்றும் சொல்லுவதெல்லாம் சுத்த அபத்தமான வார்த்தை. நமது யௌவனமோ அசாசுவதமானது. நாம் இருக்கும்வரையில் மனப்பூர்வமாக என்னென்ன சுகதுக்கங்கள் அனுபவிக்கிறோமோ அவைதான் உண்மையானவை. மற்றப்படி அதிர்ஷ்டமான சுகதுக்கம் வேறு யாதுமில்லை. புண்ணிய பாபங்கள் என்று சொல்வதெல்லாம் கல்பனு வார்த்தைகளென்பது எனக்கு நன்றாய்த் தெரிந்த விஷயம். இதோ! என்னைப் பார். யான் என் புருஷனைக் கொன்றுவிட்டு ஒருவருக்கும் கட்டுப்படாமல் என் இஷ்டப்படி வேண்டியவர்களுடன் சுகம் அனுபவித்துக்கொண்டிருக்கின்றேன். எவள் ஒருவருக்குங் கட்டுப்படாமல் யதேச்சையாக இருக்கின்றாளோ, அவள்தான் பலவித சௌக்கியங்களையும் பெறுவாள்" என்று இன்னம் பலவித காரணங்களாலும் திருஷ்டாந்தங்களாலும் நரகப்பிரதானமான பலவித துர்ப்போதனைகளைப் புகட்டினள். இவ்வசனங்களைக் கேட்ட சந்திரகாந்தையும் ஏதோ பூர்வ ஜன்மத்தில் செய்த பாபவசத்தினாலும், ஸ்திரீ புத்தி

பின்புத்தியாதலாலும், யௌவன மதத்தினலும், அவளுக்கிணங்கித் திருமணமயமான சுகத்தை அபேக்ஷித்தவளாய்க் குலாசாரங்களைவிட்டு ஒரு மாதம் வரையில் இரகசியமாய் வியபசரித்துப் பின்பு பகிரங்கமாய்ப் புறப்பட ஆரம்பித்து விட்டாள். அவள் புருஷனை வேதாசி என்னும் பிராம்மணோத்தமனும் அவள் கடத்தை அறியாது பத்து நாள் வரைக்கும் அவளோடு சுகம் அனுபவித்தபின், அவளுடைய துர்நடத்தையையும் மிதமிஞ்சிப் பேசும் வார்த்தைகளையும் கேட்டு அவள் பதிதையாய்விட்டனள் என்று நிச்சயித்து, அவளை வீட்டினின்று வெளிப்படுத்தி, தன்னிடமுள்ள செல்வங்களையெல்லாம் துறந்து மகா துக்கத்தையடைந்தவனாய், அவளிடம் அறியாமல் பத்து நாள் வரை வசித்ததற்காக விதிப்படி பிராயச்சித்தம் முடித்து, விரக்தனாய் காவேரி நதிக்கரையில் சென்று தவம் புரிந்து கொண்டிருந்தனன்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்
மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## 4-வது அத்தியாயம்.



ஸ்ரீ காவேரி தேவி.

अच्छस्वच्छ वसद्दुकूलवसनां पद्मासना ध्यासिनीं ।
हस्तन्यस्त वराभयाब्ज कलसां राकेन्दुकोटिप्रभां ॥
भास्वद्भूषण गंधमाल्य रुचिरां चारुप्रसन्नाननां ।
श्रीगङ्गादि समस्त तीर्थनिलयां ध्यायामि कावेरिकाम् ॥

*அச்ச2ஸ்வச்ச2 வஸத்3து3கூலவஸனும்*
*பத்3மாஸனு த்4யாஸினீம் ।*
*ஹஸ்தன்யஸ்த வராப4யாப்3ஜ கலஸாம்*
*ராகேந்து3கோடிப்ரபா4ம் ॥*
*பா4ஸ்வத்3பூ4ஷண க3ந்த4மால்ய ருசிராம்*
*சாருப்ரஸன்னுனனும் ।*
*ஸ்ரீக3ங்கா3தி3 ஸமஸ்த தீர்த2நிலயாம்*
*த்4யாயாமிகாவேரிகாம் ॥*

## சந்திரகாந்தை காவேரி ஸ்நாநம் செய்து தனது பாவத்தை போக்கிக்கொண்டது.

இவ்வாறு சந்திரகாந்தையானவள் அப்பட்டணத்தி லுள்ள விடபுருஷர் எல்லோரிடத்திலும் விசேஷ தனங்கள், ஆபரணங்கள், பரிமள வஸ்துக்கள் முதலியவைகளைப் பெற்றுக்கொண்டு, பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, சண்டாள, சங்கரஜாதியார் என்ற ஜாதி பேதத்தையும் பாராமல் நிர்பயமாய் இஷ்டப்படி கிரீடித்துக்கொண்டிருந் தனள். அவள் இங்ஙனம் கற்பழிந்து கண்டபடி திரி வதைக் கேட்ட அவ்வூர் அரசனான இந்திரத்யும்னன் என்னும் பாண்டியன் குலப்பிரஷ்டையான அப்பாவை, இனி இப்பட்டணத்திலிருந்தால் இந்நகரவாசிகள் அனைவரும் பாவத்துக்காளாவார் என்று நினைத்து அவளுடைய பொருள்களையெல்லாம் கவர்ந்துகொண்டு அவளை அந்நகர் விட்டோடும்படிச் செய்தனன். பின்னர் அவள் வெறும் கை யுடன் காவேரிதீரமடைந்தாள். அவ்விடத்திலும் காமத் தால் விரும்பிய விடர்களெல்லாம் அவளிடம் ஆசையுடைய வர்களாய் தன்னிடமுள்ள தனங்களையெல்லாம் கொண்டு வந்து அவள் அழகுக்குக் கொட்டிக்கொண்டு வந்தார்கள். இப்படியே சிலகாலம் நடந்துகொண்டிருந்த, பிறகு அவள் கண்டபடி வியபசாரம் செய்ததினாலும் பூர்வஜன்ம வினையி னாலும் அவளுக்கு பலவித ரோகங்கள் சம்பவித்து கடைசி யில் அக்காவேரி நதிக்கரையிலேயே தனது பிராணனை விட்டனள். பின்பு நரகத்தில் ஒரு மன்வந்தரகாலம் நரக வேதனை அடைந்து மீண்டும் உறையூரில் ஓர் தாசி வயிற்

றில் பிறந்து முன்ஜன்மத்தில் செய்த பதித்துரோகமாகிய பாபத்தினால் பெருவியாதியுற்று, காது மூக்கு விரல்கள் முதலிய இடங்களெல்லாம் புழுத்து, அனேக கோடி புழுக்கள் அரிக்க வருத்தப்பட்டு, அகோராத்திரம் ஆகார நித்திரையில்லாமல், ஐயோ ஐயோவென்று அலறி தேகமெங்கும் நெருப்பாய் எரிய அதை பொறுக்கக் கூடாமல் அங்குமிங்குமோடி, ஏதோ, பூர்வஜன்மத்தில் செய்த புண்ணிய வசத்தால் காவேரியையடைந்தவளாய் ஸ்ரீரங்கத்திற்கு வந்து துலா மாசத்தில் அநேக பிராம்மணர்கள் காவேரி நதிக்கரையில் துலாகாவேரி மகத்துவத்தைப் பாராயணம் செய்துகொண்டிருக்கையில் இவள் தனது தேகத்திலுள்ள எரிச்சல் தணியுமாறு காவேரியில் ஸ்நாநம் செய்தனள். அப்போது அவர்கள் படித்துக்கொண்டிருந்த ஹரிகதையில் துலா மாதத்தில் காவேரி தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்த மனிதனொருவன் துர்ச்சனனாயினும், பதிதனாயினும், பவித்திரனாய்ப் புருஷோத்தம புரத்தில் பூஜிக்கப்படுவான் என்ற அருத்தமமைந்த ஒரு சுலோகம் காதில் விழுந்தது. உடனே அவளும் பிராணனைவிட்டாள். அப்போது யமகிங்கரர்கள் ஸௌம்யமான உருவத்தோடு பிரத்தியக்ஷமாகி திவ்ய விமானத்தைக்கொண்டுவந்து நிறுத்தினார்கள். அவளும்தான் இப்படிப் பக்திசிரத்தையில்லாமல் கேவலம் தேகத்தின் தாபத்தைத்தீர்க்க ஒருதரம் காவேரி ஸ்நாநம் செய்த பலத்தினால் சகல பாபங்களினின்றும் விமோசனம் அடைந்தவளாய், அந்த விமானத்திலேறிக்கொண்டு; காவேரியினது மகத்துவத்தை மெச்சி மார்க்கத்தில் சற்றுத் தங்கிப் பலவித பக்ஷிய போஜனாதிகளைப் புசித்துக் களையில்லாமல் சுகமாய்ச் சுவர்க்கலோகம் சென்

றனள். வியபசாரியான வித்தியாவதி என்பவளோ, எமனால் ஏவப்பட்ட நாய்களால் கடியுண்டு தேகமெல்லாம் இரத்தம் ஒழுகப் பிராணனைவிட்டு, ஓர் பிரம்ம கல்பம் வரையில் ரௌரவாதி நரகங்களையனுபவித்து, மூன்று ஜன்மம் நாயாகப் பிறந்து, பிறகு பீஷ்மாச்சாரிக்கும் பரசுராமருக்கும் ஓர் பயங்கரமான சண்டையை யுண்டுபண்ண, காசி ராஜனது பெண்களாகிய அம்பை, அம்பிகை, அம்பாலிகை யென்ற மூவரில் மூத்தவளான அம்பையெனும் பெண்ணாக வந்து பிறந்தாள்.

சந்திரகாந்தையின் காந்தனான வேதராசி என்ற பிராமணோத்தமன் காவேரி நதிக்கரையில் வெகுநாள் தவம் செய்துகொண்டிருந்து, துலாமாதத்தில் ஒவ்வொரு நாளும் நியமநிஷ்டையுடன் பக்திச்சிரத்தையோடு ஸ்நானஞ் செய்து மிக்க பரிசுத்தனாயிருந்து கொஞ்சநாளில் அந்த பிராமணன் காலதர்மத்தை அடைந்தனன். உடனே கோடி சூரியப்பிரகாசமுள்ள திவ்விய விமானத்திலேறி அழகிய ரூபத்தையுடைய யமதூதர்களால் இயமபுரிக்குக் கொண்டுபோகப்பட்டனன். அவன் அங்ஙனம் செல்லுகையில் மார்கத்தில், மகாபயங்கரர்களான யமபடர்களால் பலவாறு இம்சிக்கப்பட்டு இயமபுரிக்கு இழுத்துக்கொண்டு போகப்படுகிற அநேக பாபிகள் ஐயோ, ஐயோ, என்று ஓலமிடுகிறதைக்கேட்டு அந்த பிராமணன், தன்னையழைத்துக்கொண்டுபோகிற தூதர்களை நோக்கி, "ஓ கிங்கரர்களே! இங்கு ஏதோ அழுகைச்சத்தம் கேட்கிறது. அனேகம் ரோதனம் செய்கின்றவர் இத்தகையாரென்று பார்க்கவேண்டும். ஆதலால், அவ்வழியாகக் கூட்டிக்

கொண்டு போங்கள்" என்று சொல்லவே, அத்தூதர்களும் அவ்வாறே அவர்கள் சமீபத்தில் கூட்டிக் கொண்டு போனார்கள். அங்குச் சிலவிடத்தில் அநேக தானதருமங்களையும் ஸத் கருமங்களையும் செய்த புண்ணியாத்மாக்களை யமபடர்கள் மிகவும் சௌம்யமான ரூபத்துடன் வந்து தம்மைப்போல் விமானத்திலேற்றிக் கொண்டு, இதோ பால், இதோ தயிர், இதோ பழவர்க்கங்கள், இதோ போஜனங்களிருக்கின்றன. முன் நீங்கள் இவைகளை அநேக பிராம்மணர்களுக்குத் தானம் செய்த பலன் இது. அவை யாவும் இங்கே ஆயத்தமாயிருக்கின்றன. தயைசெய்து அவைகளை எல்லாம் உண்டு சிரம பரிகாரம் செய்துகொண்டுபோகவும். ஓ புண்ணியர்களே! புநிவிருத்தி கிடையாது, ஏழைகளிடம் அன்பாயிருப்பவனும் தாதாவாயிருப்பவனும் நரகமடையான். தானமீயாதவனுக்கு எந்தக் கிரியைகளும் கிட்டாது. நீங்கள் பஞ்ச மகாயக்ஞங்களைச் செய்தீர்கள்; என்றும், உஷத்காலத்தில் ஸ்நாநத்தையாசரித்தீர்கள். காவேரி முதலிய புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நாகமாடின சத்புருஷர்கள், எமதூதர்களாகிய எங்களையும் ஜயித்துச் சுவர்க்கவாசிகளாவார்கள் என்று புருஷர்களை உபசரித்தும், பின் அடுத்துள்ள கற்புமங்கையரை நோக்கி, யமபடர்கள் "ஓ அருந்ததியையொத்த பதிவிரதைகளே! நீங்கள் உங்கள் பர்த்தாக்களிடத்தில் பக்தி செய்து பூமியில் பரலோகப் பிராப்தமாகும் புண்ணியங்களையியற்றினீர்கள். நீங்கள் நன்றான ஆசாரங்களை வகித்து எப்போதும் பரிசுத்தராயிருக்கிறீர்கள்; நீங்கள் பதிபக்தியில் சிறந்தவர்களாகையால் வேதோக்த கர்மங்களால் இலபிக்கும் சுரலோகம் சுலபத்தில் உங்களுக்குக் கிட்டி-

யது. பர்த்தாக்கள் நிஷித்தராயினும், ரோகிகளாயினும், கோபிகளாயினும், எக்காலமும் அகலாது பதிசிஸ்ரூஷை பண்ணினீர்கள். ஆகையால் அதன் பயனை எளிமையில் அனுபவிக்க சுலபமாக இங்கு வந்தீர்கள். எவ்வளவு சாதுக்களாயிருந்தாலும் எவ்வளவு தபோ பலனையுடையார்களானாலும் இகத்தில் ஏழைகளுக்கு இடாதார்க்குப் பரத்தில் மேன்மை கிட்டாது. தானத்தால் ஒருவன் தனவந்தனாகிறான் தபத்தால் மூவுலகும் அடைகிறான். ஆகையால் விப்பிரோத்தமர்களுக்குச் சத்ருவினும் தனம் கொடுக்கவேண்டும். தானங்கொடுக்ாதவனுக்கு தேவலோகத்தில் இடமில்லை. மேலும் அவனுக்கு சௌக்கியமிராது. மனசுத்தி சேராது. புத்திரசம்பத்தும், ஞானமுமிராது. அவனிடத்தில் பிதிர்களும் திருப்தியடையார்கள்" என்று உபசார வார்த்தைகளால் ஸ்திரீகளை உபசரித்தும், சிலவிடத்தில் கோரப்பற்களும் பரட்டை ரோமங்களும் பயங்கரமான வடிவுடையவர்களாயும், கைகளில் இரும்புலக்கை, கத்தி, கதை, சூலம், ரம்பம் முதலிய ஆயுதங்களை ஏந்தியவர்களாயுமிருக்கின்ற யமபடர்களால், வெட்டு, குத்து என்று பலவாறு பயமுறுத்தப்பட்டு, நெருப்பில் வாட்டி, கன்றுப் வறுத்த மணலிலும், இரும்புமயமான முட்கள் நிறைந்தவிடத்திலும், கல்லும் முள்ளுமானயிடங்களிலும், வெகு வேகத்துடன் இழுக்கப்பட்டும், குப்புறதள்ளப்பட்டும், பசி தாகத்தால் பீடிக்கப்பட்டும், காட்டுத்தீயால் பொசுக்கப்பட்டும், பற்பல ஆயுதங்களினால் சின்னாபின்னமாய் வெட்டப்பட்டும், நிர்ஜலமும் நிர்மனுஷ்யமுமான காட்டில் கோரமான ரூபமுடைய வேட்டை நாய்களால் மர்ம ஸ்தானத்தில் கடிக்கச்செய்தும்,

இன்னும் பலவித இம்சை செய்தும், ஐயோ! ஐயோ! என்று பாபிகள் ஓலமிடுகிறதைக்கண்டு வேதராசியென்னும் விப்ரச்ரேஷ்டனும் தன்னுள் அதிக ஆச்சரியமும் துக்கமுமுடையவனானான். இப்பாவிகள் எப்படிப்பட்டவர்களென்றால் தாங்கள் பூமியில் வசித்தநாளெல்லாம், பிராணி வதை செய்தல், பாசிக்கை செய்தல், பிறர் பொருளை அபகரித்தல், பரஸ்திரீ கமனஞ்செய்தல், சாதுக்களை பழித்தல், ஸ்நாந சந்திகளை ஒழித்தல், வேத சாஸ்திரம் படனம் பண்ணாமை, தேவாராதனை இல்லாமை, மாதரு பிதருக்களை உத்தேசித்து சிரார்த்தம் திலதர்ப்பணாதிகள் செய்யாது அவர்களை தூஷணம் செய்தல், பிறர் குற்றங்களையே குறித்தல். ஒருவர் செய்யும் சத்கருமங்களை கெடுத்தல், கடவுளை நிந்தித்தல், துர்ச்சன சகவாசங்களைப் பெற்று விரதங்களை அனுசரிக்காமை, சுபகரமான யாகாதிகளைச் செய்யாமை, புசிக்கத் தகாததை புசித்தல், பசுக்களுக்குப் போதிய தீனி போடாமல் அவைகளின் கன்றுக்குச் சரிவர பாலும்கொடுக்காமல் கறக்குதல், பந்தியில் பேதம் செய்தல், துலாகாவேரி ஸ்நாநம் செய்யாதிருத்தல், நல்லோருக்குக் கெடுதலும், பொல்லாருக்கு நன்மையும் செய்தல், தேவப் பிராம்மணர்களை நிந்தனை செய்தல், தாய் தந்தையர், குரு இவர்களை தூஷித்தல், பொய் சாக்ஷி கூறல்; சத்பாத்திர தூஷணமும், அசத்பாத்திர பூஷணமும் செய்தல், தன் சொந்த பிரயோஜனத்தின் பொருட்டுப் பச்சை மரங்களை வெட்டுதல், முதலிய மகா பாபங்களைச் செய்தவர்கள். ஆகையால் இவர்கள் எமபடர்களால் வதைக்கப்பட்டு, இழுத்துக்கொண்டு போகப்படும்போது அப்பாபிகள் தூதுவரை நோக்கிச் சொன்னதாவது: "ஐயோ!

பசிக்குக் கொஞ்சம் அன்னங்கொடுங்கள்; தாகத்துக்குத் தண்ணீர் கொடுங்கள்; பசிதாகத்தால் வருந்தும் எங்கள் பேரில் இரக்கம் வைத்துச் சற்றுநேரம் இம்சிக்காமலிருங்கள் என்று பலவாறு பல்லையிளித்துக்கெஞ்சிக்கேட்டும், அந்த யமபடர்கள் கிஞ்சித்தேனும் இரக்கம் காட்டாமல் முன்னிலும் மும்மடங்கு அதிகமாக இம்சித்து, அவர்களை வானத்தில் தூக்கி எறிந்து பாறையில் ஓங்கியடித்தும், கத்திகளாலும், சிறு ரம்பங்களாலும், வாட்களாலும் வெட்டியும், குத்தியும் அறுத்தும், வெட்டுண்ட காயங்களில் உப்பு ஜலத்தை யூற்றியும், ஊசியால் குத்தியும், இன்னும் பற்பல தண்டனைகளைச் செய்து மூர்ச்சித்துப் போன அவர்களைப் பின்னும் பவாநுபாவத்திற்காகவே சுத்தஜலத்தால் நனைத்துப் பிழைப்பித்தும், விப்ர, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ஸ்திரீகளையும், மற்றும் பாப சமூகங்களையுடைய மனிதர்களையும், காது, மூக்கு, மார்பு முதலிய அங்கங்களைக்குத்தி பாசத்தினுல்கட்டி இழுத்துக் கொண்டு போகையில், அவர்களில் சிலர் பிராம்மணரும், சிலர் க்ஷத்திரியரும், சிலர் வைசியரும், சிலர் சூத்திரரும், சிலர் சண்டாளரும், சிலர் ஸ்திரீகளுமாய் இப்படி பற்பல வருணத்தாரும், பற்பல ஜாதியாருமாயிருந்துகொண்டு, தாங்கள் ஒவ்வொருவரும் பூமியில் இருக்கும்பொழுது செய்த கொடிய பாவங்களை அடிக்கடி நினைத்துக்கொண்டு, "ஐயோ! அப்பொழுது தெரியாமல் அப்பாவம் செய்தேன். இப்பொழுது இப்படிப்பட்ட அவஸ்தைப்படுகிறேன்" என்று உரக்கக்கூவி யழும் சத்தத்தைக்கேட்டு, வேதராசியும் அவர்களிடத்தில் அதிக கருணையுடையவனாய், "ஐயோ, இவ்வளவு ஜீவகோடிகள் இங்ஙனம்

அனியாயமாய்ப் பீடிக்கப்படுகிறார்களே, எனக்கு, இவர்கள் படுந்துயரத்தைப்பார்க்க மனம் தாளவில்லை. இவர்களை எவ்வித உபாயத்தினால் இக்கொடிய உபத்திரவத்தினின்றும் விடுவித்து, புண்ணிய லோகம் சேர்ப்பிக்கலாம்" என்று தன்னுள் யோசித்து, வேறு எவ்வித புண்ணியத்தின் பலத்தினாலும் அவர்களை மீட்பது அரிதென்று நினைத்து, தான் சம்பாதித்திருக்கிற துலாகாவேரி ஸ்நாந பலத்தில் மூன்று நாள் ஸ்நாந பலனை அவர்களுக்குக் கொடுத்து, அவர்களை கரையேற்றலாமென்று அவர்களை நோக்கிக் கூறுகிறார். "ஓ பாபாத்மாக்களே! நீங்கள் படும் வேதனையைத் தாங்காது நான் செய்த துலாகாவேரி ஸ்நாந பலனில் மூன்று தினங்களின் உத்தம பலனை இதோ உங்களுக்கு சத்தியமாய்க் கொடுத்தேன். அதனால் நீங்கள் எல்லோரும் இந்த வேதனையினின்று விடுபட்டு நல்லுலகமடையக் கடவீர்கள்" என்று அன்போடு உரத்திச்சொன்னார். இவர் இங்ஙனம் சொன்னவுடனே அந்தப் பாபிகள் எல்லோரும் யமபாசங்களினின்றும் விடுபட்டு, யாதொரு வேதனையுமில்லாமல் புண்ணியசாலிகளைப்போல் சுவர்க்கம் போய்ச் சேர்ந்தார்கள். இதனைக்கண்ட யமபடர்கள் கோபமும் ஆச்சரியமுமுற்றவர்களாய் அவரை நோக்கி; "ஓ பிராமணோத்தமரே! நீர் ஏன் இந்தப் பாவிகளை எங்கள் பாசத்தினின்றும் விடுவித்து, சுவர்க்கஞ் சேரச்செய்தீர்? நாங்கள் எஜமானனுடைய உத்தரவின்படி பூலோகத்தில் புண்ணியபாவம் செய்கின்றவர்களை எங்கள் யஜமானனிடம் கொண்டுபோய் விடுகிறோம். இவர்களை யமபுரிக்குக் கொண்டுபோகையில் புண்ணியஞ் செய்தவர்களை திவ்விய விமானத்திலேற்றி, மகா உபசாரத்துடனே சுகமாய்

இட்டுக்கொண்டுபோவோம். கொடிய பாபம் செய்தவர்களை பலவாறு வருத்திக் கண்டபடி கல்லிலும், முள்ளிலும் இழுத்துக்கொண்டுபோய், எங்கள் எஜமானன் முன்னே விடுவோம். பின்பு எஜமானான எமதர்மராஜாவானவர், அவரவர்கள் செய்த பாபபுண்ணியங்களுக்குத் தக்கபடி தண்டனை விதிப்பார். அப்படியிருக்க, இப்பொழுது நீர் இவர்களை இங்ஙனம் எங்கள் பாசத்தினின்றும் விடுவித்துப் புண்ணியலோகம் சேரும்படிச் செய்துவிட்டீரே. தருமராஜனான எங்கள் யஜமானன் "நீங்கள் அந்தப் பாதகர்களெல்லோரையும் என்னிடம் கொண்டுவந்து சேர்க்காமல் என்னுக்கினைக்கு முற்றிலும் விரோதமாய் அவர்களை ஏன் விட்டுவந்தீர்கள்? என்று எங்களைக் கோபித்துச் சிக்ஷிப்பாரே. அதற்கு நீர்தான் உத்திரவாதியாயிருக்கவேண்டுமென்று சொல்லி, அந்த வேதராசி என்னும் மஹானை யமபுரிக்கு இட்டுக்கொண்டு போனார்கள். அவ்விடத்தில் பார்க்க மிகவும் பயங்கரமான பலவித நரகங்களில் விழுந்து புழு துடிப்பதைப்போல் துடிதுடித்து, ஹாஹாகாரம் செய்கிற அநேக ஜீவகோடிகளைப் பார்த்தவுடன் அந்த வேதராசி என்ற அந்தணனுக்கு அவர்களிடத்தில் அதிக தயவு பிறந்து, மிக்க பரிதாபத்துடன் அவர்களை நோக்கி, "ஓ நரகவாசிகளே! நீங்களே கண்டபடி பாபகர்மங்களைச் செய்து இப்படி நரகவேதனை அனுபவிக்கிறீர்கள். தேகம் அநித்தியம் என்று தெரியாதா, மானிட ஜன்மம் எடுப்பது மகா துர்லபமாயிற்றே! நீங்கள் ஒருநாளும் புண்ணிய நதிகளில் ஸ்நானம் செய்யவில்லையா? தானதருமங்களைச் செய்யவில்லையா? சிவபூஜை விஷ்ணுபூஜை செய்யவில்லையா? துலாமாதத்தில் காவேரி நதியில் ஒரு தடவையாவது ஸ்நா

நம் செய்யவில்லையா? ஏகாதசி முதலிய புண்ணிய விரதங்களை அனுஷ்டிக்கவில்லையா? எம்பெருமானுடைய திருமேனியிலும் லோகசங்கரனான சம்புவின் திருமேனியிலும் ஒரு துளசி தளத்தையாவது அர்ச்சிக்கவில்லையா? நீங்கள் மாத்ருபித்ரு சிஸ்ருஷை, குரு சிஸ்ருஷை முதலியன புரியவில்லையா? தேவரிஷி பித்ரு தர்ப்பணம் முதலியவைகளைச் செய்யவில்லையா? தரித்திரனான ஒரு பிராம்மணனுக்கும் உபகாரம் செய்யவில்லையா? சகல பாபங்களையும் போக்கக்கூடிய ஸ்ரீ ஹரியினது புண்ணிய சரித்திரங்களை ஒருநாளும் சிரவணம் பண்ணினதில்லையா? என்று வேதராசி என்பவர் கேட்கலானார். இவ்வாறு வெகு துயரத்துடன் கேட்ட வேதராசியைப்பார்த்து அந்த நரகவாசிகள் மறுமொழி சொல்லத் தொடங்கினார்கள்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில் நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

---

## 5-வது அத்தியாயம்.

### வேதராசிக்கும், நரகவாசிகளுக்கும் நடந்த சம்வாதம்.

நரகவாசிகள் வேதராசியென்னும் பிராம்மணனைப் பார்த்து, "ஓ சுவாமி! தாங்கள் கேட்டவையெல்லாம் நிஜமே, நாங்கள் செய்த பாபங்களுக்குக் கணக்கே கிடையாது. நாம் ஜனனகாலந்தொடங்கி மரணகால பரியந்தம்

கொடிய பாவங்களையே புரிந்து வந்தோம். அதனால் இந்த எரிகரருக்கு ஆளானோம். நாங்கள் அருணோதய காலத்தில் சுகமாய் நித்திரை செய்தோம்; காலை மாலை சந்திகளையும், அக்காலங்களில் செய்யவேண்டிய ஜபதபயக்ஞங்களையும் செய்தறியோம்; அக்னிஹோத்திரம் பண்ணினோமில்லை; அதிதிபூஜை செய்ததில்லை; பசி, பசி என்று வந்தவர்களை விரட்டியடித்தோம்; அரக்கு, உப்பு, அன்னம், பால், தயிர், நெய், எள், வஸ்திரம் இவைகளை விற்று ஜீவனம் செய்தோம். பரநிந்தை, பரத்துரோகம், பரான்ன போஜனம், பரஸ்திரீகமனம் இவைகளை வேண்டியவாறு செய்தோம்; ஏகாதசி தினத்தில் வயிறு புடைக்கத்தின்றோம்; அமாவாசையில் பித்ருதர்ப்பணம் செய்தறியோம்; எப்பொழுதும் துஷ்ட வார்த்தை, துஷ்ட சகவாசம் இவைகளையே விரதமெனக்கொண்டோம்; ஒருநாளும் விஷ்ணு கதாமிருதபானம்பண்ணியறியோம்; மாத்ருபூஜை, குருபூஜை, பிராஹ்மண பூஜை இவைகளைப் புரிந்திலோம்; யாசகர்களுக்குக் கொடுக்கிறோமென்று ஆசைக்காட்டிப்பின்பு கொடாமல் அவர்களை வயிறெரியச்செய்தோம்; ஒருநாளும் காலையிலெழுந்து மகா நதிகளில் ஸ்நானம் செய்தோமில்லை; பிக்ஷைக்குவந்த சன்னியாசிகளுக்குப் பிக்ஷையிட்டோமில்லை; தீர்த்தயாத்திரை செய்தோமில்லை; குடும்பியாயும் ஏழையாயுமிருக்கின்ற பிராம்மணனுக்கு உதவினோமில்லை; விஷ்ணுவினுடைய உத்ஸவ தரிசனம் செய்தோமில்லை; காயத்திரீ ஜபம் செய்தறியோம்; யாகங்களைப் புரிந்தறியோம்; நிஷித்தமான தினங்களில் எண்ணெயிடாதிருந்தறியோம்; நிஷித்தமான பதார்த்தங்களைப் புசியாது விட்டறியோம்; பழைய வமுது சிரார்த்த சேஷம், ஸ்திரீ சேஷம்,

சூத்திர சேஷமான அன்னங்களை புசித்தோம். உப்பு சேர்ந்த பாலையும், புளி சேர்ந்த அவரைக்காயையும், முருங்கைக்காயையும், வெள்ளைக்கத்திரி, வெள்ளை மொச்சை இவைகளையும் புசித்தோம்; பகற் காலத்தில் நித்திரை செய்தோம்; பாலர், விருத்தர் தவிர மற்றவர்கள் புசிக்கக் கூடாத அகாலங்களில் புசித்தோம்; பகவானுக்கு நிவேதனம் செய்யாத அன்னத்தைப் புசித்தோம்; தாய் தந்தையரைக் கண்டவாறு ஏசினோம்; சுசியில்லாத ஸ்திரீயால் சமைக்கப்பட்ட அன்னத்தைப் புசித்தோம்; இரவில் தயிர் சாதமும் பகலில் பாற்சாதமும் உண்டோம்; பருப்பில்லாத அன்னத்தை புசித்தோம்; பிரஷ்டையான ஸ்திரீயுடன் சம்போகம் செய்தோம்; நாம்தான் வித்துவான், நாம்தான் நற்குடியில் பிறந்தோம், நாம்தான் செல்வ முடையோம், நம்மைவிட மேலானவர் ஒருவருமில்லை என்று சொல்லிப் பெரியோர்களை அவமதித்தோம்? பகலில் ஸ்திரீ சங்கமம் செய்தோம்; சூதாடல், கள்ளுண்ணல், பிராதக்கால சந்தியாகாலத்தில் எண்ணெயிட்டுக்கொள்ளுதல்; பாரியாளுடனிருந்து அன்னம் புசித்தல் முதலிய அகிருத்தியங்களை செய்தோம்; முருங்கை, வெள்ளைக் கத்திரி, நிலவசலை இவற்றை உண்டதேயன்றித் துவாதசியிலும் கட்டியுண்டோம். சமாராதனைக்கென்று தண்டுலங்களை யாசித்து எமது வயிற்றுக்கே கொட்டிக்கொண்டோம். வேத சாஸ்திர பண்டிதராயும், தகாதகாரியங்களிலேயே பிரவேசித்து ஸத்கர்மத்தி யாச்சியராய், கூலிக்கு வேதமோதி, எப்பொழுதும் பொய்யையே புகன்றோம். ஆகையால்தான் இப்பொழுது இந்த மகா கோரமான நரகத்தில் விழுந்து இவ்வாறு துடிக்கின்றோம். இப்பொழுது நாங்கள் அனுப

விக்கும் நரகங்களின் பெயரைத் சற்றுச் சொல்லுகிறோம் கேட்பீராக.

## பாபிகள் நரகத்தின் பெயர் கூறல்.

இரௌரவம், கால சூத்திரம், மகா ரௌரவம், காளம், விகாாளம், துஷாக்கினி, கிருகசம், கும்பிபாகம், தப்த ஜலம், ஸந்தாபம், தப்தவாலுகம், தப்தஸீலம், தப்ததைலம் பழுக்கக் காய்ச்சின இரும்புக் குண்டை விழுங்கச் செய்தல், மல மூத்திரங்களை பக்ஷித்தல், ரேதஸ்ஸை அருந்துதல் நாய் மாமிசத்தைப் புசித்தல், தன்னுடைய மாமிசத்தையே புசித்தல், இரத்தபானஞ் செய்தல், சதைகளைப் புசித்தல், பாம்புகளால் கடியுண்டல், தேள்களால் கொட்டப்படுதல், உப்புநீரைக் காயங்களில் ஊற்றல், கோரமான வைதரணி நதியில் அமிழ்த்தல், காய்ந்த கல்லின்பேரில் தள்ளிவிடுதல், உலக்கையால் புடைத்தல், காய்ந்த கல்லில் தேய்த்தல், எரிகின்ற நெருப்பில் தள்ளல், நெருப்புத்தணல்களை விழுங்கச் செய்தல், அவைகளில் படுக்கச் செய்தல், நகக் கண்களில் ஊசியால் குத்தல், குறிகளில் ஆணியறைதல், தாமிஸ்ரம் அந்ததாமிஸ்ரம் என்று கொடூரமான பற்பல கோரமான நரகங்களை யெல்லாம் நாங்கள் அனுபவித்து வருகிறோம். எங்களில் சிலருக்கு ஏழு மன்வந்தரங்களாயின. சிலருக்கு பத்மம், சங்கம், அற்புதம், நிற்புதம் முதலிய கணக்குள்ள வருடங்களாயின. அப்படியிருந்தும் எங்களுக்கு இன்னும் இதினின்று விமோசனம் கிடைக்கவில்லை. புருஷர்களாகிய எங்களுடைய அவஸ்தைதான் இங்ஙனமாயிற்றே; என்றால் ஸ்திரீகள்படும் அவஸ்தையை ஒருவாறு சொல்லுகிறோம்.

இதோ! இங்கொரு ஸ்திரீயைக் குப்புறத்தள்ளிக் கோடரியால் பிளந்தும், தேள் முதலிய விஷ ஜந்துக்களை விட்டுக் கடிப்பித்தும், வருத்துகிறார்களே, இவள் முன் ஜன்மத்தில் வியபிசாரியான ஒரு பிராஹ்மணஸ்திரீ. இவள் ஊர் உஜ்ஜயினிபுரம். இவள் எப்பொழுதும் சிடுசிடுத்த முகத்தையுடையவளாயும், தனக்குப் பல பிள்ளைகளிருந்தும் தன் வயிறு மாத்திரம் நிரப்பிக்கொண்டு மாமன் மாமிமார்களுக்கு கொடூரமாக நடத்தியவளும், புக்ககத்துச் சொத்துக்களையெல்லாம் தான் அடையக் கருதி தனது பிள்ளைகளையெல்லாம் கொன்ற பாதகி, எப்பொழுதும் துக்கமும் சோம்பலு முடையவளாயும், புருஷனைக் கண்டபடி திட்டுகின்றவளாயும், தேவப்பிராஹ்மண குருத்துரோகியாயும், மகாவியபசாரியாயும், மாதுர் பிதுர் வர்க்கங்களைத் திக்கரிப்பவளாயும், ஏழைகளை திரஸ்கரித்தும் தூஷித்தும், அன்னார்த்திகளை அவமதித்தும், வியபசாரிகளையே வேண்டியழைத்தும், பதிவிரதைகளைப் பங்கப்படுத்துபவளாயும், தன் நாயகன் ஏசினால் இப்போதே போய் சாகிறேன் என்று பயமுறுத்தியும், இதேச்சையாகத் திரிபவர்கட்குப் பொருள்தந்தும் இத்தகைய கொடிய செயல்களையே செய்து கொண்டிருந்தவளாய்க் கடைசியில் குன்மவியாதியால் பீடிக்கப்பட்டுப் பிராணனைவிட்டு, இதோ இப்பொழுது தலைகீழாகத் தொங்கிக்கொண்டு மலமூத்திரங்களை பாக்ஷித்துக் கொண்டு தேள் முதலிய விஷ ஜந்துக்களால் பீடிக்கப்படுகிறாள். இவளுக்கு அருகில் ஐயோ! ஐயோ! என்று கதறிக்கொண்டு, அடிக்கடி மூர்ச்சையடைந்து, மீண்டும் எழுந்து, ஓலமிடுகின்ற இரண்டு புருஷர்களைப் பார்த்தீரா? இவ்விருவரில் ஒருவன்

மக்ாபாபியும், பிராஹ்மண ஹிம்ஸை செய்த ஓர் அரசன், இவன் அரசாண்ட காளெல்லாம் அநீதியும் அக்கிரமமுமே மேலிட்டிருந்தன. குடிகொன்று இறைகொண்டான், ஏழைகளுக்கு இரங்காதவன். ஆகையால்தான் இப்பொழுது இங்ஙனம் வருந்துகின்றனன். மற்றொருவன் அளகமென்னும் கிராமத்தில் இருந்த பிரமச்சுருதி என்னும் பிராஹ்மணச்சிரேஷ்டனுடைய குமாரன் இவன். தான் பிரஹ்மச்சாரியாயிருந்தும் சந்தன தாம்பூலாதிகளை உபயோகித்துப் பாஸ்திரீபரிக்கிரகம் செய்தும், வேதாத்தியயனம் பண்ணுமலும், கேவலம் பாவியா யிருந்ததினால் இப்பொழுது, தான் செய்த பாபங்களுக்குத் தகுந்த தண்டனை அநுபவிக்கின்றனன். இவர்கள் படுந்துக்கத்தை பார்க்கையில் எங்கள் துக்கம் அவ்வளவு அதிகமாகத் தோன்றவில்லை, ஆகையால், ஓ! மஹாநுபாவனே ஒருக்ஷண காலம் நீர் இங்கு நில்லும். யாம் தங்களுடைய தரிசனத்தினால் இந் நரகத்தினின்றும் விமோசனத்தை அடைகின்றோம். தேவரீர் "சாக்ஷாத் ஹரியே தவிர வேறில்லை" என்றிங்ஙனம் சொல்லிக்கொண்டே அந் நரகவாசிகள் எல்லோரும் நரகவேதனையினின்று விடுபட்டு, ஒருங்கே வைகுண்டம் சேர்ந்தார்கள். இங்ஙனம் இருந்தாற்போல் அந் நரகவாசிகள் அனைவரும் முறை முறையாகக் கொடிய நரகத்தினின்றும் விடுபட்டு வைகுந்தம் போனதைக் கண்ட வேதராசியும் தனக்குள் அதிக ஆச்சரியமடைந்து, இவர்கள் மகா பாபிகளாய்ப் படு நரகத்தில் விழுந்து, புழுப்போல் துடித்தார்கள். விமோசனமாகி நல்லுலக மடைந்ததற்குக் காரணம் யாதோ புரியவில்லையே யென்று சிந்திப்பாராயினர். எப்படிப்பட்ட மேலான புண்ணியம் செய்தா

னும் இங்ஙனம் ஒருங்கே முக்தியடைய முடியாதே. உலகத்தில் மனிதர்கள் பிராரப்த கர்மானுகுணமாகப் பற்பல ஜன்மங்களை யெடுத்து அந்தந்த ஜன்மங்களில் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்க பலனை யனுபவிக்க வேண்டுமே தவிர இப்படி எல்லோரும் சேர்ந்தாற்போல் தங்கள் கரும பந்தத்தை யறுத்துக்கொண்டு நரகத்தி னின்று விட்டுப் போவதற்கு ஸாக்ஷாத் ஸ்ரீமந் நாராயண ருடைய கிருபை யொன்றல்லது மற்றெவ்வித புண்ணியத் தினாலும் கைகூடாதே. அப்படியிருக்க, இப்பொழுது இவர்கள் எப்படி முக்தி பெற்றார்கள்" என்று பலவாறு தனக்குள் யோசித்துப் பின்னர், "ஓஹோ! சரிதான், அறிந்தேன். இவர்கள் இப்பொழுது நம்முடன் பகவத் விஷயமான சம்பாஷணை செய்து ஸ்ரீ ஹரியின் நாமோச் சாரணம் செய்ததினாலல்லவோ இங்ஙனம் முக்திபெற்றார் கள். ஆகிலும், இவர்கள் எல்லோரும் சுகமாய் வைகுண்ட மடையும் படியும், அவர்களை அங்ஙனம் வைகுண்டத் திற்குப் போகும்படி வழி விட்ட யமபடர்களை, சர்வலோக சம்ஹாரியும், மகா கோபிஷ்டனுமான யமதருமராஜன் கோபிக்காமலிருக்கும்படிக்கும், மேலும் அந்த ஹரி நாமத் தைக் கேளாது இன்னும் நரகிலழுந்திக் கிடக்கிற பிராணி கள் எல்லோரும் வைகுண்ட லோகத்திற்கு போகும்படிக் கும், இதோ, யான் இவர்களையும் ஸ்ரீ ஹரி நாமாமிர்தக் கடலில் ஆழ்த்தி வைக்கிறேன். ஏனென்றால். சுராபானி கள், மித்திரத்துரோகிகள், குருத்துரோகிகள், பிரஹ்ம ஹத்தி, ஸ்திரீஹத்தி, இராஜஹத்தி, கோஹத்தி, பித்ரு ஹத்தி முதலியவற்றைச் செய்தவர்கள் காவேரி மகாநதி யில் கார்த்திகை, மாசி, சித்திரை, வைகாசி, அற்பசி, மார்

கழி முதலிய மாதங்களில் ஸ்நாநம் செய்யாதவர்கள், அக்கினிஹோத்திரம், ஔபாஸனம், ஜபம், தபம் இவைகளைப் புரியாதவர்கள், புத்திரனில்லாதவர்கள், அநாசாரர்கள், நிஷித்தபோஜிகள், அஸத் வியாபார முடையவர்கள், விஷ்ணு கதாச்சிரவணம் செய்யாதவர்கள், தீர்த்த யாத்திரை செய்யாதவர்கள், இராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய விஷ்ணு சரித்திரங்களைப் படிக்காதவர்கள், அவற்றைக் கேட்காதவர்கள், சாளக்கிராமார்ச்சனை செய்யாதவர்கள், எப்பொழுதும் சூத்திரான்னத்தையுண்டவர்கள், மகாளய சிரார்த்தம், அமாவாசை தர்ப்பணம், செய்யாதவர்கள், தாய் தந்தைகளை நிந்திப்போர், இன்னும் மற்ற மகா பாதகர்களெல்லோரும், சாக்ஷாத் பக்த பராதீனனும், தீனதயாளுவும், ஸர்வேசுவரனுமான ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்ய அக்ஷராகிய ஹரி யென்னும் இரண்டு எழுத்துக்களோடு கூடிய திவ்ய நாமத்தை ஒரு தடவை உச்சரித்தார்களேயானால், தங்கள் பாவங்களை யெல்லாம் போக்கிக்கொண்டு வைகுண்டம் சேருகிறார்கள்" என்று தன்னுள்ளே சொல்லிக்கொண்டு கீழ் வரும் ஸ்ரீ பகவந்நாம ஸ்தோத்திரத்தைச் செய்தார்.

விஷ்ணு ஸ்துதி:

योगोयोगविदांनेता प्रधानपुरुषेश्वरः ।
नारसिंहवपुः श्रीमान् केशवःपुरुषोत्तमः ॥

யோகோ[3]யோக[3]விதா[3]ம்நேதா, ப்ரதா[4]னபுருஷேஶ்வர: ।
நாரஸிம்ஹவபு: ஸ்ரீமாந், கேஶவ: புருஷோத்தம: ॥

ஓ ஸ்வாமி! அனந்த புருஷோத்தம! புஷ்கராக்ஷ! பக்தார்த்திபஞ்சன! ஹரே முராரே! ஸ்ரீ நரசிம்ஹ! மனித

லோகத்தில் விளையாட்டாகப் பற்பல அவதாரங்களை செய்பவனே! சந்திர சூரியர்களைக் கண்களாக உடையவனே! ஈசனே! ஸ்ரீ தேவி பூதேவிகளிரண்டு பேர்களாலும் ஆஸ்ரயிக்கப்பட்ட தாமரை மலர் போன்ற பாதங்களையுடையவனே! ஒருவராலும் இப்பேர்ப்பட்டவனென்று அளவிடக்கூடாதவனே! மதுவென்னும் அசுரனைக்கொன்றதனால் மதுசூதனனெனும் பெயர் படைத்தவனே! மிகவும் அழகிய வடிவுடையவனே! சகல நன்மைகளையும் அளிப்பவனே! விபுவே! உம் மலரடியை நினைத்தமாத்திரத்தில் பக்தர்களுடைய சம்சாரமெனும் பந்தத்தை நீக்கி மோக்ஷமளிப்பவனே! என்றுமழியாதவனே! பரமசிவனாலும் வணங்கப்பட்டவனே! நீலமேகச்சியாமளனே! பீதாம்பரத்தினால் விளங்குகின்றவனே! பொற்றேருடையவனே! அமரர்களுக்கு இறைவனே! நாராயணா! அச்சுதா! நவநீதசோரா! கேசவா! வேதாந்தங்களாலும் காணவொண்ணாத மூர்த்தியே! ஸ்ரீகிருஷ்ணா! விஷ்ணுவே! ரகுநாதா! ஜயசீலனே! இந்திரனுக்குப் பிரியமானவனே! சூரியகுல திலகனே! முகுந்தா! கோவிந்தா! கஜேந்திரபந்துவே! சங்கு சக்கரதாரியே! லோகா லோகங்களுக்கெல்லாம் ஈசனே! உலகங்களைப் பாதுகாப்பவனே! உலகங்களையே மூர்த்தமாகவுடையவனே! உலகெல்லாம் பரவிய ஒளியுடையவனே! சாசுவதமான அங்கத்தையுடையவனே! ரூபமற்றவனே! என்றும் அழிவில்லாதவனே! நிர்விகாரனே! ஆதிசேஷஸயனா! ஸமஸ்த பந்துவே! திரிகுணாத்மகமான ஸ்வரூபத்தினால் உண்டு பண்ணப்பட்ட உலக லீலையையுடையவனே! சுரர்கள் முனீந்திரர்கள் முதலியவர்களால் அதிக பக்தியுடன் வந்திக்கப்பட்டவனே! இந்திராநுஜனே!

ஹிரண்யகசிபுவின் குமாரனை பிரகலாதனால் ஸ்தோத்த சிக்கப்பட்டவனே! ஸ்தோத்திரங்களுக்கு இருப்பிடமான வனே என்னைக் காப்பாற்றுவாயாக; என்றிங்ஙனம் பல வாறு ஆனந்த பாவசனாய்ப் பகவத் பக்திமேலிட்டுத்தன் னையுமறந்து கூத்தாடி கண்களில் ஆனந்த பாஷ்பம் ஆறாய்ப் பெருக தழுதழுத்த வார்த்தையுடன் ஸ்தோத்திரம் செய்த மாத்திரத்தில் அந்நரகவாசிகள் எல்லோரும் அதினின்றும் விடுபட்டுத் திவ்விய விமானத்திலேறிக்கொண்டு வைகுந் தம் சேர்ந்தார்கள். ஆகையால் துலா காவேரி ஸ்நாநஞ் செய்த வேத ராசியினது மகிமை இப்படிப்பட்டதாயிருந் தது.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி
மகத்துவத்தில் ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## 6-வது அத்தியாயம்.

## ஸ்ரீவிஷ்ணு கவசத்தினால் வேதராசி என்னும் விப்பிரன் முக்தி பெற்றது.

ஆகையால் இக் காவேரி மகா நதியானது கேவலம் ஜடர்களாயும் ஸம்ஸார ஸாகரத்தில் அமிழ்ந்து கிடக்கின்ற வர்களாயும். ஔபாசன அக்னிஹோத்திரஹீனர்களாயும், யாகங்களைச் செய்யாராயும், வைசுவதேவம் பண்ணாராயும், ஆசாரஹீனர்களின் அன்னத்தைப் புசித்தவராயும், வேத பாராயணம் பண்ணாராயும், துராசாரர்களாயும் இருக்

கின்ற பாபிகள், யாதொரு காயக்கிலேசமன்றி எளிதில் வைகுண்டமடையுமாறு பிரமனால் சிருஷ்டிக்கப்படுகின்றது. ஜனங்கள் மற்றெவ்வித தருமங்களைச் செய்தாலும் செய்யாமற் போனாலும் துலாகாவேரி ஸ்நாநத்தை ஒருவாறு செய்வார்களேயாயின், சகல பாபங்களையும் போக்கி விண்ணவருலகடைவார். பிராதக்கால ஸ்நாநஞ்செய்து காயத்திரி மந்திரம் ஜபித்தால், வரும் பலனையும் மகாளய சிராத்தம் செய்தால் வரும் சுகிர்தத்தையும், துவாதசி, வியதிபாத முதலிய உத்தம நாட்களில் தானங்களைச்செய்வதால் வரும் பயனையும், ஸ்நாந மாத்திரத்திலேயே இவ்வுத்தம நதி சகல பலனையும் தந்தருளும். இம் மகாநதிக்கு தக்ஷிண கங்கையென பெயரிட்டிருக்கிறார் பிரம்ம தேவன் ஒருவன் கங்கையில் நூறு வருடம் ஸ்நானஞ் செய்து எந்தப் பலனை அடைகிறானோ அவன் ஒருதரம் துலாகாவேரியில் ஸ்நாநஞ் செய்தால் உடனே அந்தப் பலனைப் பெறுவான். மூவ்வுலகத்திலுமுள்ள மூன்றரை கோடி தீர்த்தங்கள் கங்கையை முன்னிட்டுக்கொண்டு இத் தீர்த்தத்தில் விஷ்ணுவின் கட்டளையால் நீராடுகின்றன. ஆகையால் இக் காவேரி ஸ்நாநத்தினது பிரபாவத்தினால்தான் முன் சொன்ன வேதராசி யென்னும் பிராமணன், வியபசாரியான தனது மனைவியோடு சிறிது தினம் வாழ்ந்திருந்ததினால் அதனால் நேரிட்ட பாவங்களைத் தொலைத்துக்கொண்டதுமன்றி, நரகங்களில் அநேக கோடி வருடங்களாக விழுந்து தவித்துக்கொண்டிருந்த பிராணிகளையும் ஸ்ரீ ஹரி கதாமிருதபானஞ் செய்வித்து முக்திபெறச் செய்து, இந்திராதி தேவர்களாலும் எதிர்க்கவொண்ணாத தென் திசைக் கோமானான யமனையும் ஜயித்து வைகுண்டம் சேர்ந்தனர்

என்று அகஸ்திய முனிவர் ஹரிச்சந்திர மஹா ராஜரிடம் உரைத்தார்.

இதைக்கேட்ட அரசன் அகஸ்திய முனிவரை நோக்கி, "சுவாமி! வேதராசி எவ்வாறு எமனை ஜயித்து வைகுண்டம் சென்றனன், என்பதை அடியேனுக்கு அருளிச் சொல்ல வேண்டும்" என்று கேட்க, அகஸ்தியரும் உத்ஸாகத்துடன் உரைக்கலானார்: கேளும் ஹரிச்சந்திர ராஜனே! வேதராசி என்ற பிராம்மணன் நரகவாசிகளையெல்லாம் சுவர்க்கத்துக்கு அனுப்பவே, அதனையுணர்ந்த யமதர்மராஜன் கடுஞ்சினமடைந்து புருவங்களை நெறித்துக் கொண்டு அண்டபிண்டசராசரங்களெல்லாம் அதிரும்படி மகா கோபத்துடன் "இதோ பார் விட்டேனா அந்த வேதராசியை" என்று பெரும் மூச்செறிந்து, பற்களை நறநறவென்று கடித்துக் காலதண்டத்தைக் கையிலேந்தி தன் எருமைக்கடா வாகனத்தில் ஆரோகணித்து அநேக படர்களோடு சூழ்ந்து வைகுண்டம் செல்லும் வேதராசியைத் துரத்திக்கொண்டு வருகின்றதை, வேதராசி என்பவன் தெரிந்து தன்னுள் கிஞ்சித்து அச்சமுற்று "ஓம்நமோ நாராயணாய" என்று பலமுறை ஸ்தோத்தரித்ததுமன்றி, விஷ்ணு கவசத்தினால் தன்னைச் சுற்றிலும் ரக்ஷை செய்து கொண்டார். இந்த விஷ்ணுகவச மந்திரமானது மகா ரகசியமானது முன்பு இதை ஸ்ரீஹரியானவர் பிரம்மனுக்கு உபதேசிக்க, பிரம்மாவானவர் க்ஷீரசாகரத்தில் எனக்கும் அதனை உபதேசித்தனர். சகல ஜயத்தையும் மிருத்யு பயத்தையும் போக்க சக்தியுள்ள இந்த விஷ்ணு கவசமானது உம்மாலும் ரகசியமாய் ஒருவருக்கும் வெளியிடாமல்

ரக்ஷிக்கத்தக்கது என்று அந்த விஷ்ணு கவசத்தை உபதேசித்தார். வேதராசியானவர் இக் கவசத்தை பக்தியோடு கூறி, பகவான் என்னைக் காக்கக்கடவர் என்று விஷ்ணு கவசத்தை பலதரம் ஜபித்துத் தன்னைச் சுற்றிலும் ரக்ஷை செய்துகொள்ளவே, அவரைத்துரத்திவந்த யமபடர்கள் எல்லோரும் அருகில் நெருங்கக்கூடாமல் சிங்கத்தைக் கண்ட மான்போல் வெருண்டு ஓடினார்கள். எமதருமன் சித்திரகுப்தன் இருவர் தவிர (எமதர்ம ராஜனின் ஏவலை எதிர்பார்க்கும்) 4448 வியாதிகள் முதலிய யாவையும் அந்தப் பிராஹ்மண தேஜஸ்வினால் அடிபட்டு ஓட்டம் பிடித்தார்கள்.

இவ்வாறு ஓடின தனது பரிஜனங்களைக்கண்டு யமனும் தன்னுள் தானுக்குற்றுத் தனது பயங்கர வடிவத்தை மாற்றி திவ்விய ஸ்வரூபத்துடன் ரதாரூடனாய் அந்த வேதராசி என்னும் அந்தணர் முன் பிரத்தியக்ஷமாகி ரதம் விட்டிறங்கி அம்மகானுபாவரை வந்தனம்செய்து அவரது நல்வரவை விசாரித்து, அவரைப் பலவாறு புகழ்ந்து ஓ சுவாமி! தாங்கள் இவ்விடம் எழுந்தருளி, திருப்பொன்னடிகளை சாத்தினபடியால் அடியேன் தன்யனானேன். எனது பட்டணமும் பரிசுத்தமாயிற்று, அடியேன் தங்கள் பேரில் கோபித்துவந்த குற்றத்தை க்ஷமித்து அடியேனைக் கருணையுடன் கடாக்ஷிக்க வேண்டும். தங்களால் யான் ஜயிக்கப்பட்டேன். மகா தயாளுவும் பிறர் துக்கத்தைச் சகிக்காதவரும் விஷ்ணு பக்த சிரோன்மணியான தங்களால் கொடிய நரக வேதனையையனுபவித்த பாபிகள் அனைவரும் பரிசுத்தர்களாய் பரமபத பிராப்தியடைந்தார்

கள். ஆகிலும் பகவானனவர் பாவஞ் செய்தவர்களுக்கு நரகங்களை யேற்படுத்தி, என்னை அவரவர்கள் செய்த பாபங்களுக்குத் தக்கவாறு தண்டிக்கும்படி நியமித்து, யம தருமராஜன் என்று பெயருமிட்டு வைத்திருக்கையில், கொடிய பாவிகள்கூட ஹரியென்ற இரண்டு அக்ஷரங்களை ஒருமுறை சொன்ன மாத்திரத்தில் எல்லாப் பாவங்களை யும் போக்கிக்கொண்டு, என்னைக்கொஞ்சமேனும் லக்ஷி யம் செய்யாமல் வைகுண்டம் சேர்ந்தார்கள். நான் பெற்ற அதிகாரம் வீணாய்ப்போய், பாழான இந் நகரத்தைக்காத் துக்கொண்டிருப்பதில் பயன் என்ன? ஆகையால் இனி இந்தக் கலியுகத்தில், உலகத்தில், பிராணிகள் எல்லோரும், விஷ்ணுவிடத்தில் பக்தி சிரத்தையில்லாதவர்களாயும், புண்ணிய கதைகளில் நம்பிக்கையற்றவர்களாயும் போகக்கடவர்கள். ஏதோ சிலர்மட்டும் அந்த மஹா விஷ்ணுவின் கிருபாகடாக்ஷத்துக்குப் பாத்திரர்களாய், ஸ்ரீ ஹரிநாமோச்சாரணம் செய்து மோக்ஷ வீட்டைப் பெறக் கடவர்கள். அப்படி ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்பவர் கள் எனக்காவது, எனது தூதர்களுக்காவது, கொஞ்ச மேனும் பயப்படவேண்டியதில்லை, நான் அவர்களைக்கண்டு பயந்து ஓடுவேன். பாபிகளுடைய கண்களுக்கு நான் பயங்கர வடிவத்துடனும் தங்களைப்போன்ற புண்ணியாத் மாக்களுக்கு திவ்விய ரூபத்துடனும் தோற்றுவேன். ஆகை யால்தான் பாபிகள் என்னை எமனென்றும், புண்ணியசாலி கள் தருமனென்றும் கூறுகிறார்கள். இவ்விரு வகைப் பெயரொட்டு நான் எமதருமன் என்று பெயர் படைத் தேன். ஓ அந்தணஸ்ரேஷ்டரே, இதோ இந்தக்கோடி சூரியப் பிரகாசமான விமானத்தில் ஏறிக்கொண்டு தங்கள்

இஷ்டப்படி வைகுந்தத்திற்கு ஏகலாம் என்று, இவ்வாறு எமதர்மராஜனால் விடைகொடுக்கப்பட்டவராக வேதராசியும் அந்த திவ்ய விமானத்தில் ஏறிக்கொண்டு செல்ல, தேவர்கள் எல்லோரும் எதிர் வந்து மகா வைபவத்துடன் வேதராசி என்பவரை பரமபதத்திற்கு அழைத்துச்சென்றார்கள். என்று அகஸ்தியர் வேதராசியினது உபாக்கியானத்தை ஹரிச்சந்திர மகாராஜரிடம் சவிஸ்தாரமாக எடுத்துச்சொன்னார். யாவனொருவன் இந்த உபாக்கியானத்தை பக்தியுடன் வாசிக்கின்றானோ அல்லது கேட்கின்றானோ அவன் ஆயுராரோக்கிய ஐஸ்வர்யத்தையடைந்து விஷ்ணு லோகம் சேர்வான்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்
ஆறுவது அத்தியாயம் முற்றிற்று

---

## 7வது அத்தியாயம்.

## சுந்தோபசுந்த விருத்தாந்தம்.

ஹரிசந்திரன், அகஸ்திய முனிவரால் சொல்லப்பட்ட வேதராசியின் உபாக்கியானத்தைக்கேட்டு மிகவும் புளகாங்கிதமடைந்தவனாய்; பின்னும் அகஸ்திய முனிவரை நோக்கி, "சமஸ்த தருமங்களையுமறிந்த ஓ! முனிச்சிரேஷ்டரே! அந்தக்காவேரி மகா நதியில் ஸ்நானஞ் செய்யும் முறை எப்படி? எந்தக் காலத்தில் கமலாகானை ஸ்ரீஹரியைப் பூஜிப்பது. அவருக்கு அர்ச்சனை செய்யும் புஷ்பம் யாது? இவைகளை அடியேனுக்கு உரைக்க வேண்டும் என, அகஸ்தியரும் திருவுளமுகந்து கூறலாயினர்.

ராஜன்! பூர்வ ஜன்மத்தில் அதிக புண்ணியஞ் செய்திருப்பவர்கள்தான் இந்தக் காவேரி மகத்துவத்தைக்கேட்கும் பாக்கியத்தைப்பெறுவார்கள். நீ மகா புண்ணிய புருஷனாகையால் இந்தத் துலாகாவேரி மகிமையை இன்னும் சொல்லுகின்றேன். கேள்,

पुरार्जुनो महाभाग द्रौपदीं भ्रातृभिस्सह ।
उद्वाह्य तीर्थयात्रार्थं प्रतिश्रुत्या ग्रजंप्रति ॥

புரார்ஜுநோ மஹாபா[4]க[3]
த்[3]ரௌபதீ[3]ம் ப்[4]ராத்ருபி[4]ஸ்ஸஹ |
உத்[3]வாஹ்ய தீர்த்த[2]யாத்ரார்த்த[2]ம்
ப்ரதிஶ்ருத்யா க்[3]ரஜம்ப்ரதி ||

பூர்வத்தில் அர்ஜுனன் தனது நான்கு சகோதரர்களுடன் சேர்ந்து, திரௌபதியை விவாகஞ் செய்துகொண்டு சுகமாகக் காலங் கழிக்கையில், அவன் ஒருக்கால் தீர்த்த யாத்திரை போவதாய்த் தனது சகோதரர்களிடம் விடை பெற்றுச்சென்றான். அவன் சில காரணங்களை முன்னிட்டு காவேரி தீரத்தையடைந்து, வைகாசி மாதத்தில் அங்கு மௌன விரதத்துடன் ஸ்நாநஞ் செய்து, அங்கிருந்த பௌராணிகரிடத்தில் காவேரி மகத்துவம் சிரவணம் பண்ணி, அவர்களை வேண்டிய ஆடை ஆபரணாதிகளால் உபசரித்து, அப்பௌராணிகரின் ஆசிர்வாதம் பெற்று அங்கிருந்து விடைபெற்றுக்கொண்டு கோயிலுக்குச் சென்று ஸ்ரீரங்கனாதனையும் சேவித்து, பின்பு துவாரகைக்குப்போய் ஸ்ரீகிருஷ்ண பகவானது தங்கையாகிய ஸுபத்திரையை மணந்து, சுதேசம் சென்று துர்யோதனன் முதலிய சத்ருக்களை சங்காரஞ் செய்து தனது சகோதரர்களு

டன் கூட சுகித்திருந்தான் என்றுரைத்த முனிவரை நோக்கி அரசன் "சுவாமி" அர்ஜுனன் எக்காரணத்திற்காக தீர்த்த யாத்திரை செய்தனன்? கிருஷ்ணன் தங்கையாகிய சுபத்திரையை எவ்வாறு மணம் செய்து கொண்டனன். எவ்விதம் சத்ருக்களை ஜயித்தான். இது விஷயம் எனக்கு உரைத்தருள வேண்டும் என்று கேட்க அம் முனிவர் கூறுகிறார்.

"மகிபனே" பூர்வத்தில் பாஞ்சால தேசத்தரசன் புத்திரியாகிய திரௌபதியைப் பஞ்சவர்கள் விவாஹம் செய்து கொண்டு ஒவ்வொருவரும் அவளிடம் மிக்க அன்புடையவர்களாய் இருக்குங் காலத்தில் ஒருநாள் தேவரிஷியாகிய நாரத பிரம்மம் வந்து, அப் பஞ்சபாண்டவர்களை தனித்தனியே அழைத்து இரகசியமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டிய சத் விஷயத்தை உபதேசித்து, பின் மகாசாத்வியான திரௌபதியிடம் உபதேசித்ததாவது:

மகா பதிவிரதா ரத்னமாகிய திரௌபதியே! இப்புவியில் பெண்கள்தான் புருஷர்களின் நாசத்திற்கும், நரகத்திற்கும், விசனத்திற்கும், கலகத்திற்கும், மற்றுமுள்ள பல கெடுதிகளுக்கும் காரணகர்த்தாவாயிருக்கிறார்கள். ஸ்திரீகள் மேலுக்கு சிரிப்பும், உள்ளத்தில் வெறுப்புமுள்ளவர்கள். அவர்கள் ஹிருதயமானது சமுத்திரம் போல் ஆழ்ந்திருக்கின்றது. சௌசம், ஆசாரம் முதலிய நற்செய்கைகள் கிடையாது. அவர்கள் யமனுக்கும் யமனாவார்கள். அன்னவஸ்திரங்களைக்கொடுத்து மிகவும் அன்புடன் ஆதரித்த கணவன்பால் சற்றேனும் அன்பு பாராட்ட

மாட்டார்கள். தம் கணவன் ரோகிஷ்டனாகவோ, ஏழையாகவோயிருப்பானாயின், அவனைக் கிஞ்சித்தும் இலக்ஷியம் செய்யாது கண்டவாறு தூற்றுவார்கள். ஸ்திரீகளுக்கு அபவாதத்திலும் நரகத்திலும் பயமில்லை. தமது பிறந்தகத்தின் குலத்தையும், புக்ககத்தின் குலத்தையும் யோசித்துப் பாரார். வெட்கமென்பது இன்னதென்று அவர்களுக்குத் தெரியாது. புருஷர்களுக்கு காமம் ஒருமடங்கானால் ஸ்திரீகளுக்கு எண்மடங்காயிருக்கிறது. தம் கணவரிடத்தில் அதிகமாய் ரமித்தால் ஒருவேளை அவர்களுக்கு தங்களிடத்திலிருக்கின்ற மதிப்பு போய்விடுமென்ற சங்கையினால் அவர்களோடு கிரீடிக்க அதிகமாய் விரும்புகிறதில்லை; வலுவிலும் வருகிறதில்லை. சாத்விகளாயிருந்தாலும் ஸ்திரீ ஜன்மமெடுத்தவர்களுக்கு இங்ஙனமிருப்பது சுபாவம். விசேஷமாய் கலியுகத்தில் இது சாதாரணம். கேவலம் பிரஸவிகளாயிருக்கிற ஸ்திரீகளுக்கே தங்கள் புருஷரிடத்தில் கொடுமை அதிகம். அப்படியிருக்க, யுவதிகளுக்கும், விதவைகளுக்கும், புத்திரவதிகளுக்கும் கேட்க வேண்டியதென்ன? எந்த ஊரில் மலடிகள், யுவதிகள், விதவைகள் இம் மூவரும் எப்பொழுதும் இடைவிடாமல் இருந்து கொண்டிருக்கின்றனர். ஆகிலும், உலகத்தில் உன்னைப் போன்ற சில உத்தமிகள் இருக்கின்றார்கள். அவர்கள் மகா பரிசுத்தர்களாயும், பதி சிஷ்ருஷையில் நிரந்தர பக்தியுடையவர்களாயும், பிறந்த குலம் புகுந்த குலமிரண்டையும் தமது நன்னடக்கையால் மகிமைப்படுத்தி, தங்கள் கணவன் ரோகிஷ்டனானாலும், வறுமையுள்ளவனானாலும். பார்வைக்கு விகாரமான வடிவுடையவனாயிருந்தாலும், மந்தனா

யிருந்தாலும் மூர்க்கனுயிருந்தாலும், முன் கோபியாயி ருந்தாலும், உன்மத்தனுயிருந்தாலும், அவனை ஸ்ரீஹரி யாகவே நினைத்து, அவன் சொற்படி நடந்து, காலாந்தத் தில் ஸ்வர்க்கலோகமடைகிருர்கள். வாராய் திரௌபதி! நான் உனக்கு இந் நீதிகளை உபதேசிப்பதற்கென்றே இங்கு வந்தேன். ஸ்திரீகளால் புருஷர்களுக்கு தீங்கு வரு வதைப்பற்றி உனக்கு யான் இப்பொழுது ஒரு கதை சொல்லுகிறேன் கேள்.

முன் ஒருகாலத்தில் ஸுந்தன் உபஸுந்தன் என்று இரண்டு அசுர சிரேஷ்டர்கள் இருந்தார்கள். அந்தச் சகோதரர்களிருவரும் ஒருவருக்கொருவர் அந்நியோன் னியமாருந்தபடியாலும், மகா பலபராக்கிரமசாலிகளா யிருந்ததினுலும், இந்திராதி தேவர்களையும் மற்றும் பல சாதுக்களையும் பலவாறு இம்சிக்கத் தொடங்கவே, தேவர் களும் முனிவர்களும் ஒன்று சேர்ந்து பிரஹ்ம சபை யடைந்து தமது குறைகளை முறையிட, அவைகளைக்கேட்ட பதுமாஸனன் மனமிரங்கி, அழகிய வஸ்துக்களிலெல்லாம் ஒவ்வொரு திலமளவு எடுத்து ஓர் பெண்ணை சிருஷ்டித்து, அவளுக்குத் திலோத்தமையெனப் பெயரிட்டு, அவளைக் கொண்டு இவ்வசுரரிருவரையும் கொல்வதற்கு உபாயஞ் செய்து, அழகிற் சிறந்த திலோத்தமை என்பவளை அவ்வசு ரர்களிடத்திற்குப் போகும்படி அனுப்பினுன். அவ்வாறே திலோத்தமையும் சர்வாலங்கார பூஷிதையாய், புன்சிரிப் புடன் வெகு ஒயிலாய் நடந்து, அச்சுந்தோபசுந்தரிருக் கும் உபவனத்திற்கு வந்து, மந்தாரமல்லிகை மாலதிகளைப் பறித்தும், கீதங்களைப் பாடிக்கொண்டு புன்னகையுடனும்

அன்ன நடையுடனும் ஒயிலாய் அவ்விருவர்கள் முன் வரவே, அவர்களில் மூத்தோனான ஸுந்தன் அவளுடைய ரூபலாவண்ணியத்தைப் பார்த்து மயங்கி காமவெறி கொண்டு, மானம் லஜ்ஜையில்லாமல், அருகிலிருந்த தனது தம்பி யொருக்கால் அவளை விரும்புவானென்று நினைத்து, அவன் அங்ஙனம் அவளைக் கருதாமலிருக்கும்படிச் செய்வதற்காக, தன் தம்பியை நோக்கி, "ஓ தம்பி! இதோ உன் மதினி வருகிறாள். அவளுக்கு நீ செய்ய வேண்டிய மரியாதையைச் செய்ய ஆயத்தமாயிரு" என்றனன். இதைக் கேட்ட இளையோன் உபஸுந்தனும் அவளைத் தானடையக் கருதித் தமையனான ஸுந்தனை நோக்கி, "ஓ அண்ணா! இதோ உமது மருமகள் தமக்குப் பணிவிடை செய்வதற்கென வருகின்றனள். தாம் இவளைக் கருதினால் தங்களுக்குப் பாபத்துவம் சம்பவிக்கும்" என்று சொல்லவே, ஸுந்தனும் கோபாவேசங்கொண்டு, "ஓ நீசனே! நீ தமையன் மனைவியைக் கைப்பற்றும் மகா பாபியாகிறாய்" என, தம்பி, "ஓ துஷ்டா! தம்பி மனைவியைக்கொள்ள இஷ்டமடையும் சண்டாளன் ஆகின்றாய்" எனக்கேட்ட தமையன், காலருத்திரனைப்போல, கோபாவேசமடைந்தவனாய் தம்பியாகிய உபஸுந்தனை வஜ்ராயுதம்போன்ற தன் கதையால் ஓர் அடி அடிக்கவே, தம்பியாகிய உபஸுந்தனும் தமையன் என்பதை எள்ளளவும் எண்ணாமல் தன் கதையை மூத்தோன்மேல் பிரயோகிக்கவே அதேக்ஷணத்தில் இரு அசுரர்களும் மாண்டார்கள். இதைக்கண்ட திலோத்தமை, தான் வந்த காரியம் பலித்தது என்று மிகவும் சந்தோஷமடைந்தவளாய், சுவர்க்கலோகம் சென்றனள். இவ்வாறு

ஸ்திரீகள் புருஷர்களுடைய நாசத்திற்கென்றே, உலகத்தில் பிறந்திருக்கிறார்கள்.

ஆகையால், "ஓ திரௌபதி! நீ வெகு குணசீலையாக்கும், மகா பரிசுத்தர்களான நினது பர்த்தாக்களுக்கு எப்பொழுதும் சிஷ்ருஷை செய்துகொண்டிரு. அங்ஙனம் இருப்பாயேயானால், நீ, இவ்வுலகத்தில் நல்ல போகங்களை யனுபவிப்பதுமன்றி மறுஜன்மத்திலும் மேலான பதவியைப் பெறுவாய்" என்றிங்ஙனம் நாரதர் அவளுக்கு நன்னெறியை உபதேசித்து, பாண்டவர் ஐவரையும் நோக்கி, "ஓ தருமபுத்திரர்களே! நீங்களும் ஒருவருக்கொருவர் வெகு நட்புடன் கிரஹஸ்தர்களுக்குரிய இல்லற தருமங்களை நடத்தி, ஸாதுக்களிடத்திலும், ஸ்ரீ ஹரியினிடத்திலும் பக்தியுடையவர்களாய், க்ஷத்திரியமுறை தவறாமல் திரௌபதியுடன்கூடி வாழக்கடவீர்கள். மேலும் சகலவித தருமங்களிலும் சிறந்தது துலாகாவேரி ஸ்நாநந்தான். ஆதலால் நீங்கள் உங்கள் அவயவங்களின் சக்தி குன்றுமளவிருக்கையிலேயே அந்தக் காவேரி என்னும் புண்ணிய நதியில் சென்று, ஐப்பசி, கார்த்திகை, மாசி, சித்திரை முதலிய மாதங்களில் ஸ்நாநஞ் செய்யவேண்டும். அப்படிச் செய்தால், உங்களுடைய சகல பாபங்களும் விமோசனமாகும்" என்று இவ்வாறு உரைத்த நாரத மகரிஷியை, தருமபுத்திரரும் பலவாறு பூஜித்து அகமகிழ்ச்சியுடன் மீண்டும் நாரத மகாமுனிவரை நோக்கி வினவுகின்றார்.

"சுவாமி! தேவரீர் இப்பொழுது திருவாய் மலர்ந்தருளிய துலாகாவேரி ஸ்நாநபலத்தின் வைபவத்தைக்கேட்டு

அடியேனுக்கு அதிக ஆனந்தமுண்டாயிற்று. ஆகிலும் காவேரியில் ஸ்நாநம் செய்வதிலும், விசேஷமாய் எந்தெந்த தினங்களில் ஸ்நாநம் செய்யவேண்டும்? அப்படி ஸ்நாநம் செய்யும் கிரமம் என்னம்? அதற்கு தேவதை யார்? இவையெல்லாம் ஸவிஸ்தாரமாய் எடுத்துக்கூற வேண்டும்" என்று பிரார்த்தித்த தருமரை நோக்கி, நாரதமகாரிஷியானவர் சொல்வாராயினர்:

"கேளும் தருமநந்தனு! காவேரியில் எவ்வித நியமங்களின்றி, ஸ்நாநம் செய்கிறவர்களே, தமது எழு ஜன்மங்களின் பாபங்களையும் போக்கிக்கொள்ளுகிறார்கள். தவிர எவர்கள் அந்த:கரண சுத்தியுடன் ஸ்நாநம் செய்கின்றார்களோ அவர்கள் தமது கோடி குலங்களை உத்தாரணம் செய்கின்றார்கள். இஹபர சுகங்களை விரும்புகிற ஒவ்வொரு பிராணியும் காவேரியில் துலாமாதத்தில் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் ஒருமுறையாகிலும் ஸ்நாநம் செய்து, மல்லிகை தாமரை மற்றும் அந்தந்தக் காலத்துக்குரிய புஷ்பங்களால் ஸ்ரீ மகாவிஷ்ணுவைப் பூஜித்து பாயஸான்னத்தை நிவேதனம் செய்ய வேண்டும். எவனொருவன் சிராவண துவாதசியன்று பக்தியுடன் பாயஸமானது பிராம்மணர்களுக்கு அளித்து, தான் புசிக்கின்றானோ அவன் சக்கரவர்த்தியாவான். ஒருவன் இக், குருக்ஷேத்திரத்தில் பன்னிரண்டு வருடம்வரையில் பரிசுத்தமான பிராம்மணர்களுக்கு போஜனம் கொடுத்தால் யாது பலனைப் பெறுவானோ அதே பலனை துவாதசியில் பாயஸதானம் செய்வானாகில் சந்தேகமின்றி அடைகின்றான். புத்திரனில்லாத ஒரு ஸ்திரீயானவள், துவாதசியில் பகவானுக்கு நிவேதனம்

செய்த பாயஸத்தை, பக்தியுடன் பருகுகின்றாளோ அவள், சத்புத்திரனைப்பெற்று, தீர்க்க சுமங்கலியாய் வாழ்ந்திருப்பாள். இவ்விதமே விதவையானவள் செய்யின் ஞானம் உதித்து மோக்ஷத்தைப் பெறுவாள். அமாவாசை, மாதப்பிறப்பு, மகாளயம், சூரியக்கிரகணம் இவைகளில் ஸ்ரார்த்தம் செய்ய அசக்தனாயிருந்தாலும், அல்லது தகுந்த பிராம்மணர்கள் கிடைக்காதபக்ஷத்திலும், சூதகம் முதலிய தடைகள் சம்பவித்த காலத்திலும் ஆமச்சிரார்த்தம் செய்ய வேண்டும். சூத்திரர்கள் எக்காலத்திலும் ஆமச்சிரார்த்தம் செய்யவேண்டுமே தவிர அன்ன ரூபமாக சிரார்த்தம் செய்யலாகாது. ஆமச்சிரார்த்தம் செய்வதற்கு பத்து மணங்கு அல்லது ஐந்து மணங்கு அரிசியும், தவிர இரண்டு பணமும், அல்லது ஒரு பணமும், அதற்கு ஏற்பட்டிருக்கின்றது. எவனொருவன் சுவர்க்கத்தை விரும்புகின்றானோ, அவன் மற்ற எவ்வித தருமங்களைப் புரிந்தாலும் புரியாவிட்டாலும், மகாளயம், அமாவாசை, சங்கிராந்தி இந்த தினங்களில் அவசியம் சிரார்த்தம் செய்யக்கடவன். அப்படிச்செய்ய சக்தியில்லையேல் துலாமாதத்தில், துவாதசியில் பனிரெண்டு அல்லது ஆறு பிராம்மணர்களுக்குப் பாயஸமளித்து அவர்களை திருப்தி செய்வித்தால், அதனால் அவன் சகல தருமங்களின் பலனையும் பெறுகின்றனன். ஒருவன், வைகாசி மாதத்தில் தத்யோதனம், தானம் செய்வதினாலும், மாசி மாதத்தில் வஸ்திரதானம் செய்வதினாலும், கார்த்திகை மாதத்தில் குடை தானம் செய்வதுடன் ஸ்ரீ ஹரிக்குத் தீபாராதனை செய்வதினாலும், தனுர்மாதமெனும் மார்கழி மாதத்தில் விடியற்காலை

யில் சுவாமிக்கு பொங்கலமுது படைத்து பூஜிப்பதினாலும், சித்திரை மாதத்தில் பானகதானம் செய்வதினாலும், பித்ருக்கள் அதிகம் திருப்தியடைகிறார்கள். நாஸ்திகனானாலும், குஷ்டரோகியானாலும், தரித்திரனானாலும் தனது சங்கடங்கள் முற்றும் விடப்படுவான். கடன் படாதவனாகவுமாகிறான்- கங்கை, யமுனை, ரேவை, கௌதமி முதலிய புண்ணிய நதிகளும், சேது, கங்கா சங்கமமாகும் முதலிய-புண்ணிய தீர்த்தங்களும், ஹிரண்வதி, துவாரகை, அயோத்தி, பதரிகாசிரமம், நைமிசாரண்யம், புஷ்கரம், மதுரை, கோகர்ணம், குருக்ஷேத்திரம் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களும், துலாகாவேரியில் ஒருதடவை ஸ்நாநஞ் செய்வதாலுண்டாகும் பலனைக்கூட அளிக்கமாட்டா. "ஹே" ராஜன், இம்மாதத்தில் நீராடி, அரங்கேசனை வணங்கினோர் வைபவங்களை ஸ்ரீ ஹரியே கூறவல்லவர்.

காவேரியானவள் தனது அலைகளாகிற கைகளைத் தூக்கி "ஓ பாபிகளே! நீங்கள் ஐயோ" நாம் மகா பாபிகளாயிருக்கின்றோமே. நமது பாபங்களை எவ்வாறு போக்கடித்துக்கொள்ளப் போகிறோம்? அநியாயமாய் நாகமென்னும் படுகுழியில் விழப்போகின்றோமே, என்று சிந்தித்து பயப்படாதீர்கள், இதோ, என்னுடைய பரிசுத்தமான தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்யுங்கள், நான் உங்களை உத்தாரம் செய்கின்றேன்" என்று சதா கர்ச்சித்துக்கொண்டிருக்கின்றனள். சுருங்கச்சொல்லில்: காவேரி ஜலம் மேலே பட்டவுடன் சிறு ஜந்துக்களும் முக்தியடைகின்றபோது, பக்தி சிரத்தையுடன் ஸ்நாநஞ் செய்பவர் முக்தியடைவது ஆச்சரியமோ? தருமபுத்திரா இன்னும் கேட்பீராக.

पुरामरुद्वधावारि कणस्पृष्टश्शूकरः ।
नष्टपापःक्षणादेव देवलोकमगाहत ॥

புராமருத்[3]வதா[4]வாரி கணஸ்ப்ருஷ்டஶ்ஶூகர: ।
நஷ்டபாப:க்ஷணாதே[3]வ தே[3]வலோகமகா[3]ஹத ॥

அதாவது,

முற்காலத்தில் ஓர் பன்றியானது தன்பேரில் காவேரி ஜலத்தின் ஒரு துளிபட்ட மாத்திரத்தில் சுவர்க்கமடைந்தது என்றால் இக் காவேரியின் மகிமை அளவிடற்கரிதோ என்று நாரத முனிவர் சொல்ல தரும புத்திரானவர் நாரத முனிவரைப் பார்த்து மறுபடியும் வினவுவாராயினர்.

"சுவாமி! அந்த பன்றி காவேரி ஜலம் மேலே படப் பெற்று எங்ஙனம் சுவர்க்கமடைந்தது? இதனை அடியேனுக்கு சவிஸ்தாரமாய் கூறவேண்டும்" எனவே, நாரதரும் சொல்லத்தொடங்கினர்.

தருமபூபதி! முன்னொருக்கால், பாஹ்லிகமென்னும் தேசத்தில், என்றும் வேத கோஷத்தினால் நிறைந்த பகுதானியமென்ற ஒரு அக்கிரஹாரம் இருந்தது. அதில் சுருதி ஸ்மிருதி இதிஹாஸம் முதலியவைகளில் நிகரற்றவனும், அவைகளைப் பலருக்கு ஓதி வைக்கிறவனும், ஆஸ்வலாயன குலத்தில் பிறந்தவனுமான பிரஹ்ம ஸர்மா வென்கிற ஒரு பிராம்மணன் இருந்தான். அவன் கிருஷித் தொழிலில் அதிக தேர்ச்சி பெற்றவனாய், ஆறாயிரம் பொன்னுக்கும் யஜமானனாய் விட்டனன். பின்னும் பிராம்மணர்கள் விற்கத்தகாத தயிர், பால், வஸ்திரம் முதலியவைகளை விற்று, திரவியங்களைச் சேகரித்து வந்

தான். அவனோ எப்பொழுதும் பரான்ன போஜனஞ்செய்து வந்தானேயல்லது, ஒரு தினமாவது தன் வீட்டில் சாப்பிட்டறியான். சோதிடமும் அவனுக்கு நன்றாகத் தெரியும். மேலும், கிராமங்களில் பற்பல யாகங்களைச் செய்து வைத்தவன். இவ்வளவு யோக்கியதையிருந்தும் அவன், ஒரு நாளும் சந்தியாவந்தன அக்னி ஹோத்திராதிகளைச் செய்ததில்லை. அவன் கையில் தர்ப்பை, சமித்து, பவித்திரம், கூர்ச்சம் முதலியன எடுத்துக்கொண்டு எந்த ஊரில் எந்த வீட்டில் சிரார்த்தம் நடக்கும், எங்கே தனக்கு போக்தம் கிடைக்கும் என்று அலைந்து திரிந்தான். அவன் சிராத்தம் முதலிய வைதிக காரியங்களை செய்து வைக்கத் தெரிந்தவனுகையால் ஊரார் பலரும் அவனையே எப்பொழுதும் பிரார்த்தித்து நிமந்திரணத்திற்கு ஏற்படுத்தி வந்தார்கள். அப்படி ஊரில் எவராவது தன்னை அழைக்காவிட்டால் தானே வலுவில் அவர் வீட்டுக்குச் சென்று இன்றைய நிமந்திரணத்திற்கு நான் ஒருவனையிட்டேன்; மற்ற இரண்டு பேருக்கு யாரை அழைத்தீர்கள்? என்று வெகு சுவாதந்திரியம் பாராட்டி அவர் வீட்டில் உண்பான். தான் சுருதிஸ்மிருதி உணர்ந்திருந்தும் தான் செய்த அபசாரங்களுக்கு பிராயச்சித்தம்கூட செய்து கொள்வதில்லை. கேவலம் பொருளாசையுடையவனும் எங்கே சிரார்த்தம் நடக்கும், யார் தக்ஷிணை கொடுப்பார்கள் என்று ஊரூராய் அலைந்து திரிவான். ஒரு நிமிடமேனும் தன் வீட்டில் இருக்கான். எப்போதாவது ஒரு நாள் தன் வீட்டில் சாப்பிட்டானேயானுல், அப்பொழுது அவன் தன் குழந்தைகளுக்கு சரியாக சாப்பாடு போடாமல் அவர்களை கண்டவாறு ஏசி, தான் மட்டும் வயிறு புடைக்கச்சாப்பிடுவான்.

அப்பேர்ப்பட்ட பிராம்மணனுக்கு கௌண்டின்ய கோத்திரத்தில் பிறந்த மகா உத்தமியாகிய சுசீலையென்பவள் மனைவியாக வாய்த்திருந்தாள். அவளோ மகா பதிவிரதை. அவள் என்றும் தன் கணவனுக்கு பணிவிடை செய்து கொண்டும், அவன் வீரிவில்லாத சமயம் மிதமாக புசித்து வந்தும், அவன் தன்னை எத்தகைய கடுஞ் சொற்களால் வைதபோதிலும் தான் அவன்மீது கோபிக்காமல் பக்தி சிரத்தையுடனிருந்ததுமன்றி, அவனது சொல்லுக்குப் பயந்து தானும் பொருள் சேர்க்கும் உபாயம் தேடிவந்தாள். இப்படியிருக்கையில் ஒருநாள் தன் கணவனை நோக்கி சுசீலை என்பவள், "பிராணபதி! இந்தத் தேகம் குமிழி போல் நிலையற்றது. பிராணிகளுக்கு இன்றையோ நாளையோ மரணமுண்டென்பது நிச்சயம். ஆகையால், தேகம் தளர்ச்சியடையுமுன் தானதருமங்கள் செய்து நல்லுலகை யடையலாம். இன்றேல் கோரமான நாகவேதனை அனுபவிக்கவேண்டும். நாம் அநேக பாபகிருத்தியங்களைச் செய்து, சேர்த்து வைத்த பொருளால் நமக்கு கிஞ்சித்தேனும் பிரயோஜனமுண்டோ? இவ்வளவு திரவியமும் திருடரோ, அல்லது அரசனோ, அல்லது பந்துக்களோ கைப்பற்றிவிடுவார்கள். அப்போது மனதிற்கு கிலேசமுண்டாகுமே தவிர வேறில்லை. பாபத்திற்கு ஹேதுவான பானனத்தை ஏன் புசிக்க வேண்டும்? மேலும் தன் கணவனுக்கு மாறாக நடக்கின்ற ஸ்திரீ, பிக்ஷையெடுத்து உண்ணுத சந்நியாசி, பிராம்மண பக்தியில்லாத அரசன், அக்னிஹோத்திரமில்லாத கிரஹஸ்தன் ஆகிய இந் நால்வரும் நசித்துப் போவார்கள் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஆகையால், தாங்கள் இனிமேலாவது ஔபாஸநம், அக்கினிஹோத்திரம் முதலிய நித்யகர்மாநுஷ்டானங்கள் செய்துகொண்டு பரான்ன போஜனம் செய்யாமல் நம் வீட்டிலேயே சதா புசித்துக்கொண்டிருக்க வேண்டியதுந் தவிர, தாங்கள் நம் குழந்தைகள்பேரில் அன்பு பாராட்டாமல், வீட்டில் வந்தபோதெல்லாம் அவர்களை வைதுகொண்டிருப்பதினால் அக் குழந்தைகள் தகப்பனற்றவர்கள் போலிருக்கிறார்கள். தவிர நீங்கள் எப்பொழுதும் தேசந் தேசமாய் அலைந்துகொண்டிருப்பதினால் நான் சுமங்கலியாயிருந்தும் அமங்கலிபோல் இல்லற சுகமற்றவளாயிருக்கிறேன். கிருஹஸ்த தருமந்தான், எல்லா ஆச்சிரமங்களைவிடச் சிறந்தது என்று சொல்லப்படுகிறது. உமது மனைவியாகிய நான் எதுவரையில் தங்களுக்கு அனுகூலையாயிருக்கிறேனோ அதுவரையில்தான் உனது கிருஹத்தில் இலக்ஷ்மி வாசஞ் செய்வாள். நான் பிரதிகூலையாயிருந்தால் இலக்ஷ்மி தங்களைவிட்டுப் பிரிந்துவிடுவாள். இப்பொழுது நம் குழந்தைகளோ வேத சாஸ்திரங்களையோதாமல் ஆசார சூனியர்களாய் கேவலம் சூத்திரர்கள் போலிருக்கின்றார்கள். அவர்களைத் திருத்தி, சன்மார்க்கத்தில் நடக்கும்படி செய்ய வேண்டாமா? தவிர இந்த வீடும் புத்திரரும் மனைவியும் நம் திரவியமும், நீர் இறந்தவுடன் உம்முடன் கூடவே வரமாட்டா. தருமம் ஒன்றுதான் உம்முடன் கூடவரும் சினேகிதனாகும்.

ஆகையால், தருமமே சதமெனவெண்ணி மற்ற விஷயத்திலும் பற்றற்று இருக்கவேண்டும். எங்ஙனம் யாத்திரை செல்பவர்கள் தங்கள் வீட்டைவிட்டுப் புறப்படும்போது

கட்டமுது கட்டிக்கொண்டு செல்கிறார்களோ, அவ்வாறே நீர் பரலோக யாத்திரைக்கு வேண்டிய கட்டமுதாகிய புண்ணியம் சம்பாதிக்க வேண்டும். யமலோக யாத்திரை செய்யும்போது கட்டமுது என்ற புண்ணியம் அவசியமாதலால், நீர் பிராம்மணர்களுக்கு அன்னதானஞ் செய்ய வேண்டும். துலா மாதத்தில் காவேரி ஸ்நாநஞ் செய்ய வேண்டும். இப் பதினொன்கு உலகங்களிலுமுள்ள அறு பத்தாறு கோடி தீர்த்தங்களும் அனந்தனுடைய ஆக்ஞை யால் துலாகாவேரியில் வந்து சேருகின்றன. விசேஷமாய் கர்மபூமியாகிய இந்தப் பாரத வருஷத்தில் இருப்பவர்களுக்கு காவேரி ஸ்நாநம்தான் சகல ஸித்திகளையும் சித்திக்கும். ஆகையால், தாங்கள் அதில் ஸ்நாநம் செய்யவேண்டும் என்று இங்ஙனம் சொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறான்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி
மகத்துவத்தில் ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## 8-வது அத்தியாயம்.

## சுசீலை தனது கணவனுக்குக் காவேரி மகத்துவத்தை வெளியிட்டது.

कावेरीतीर जन्मानः कावेरी सलिलं प्लुताः ।
कावेरी शीतवाताद्यैः स्पृष्टायांति हरेःपदम् ॥

காவேரீதீரஜன்மான: காவேரீஸலிலம்ப்லுதா: ।
காவேரீஶீதவாதாத்³யை ஸ்ப்ருஷ்டாயாம்திஹரே:பத³ம் ॥

சுசீலை மீண்டும் தன் கணவனுக்கு உரைத்ததாவது: காவேரி தீரத்தில் ஜனிப்பவர்களும், காவேரி நதியில் ஸ்நானம் செய்தவர்களும், காவேரி நதியின் குளிர்ந்த காற்று மேலே படப்பெற்றவர்களும் ஸ்ரீஹரியின் பாதாரவிந்தம் சேருவார்கள்.

ஆகலின் அந்நதியில் ஸ்நானஞ்செய்தால் சகல அபீஷ்டங்களும் சித்திகளுமுண்டாகும். இதுதான் சகல தர்மங்களின் சாரம். தனம், கிருஹம், அன்னம் முதலியவற்றை குடும்பியான ஒரு அந்தணனுக்கு தானம்கொடும். தேஹி, என்று ஒருவன் வருந்தி உம்மிடம் வந்தால், அவன் சத்பாத்திரனாயிருந்தால் உமது தேகத்தைக்கூட அவனுக்குக் கொடுக்க வேண்டும். ஒருவனுக்கு சுசீலையான ஒரு பெண் சாதி கிடைப்பது அவன் ஜன்மாந்தரத்தில் செய்த சுகிர்த்த விசேஷம். எவன் தன்னிடத்தில் அன்னம் கொடுமென்று வருகிறவனுக்கு (நாஸ்தி நாஸ்தி) அதாவது இல்லை, இல்லை என்று சொல்லுகிறானோ அவனுக்கு, தேவர்கள் அவ்வளவுக்கவ்வளவு துக்கம் செய்வார்கள் என்று சொல்லுகிறார்கள்.

ஏதோ நீர் செய்த பூர்வஜன்ம புண்யத்தாலும், யான் பூர்வஜன்மத்தில் செய்த சுகிர்தத்தாலும், உமக்கு அனுகூலையாகயிருக்கின்றேன். ஆகையால், நீர் உமதிஷ்டப்படி தருமத்தைப் புரியலாம் இவ்வுலகத்தில் எவன், எவனுக்குப் பந்து? எவன், எவனுக்கு இரக்ஷகன்? எவன், எவனுக்கு அந்தியகாலத்தில் நண்பன்? தர்மமொன்றுதான், இம்மையிலும், மறுமையிலும், எப்பொழுதும், நம்மை விட்டுப்பிரியா நண்பன். நீர் செய்த பாப பலனை நீரே

அனுபவிக்க வேண்டுமே தவிர யான் அனுபவிக்கப் போகிறதில்லை. ஆகையால், கண், கை, கால் முதலிய உறுப்புகளும், புலன்களும் பலங்குன்றுமலிருக்கும்பொழுதே தர்மங்களைச் செய்யும். அப்படிச் செய்யத் தவறுவாயாகில் பின்னர் உமக்கு வறுமை நேரிடும். என்று இவ்வாறு தன் கணவனின் நன்மையை விரும்பி, அவனுக்குப் பலவாறு நற்புத்தி புகட்டின சுசீலையை நோக்கி, கணவனாகிய பிரம்மசர்மாவென்பவனும் "ஓ! பிராண நாயகி! நீ புகன்றவை யாவும் என் மனதிற்பட்டன. இந்நாள்வரை ஏதோ எனது மூடத்தனத்தால், தருமங்களைச் செய்யாமல் காலத்தை வீணாகக் கழித்துவிட்டேன். இனியான் தருமங்களைப் புரிகின்றேன். அதனால் எனக்கு நரகவாதனை நேரிடாது. இதுவரை யான் அறியாது யாதொரு சத்கருமத்தையும் புரியாமல் கேவலம் தூர்த்தனாகவும், சிற்றின்பப்பிரியனாகவும், போஜனப் பிரியனாகவுமிருந்தேன் என்பது வாஸ்தவமே. இப்பொழுது யான் எவ்வித தருமத்தைப் புரிய வேண்டுமோ, அதை நீ எனக்கு ஒரே உறுதியாய் சொல்வாயேயானால், அவ்வாறே தடையின்றி புரிகின்றேன்" என்று அவளை மிகவும் வருந்தி வினவினன்.

அப்பொழுது சுசீலையானவள் உரைத்ததாவது: "ஓ நாதா! நீர் பிரதிதினமும் காலையிலெழுந்து ஸ்நானம் சந்தியா காயத்ரீ பஞ்சமகா யக்ஞங்கள் முதலிய சத்கருமங்களைப் புரியும். அஸ்வத்த (அரச) விருக்ஷத்தை வைத்துப் பயிர்செய்து அம்மரத்தை பக்தியுடன் ஆராதிக்கக்கடவீர். எவர்கள் இவ்வாறு இரண்டு அல்லது ஒரு அரச மரத்தை வைத்து விருத்தி செய்கின்றார்களோ அவர்கள்

சகல பாக்கியங்களையும் பெறுவார்கள். எவனொருவன் அஸ்வத்த விருக்ஷத்தை ஏழு பிரதக்ஷிணம் செய்கிறானோ, அவன் ஸப்த சமுத்திரங்களாலும், ஸப்த குலபர்வதங்களாலும் மற்றும் பல வனங்களாலும் சூழப்பட்ட இப்புவனமனைத்தையும் பிரதக்ஷிணம் செய்தவனாவான்.

திரிமூர்த்திகளின் ஸ்வரூபமான அஸ்வத்த விருக்ஷத்தை எவன் நமஸ்கரிக்கிறானோ அவன் முப்பத்துமுக்கோடி தேவர்களுடன் திரிமூர்த்திகளை நமஸ்காரம் செய்தவனாவான். ஒருவன் அஸ்வத்த விருக்ஷத்தை கந்த புஷ்ப தூபதீப நைவேத்தியங்களால் அர்ச்சிக்கின்றானோ அவன் பாக்கியசாலியாவான். மத்யானத்திலும், சாயங்காலத்திலும், இரவிலும், அஸ்வத்த சேவை பண்ணக்கூடாது. இன்னும் இதைப்பற்றி பௌராணிகர்களிடமிருந்து யான் ரகசியமாய்க் கேட்டதைச் சொல்லுகிறேன் கேளும். எந்த மறையோன் சிரார்த்த காலங்களிலும், சனிக்கிழமைகளிலும் பரிசுத்தனாயிருந்து, அத் தருவுக்கு பிரதக்ஷிணம் செய்து புருஷ சூக்தம் பித்ருஸூக்தம் முதலிய மந்திரங்களை ஜபித்து, பித்ருதேவதைகளை ஸ்மரித்துக்கொண்டு சுத்தமான ஜலத்தால் அம்மரத்தைச் சுற்றிலும் ஊற்றுகின்றானோ அவன் கயா ஸ்ரார்த்தம் செய்த பலனையடைந்து பித்ருக்களுக்குத் தான் பட்டிருக்கும் கடனையும் தீர்த்துக்கொள்வான். காலையில் அதனை ஆலிங்கனம் செய்துகொள்பவன், வியாதி மிருத்யுபயம் இன்றியிருப்பான். ஆதிவாரத்தில் அதற்கு அபிஷேகம் செய்பவனுக்கு கண்ணேயின் உபத்திரவம் நீங்கும். திங்கள், புதன்கிழமைகளில் அபிஷேகம் செய்பவன் கிரஹபாதைகளினின்றும் நீங்குவான். குருவாரத்

தில் அபிஷேகம் செய்பவன், நல்ல பெண்ணையடைவான். எந்த சிவபக்தன் ஸதா, சிவா சிவா என்று உச்சரிப்பானோ அவன் சகல அபீஷ்டங்களையும் பெறுவான் என்று உரைத்தனள்.

பிறகு பிரம்மசர்மாவென்ற பிராமணன் தன் மனைவியாகிய சுசீலை புகட்டின நற்புத்தியால் ஞானோதயமாகி தான் வயது சென்றவனாயிருந்த போதிலும் அன்றுமுதல் சத்கருமங்களைச் செய்து வந்ததுந்தவிர, தன்மனைவியின் சொற்படியே இரண்டு அஸ்வத்த விருக்ஷத்தை வைத்து வளர்த்து, அம்மரத்தைச் சுற்றிலும் சுவர்ணம்போல் பளபளப்பான மேடையை நிர்மாணித்து, அங்கே விசித்திரமான கோலங்களைத்தீட்டி அலங்கரித்து, அம்மரத்தைப் பிரதிதினமும் சேவித்து, அபிஷேகம் செய்துகொண்டு வந்தனன். பதிவிரதாசிரோன்மணியான அவனது மனைவியும் மகா பரிசுத்தையாய் சதா தன் பதிக்கு ஹிதத்தைக் கருதியவளாய் இந்திரன் விஷயத்தில் இந்திராணிபோல, தன் கணவனை சிஸ்ருஷை செய்துகொண்டு வெகு பக்தியோடிருந்தனள். மேலும் தன் கணவன் கோபமுற்றிருந்தால், தான் புன்சிரிப்புடனும், தன்னை வெருட்டி அதட்டும்போது, பயந்து நடுநடுங்கியும், அவன் சந்தோஷமாயிருக்கும்பொழுது, தானும் சந்தோஷத்துடனிருந்தும், அவன் போஜனம் செய்தபின் சேஷத்தைப் புசிப்பதும், அவன் நித்திரைக்குப்பின், தான் சயனித்தும், காலையில் அவன் எழுந்திருப்பதற்குமுன் எழுந்து, அவனை ஹரி போல் பாவித்து நமஸ்கரித்தும், அவனுக்கு ஆயுராரோக்கியமுண்டாக தினே தினே சூரியனைத் துதித்தும், தேவாலயம்

மடாலயங்களுக்குச் சென்று சத்கதைகளைக் கேட்டும், தன் மாங்கல்யமானது நெடுங்காலமிருக்கவேண்டுமென் றும் பெரியோர்களைப் பிரார்த்தித்தும் வந்தனள்.

இவை தவிர துலா விருச்சிக மாக சைத்திர மாதங்களில் காவேரி ஸ்நானம் புரிந்தும், தன் கணவனுக்குப் பிரியமான போஜன பதார்த்தங்களையும் பக்ஷியங்களையும் செய்து அவற்றைத் தனது கைகளால் அவனுக்குப் பரிமாறி, அவனை யதேஷ்டமாய் உண்ணும்படிப் பிரார்த்தித்தும் உண்பித்தும் அவனுக்கு திருப்தியுண்டாகும்படி பல இனி மைகளைச் செய்தும், இராத்திரி அவன் உறங்குமளவும் அவனுக்குக் கை கால் பிடித்தல் முதலிய கைங்கர்யங்களைச் செய்தும், விடியுமுன் தன் கணவன் எழுந்திருப்பதற்கு முன்பே எழுந்து தன் கிருஹத்தைச் சுத்திசெய்தும், பக் தியுடன் நல்லொழுக்கத்தில் ஒழுகிவந்தாள். மேலும் தனது புருடனைப்போலவே தானும் அவனுடைய நெடிய வாழ் நாளைக்கருதி, பிரதிதினமும் பிராத: ஸ்நாநம் செய்து வரு வாள்.. அவள் மாதவிடாயான மூன்று தினங்களிலும் தனது வீட்டில் ஒரு மூலையில் இருந்து பசியால் வருந்தின போதிலும், அன்னாகாரமில்லாமல் கொஞ்சம் ஜலத்தை மாத்திரம் பானஞ்செய்து, உபவாஸமிருந்து, நான்காம்நாள் சுத்தவதியாகி, மஞ்சள் குங்கும புஷ்பங்களை தரித்து, நல்ல வஸ்திரமுடுத்தி, பரபுருஷரை மனதிலும் நினையாமல் எப் பொழுதும் குனிந்த தலை நிமிராமல் தனது கால் பெருவிர லைப் பார்த்துக்கொண்டு தனது புருஷனை சாக்ஷாத் சிவ பெருமான் என்று தியானித்து, அவனது பாதத்தில் வீழ்ந்து பணிந்து துதிசெய்வாள். தவிர மத்தியான

காலத்தில் அதிதிகளுக்கும் பிக்ஷுகர்களுக்கும் அன்னம் அளித்து ஆதரிப்பாள். தன் கணவன் அனுமதியின்பேரில் தரித்திரர்களுக்குத் திரவியங்களைக் கொடுத்து உபசரிப்பாள். இவ்விதமாக பலவித சத்காரியங்களைச் செய்து கொண்டிருக்கையில் ஒருநாள் மத்தியான்னத்தில் அதிதிகளையும் பிக்ஷுகர்களையும் போஜனம்செய்வித்து, பின்னர் தனது புருஷனுக்கும் அன்னம் பரிமாறப் போயினள். அத்தருணத்தில் யமபடர்கள் எமதர்மராஜனின் ஆக்ஞைப்படி அந்த பிரம்மசர்மாவின் பிராணனை யமபுரிக்குக் கொண்டுபோகுமாறு வந்தனர். அதுசமயம் பதிவிரதா சிரோன்மணியான சுசீலையின் கற்புநிலை அத்தூதர்களை அருகில் அணுகவொட்டாமல் அக்னிஜுவாலை வீசவும், அந்த யமபடர்கள் ஓடி யமதர்மராஜரிடம் சென்று, "சுவாமி! தங்கள் கட்டளையின்படி பிரம்மசர்மாவைப் பாசத்தால் கட்டி இழுத்துக்கொண்டு வரப்போனோம். அங்கே அவனது தர்மபத்தினியான சுசீலையினது பாதிவிரத்யத்தினாலுண்டான தேஜஸ்ஸினால் தகிக்கப்பட்டு ஓடிவந்தோம்" என்றுரைக்க, எமதர்மராஜா இதைக் கேட்டு மகா கோபாவேசனாய் சித்திரகுப்தனை அழைத்து, "ஓ சித்திரகுப்தா! பிரஹ்மசர்மாவென்பவனது ஆயுள் இன்றோடு முடிவடைகின்றது. நான் தூதர்களை அனுப்பினேன். அவர்களால் முடியாது திரும்பி வந்துவிட்டார்கள். ஆகையால் நீ உடனே சென்று அவனை இங்கே அழைத்துக்கொண்டுவா என்று கட்டளையிட, அவ்விதமே சித்திரகுப்தனும் பிரம்மசர்மாவின் வீடடைந்து, தூதர்கள் உரைத்தவாறே சுசீலையின் கற்புநிலைமையில் அக்னிஜுவாலை வீசவும், உடனே சித்திரகுப்தன், அவளது புருஷன்

சமீபத்தில் சென்று, அவள் புருஷனது ஆவியைக் கொண்டு போக சமயம் பார்த்துக்கொண்டிருந்தனன். அத்தருணத்தில், பிரஹ்மசர்மாவென்பவன் சாப்பிட்டு முடிந்து தர்ம பத்னியிடம், "ஓ பிரிய நாயகி! இன்றிரவு நீ எனக்கு இன்னகறியமுதைச் செய்துகொடு" என்று தனக்குப் பிரியமான ஓர் கறியமுதைக் குறிப்பிட்டுச் சொன்னான். அருகில் மறைந்து நிற்கும் சித்திரகுப்தன் இதைக்கேட்டு கலீர் என்று நகைத்தனன். நகைத்த சத்தத்தைக்கேட்ட சுசீலையானவள் பிரமித்து இதேது இருந்தாற்போல் நகைக்கும் சத்தம் கேட்கிறதே! இவ்விடத்தில் நம்மைத்தவிர வேறு யாரும் இல்லையே; என்ன ஆச்சரியம்! என்று தன்னுள் வியப்படைந்து நாற்புறமும் உய்த்து நோக்கியும் ஒருவரையும் தென்படவில்லை. சத்தத்தின் காரணம் புலப்படவில்லை. என்ன அதிசயம்! நான் கடவுளை பக்தியுடன் பூஜிப்பது மெய்யாயிருந்தாலும், யான் பதிவிரதையாயிருப்பது சத்தியமாயிருக்கும்பக்ஷத்திலும் இப்பொழுது என் காதில் விழுந்த சத்தத்திற்குக் காரணமான வஸ்து எனக்கு கட்புலனாகக்கடவது. இவ்வுலகத்தில் எக்கெந்த வஸ்து பார்க்கப்படுகின்றதோ, அல்லது கேட்கப்படுகின்றதோ, அந்தந்த வஸ்துவினுடைய அகத்திலும் புறத்திலும் சாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணன் வசிக்கிறான் என்பது உண்மையாகில் இச்சத்தத்தின் காரணம் புலப்படக்கடவது.

நான், என் கணவனே தெய்வம் என்று எண்ணியிருப்பது நிஜமாகில் எனக்குச் சத்தத்தின் காரணம் புலப்படக்கடவது. யான் காவேரியில் சுசியாய், துலாஸ்நானம் செய்து பெரியோர்களை ஆராதித்தது உண்மையாயின்

எனக்கு அச்சத்தத்தின் காரணம் புலப்படக்கடவது. தவிர, ஸ்ரீமந் நாராயணனே பரப்பிரஹ்மம் என்றும், பரத்துவம் என்றும், பரஞ்சோதியென்றும், பரமாத்மா வென்றும் சொல்லுகிற வேதவாக்கியம் உண்மையாயிருப்பின் யான் அச்சத்தத்தின் காரணம் அறியவேண்டும். என்றிங்ஙனம் சுசீலை கடவுளைப்பிரார்த்தித்த மாத்திரத்தில் சித்திரகுப்தன் அவளது பக்திக்கு மெச்சி, உடனே அச்சுசீலையின்முன் திவ்யவடிவத்துடன் பிரத்தியக்ஷமாயினன்.

இங்ஙனம் கிரீட, மகர, குண்டல, ஹார, கேயூர, கடக, கங்கண முதலிய திவ்யாபரண பூஷிதனாய் புன்சிரிப் போடுங்கூடிய முகத்துடன் தன் கண்களுக்குத் தோன்றின சித்திரகுப்தனைக்கண்ட சுசீலையும், தன்னுள் இவர் "அக்னிதேவனோ? அல்லது சூரிய பகவானோ? அன்றேல் ஸ்ரீ ஹரியோ? என்று பலவாறாகச் சந்தேகித்துப் பின்பு தன் பாதிவிரத்திய மகிமையால் தன் கணவன் உயிரைக் கவர வந்த சித்திரகுப்தன் என உணர்ந்து, உடனே அவனுக்கு நமஸ்காரஞ் செய்தனள். சித்திரகுப்தனும் தன்னை நமஸ்கரித்த சுசீலையை, தீர்க்க சுமங்கலீபவா என ஆசிர்வதித்தனன். உடனே சுசீலையும் தன்னுள் சந்தோஷித்து அவனுக்கு அர்க்கியம் முதலிய உபசாரங்களைச் செய்து, அவனை நோக்கி, "ஓ சித்திரகுப்தரே! நீர் என்னை தீர்க்க சுமங்கலீபவ, என்று ஆசிர்வாதம் செய்த வாக்கு வீண்போகாமல் சாத்தியமாயிருக்கும்படிச் செய்யப் பிரார்த்திக்கிறேன்" என, இதைக்கேட்ட சித்திரகுப்தன் கிஞ்சித்து வெட்கமடைந்து அவளை நோக்கி உரைக்கின்றான்.

பெண்ணே "யான் இப்பொழுது உன் கணவனை யமனிடம் அழைத்துப்போக வந்தேன். நீ என்னைக்கண்டு நமஸ்கரித்தமையால் யான் உலக வழக்கம்போல் ஆசீர்வாதம் செய்தேன். ஏனென்றால், சிறியோர், பெரியோரை வந்தனம் புரிந்தக்கால், பெரியோர் அச்சிறியோருக்கு, ஆசீர்வாதம் செய்யாவிடில் அப்பெரியோர் ஆயுள் க்ஷீணித்து அச்சிறியோரை வந்தடையும். இப்படி ஆசீர்வாதம் செய்வதிலும் சில கிரமங்கள் உண்டு. அதாவது, உபநயனமாகாத சிறுவன் தன் குருவாகிய ஓர் சுரோத்திரியனை வந்தனம் செய்தால், அக் குருவானவர் அச்சிறுவனை (ஆயுஷ்மான்பவ) என்றும், மேதாவியாய் இருக்கக்கடவை என்றும் ஆசீர்வதிக்க வேண்டும். ஓர் பிரம்மச்சாரி அல்லது கிருகஸ்தன் நமஸ்கரித்தால், அவனை நோக்கி ஓர் பெரியவன் அவனுடைய பெயரைக்குறிப்பிட்டு, ஓ குழந்தாய்! (ஆயுஷ்மான் பவ சௌம்யா) என்று அவனது சர்மநாமங்களைக் குறிப்பிட்டு ஆசீர்வதிக்க வேண்டும். ஓர் மறையோன் தன்னை நமஸ்கரிக்கின்ற ஓர் கன்னிகையை நோக்கி (சம்யக்பர்த்துருமதீபவ) நல்ல பர்த்தாவை அடைவாய் என்றும், விவாஹமான ஸ்திரீயாயிருந்தால் அவளை தீர்க்க சுமங்கலீ பவ என்றும் ஆசீர்வதிக்க வேண்டும். விதவையானவள் வணங்கினால் அவளை நோக்கி ஞானவதீபவ என்றும் ஆசீர்வதிக்க வேண்டும். இவைகள்தான் ஆசீர்வதிக்கும் முறை. ஆனதுபற்றியே என்னை வணங்கின உன்னை நோக்கித் தீர்க்க சுமங்கலீபவ என்று ஆசீர்வதித்துவிட்டேன், இனி என் வார்த்தையும் பொய்யாகக்கூடாது. ஆகையால், யான் உனக்கு ஓர் உபாயம் சொல்லுகிறேன். அங்ஙனம் நீ செய்வாயேல், நினது பர்த்தா தீர்க்காயுஸாக இருப்

பான். அஃது என்னவெனில், நீ இன்றுவரை செய்திருக்கிற காவேரி ஸ்நாநங்களில் ஒரு வருடத்திய பலனை உன் புருடன் அடையுமாறு அவனுக்கு தத்தம் செய்வாயேல், அவன் தீர்க்காயுஸாயிருப்பான். என் வார்த்தையும் பொய்யாகாது. இப்பொழுது யான் இவனை யமனிடம் கொண்டுபோய்க் காண்பித்துவிட்டு இவனை மீண்டும் இங்கு அழைத்துக்கொண்டுவருகிறேன். இதைப்பற்றி நீ கிஞ்சித்தேனும் சிந்திக்க வேண்டுவதில்லை'' என்றான்.

இதனைக்கேட்ட சுசீலையும் நல்லது அப்படியே செய்கிறேன்; சித்திரகுப்தரே. ஒரு விஷயம். அதாவது நீர் கொல் என்று நகைத்ததற்குக் காரணம் யாது? என, சித்திரகுப்தன் அவளை நோக்கி, "அம்மணி! யான் பாபத்தினால் அற்ப ஆயுளையுடைய உன் புருடனைக் கொண்டு போக பக்கத்தில் வந்திருக்கிறேன். இன்னும் சிறிது நேரத்தில் இவன் உயிரை இழக்கப் போகிறான். இதையறியாமல் உன்னை நோக்கி, "அடி! இன்று இரவு இன்ன கறியமுது செய்துகொடு" என்று ஓர் கறியைக்குறிப்பிட்டுச் சொன்னதற்காகத்தான் யான் அங்ஙனம் நகைத்தேன். உலகில் மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் அவனவன் பெண்டுபிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டி அங்குமிங்கு மோடி, ஏதேனும் ஓர் இழிவான செய்கையைச் செய்தாகிலும் தன் குடும்ப சம்ரக்ஷணை செய்ய முயன்று, அதே கவலையாய்த் தன் காலங்களையெல்லாம் வீணே கழித்து பாபத்துக்கு ஆளாகின்றானே தவிர தனது கை கால் முதலியன திடமாயிருக்கையில் நற்கருமங்களைப் புரிந்து, நற்கதியடைய முயலுகிறதில்லை. தேவையாயிருக்குங்கால்,

சம்ஸார பாசத்திற் கட்டுண்டு, தனது மனதிற்கிசைந்தவாறு பல தீச்செயல்கள் புரிந்து, பின்னர் வலிமைகுன்றி, "ஓ புத்திரனே! ஓ பெண்சாதியே! என்னைக் காப்பாற்றுங்கள்" என்று கதறியழுகின்றான். அப்போது அவர்கள் "சீ! சீ! கிழப்பிணமே! சும்மாகிட, என்று அதட்டுகிறார்கள். அப்போதுதான், மூடாத்துமாவான இவனுக்கு நல்லபுத்தி பிறந்து, "ஐயோ இதுவரையில் பரலோகத்திற்கு ஹிதமான நற்கிரியைகள் அணுவேனும் செய்யாமல் பல தீச்செயல் புரிந்து வீணுகக் காலம் கழித்தேனே, ஐயோ" என்று விசனப்பட்டுக்கொண்டிருக்கையில் எமன், இதுதான் சமயம் என்று நினைத்து பூனை எங்ஙனம் எலியை பிடிக்குமோ அதுபோல் அவனுயிரைக் கவர்ந்து போகின்றான். ஆகையால், ஒருவன் தனது ஜீவிய காலத்தில் தனது புத்திர மித்திர களத்திரர்களிடத்தில் ஆசையை முற்றிலுமொழித்து, தானதரும யாகயக்ஞங்களையே செய்ய வேண்டும். "ஓ பதிவிரதா சிரோன்மணியான சுசீலையே! நீ இப்பொழுது உன் பர்த்தாவுக்கு கொடுத்த காவேரி ஸ்நாக பலத்தினால் நினது புருடன் தீர்க்காயுஷ்மானுயிருப்பான்; சந்தேகமில்லை. நீ இவனது சரீரத்தை ஒரு ஜாமம் வரை பத்திரமாய் காப்பாற்றிக்கொண்டிரு. யான் இன்னும் ஒரு ஜாம நேரத்திற்குள் இவனுயிரைக் கவர்ந்து கொண்டுபோய் சமனுக்குக் காண்பித்து மீண்டும் கொண்டு வந்து விடுகிறேன் என்றனன்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில் எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

# 9-வது அத்தியாயம்.

## பிரம்ம சர்மா உபாக்கியானம்.

இவ்வாறுரைத்த அகஸ்திய நாரதர்களை நோக்கி ஹரிச்சந்திர மகாராஜனும், "முனிபுங்கவர்களே! பிரம்ம சர்மாவென்பவன் யமனிடம் போய்வந்த வரலாற்றையும் கூற வேண்டும்" என்று கேட்க, முன்பு நாரதர் தர்ம ராஜனுக்கு உரைத்தபடி, கும்பமுனிவரும் சொல்லத் தொடங்கினர்.

கேட்பாய் மகாராஜனே! இங்ஙனம், சுசீலைக்கும் சித்திரகுப்தனுக்கும் நடந்த சம்வாதங்கள் முற்றும் இவ்விருவர்களைத்தவிர வேறு ஒருவருக்கும் தெரியாது. இப்படியிருக்க, சுசீலையின் கணவன் அவளை நோக்கி "ஓ சுபகி! யான் கழனிக்குப்போய் பார்க்கவேண்டும். சீக்கிரம் அன்னம் பரிமாறு" என்று சொல்ல, அவள் அங்ஙனஞ் செய்தவுடன், போஜனம் சீக்கிரம் சாப்பிடவேண்டுமென்ற எண்ணத்துடன் கவளங்கவளமாய் வாயிற்போட்டு விழுங்கவே, அதனுல் நெஞ்சடைத்து இறந்தானென்னும் வியாஜத்தினுல், சித்திரகுப்தனும் இதுதான் சமயமென்று அவனது ஆவியை கிரஹித்துக்கொண்டு யமபுரியை நோக்கிச் செல்லுகையில், வழியில் அவன் கடன்காரர்களாகிய இரண்டு சக்கிலியர்கள் வந்து, வழிமறித்து, "அடா கெடுவாய்! நீ எங்களிடத்தில் பாதரக்ஷையை வாங்கிக் கொண்டு பணந்தருகிறேனென்று சொல்லி எங்களை ஏமாற்றி விட்டனையல்லவா? இப்பொழுது நீ எங்குச் செல்கின்றனை! எங்கள் பாதரக்ஷையைக் கொடுத்து

விட்டுப் பின்பு எங்கேனும் போ, இல்லையேல் நாங்கள் உன்னை விடமாட்டோம்" என்றார்கள். இதைக்கேட்ட சித்திரகுப்தன், அவர்களை நோக்கி, "ஓ சக்கிலியர்களே! அப்பாதரக்ஷையின் விலையை யான் கொடுக்கிறேன். இவ் வந்தணனை விட்டுவிடுங்கள்" என்றுரைக்க, அவர்கள் "ஐயா! முன், நாங்களிருவரும் வயிற்றுக்கு ஒன்றுமில்லாமல் பசியால் பீடிக்கப்பட்டு இவனிடத்தில் அதனை விற்றோம். அங்ஙனம் நாங்கள் பசியால் வருந்திய காலத்தில் இவன் எங்கள் பணத்தைத் தாராமல் கேட்டபோதெல்லாம் எங்களைத் திட்டினான். நாங்கள் நீச ஜாதியிற் பிறந்தவர்களாயிருந்ததினால், அவன் வீட்டிற்குள் போய் கேட்கக் கூடாதவர்களாயிருக்கோம். இப்பொழுது எங்களுக்குப் பணம் வேண்டாம். அப்பாதரக்ஷையின் அளவுக்குச் சரியான தோலைக் கொடுத்தாலல்லது நாங்கள் இவனை விடோம். மேலும், கோஹத்தி, பிராம்மணஹத்தி, ஸ்திரீ ஹத்தி, முதலியன செய்தவர்கள், பிராயச்சித்தத்தினால் நற்கதியடைவார்கள். கடன் பட்டவனுக்கோ யாதொரு பிராயச்சித்தமும் கிடையாது. அப்படி வாங்கின கடனைக் கொடாமலிருப்பவனுக்கு அநேக கற்பகாலம் வரையிலும் நரகமேயல்லது வேறில்லை" என்று சொல்லி கோபத்துடன் அவ்வந்தணனை யடைப்புடைக்க ஆரம்பித்தார்கள். அத்தருணத்தில் திடீரென்று வாலிபர்களான இரண்டு பிரம்மச்சாரிகள் தோன்றி அங்கு வழக்கிட்டுக்கொண்டிருந்த சக்கிலியர்கள் இருவரையும் நோக்கி உரைப்பாராயினர்.

"ஓ சக்கிலிகளே! பூர்வம் எமக்குப் பரோபகாரம் செய்த இம்மஹாநுபாவனை என் இங்ஙனம் வதைக்கிறீர்

கள். அவன் உங்களுக்கு யாது கொடுக்கவேண்டுமோ அதனை யுரைப்பீரேல் யாமுமக்கு அதனைத் தடையின்றி இப்போதே யளிக்கின்றோம்" எனவே. அச்சர்மகாரர்களும் அவ்விரண்டு பிரம்மச்சாரிகளையும் நோக்கி; "ஐயமாரே! இவ்வந்தணன் எமதிடத்தில் பாதரக்ஷை வாங்கிக்கொண்டு அதன் கிரயத்தைக் கொடாமலிருக்கிறான். இப்பொழுது அந்தப் பாதரக்ஷையாகிலும் அல்லது அதன் நிறைக்குச் சமமான வேறு தோலையாகிலும் கொடுத்தாலல்லது யாம் இவனை விடமாட்டோம்" எனவே, அவ்விளைஞர்களும், "அதே பாதரக்ஷையை இப்பொழுது எங்ஙனம் கொடுக்கக்கூடும்? ஆதலின், அதற்குச் சரியான தோலைத் தருகின்றோம். அதனை பெற்றுக்கொண்டு இந்த மகா தர்மிஷ்டனான மறையோனை உங்களுடைய ருணபந்தத்தினின்றும் விடுவித்து அவன் சுகமாய் செல்லும்படி செய்யுங்கள்" என்றுரைத்து, உடனே தங்களுடைய துடைகளின் தோலையுரித்துப் பாதரக்ஷையின் நிறைக்குச் சரியாயிருக்கும்படி நிறுத்தி அளித்தனர். அச்சக்கிலிகளும் அதனைப் பெற்றுக்கொண்டு, "ஓ பிராமணா! நீ இனி சுகமாய்ச் செல்" என்றுரைத்து தங்களிருப்பிடமேகினார்கள்.

பின்னர் பிரம்ம சர்மாவும், தம்முள் மிதமற்ற களிப்படைந்து, அப்பிரம்மச்சாரிகளை நோக்கி, "ஓ புண்ணிய புருடர்களே! நீங்கள் யாவர்? எங்கிருந்து இங்குற்றீர்கள்? அகாரண பக்தர்களாகிய உங்களுக்கு நீசனான யான் பூர்வம் யாது நன்றி புரிந்தேன். யான் உங்கள் தரிசனத்தினால் மிகவும் புனிதனானேன்" என்று துதித்துக் கேட்கவே, அப்பிரம்மச்சாரிகள், "ஐயா! நாங்களிருவரும்

பூர்வம் நீர் வைத்துப் பயிர் செய்து ப்ரதி தினமும் தண்ணீர் வார்த்து ஆதிவாரப்தோறும் ஏழு ப்ரதக்ஷிணங்கள் பண்ணிவந்த அஸ்வத்த விருக்ஷங்கள். நீர் புரிந்த நன்றிக்குக் கைமாறாக இப்பொழுது யாமிருவரும் எங்களுடைய தேகத்தினது தோலையளித்து உம்மை விடுவித்தோம். நீர் மீண்டும் உமது இருப்பிடம் திரும்பி நதிக்கரையில் நீர் வைத்துப் பயிர் செய்த அம்மரங்கள் இரண்டையும் பார்ப்பீரேல் அவை தோலுரிபட்டிருப்பதை அறியலாம்" என்றுரைத்து, உடனே அப்பிரம்மச்சாரிகளிருவரும் அந்தர்தானமானார்கள்.

பின்னர் சித்திரகுப்தன், பிரம்ம சர்மாவை நோக்கி, "பார்த்தாயா புண்ணியத்தின் மகிமை நீ முன்னம் அவ்வாச மரங்களை வைத்துப் பூசிக்கதினாலும் அதன் தரிசனத்தினாலும் நீ செய்த பாவங்கள் தொலைந்து புனிதனாய் விட்டனை. இனிமேலாகிலும் நீ புண்ணிய கருமங்களைப் புரிந்துகொண்டிரு. யான் உன் மனைவிக்குச்செய்த ஆசீர்வாதம் பொய்யாகாமல் உனக்கு பூர்ண ஆயுஸு சித்திக்கும்படிக்கும் யமதருமராஜன் உன் மீது கொண்டிருக்கின்ற கோபம் தணிந்து அவர் உன்னிடத்தில் பிரியம் ஏற்படும்படியான, யமனது ஸ்தோத்திரத்தை யான் உனக்கு உபதேசிக்கிறேன். அதனைப் பரிசுத்தனாய் இருந்து கேள்" என்றுரைத்து யம மந்திரத்தை உபதேசித்து, மீண்டும் அவனை நோக்கி, யான் உன்னை நமனிடம் கொண்டுபோய்விட்டவுடன் நீ அவருக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, உனக்கு உபதேசித்த இந்த யம

ஸ்தோத்திரத்தை அவன் முன்னின்று ஜபித்து, அவர் உன் மீது மனம் இறங்கும்படி பிரார்த்தித்துக் கேட்பாயாகில், அவர் கருணை கூர்ந்து நமஸ்கரித்த உன்னை ஆசிர்வதிப்பார். அதனால் உனக்கு தீர்க்காயுஸு உண்டாகும்" என்றுரைத்து அவனை யமபுரிக்குக் கொண்டுபோய் யமன்

---

## ॥ यमधर्मराज स्तोत्रम् ॥

धर्मराज नमस्तेस्तु साक्षाद्धर्म स्वरूपिणे ।
धर्मिष्ठ शान्तरूपाय सत्यरूप नमो नमः ॥ १

यमाय मृत्यवे तुभ्यं कालाय च नमो नमः ।
सूर्यपुत्र नमस्तेस्तु सर्वभूतक्षयाय ते ॥ २

साधूनां पितृतुल्याय वचनामृतदायिने ।
कटकाङ्गद केयूर हारनूपुरधारिणे ॥ ३

दूरादेव सतो दृष्ट्वा दुराचाराद्यविप्लुतान् ।
अर्चते गन्धपुष्पाद्यैः प्रत्युत्थानासनार्हणैः ॥ ४

मध्यस्थाय नमस्तुभ्यं तत्वज्ञाय नमो नमः ।
ददते निजसर्वस्वं साधूनां समदर्शिनाम् ॥ ५

देव देव नमस्तुभ्यं वेदवेदान्त वेदिने ।
सत्कृतं स्वकृतं पूर्वं जातं पाथेयमद्यवः ॥ ६

स्वर्लोकान् गच्छत क्षिप्रं इति संप्रियवादिने ।
नमस्ते पितृरूपाय भक्तानामभयं कर ॥ ७

முன் விட்டனன். பிரம்ம சர்மாவும் சபையில் ஸிங்காதனத்தில் வீற்றிருக்கும் எமதர்மராஜனை தூரத்தினின்று காணும்பொழுதே அவருடைய கோர ஸ்வரூபத்தைப் பார்த்தவுடன் மிகவும் பயந்தவனாய் தண்டனிட்டு ஆயுர் விருத்தியின் பொருட்டு யமனை நோக்கி துதிக்கலானான்.

---

## || யம தர்மராஜ ஸ்தோத்ரம் ||

த4ர்மராஜ நமஸ்தேஸ்து ஸாக்ஷாத் த4ர்ம ஸ்வரூபிணே |
த4ர்மிஷ்ட ஸாந்த ரூபாய ஸத்யரூப நமோ நம: || 1 ||

யமாய ம்ருத்யவே துப்4யம் காலாய ச நமோ நம: |
ஸூர்ய புத்ர நமஸ்தேஸ்து ஸர்வபூ4த க்ஷயாய தே || 2 ||

ஸாதூ4னாம் பித்ருதுல்யாய வசனை ப்ருக தா3யிநே |
கடகாங்க3த3 கேயூர ஹாரநூபுர தா4ரிணே || 3 ||

தூ3ராதே3வ ஸதோ த்3ருஷ்ட்வா து3ராசாரத்3ய விப்லுதான் |
அர்சதே க3ந்த4 புஷ்பாத்3யை: ப்ரத்யுத்தா2ன ஸனார்ஹணை: || 4 ||

மத்4யஸ்தா2ய நமஸ்துப்4யம் தத்வ க்3ஞாய நமோ நம: |
த3த3தே நிஜஸர்வஸ்வம் ஸாதூ4னாம் ஸமத3ர்ஸினாம் || 5 ||

தே3வ தே3வ நமஸ்துப்4யம் வேத3 வேதா3ந்த வேதி3நே |
ஸத் க்ருதம் ஸ்வ க்ருதம் பூர்வம் ஜாதம் பாதே2ய மத்3யவ: || 6 ||

ஸ்வர்லோகான் க3ச்ச2த க்ஷிப்ரம் இதி ஸம்ப்ரிய வாதி3நே |
நமஸ்தே பித்ருரூபாய ப4க்தானுமப4யம் கர || 7 ||

कमलाकान्त भक्ताय कमलोदर चक्षुषे ।
कमलोद्भव भव्याय कमलाभासकत्विषे ॥ ८

नमो लावण्यनिधये कारुण्यवचनालय ।
पापीनां घोररूपाय गर्जते दुर्जनाग्रतः ॥ ९

दंष्ट्राकराल भ्रुकुटी भीषणानन ते नमः ।
ऊर्ध्वरोम्णे महारोम्णे दीर्घरोम्णे नमो नमः ॥ १०

घण्टारव महाचण्ड कालदण्डाय चण्डिने ।
दण्ड्यान् दण्डयते नित्यं उग्रदण्डाय ते नमः ॥ ११

कोदण्डकालदण्डासि परश्वथ वरायुधान् ।
धारिणे मारिणे लोकान् पुण्यराशि स्वरूपिणे ॥ १२

ग्रहणे सर्वलोकानां जागरूकाधिकारिणे ।
दिव्यज्ञान प्रशस्ताय समस्ताज्ञाय ते नमः ॥ १३

दिव्यरूप नमस्तुभ्यं समस्ताकृतये नमः ।
चतुर्हस्ताय साधूनां चतुरास्याय ते नमः ॥ १४

समस्तलोक वन्द्याय समस्त स्तोत्ररूपिणे ।
कालाम्बुद महानील महा महिषवाहन ॥ १५

कल्पानल महाकील ज्वलल्लोचन ते नमः ।
भयङ्कराय पापानां अभयाय सुधर्मिणाम् ॥ १६

द्रवत्सुधांशु संपूर्ण चन्द्रास्याय नमो नमः ।
प्रळयाम्बुद निर्घोष भीषयित्रेघ दर्शिने ॥ १७

கமலாகாந்த ப4க்தாய கமலோத3ர சக்ஷுஷே |
கமலோத்3ப4வ ப4வ்யாய கமலா பா4லக த்விஷே || 8 ||

நமோ லாவண்ய நித4யே காருண்ய வசனாலய |
பாபினாம் கோ4ர ரூபாய க3ர்ஜதே து3ர்ஜனக்3ரத: || 9 ||

த3ம்ஷ்ட்ரா கரால ப்4ருகுடீ பீ4ஷணாநந தே நம: |
ஊர்த்4வ ரோம்ணே மஹா ரோம்ணே தீ3ர்க4 ரோம்ணே
நமோ நம: || 10 ||

க4ண்டாரவ மஹாசண்ட3 காலக3ண்டா3ய சண்டி3னே |
த3ண்ட்3யான் த3ண்ட3யதே நித்யம் உக்3ர த3ண்டாய தே
நம: || 11 ||

கோத3ண்ட3 கால த3ண்டா3ஸி பரஸ்வத4 வராயுதா4ன் |
தா4ரிணே மாரிணே லோகான் புண்யராஸி ஸ்வரூபிணே
|| 12 ||

க்3ரஹணே ஸர்வலோகானாம் ஜாக3ரூகா நி4 காரிணே |
தி3வ்ய க்3ஞான ப்ரஸஸ்தாய ஸமஸ்தாங்கா3ய தே நம:
|| 13 ||

தி3வ்யரூப நமஸ்துப்4யம் ஸமஸ்தா க்ருதயே நம: |
சதுர்ஹஸ்தாய ஸாதூ4னாம் சதுரான்யாய தே நம: || 14 ||

ஸமஸ்தலோக வந்த்3யாய ஸமஸ்த ஸ்தோத்ர ரூபிணே |
காலாம்பு3த3 மஹாநீல மஹா மஹிஷ வாஹன || 15 ||

கல்பாநல மஹாநீல ஜ்வலல் லோசன தே நம: |
ப4யங்கராய பாபானாம் அப4யாய ஸுத4ர்மிணாம் || 16 ||

த்3ரவத் ஸுதா4ப் ஸு ஸம்பூர்ண சந்த்3ராஸ்யாய நமோ நம: |
ப்ரளயாம்பு3த3 நிர்கோ4ஷ பீ4ஷயித்ரேக4 த3ர்ஸிநே || 17 ||

गोभ्यां कारुण्यपूर्णाभ्यां पश्यते सुकृतात्मनाम् ।
तत्वाय तत्वरूपाय तत्वद्रष्ट्रे नमो नमः ॥ १८

अतीव गर्जत्प्रळयांबुदध्वनि प्रमूर्छिताशेष दिगन्तराय ।
छिन्धीति भिन्धीति च चूर्णयेति वक्त्रे सतोवीक्ष्य विभो नमो नमः ॥

कराळकायाति कठोरवाचा पापिष्ठसंघं भृशं भीषयित्रे ।
ज्वलद्युगान्तोद्यमबाडवाग्नि समोर्ध्वरोम्णे परपीडकानाम् ॥ २०

विषोल्बणाभीषण कृष्णसर्प दण्डाभिघाता हि विमोहयित्रे ॥

साधुमित्राय ते शश्वत् मित्रपुत्राय ते नमः ।
शान्तगात्राय शान्तानां मेरुगोत्रसमौजसे ॥ २१

पूजामात्राति तुष्टाय भक्ताभीष्ट प्रदायिने ।
शिपिविष्ट नमस्तेस्तु नमस्ते परमेष्ठिने ॥ २२

वाचा प्रीणयते साधून् पूज्यान्पूजयते नमः ।
प्रदात्रे साधुसल्लोकं अपहर्ते सतां भयम् ॥ २३

धर्मशास्त्र स्वरूपाय न्यायशास्त्रार्थ चक्षुषे ।
वृकोदर नमस्तुभ्यं यमुना सोदराय च ॥ २४

यमाय धर्मराजाय मृत्यवे चान्तकाय च ।
वैवस्वताय कालाय सर्वभूत क्षयाय च ॥ २५

கோ³ப்⁴யாம் காருண்ய பூர்ணாப்⁴யாம் பஸ்யதே ஸாக்ரு தாத்மனாம் ।
தத்வாய தத்வரூபாய தத்வ த்³ருஷ்டே நமோ நம: ॥ 18 ॥
அதிவ க³ர்ஜத் ப்ரளயாம்பு³த³த்⁴வநி ப்ரமூர்ச்சி²தாஸேஷ தி³கந்தராய ।
நி²ந்தி⁴தி பி⁴ந்தி⁴திச சூர்ணயேதி வக்த்ரே ஸதோவீக்ஷ்ய விபோ⁴ நமோ நம: ॥ 19 ॥
கராள காயாதி கடோ²ரவாசா பாபிஷ்ட² ஸங்க⁴ம் ப்⁴ருஸம் பீ⁴ஷயித்ரே ।
ஜ்வலத்³யுகா³க்³தோத்³யம பா³ட³பா³க்³னி ஸமோர்த்⁴வ ரோம்ணே பாபீட³கானாம் ॥ 20 ॥
விஷோல்ப³ணபீ⁴ஷண க்ருஷ்ணஸர்ப த³ண்டா³பி⁴கா⁴த ஹி விமோஹயித்ரே ।
ஸாது⁴ மித்ராய தே ஸர்வத் மித்ர புத்ராய தே நம: ।
ஸாந்த கா³த்ராய ஸாந்தானாம் மேருகோ³த்ர ஸமௌஜஸே ॥ 21 ॥
பூஜாமாத்ராதி துஷ்டாய ப⁴க்தாபீ⁴ஷ்ட ப்ரதா³யினே ।
விபி³ஷ்ட நமஸ்தேஸ்து நமஸ்தே பரமேஷ்டி²னே ॥ 22 ॥
வாசா ப்ரீணயதே ஸாதூ⁴ன் பூஜ்யான் பூஜயதே நம: ।
ப்ரதா³த்ரே ஸாது⁴ ஸல்லோகம் அபஹர்தே ஸதாம் ப⁴யம் ॥ 23 ॥
த⁴ர்ம ஸாஸ்த்ர ஸ்வரூபாய ந்யாய ஸாஸ்த்ரார்த² சக்ஷுஷே ।
வ்ருகோத³ர நமஸ்துப்⁴யம் யமுனா ஸோத³ராய ச ॥ 24 ॥
யமாய த⁴ர்ம ராஜாய ம்ருத்யவே சாந்தகாய ச ।
வைவஸ்வதாய காலாய ஸர்வபூ⁴தக்ஷயாய ச ॥ 25 ॥

औदुंवराय दध्नाय नीलाय परमेष्ठिने ।
वृकोदराय चित्राय चित्रगुप्ताय ते नमः ॥ २६
(भूयो भूयो नमस्तुभ्यं भक्तरक्षण ते नमः)
॥ इति यमधर्मराज स्तोत्रम् ॥

ஔத3ம்ப3ராய த3த்4நாய நீலாய பரமேஷ்டி2னே ।
வ்ருகோத3ராய சித்ராய சித்ரகு3ப்தாய தே நம: ॥ 26 ॥
(பூ4யோ பூ4யோ நமஸ்துப்4யம் ப4க்தரக்ஷண தே நம: । )
॥ இதி யம த4ர்மராஜ ஸ்தோத்ரம் ॥

என்று இவ்வாறு ஸ்தோத்தரிக்கவும்.

இத்துதியைக் கேட்ட யமனும் வெகு சந்தோஷத்துடன் அவனை நோக்கி, "ஸௌம்மியனே! நீ தீர்க்காயுஷ்மான் பவ" என்று ஆசீர்வதித்து மீண்டும் அவனை நோக்கி, "ஓ பிரம்ம ஸர்மாவே! நீ இப்பொழுது ஜபித்த என் ஸ்தோத்திரத்தை யார் சொன்னாலும் அல்லது பிறருக்கு உரைத்தாலும் அவன் பூர்ணாயுஸை பெற்று அதிக சம்பத்துடையவனாயிருப்பான்.

"இத்தோத்திரம் அநேக பாவங்களைப் போக்கும்; மிருத்யுவை வாவொட்டாது புண்ணியத்தையே விருத்தி செய்யும்; பிரதிதினமும் இத்தோத்திரத்தைப் பாராயணம் பண்ணுபவன் எல்லாத் துன்பங்களையும் போக்கி இன்பமயமாவான். இன்னும் உனக்கொரு இரகசியத்தை உபதேசிக்கிறேன். அதாவது, ஒவ்வொருவருடைய ஜன்ம நக்ஷத்திரத்திலும், என் நக்ஷத்திரமான பரணியிலும், இத்தோத்திரத்தைப் படித்தால் அவனுக்கு வியாதிகள்

அணுகா. அவன் வம்சமும் தீர்க்காயுளையடையும், இதைப் படித்தாலும், படிப்பித்தாலும் அவர்கள் சத (நூறு) வருடம் ஜீவித்திருப்பார்கள்'' என்று கூறியருளினர். பிறகு பிரம்ம சர்மாவும் யமனை நோக்கி "சுவாமி! அடியேன் எந்தத் தீவினையால் இப்பொழுது அற்பாயுஸுடன் யம புரிக்கு வந்தேன்? எந்தப் புண்ணிய வசத்தினால் மீண்டும் நீண்டாயுளைப் பெற்றேன்? அதன் காரணத்தை அடியேனுக்கு அருளிச் சொல்லவேண்டும்'' என்று பிரார்த்திக்கவே, மறலியும் "நீ முன் ஜன்மத்தில் உமது வீட்டை நாடி' மிடியாலும் பசியாலும், ரோகத்தாலும், பீடிக்கப் பட்டு வந்த ஓர் அந்தணனுக்கு உணவளித்து ரோக நிவர்த்தி செய்து அவனை ரக்ஷித்த புண்ணியத்தால் உனக்கு இப்போது தீர்க்காயுஷ்யமுண்டாயிற்று. பரான்ன போஜனம் அபக்ஷ்ய பக்ஷணம் முதலியன செய்தமையால் நீ அற்ப ஆயுளையுடையவனானாய். ஆகலின் இனி எப்பொழுதும் தர்மமே நிச்சயம் என்று இருக்கக்கடவை. தருமம் கருமத்தை நீக்கும்.

'பூர்வம்' நள மஹாராஜன் இத் தோத்திரத்தால் நம்மைத் துதித்து திரிலோகங்களையும் ஜயித்து பூர்ணாயுஸு பெற்றான். தவிர, பாபிகள் பாவகதியே யடைவார்கள். சாதுக்கள் சத்கதியே யடைவார்கள். இன்னும் சில விஷயங்களை விளக்குகிறேன், அவற்றைக் கேட்பாயாக. எட்டு வயதுடைய பெண்ணைக் கௌரி எனல் வேண்டும்; ஒன்பது வயதுடையவள், ரோகிணி எனப்படும்; பத்து வயதுடையாள் கன்னிகையாவள்; அதற்கு மேற்பட்டவள் ரஜஸ்வலா என்பர். இவர்களுள் கௌரி என்பவளைத்

தானஞ்செய்யின்நாகலோகத்தையும்,ரோகினியைத்தானஞ் செய்யின் வைகுண்டத்தையும், கன்னிகையைத் தானஞ் செய்யின் பிரம்ம லோகத்தையும், ரஜஸ்வலையைத் தானஞ் செய்யின் ரௌரவத்தையும் அடைவான். தவிர, ஸ்ரீஹரியின் ஆராதனைக்காக குங்கிலியமும் நெய்யும் தண்டுலமும் தருபவனும், வைசுவ தேவம் செய்பவருக்கு தண்டுலம் தருபவனும், சுவர்க்கமடைவான். துலா, கார்த்திக, மாக, வைசாக (அற்பசி, கார்த்திகை, மாசி, வைகாசி) மாதங்களில் காவேரி ஸ்நானம் செய்பவரும் புண்ணிய புராணங்களில் ஆசக்தியுடையவர்களும் ஞானசாஸ்திர உபதேச பௌராணிகரை வஸ்த்திர புஷ்பாக்ஷதைகளால் பூசிப்பவர்களும், விஷ்ணு பூஜைக்காகத் தூபதீப கலயங்களைக் கொடுப்பவரும், தேவலோக வாசம் பெறுவார்கள். ஓ பிரம்ம சர்மனே! இனி பாவங்களின் பான்மையை எடுத்துக் கூறுகிறேன். பாபிகள் சிரித்துக்கொண்டே செய்கிற ஒவ்வொரு காரியமும் மறுமையில் அழுதுகொண்டே அனுபவிக்க நேரும். பிராதக்காலத்தில் ஸ்நானம் செய்யாமல் பகவானுக்கு ஆராதனை செய்யாத அன்னத்தைப் புசிப்பவர்களும், நாஸ்திகரும், புராண நம்பிக்கையற்றவரும், பரப்பிரயோஜனத்தைக் கெடுப்பவரும், மணி தூபம் தீபம் துளஸி முதலியவையில்லாது பூசிப்பவரும், ஆமணக்கு எருக்கு முருக்கு, இவ்விலைகளில் துளஸி தளத்தையும் புஷ்பத்தையும் கொண்டு வருபவரும், காமபாணபின்னராகி நிஷித்த தினத்தில் ஸ்திரீ சங்கமம் செய்பவரும், ஔபாஸனம் அக்னிஹோத்திரம் வைசுவதேவம் புரியாது உண்பவரும், ஸ்திரீகளுடனும் குழந்தைகளோடும் உடனிருந்துண்போரும் கொடிய நரகங்களை அனுப

சிப்பார்கள். ஆதலால் எது செய்யினும் சாஸ்திர விசாரணையுடன் செய்யவேண்டும். அங்ஙனம் செய்யாது, மங்குவானுல் நரகமே அவருக்குப் பிராப்தமாகும்" என்று அவனுக்குப் பல தர்மோபதேசங்களைச்செய்து, பின்னர் அவனை நோக்கி, "இனி நீ இங்கு, தாமதம் செய்யாமல் உமதிருப்பிடம் சேர்ந்து, உன் பிரிவினையால் வருத்தமுற்றிருக்கும் நின் மனைவி ஸுசீலையைச் சந்தோஷப்படுத்து" என்று சொல்லவே, பிரம்ம சர்மாவும் அதிக சந்தோஷத்துடன் தன்னிருப்பிடம் சேர்ந்து தனது சரீரத்தில் பிரவேசித்துத் தூங்கி எழுந்திருப்பவன்போல் எழுந்திருந்தான். அவ்வமயம் அவனது மனைவி சுசீலை என்பவள் வெகு சந்தோஷத்துடன் அவனைக் காடாலிங்கனம் செய்துகொண்டு, தன் கணவன் யமபுரிக்குப்போய்வந்த விருத்தாந்தங்கள் யாவையும் விசாரிக்க, அவனும் போய்வந்த விஷயங்கள் சவிஸ்தாரமாய்ச் சொல்ல, அவற்றால் ஆனந்தக்கடலில் மூழ்கினவளாய், முன்னிலும் மும்மடங்கு அதிகமாய் காவேரி ஸ்நாநம், அஸ்வத்த ஸேவை முதலிய நற்கிரியைகளைப் புரிந்து, பர்த்ரு சிஸ்ருஷை செய்துகொண்டிருந்து, காலதருமத்தையடைந்து திவ்விய விமானத்திலேறிக்கொண்டு பிரம்மலோகம் சென்றனள். ஆகையால் இந்த சுசீலையினது உபாக்கியானத்தை பக்தியுடன் படிப்பவரும் கேட்பவரும் நீடூழிகாலம் வாழ்ந்து நல்லுலகடைவர்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில் ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## 10-வது அத்தியாயம்.

### வராக விருத்தாந்தம்.

இப்பால் சுசீலை பரலோகப் பிராப்தி அடையவும், பிரம்ம ஸர்மாவென்பவன் மிக்க விசனமடைந்து தனது வீட்டில் சிறிது காலம் வாழ்ந்திருந்து, பின் திருடர்களால் அவனது சொத்துக்களை அபகரித்துக்கொண்டுபோகவே, அதிக கவலையுற்றவனாய் வீட்டைவிட்டு தேசாந்திரம் சென்று முன்போலவே ஸ்நான சந்தியின்றி பற்பல துரா சாரங்களைப்புரிந்து, கண்ட இடங்களில் புஜித்தும், துஷ்ட ஜன கூட்டுறவு ஒப்புடையதென மதித்தும், தனது பெண் சாதியின் நற்போதனைகளை மறந்தும், பலவிடம் திரிந்தும், ஒரு நாள் ஒரு பிராம்மணனுடைய வீட்டு வாசலில் உட்கார்ந்திருக்க, அவ்வீட்டு அந்தணன், வழக்கப்படி கர்லைக்கடனை முடித்துவிட்டு, வாசலில் வந்து யாராகிலும் அதிதிகள் வந்திருக்கிறார்களோவென்று பார்க்கையில், வாசலில் உட்கார்ந்திருந்த பிரம்ம ஸர்மாவென்ற பிராமணனைக் கண்டதும் அதிக பக்தியுடன் அழைத்துக்கொண்டு போய்ப் போஜனம் அளித்து, அவன் வேத சாஸ்திரங்களில் வல்லவனாயிருப்பதையறிந்து, அன்றுமுதல் அவனைத் தனது கிரஹத்திலேயே வைத்துப் போஷித்து வந்தான். பின்னர் ஒரு நாள் அந்த கிரஹஸ்தனுக்கு ஏதோ ஒரு சூதகம் சம்பவித்தபடியால், இந்த பிரம்ம ஸர்மாவை, தான் செய்யும் நித்யபூஜையைச் செய்யும்படி நியமிக்க, அவனும் ரகஸியமாய் பிறர் வீட்டில் சாப்பிட்டுவிட்டு ஸ்வாமி பூஜை

செய்து வந்தான். அவ்வாறு நியதி தவறி பூஜை செய்ததனால் அவனுக்கு அஜீர்ண ரோகம் சம்பவித்து மரணமுற்று பற்பல நரகானுபவம் அனுபவித்து பின் ஜன்மமெடுத்து ஐந்து ஜன்மங்கள் வரை நாயாகவும், பிறகு ஒட்டையாயும், பின்னர், ஸ்ரீமுஷ்ணாரண்யத்தில் முள்ளம் பன்றியாகப் பிறந்து, மலந் தின்பதும், பூமியை முகர்ந்துகொண்டு கோரைப்பற்களால் பூமியைப் பிளந்துகொண்டு செல்வதும், மதங்கொண்டு எல்லோரை வெருட்டுவதும், சரீரத்தை அசக்கித்தள்ளுவதும், பூமியைக் காலால் கிண்டி, குர்குர் என்று ஓசை செய்துகொண்டு அக்காட்டில் திரிந்துகொண்டிருந்தனன்.

இப்படியிருக்க; விருத்தாசலத்தில் ஆத்ரேய கோத்திரத்தில் உதித்த பத்மகர்ப்பனென்கிற ஒரு வைதிக பிராமணன் இருந்தான். அவன் நித்தியமும் பஞ்சாக்ஷர ஜபம், ஔபாஸனம், வைஸ்வ தேவம் முதலியன தவாது செய்பவன். இந்திரிய நிக்கிரஹம் செய்து சீதோஷ்ண சுக துக்கங்களை சமமாகக் கொள்பவன். யோகநிரதன், வருணாஸ்ரம தர்மத்துக்குரிய ஷட்கருமங்களை விடாது செய்பவன். தினமும் இருபோதும் ஸ்நாநமாசரிப்பவன். வேதபாராயணத்தோடு வைஷ்ணவ புராணச் சிரவணமும், மற்றும் சத்கர்மங்களும் முறைப்படி செய்பவன். இவன் ஒரு நாள் அநேக வைதிகர்களுடன் சிவ ஸ்மரணை செய்துகொண்டு துலாகாவேரி ஸ்நாநம் செய்யுமாறு அர்த்தராத்திரியில் புறப்பட்டு வழியில் சென்றுகொண்டிருக்கையில் காற்றும் மழையும் வந்து உபத்ரவிக்க, அந்தப் பிராம்மணர் எல்லோரும் வழிதெரியாமல் அலைந்து திரிகையில்,

முன்சொன்ன முள்ளம்பன்றியானது வந்து அவர்களை தாத்தவே அந்த பிராம்மணர்கள் எல்லோரும் பயந்து வடதிசை நோக்கி ஓடினார்கள். பத்மகர்பன் என்ற பிராமணன் மட்டும் தென்திசையை நோக்கி ஓட்டம் பிடித்தனன். அந்தப் பன்றியானது வடதிசை ஓடும் கூட்டத்தைவிட்டு இந்த பத்மகர்பனை மாத்திரம் தூத்திக் கொண்டு போகவே, அவனும் அதிக பயத்துடன் ஓட்ட மாயோடி காவேரியின் ஜலத்தில் குதித்து மூழ்கிவிட்டனன். பன்றியும் அவன் பின்னே, விடாது தூத்திச் சென்று காவேரிக்கரையில் வந்ததும், அங்கு துலா ஸ்நானஞ்செய்து தலைமயிரையாற்றிக்கொண்டிருந்த ஓர் தாஸியினது தலைமயிரின் ஜலத்திவலை அப்பன்றியின்மேல் தெரிக்க, உடனே அப்பன்றியானது தான் செய்த அசுவத்த சேவை, சிவ பூஜை இவற்றின் மகிமையால், அக் கரையிலிருந்த எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கையில் பன்றியுருவம் நீங்கி, திவ்ய ஸ்திரீகள் உபசரிக்க, ஓர் திவ்ய புருடனாய் விமானத்திலேறினதைக்கண்ட பத்மகர்ப்பனும் பயந்தெளிந்து, ஆச்சரியமடைந்து அந்த திவ்விய புருடனை நோக்கி, புருஷோத்தமரே! "நீர் யார்? இப் பன்றி ஜன்மம் வரக்காரணம் யாது? என்று வினவினான். அதற்கு பிரம்ம சர்மாவென்பவன், "ஐயா, பூர்வம் நான் பிரம்மசர்மாவெனும் பெயர் பூண்டு கெட்ட தொழில் புரிந்து, பன்றி ஜன்மம் பெற்று இங்குவர. துலா காவேரி ஸ்நானஞ்செய்த இத்தாஸியினது தலைமயிரின் ஜலத்துளிபட்டதால், அப்பன்றி ஜன்மம் நீங்கினேன் என்று, அந்த பத்மகர்பனிடம் அறிவித்து, அத்தாஸியையும் பலவாறு புகழ்ந்து அப் பத்மகர்ப்பனிடத்தில் விடை

பெற்று திவ்ய லோகம் சென்றனன். பின்னர் அங்கு ஸ்நானஞ்செய்ய வந்திருந்த சகல பிராம்மணர்களும் பத்ம கர்ப்பனை நோக்கி, "சுவாமி! தேவரீர், இங்கெழுந்தருளி இந்தக்காவேரி ஸ்நான மகத்துவத்தை நன்றாய் விளக்கி வைத்தீர். ஆனாலும், இதில் ஸ்நாந ஜபானுஷ்டானங்கள் செய்யும் முறைமையையும், அருளிச்செய்ய வேண்டும்." என்று பிரார்த்திக்கவே, அம்மறையோனும் அவைகளை விசிதமாயுரைக்கத்தொடங்கினர்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்
பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

## 11-வது அத்தியாயம்.

## பத்மகர்ப்பனுக்கும் திவ்யபுருஷனுக்கும் நடந்த சம்வாதம்.

"கேளும், தரும புத்திரரே! அந்த பத்ம கர்ப்பனென்னும் பிராம்மணன் அக் காவேரி தீரத்தில் வந்திருக்கும் மஹா ஜனங்களை நோக்கி கேளுங்கள் விப்ரோத்தமர்களே, துலா காவேரியின் ஸ்நாந மகிமை என்னவெனில், அற்பசி மாசத்தில் சூரியன் துலாராசியில் சஞ்சரிக்குங்காலத்தில் இக் காவேரி நதியில் ஸ்நாநஞ் செய்கிறவர்கள் சகல பாபங்களிலிருந்து விமோசனமடைந்து சாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணன் வாசஸ்தலமாகிய வைகுண்டத்தை அடைவார்கள். மேலும் அக் காவேரி நதிக்கரையில் எவன் ஒருவன் நாநாவிதமான காய்கறி கனி இவைகளோடு நெய் பால் தேன் சர்க்கரை இவைகளுடனும், பாயாஸத்துடனும், பக்குவமான அன்னத்தை ஒரு பிராஹ்மணனுக்கு தானம் செய்கிறானோ அவன் தனது நூறு வம்ஸ பித்திருக்களை திருப்தி செய்விக்கிறவனாகிறான். மேலும் சகல சர்வாபீஷ்டங்களையுமடைந்து சகல வைபோகங்களையும் பெற்று, சிவலோகத்தை அடைவான்.

அக்னிஹோத்திரியாயும், பெரிய குடும்பியாயும், மகா ஏழ்மை தசையிலிருக்கும் அந்தணனுக்கு அன்னவஸ்திர தக்ஷிணை தாம்பூலத்துடன் தானம் செய்பவன் மகா புண்ணிய சிரேஷ்டராயும் தேவாதி தேவர்களாலும் பூஜிக்கப் படுவான், என்று துலா காவேரியின் விசேஷ குணத்தை

சொல்லிக்கொண்டிருக்கையில், அந்நதியில் சஞ்சரிக்கின்ற மகா குரூரமான ஒரு முதலையானது அந்நதியில் ஸ்நானஞ் செய்துகொண்டிருக்கும் ஒரு பிராமணனை விழுங்குவதற்காக அவனது அருகில் செல்லும் சமயம்; அவ்வமயம் அக்காவேரி நதிக்கரையில், பத்ம கர்ப்பனென்பவன் யாவருக்கும் காவேரி மகத்துவத்தை சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது

प्रातःकाले तुलामासे यस्स्नायात् सह्यजाजले ।
सर्वकर्मविनिर्मुक्तो यातिविष्णोःपरंपदम् ॥

ப்ராத:காலே துலாமாஸே யஸ்ஸ்நாயாத் ஸஹ்யஜாஜலே ।
ஸர்வகர்ம விநிர்முக்தோ யாதிவிஷ்ணோ: பரம்பதம் ॥

அதாவது (உதய காலத்தில் காவேரியில் ஸ்நாநமாடுபவன் சர்வ கர்மங்களினின்றும் விடுபட்டு விஷ்ணுவினுடைய பரமபதத்தை யடைவான் என்ற அர்த்தமுடைய) இச்சுலோகம் அம் முதலையின் காதிற்படவே, கொடியதும் நிந்தநிலையற்றதுமான அம் முதலையின் ஜன்மம் நீங்கி ஓர் திவ்விய புருஷனாய் விமானத்தில் தோன்றிற்று, அதுகண்ட பத்ம கர்ப்பனென்பவன், ஆச்சர்ய சித்தனாய் அத்திவ்ய புருடனை நோக்கி, நீர் யார்! உன் தேயம் எது? நீ தேவ குமாரனா அல்லது உபதேவனா? எங்கு ஜனித்தவன் என்று வினவ, அவன் ஐயா! யான் பாஞ்சால தேசத்தில் கங்க கோத்திரத்தில்ஜனித்த சூரியபக்தனென்னும் பெயருடைய ஒரு பிராமணன். நான் வசித்த கிராமம் உத்கலை என்று பெயர். யான் எல்லா விஷயத்திலும் வல்லோனாயிருந்தும் மகா நிர்தயனாகவும், கோபிஷ்டனாகவும், ஸ்நாநசந்தியற்ற

வனுய் விடாக்ரண்ணியனுயும் இருந்ததுமன்றி, ஒருநாள் கணவனென்ற ஏழையான ஒரு வைதிக பிராம்மணன் யாகம் புரியவேண்டி மற்றொரு பிராம்மணனிடத்தில் போய் திரவியம் யாசித்தபொழுது, அவர்கள் என்னைப் பெரியோனுக மதித்து, என்னிடம் அப்பிராம்மணனை அனுப்ப, மகா சண்டாளனும், லோபியுமான யான், அவனுக்கு ஒன்றும் கொடாது விரட்டிவிட்டேன். இதைப் பார்த்த எல்லாரும் அப் பிராம்மணனுக்கு ஒன்றும்கொடுக்காது, அவனை வெறுத்து அனுப்பிவிட்டார்கள். இந்த பாபத்திற்கு யானே மூலகாரணமாகையால், என் ஆத்மா உடலைவிட்டு நீங்கியவுடன் எமபடர்களால் இழுத்துக் கொண்டு போகப்பட்டு கொடிய பற்பல நரகங்களையனுபவித்துக் கடைசியில் இக்தக்காவேரியில் ஓர் முதலையாய் பிறந்தேன். இன்றைய தினம் ஸ்நாநஞ் செய்ய வந்த ஓர் பிராம்மணனை விழுங்குமாறு அவனருகே செல்லுகையில் தாங்கள் படித்துக்கொண்டிருந்த காவேரி மகத்துவத்தின் இப் பதினெனன்றுவது அத்தியாயத்தின், 19-வது ஸ்லோகம் அர்த்தபாவத்துடன் என் காதில்படவே, யான் வக்ரதந்தத்தையும் கோரரூபத்தையும்விட்டு இவ்வடிவைப் பெற்றேன்.'' என்று சொல்லி அந்த பத்மகர்ப்பனென்பவனைப் பலவாறு துதிசெய்து, மீண்டும் அவரைநோக்கி, "ஸ்வாமி! மகாபாபியாயிருந்த யான் இப்புராண ஸ்ரவணத்தைக் கேட்க யாது புண்ணியம் செய்தேன்; அதனையுரைக்கவேண்டும்'' என்று வினவ, பத்மகர்ப்பனும் அவ்விஷயத்தை யோக திருஷ்டியில் உணர்ந்து, "கேளாய் திவ்ய புருஷனே!'' ஒருக்கால் வங்கதேசத்தரசன் வேட்டையாடி ஸஹ்யகிரி வழியாய் வந்தனன். அப்பொழுது

அநேகர் துலா காவேரி ஸ்நாஞ்செய்து காவேரி புராண ஸ்ரவணம் செய்து கொண்டிருப்பதைப்பார்த்து அவ்வரசனும் துலா காவேரி ஸ்நாநஞ் செய்து, புராண ஸ்ரவணம் கேட்டு, அங்குள்ள சகல பிராம்மணர்களுக்கும் அநேக தான தருமங்களைச்செய்தான். அது சமயம் நீ உள்ளத்தில் கெட்டவனாயிருந்தபோதிலும், அரசன் கொடுக்கிற திரவியங்களை பெறுவதற்காக மகா பரிசுத்தன்போல பாசாங்கு பண்ணி, நீயும் காவேரி ஸ்நாநம் செய்து பக்தியுடன் புராண ஸ்ரவணம் பண்ணுபவன் போல பாவித்திருந்தாய். அந்தப் புண்ணியத்தினால்தான் இப்பொழுது நீ திவ்ய புருஷனானாய்" என்றுரைக்கவே, அருகில் இருந்த எல்லோரும் கேட்டு வியப்புற்றார்கள். அத்திவ்யபுருஷனும் அந்த பத்மகர்ப்பனென்கிற பிராம்மணனை நமஸ்கரித்து விமானத்திலேறிக்கொண்டு சுவர்க்கலோகம் சென்றான், பின்பு பத்மகர்ப்பனும் அங்குள்ள ஜனங்கள் எல்லோருக்கும் துலாகாவேரியின் மகத்துவத்தைச் சவிஸ்தாரமாய்ச்சொல்லி முடித்தான். "கேளும் தரும நந்தனா! இத்தியாதி வைபவங்கள் நிறைந்த இக்காவேரி நதியில், நீயும் ஸ்நாநம் செய்யக்கடவை என்று நாரத மகாருஷியருளினார்.

ஆக்கினேய புராணத்தில துலாகாவேரி மகத்துவத்தில்
பதினோறாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## 12-வது அத்தியாயம்.

### மண்டுகோபாக்கியானம்.

பின்னும் நாரதர் தருமபுத்திரரை நோக்கி, "ஓ தரும ராஜா! யான் இப்பொழுது கார்த்திகை மாஸத்தில் ஸ்நாநம் செய்பவர் அடையும் பலனை சொல்லுகிறேன்; ஸாவதான மாய் கேட்பாய். யாவனொருவன் கார்த்திகை மாஸத்தில் நெல்லி மரத்தின் நிழலில் ஸ்நாநம் செய்கின்றானோ அவன் (முன்னர் கார்த்திகை மாஸத்தில் நெல்லிமரத்தின் நிழலின் கீழ் காவேரி ஜலத்தில் பாம்பின் வாயில் அகப்பட்ட தவளை ஜன்மாந்தர ஞானத்தோடு அப்பாபபுடன் முக்தியடைந்தது போல) நல்லுலகமடைவான்" என, தருமபுத்திரரானவர், "சுவாமி! அது எவ்வாறு முக்திபெற்றன என்று கேட்க, நாரதமுனிவர் உரைப்பாராயினர்.

### கார்த்திகைமாஸ ஸ்நாந விசேஷம்.

ராஜன், முன்னர் விராட தேஸத்தில் வாஸ்துஹோம மெனும் அக்கிரஹாரத்தில் வேத ஸாஸ்திர புராணங்களை நன்குணர்ந்தவர்களும், அதிதர்மிஷ்டர்களுமான அநேகம் பிராம்மணோத்தமர்கள் இருந்தார்கள். அவர்கள் எல்லோ ரும் கார்த்திகை மாஸத்தில் உஷக் காலத்தில் எழுந்து அங்கிருந்த குளத்தில் ஸ்நாநம் செய்து, அக்கரையிலிருந்த நெல்லிமரத்தின் கீழிருந்து ஜபம் செய்து, கார்த்திகைமாஸ புராணத்தைச் சிரவணஞ் செய்துகொண்டிருந்தார்கள். அக்காலையில், ஒரு தவளையானது, பசியால் வருந்திய ஒரு காக்கையால் துரத்தப்பட்டு, அதுபயந்து அங்கு ஜபம்செய்

துகொண்டிருக்த ஓர்பிராம்மணன் காலில் ஸ்பரிசமடைந்து, மெல்ல மெல்ல ஜலத்திற்குள் பிரவேசித்தது. அந்த ஜலத்தில் இருந்த ஒரு நீர்ப்பாம்பானது அத்தவளையைப் பிடித்து விழுங்க முயற்சி செய்யவே, தவளையானது மிகவும் களைப்பும் துக்கமுமுற்று, அப்பாம்பை நோக்கியுரைப்பதாவது:- "அடா மூடா! நீ யேன் என்னை வதைக்கின்றாய்? ஓ! நீசஜன்மமுடைய சர்ப்பமே, என்னை ஏன் வருத்துகின்றாய்? இதரர்களைப் பிடிக்கிறதைப் பார்க்கிலும் ஜீவஹிம்சை வேறுண்டோ? எல்லாரிடத்தும் நன்மை பாராட்டுபவனும், நல்லவிருத்தியுடையவனும், சலனமற்ற சுபாவமுடையவனும், கிடைத்தவளவில் திருப்தியுடையவனுமான என்னை இம்சிக்கத் துணிந்தால் உன் குலம் நசிக்குமேயன்றி, விருத்தியடையாது. நாமிருவரும் பூர்வ ஜன்மத்தில் செய்த கொடிய பாவத்தால் இந்த ஹீன ஜன்மமடைந்திருக்கிறோம். அதையறியாமல் இக்காயம் நிலையுள்ளது போல் நினைத்து, நீயேன் என்னைக் கொல்லுகின்றனை?" எனக் கடிந்து சொல்லவே, அந்தப் பாம்பும் நடுநடுங்கி அத்தவளையை வாயினின்றும் உமிழ்ந்து, "மஹானுபாவனே! நான் செய்த பிழையைப் பொறுத்து, நீ நம்மிருவருடைய பூர்வ ஜன்ம வரலாற்றையுரைக்க வேண்டும்" என்று பிரார்த்திக்கவே, மண்டூகம் உரைக்கின்றது.

## மண்டூக பூர்வஜன்ம வரலாறு.

ஓ சர்ப்பமே! "மூர்க்கனையும், பரஹிம்சை செய்து களிப்பவனையும், மோசத்தன்மையுடைய உம்மையும் ஒருபோதும் நம்பக்கூடாது. நீயோ நஞ்சுள்ள பாம்பு. உன்னை நம்பேன்" என, அப்பாம்பு, "ஓ மண்டூகமே! கிருஷ்ண

ஸர்ப்பத்தையும், ஸ்திரீகள் வாக்யத்தையும், துஷ்டமூர்க்கருடைய வசனத்தையும் நம்பலாகாதென்பது உண்மை. ஆயினும், சாதுவான உன்னோடு வசனித்த விசேஷத்தால் சுத்தனாயினேன். ஆகையால், நீ என்னை நம்பிக் கூறுவாயாக. நீ தவளையின் பிறவியடைவதற்கு முன்ஜன்மத்தில் செய்த பாபம் யாது! எத்தகைய புண்ணியத்தால் பூர்வ ஞானம் பெற்றனை! எனக்கு எதனால் இப் பாம்பு வடிவம் வந்தது. யான் முன் செய்த தீவினை என்ன? நான் கொடிய குரூரனானதற்கும் நீ பரமசாதுவானதற்கும் காரணம் என்ன? இவ் விவரத்தைச் சாங்கோபாங்கமாகக் கூற வேண்டும்" என, சற்று விசுவாசத்துடன் தவளையானது பாம்பை நோக்கிக் கூறத் தொடங்கிற்று.

"சர்ப்பமே, யான் பூர்வ ஜன்மத்தில் காஞ்சிமாநகரில் மகா பண்டிதனாயும், வேதசாஸ்திரங்களில் நிபுணனாயும், ஸ்ருதி ஸ்மிருதிகளை மாணவர்களுக்கு உபதேசிப்பவனாயும், உபந்நியாஸ காலத்தில் சுரோதாக்களிடத்தில் மிக கோபத்துடன் திக்காரம் பண்ணுபவனாயும், அவ்யகவ்யாதிகள் செய்வதில் மிகவும் தெரிந்தவனாயுமிருந்தேன். திரவிய ஆசையால் உலோபியாயிருந்ததேயன்றி, பிராம்மணர்களுக்குச் சேரவேண்டிய தனங்களையும் அபகரித்து துராசாரதுரந்தரனாய், சதா ஸ்திரீலோலனாய், வித்தியாகர்வமுடையவனாய், அசத்வியாபாரமுள்ளவனுமாய், பிராம்மண வமிஸத்தில் பிறந்திருந்தேன். ஒருக்கால் அவ்வூரார் எல்லோரும் சேர்ந்து என்னை மாக (மாசி) மகாத்மியம் வாசிக்கும்படி மிகவும வேண்டினார்கள். யானும் அவ்வாறே படித்து முடித்து, அதற்காக அவர்கள் எனக்கு வெகுமதியாக

அநேக விலையுயர்ந்த வஸ்துக்களைக்கொடுக்க, யான் எனது மனைவிமக்களுடன் அநுபவித்தேனே தவிர யாருக்கும் ஒரு தம்படியும் கொடுக்கவில்லை. எனக்குப் பரிசாகக் கிடைத்த பட்டுப்புடவையைப் பாரியாளுக்கும், மோதிரத்தைப் புத்திரனுக்கும், மற்றப்புடவைகள் அத்தைமார்களுக்கும், வஸ்திரங்களை மாமனுக்கும், குண்டலங்களை மைத்துனனுக்கும், மற்றும் வஸ்திர முதலியவைகள் புத்திரிக்கும் கொடுத்து, அவர்கள் களித்திருக்க, அதனைக்கண்டு யான் பெருங்களிப்படைந்து மகா செருக்குடனிருந்தேன். உடுக்கத் துணியில்லாத ஒருவன் என்னிடம் வந்து வஸ்திரம் வேண்டும் என்று கேட்ட காலத்தில் கொடாது இல்லையென்று துரத்திவிட்டவன் நான்.

இங்ஙனம் நான் மகாபரிசுத்தன்போல் மேலுக்கு வேஷம் போட்டு பிறர் பொருள்களை ஏமாற்றிப் பிடுங்கி குடும்ப சம்ரக்ஷணை செய்த யான், அப்பொழுது பெரும் வியாதியினால் கஷ்டப்படுங்காலத்தில், எனது மக்கள் என்னருகில் உட்கார்ந்து என்னை நோக்கி, "தந்தையே! நீர் செவ்வையாயிருக்குங்காலத்தில் பக்தி சிரத்தையுடன் புராண படனம் முதலியன செய்யாது, ஆஷாடபூதிவேஷம் போட்டு தனங்களைச் சம்பாதித்து எங்களைக் காப்பாற்றினீர். அதனால் யாது பயன்? யோசிக்கையில் யாம் யார்? நீர் யார்? பகைவர்தான் யார்? எவர் பந்துக்கள்? நீ சம்பாதித்த பொருள்களெல்லாம் உன்னுடன்கூட வருமா? நீ செய்த நல்வினை தீவினையன்றோ உம்மை அணுகும். இப்போது நீ படித்துள்ள புண்ணிய புராணங்களின் ஒரு சுலோகமாவது சொல்லும். நீ சேகரித்த திர

வியங்கள் மிதமிஞ்சியிருக்கின்றமையால், அதில் கிஞ்சித்து எடுத்து ஏழைகளுக்குக் கொடுப்பீராக. இப்போது நீ துன்பப்பட்டு ஆவிபிரியும் காலத்தில் நாங்கள் உதவமாட்டோம். இனியாகிலும் குடும்ப ஆசாபாசத்தையொழித்து, ஸ்ரீமந் நாராயணனை பஜித்து வைகுண்டத்தையடைய வழி தேடும்" என்றார்கள். மற்றொருபக்கம் மகாபதிவிரதையான என் மனைவியோ கையில் ஆயிரம் பொன்னை வைத்துக் கொண்டு என்னை நோக்கி, "ஓ பிராணவல்லபா! இதோ நீர் சம்பாதித்த திரவியத்தை உமது இஷ்டப்படி ஏழைகளுக்குத் தானம் செய்யும். தருமம் தலைகாக்கும். எங்கள் பேரில் உள்ள மோஹத்தைவிட்டு கடவுளைப் பஜியும். நீர் வைகுண்ட பதவி அடைய கோதானம் சாளக்கிராமதானம் பூதானம் கிரஹதானம் செய்யும். ஏனெனில்

अर्थागृहेनिवर्तन्ते श्मशाने मित्रबान्धवाः ।
सुकृतं दुष्कृतंचैव गच्छन्तमनुगच्छति ॥

அர்த்தா[2]க்[3]ருஹேநிவர்தந்தே ஸ்மஸானேமித்ர பா[3]ந்த[4]வா:।
சுக்ருதம் து[3]ஷ்க்ருதம்சைவ க[3]ச்ச[2]ந்த மனுக[3]ச்ச[2]தி ॥

நீ. சா. சு. 74.

அதாவது, தர்மத்தைச் செய்யாமல் ஒளித்துவைத்த பணம், லோகாந்தரம் போகும்பொழுது கிருஹத்தில் நின்றுவிடும். மித்திர பந்துக்கள் ஸ்மஸான (ம்வரை வந்து) த்தில் நின்றுவிடுவார்கள். புண்ணிய பாபங்கள் இரண்டுமே பின்தொடரும். ஆகையால் நாம் நன்றாயிருக்கும்போதே தான தருமங்களைச் செய்திருந்தால் தேகபாதை உண்டாயிருக்காது. எமனும் நம்மிடம் வர அஞ்சுவான். இப்

போது எமபடர்களோ காக்கைகளைப்போல உம் பிராணனைக்கொண்டுபோக வட்டமிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களோ கொடியவர்கள். நரகங்களோ அனந்த பேதமாய் நெருப்பு போல சுவாலித்துக்கொண்டிருக்கின்றன. புத்திரமித்திர பந்துக்களோ முன் சொன்ன மயானக்கரை வந்து பிரிந்துவிடுவார்கள். நானோ வாயிற்கடையில் நிற்பேன். ஆகையால், இனியேனும் தருமத்தைச் செய்யும். தேகமும் உறுப்புகளும் திடகாத்திரமாயிருக்கும்பொழுதே சத்கதிக்கு ஹேதுவான சத்காரியத்தைச் செய்யும்" என்று பல நற்போதனைகளைப் புகட்டினள். யானோ அவர்கள் சொல்லுக்குச் செவிகொடாமல், "ஐயோ! நான் அநியாயமாய் என் பெண்டுபிள்ளைகளையிழந்து போகப் போகிறேனே! இனி அவர்களுக்குத் துணை ஒருவருமில்லையே! அவர்கள் எவ்வாறு பிழைப்பார்கள். இப் பொருள்களையெல்லாம் யார் காப்பாற்றுவர்! இவைகள் எவ்வாறாகுமோ! என்று, நான் போகும் வழியை சற்றும் யோசியாது பலவாறு துக்கமடைந்தவளாய் பிராணனை விட்டேன். உடனே எமபடர்கள் வந்து என்னைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய், வெட்டு, குத்து, கொல்லு என்று பலவித சித்திரவதை செய்து பலவித நரகங்களில் தள்ளினார்கள். நான் ஏழு மன்வந்தரகாலம் நரகானுபவம் அனுபவித்து பல புழுவாய் ஜன்மமெடுத்தும், நூறு ஜன்மம் காக்கையாயும், பத்து ஜன்மம் பன்றியாயும், ஐந்து ஜன்மம் பருந்தாகவும், கழுகாகவும், ஏழு ஜன்மம் குள்ளநரியாகவும், நாலு ஜன்மம் தவளையாயும் ஜனித்தேன், இதுதான் நான்காவது தவளை ஜன்மம். இப்பொழுது கார்த்திகை மாஸத்தில் இந்த நெல்லி மரத்தின் நிழலில் படனம் செய்யும் பிராம்மணர்

பாதஸ்பர்ஸமடைந்து ஜலத்தில் மூழ்கினதினால் எனது பாவங்கள் விலகி பூர்வஞானமுண்டாயிற்று. இனி நான் சுவர்க்க சுகம் பெற்று விஷ்ணு பக்தனாய் பூலோகத்தில் ஜனித்து பிறகு வைகுண்டமடையப் போகின்றேன்.

## சர்ப்பத்தின் பூர்வஜன்மம்.

ஏ, ஸர்ப்பமே! நீயோ காஞ்சிபுரத்தில் ஓர் கிருபணனை வைசியன். நீ கார்த்திகை மாஸத்தில் பாலாற்றில் ஸ்நாநஞ் செய்து என்னிடம் புராண ஶ்ரவணம் பண்ணிக் கடைசியில் எனக்குத் தக்ஷிணை கொடாமல் போய்விட்டனை. அதனால் நீ அநேக நீசஜன்மங்கள் எடுத்துக் கடைசியில் ஒரு வேடனாகப்பிறந்து காட்டில் வேட்டையாடி திரியுங்கால் ஓர் யானையால் துரத்தப்பட்டு சோமவாரம் இரவு நதிக்கரையிலிருந்த நெல்லி மரத்தின் அருகே இருக்கும் ஒரு சிவாலயத்தில் வெறுப்புடன் விழுந்து பிராணனை விட்டனை. அந்த புண்ய வசத்தால் நீ சிவ சாயுஜ்யத்தை அடையப்போகின்றனை. இப்போது உன் வாயினின்று விடுபட்டு குற்றுயிராயிருக்கும் எனக்கு மரண வேதனை அதிகமாயிருக்கிறது. இனி நீ ஒரு பொழுதும் பரஹிம்ஸை செய்யாதே, என்று சொல்லி தவளை தன் பிராணனை விட்டு, வானத்தில் ஓர் திவ்விய புருடனாய், விமானமேறி சுவர்க்கலோகம் சென்றது என்று நாரதர் அருளிச் செய்தார்.

ஆக்கினேய புராணத்தில் காவேரி மகத்துவத்தில் பனிரெண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

---

# 13-வது அத்தியாயம்.

## சோமவார விரத மகிமை.

தருமராஜாவானவர் நாரதர் உரைத்த மண்டூக உபாக்கியானத்தைக்கேட்டு ஆனந்தபரவசனாய், மறுபடியும் நாரதரை நோக்கி, "ஸ்வாமி! எல்லா மாதங்களிலும் துலா மாதம் எங்ஙனம் சிறந்ததோ? அங்ஙனமே எல்லா வாரங்களிலும் சோமவாரம் சிறந்தது. அதிலும் கார்த்திகை மாதத்திய சோமவாரம் சாலச் சிறந்தது. அவ்வாறு சோமவார விரதத்தை அனுஷ்டித்து நற்கதியடைந்தவரில் ஒருவருடைய திருஷ்டாந்தம் அடியேனுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கவே, நாரதரும் சொல்லத் தொடங்கினர்.

"கேளும் தருமநந்தன! மாதங்களில் கார்த்திகையும், வாரங்களில் இந்துவாரமும், உத்தமமானது. கார்த்திகை மாதம் முப்பது நாளும் பிதிர் தினங்களுக்குச் சமானமாகும். அந்நாளில் விஷ்ணுவுக்கு தீபாராதனை செய்தவனுடைய பிதிர்கள் நரக வாசிகளாயினும் சுவர்க்கமடைவார்கள். சோமவாரத்தில் சிவ சந்நிதானத்தில் நெய் தீபம் ஏற்றினால் அக்குலம் மேன்மையடையும். கார்த்திகை மாத சோமவாரத்தில் உமாதேவி சகிதம் சிவ பூஜார்ச்சனை செய்து அடிபணிந்து

नमस्ते देवदेवाय नमस्ते भक्तवत्सल ।
नमस्ते जगदीशाय नम आनन्दरूपिणे ॥

நமஸ்தே தே$^3$வதே$^3$வாய நமஸ்தே ப$^4$க்தவத்ஸல ।
நமஸ்தே ஜக$^3$தீஸாய நம ஆனந்தரூபிணே ॥

पाहिमां परमेशान पाहिमां भक्तवत्सल ।
पाहिमां सकलाराध्य पाहिमां पार्वतीप्रिय ॥

பாஹிமாம் பரமேஸான பாஹிமாம் ப⁴க்தவத்ஸல।
பாஹிமாம் ஸகலாராத்⁴ய பாஹிமாம் பார்வதீப்ரிய ॥

என்று இவ்விரு சுலோகங்களைச் சொல்லி உமா மஹேஸ்வரரை நமஸ்காரம் செய்து பிரார்த்தனை செய்பவன் பிரம்மஹத்தியாதி தோஷங்கள் நிவர்த்தியாகி க்ஷணமே முக்தனாகிறான்.

கிருதயுகத்தில் கார்த்திகை மாத சுக்லநவமியில் இந்திரன் ஜனித்தான். (அதனால் அவன் சகல சம்பத்தும் பெற்றிருந்தான்) சர்வகாம சமிர்த்தியடைய விரும்பினவன் கார்த்திகை சோமவார திரயோதசி அல்லது நவமியில் சிவபூஜை செய்யில் அக்ஷய பலனைப் பெறுவன். எட்டு யாமங்களிலும் ருத்திராபிஷேகம் செய்தால் அவன் ஈஸ்வரனே யாவான். கார்த்திகை சோமவாரத்தில் உபவாஸமிருந்து பிரதோஷ காலத்தில் அபிஷேக முதலியவற்றைச் செய்து மறுநாள் பாரணம் செய்பவன், சாக்ஷாத் பரமேஸ்வரனேயாவான். நிஷ்காமனாய் அர்ச்சித்தால் சிவனிடம் ஐக்யமடையலாம். காம்யத்தால் சுவர்க்கமடையலாம். பாபிகளாயினும் கார்த்திகை சோமவாரத்தில் சாயங்காலம் வரையில் உபவாஸமிருந்து பூஜித்து இரவிலுண்பவன் பரிசுத்தனாவான். கார்த்திகை மாதத்தில் நெல்லிமர நிழலில் சிவ விஷ்ணுவைப் பூஜித்தவன், சொலற்கரிய பலனைப் பெறுவான். தவிர சோமவாரத்தில் விஸ்வேசனுக்கு பாலாலும் நீராலும் அர்க்கியம் கொடுக்கவேண்டும். அம்பிகைக்கும் ஸ்கந்தமூர்த்திக்கும் பக்தியுடன் அர்க்கியம்

சமர்ப்பிக்கவேண்டும். கேளும் தருமபூபதி, இதை திட
மாகச் சிந்திக்கக்கடவை, என்று அதன் மகிமையையும்
பலனையும் விஸ்தாரமாயுரைத்து, அங்ஙனம் புரிந்து நற்கதி
யுற்றவரின் கதையை சொல்ல ஆரம்பித்தார் நாரதப்
பிரம்மம்.

"ராஜன்! கோதாவரி நதி தீரத்தில் சகல சாஸ்த்திர
சம்பன்னனான விந்தன் என்னும் பிராம்மணன் இருந்
தனன். அவன் பொறாமை குணத்தினால் பிறர் பொருளைக்
கவர்வதிலேயே ஆஸக்தியுடையவனாய் மேனியெங்கும்
விபூதி பூசிக்கொண்டும், ருத்ராக்ஷ தாரணம் செய்து
கொண்டும், மகா சிவபக்த சிரோன்மணிபோல் பொய்
வேஷம் புனைந்து சுமார் ஐயாயிரம் பொன் வரை சம்பா
தித்து தன் குடும்பத்தை போஷித்து வந்தனன். ஒரு நாள்
அமாவாஸையன்று திலதர்ப்பணாதிகள் யாவும் செய்யாமல்
மத்தியான காலத்தில் தனது பிள்ளை பெண்சாதி பேரன்
மார்களுடன் உட்கார்ந்து சாப்பிடப்போகையில்,
ஓர் ஏழையான அதிதிப் பிராம்மணன் பசியாலும் நோயா
லும் வருந்தி அவனிடத்தில் அன்னம் யாசித்தான். விந்த
னென்பவனோ கடுஞ்சினமடைந்து அவ் வதிதியை நோக்கி,
"அடா மூடா! நீ தர்ப்பணம் செய்யாமல் இங்கு வந்து
அன்னம் கேட்கலாமா? என, அதிதி, "ஐயா! ஆபத்
தக்குப் பாவமில்லை. எனக்கோ பசி வயிற்றைக் குடை
கிறது. இந்த க்ஷணம் கொஞ்சம் அன்னம் படைக்காவிடில்
எனதுயிர் போய்விடும் போலிருக்கிறது. ஆதலின் ஓர்
கவள மன்னங்கொடுத்து எளியவனுயிரைக் காத்தல்
வேண்டும்" என்று கண்ணீரும் கம்பலையுமாக கெஞ்சிக்

கேட்டும், அந்த விந்தன் கிஞ்சித்தேனும் கருணையின்றி, "அன்னமில்லை போ! போ!" என்று சொல்லித் தாத்தனு. அந்த ஏழைப் பிராம்மணன் மிகவும் வருத்தமடைந்து மெல்ல மெல்ல மற்றொரு வீடு சென்றான். விந்தனோ சனி தொலைந்தது என்று சொல்லி தனது பந்துவர்க்கங்களுடன் உட்கார்ந்து சுகமாய் சாப்பிட்டான்.

அப்பொழுது அவனுடைய பிதிர்த்தேவதைகள், அவன் சிரார்த்தம் செய்யாமல் புஜித்ததினாலும், பசிக்கு அன்னம் வேண்டி வந்த அதிதியை துரத்தினதினாலும், மிகவும் சினமடைந்து, "இவன் சீக்கிரத்தில் அழிந்து போகக்கடவன்" என்று சாபம் கொடுத்துச் சென்றனர். அன்றிரவே, திருடர்கள் வந்து அந்த விந்தனுடைய தனங்களை கொள்ளையடித்துக்கொண்டு வீட்டையும் நெருப்பு வைத்துவிட்டுப் போயினர். அச்சமயம் விந்தன் வெளியே போயிருந்தமையால் அவன் ஒருவன் மட்டும் உயிர் தப்பினான். மற்ற பெண்சாதி பிள்ளைகள் எல்லோரும் அக்கினி பகவானுக்கு இரையானார்கள்.

பின்னர், விந்தனோ "ஐயோ"வென்று அலறிப் புலம்பி அவ்விருந்து சென்று ஐந்து யோசனை தூரத்திற்கப்பாலிருந்த பரமேஸ்வரம் என்ற சிவாலயத்தை யடைந்து, மனதில் மிக்க வருத்தமிருப்பினும் அதை வெளிக்குக் காட்டாமல் மேலுக்கு சிவபக்தனைப்போல் பாவனைக்காட்டி எவ்விதம் திரவியம் சம்பாதிக்கலாம்? என்று சிந்தித்துக்கொண்டிருக்கையில் ஒரு நாள் கார்த்திகை மாஸத்தில் சோமவாரம் சம்பவித்தது. அப்பொழுது அவன் விபூதி ருத்திராக்ஷமணிந்து சிவத்தியானம் செய்

யவன்போல் பாசாங்கு பண்ணி பொருளேக்கத்தினால் இரவு முழுதும் நித்திரையின்றி, மறுநாள் அருணோதய காலத்தில் எல்லோரும் ஸ்நாநஞ் செய்யப்போன தருணம் பார்த்து ஆலயத்தினுட்சென்று, ஒருவருக்கும் தெரியாமல் அம்பிகையின் கர்ணாபரணமும் ஒட்டியாணமும் அபகரித்துக்கொண்டு ஓட்டம் பிடித்தனன். அது சமயம் அம்பிகைக்கு பூஜை செய்வதற்கு வந்த அர்ச்சகன் அம்பிகையின் பூஷணங்களை காணமற்றியங்கி வெளியே ஓடிவந்து பார்க்கையில், அது சமயம் அங்கே ஓடுகின்ற விந்தனைக்கண்டு பதட்டத்துடன் வெகு வேகமாய்ச்சென்று அவனைப் பிடித்துக்கொண்டு, "அடா! நீதானோ திருடன்" என்று சொல்லி கையிலிருந்த ஆயுதத்தினால் ஓரடி அடித்தனன். விந்தனும் அர்ச்சகனைத் தன் கையிலிருந்த தடியால் தாக்கினான். உடனே இருவரும் மாண்டார்கள். அப்பொழுது யமபடர்கள் மகா பாபியான விந்தனை நரகத்துக்குக் கொண்டு போகுமாறு அநேக ஆயுதங்களுடன் வர, அப்போது சிவகணங்கள் வந்து யமபடர்களைத் தாக்கியடித்து, "யமகிங்கரர்களே! அவ்வந்தணனை விடும் விடும்" என்று விடுவித்தார்கள். பின்னர் இரு திறத்தாருக்கும் தொந்த யுத்தம் நடந்து யமகிங்கரர்கள் சிவகணங்களால் தோல்வியுற்று தங்கள் எஜமானனிடம் போய் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்ல, யமதர்மராஜனும் அவர்களை சமாதானப் படுத்திச் சித்திரகுப்தனோடு ஆலோசித்து, தனது கிங்கரர்களை நோக்கி, "கிங்கரர்களே! யான் சற்றும் யோசியாது அவ்விப்பிரனை கொண்டுவர உங்களுக்குக் கட்டளையிட்டேன்.

உங்களுக்கேயன்றி எனக்கும் சிவபாதம் சம்பவித்தது. எஜமானனிமித்தம் சேவகன் கஷ்டமனுபவிக்கினும் புண்ணியம் லபிக்கும் எனவே, யமகிங்கரர்கள் "சுவாமீ! தரும தத்துவங்கள் எத்தகையது? அவற்றை எங்களுக்கு உரைத்தருளவேண்டும்" என்று கேட்க, யமனும் அவர்களை நோக்கி, "தூதுவர்களே! கேளுங்கள். ஸரீராந்தம் ஹரிஸ்மரணை செய்வதால் பாவத்தைப் போக்கும். சாளக்கிராமதானம், பரோபகாரம், சாதுக்களை சேவித்தல், லோபத்தை வர்ஜித்தல், விஷ்ணு கதாஸ்ரவணம், பூஜை ஆகிய இவை யாவும் புண்ணியங்களாம். நாஸ்திகரும் சூது வஞ்சனையுடன் கூடியவர்களும், பிராணி இம்சை செய்பவர்களும், புத்திர மித்திரகளத்திராதிகளிடம் அதிக மோகங்கொண்டிருப்பவர்களே என்னுலக மடைவார்கள். தருமசீலரும் தயாளுவும் சாளக்கிராமம் சிவலிங்கம் தானம் செய்பவரும், எற்றூர்க்கு ஈவாரும், நித்யகர்மானுஷ்டானங்களை தவறாது ஆசரிக்கிறவரும், என்னையும் என் பட்டணத்தையும் ஒருபோதும் காணமாட்டார்கள். தவிர சுராபானராயினும், சோரராயினும், நாஸ்திகராயினும், துர்ச்சனராயினும், பிராண ஹிம்சை தாங்கமுடியாமல் ஹரியை ஸ்மரித்தால் அவர்கள் ஹரிபதவியை அடைவார்கள். சம்போ! கிரீஸா! ஹரா! சங்கரா! பார்வதீஸா! சந்திரஸேகரா! மகேஸா! ருஷபத்துவஜாவென்று துதிகளைச் செய்து சோமவார விரதமிருந்து இரவில் தூக்கமில்லாது ஜாக்கிரதையோடு இரவு கழிப்பவர்கள் சிவபதவியடைவார்கள். இந்த விந்தனைவன் மகா பாபியாயினும் ஒரு நாள் கார்த்திகை மாஸ திங்களன்று மேலுக்காகிலும் சிவதரிஸனம் செய்து இராமுழுதும் நித்திரையின்றி யிருந்த

மையால் சோமவார விரதம் அனுஷ்டித்தவர்கள் அடையும் பலனையடைந்து, சிவ சாயுஜ்ய பதவியடைந்தனன். தவிர இவன் பூர்வம் இந்த இந்து வாரத்தில் பிறர் என்னை தாதா என்று கூறும்படி இச்சித்து, ஒரு புராணிகனுக்கு பன்னிரெண்டு வராகனுடன் ஒரு சிவநாபமும் பாணலிங்கமும் தானம் செய்தான். அப் புண்ணிய வசத்தால் தான் இம்மகத்தான பதவியை அடைந்தனன். ஆகையால், தூதர்களே! இனிமேல் நீங்கள் சோமவார விரதத்தை அனுஷ்டிப்பவர் பக்கத்திலும், சிவபக்தி, விஷ்ணுபக்தி செய்பவர்களிடத்திலும் அணுகவேண்டாம்'' என்றுரைத்ததுமன்றி, கிங்கரர்களுடன் யமனும், சிவபிரானிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். ஆதலின் ஓ! தருமநந்தனா கேட்டீரா சோமவாரத்தின் பலன் என்று நாரதர் அருளிச் செய்தார்.

ஆக்கினேய புராணத்தில் காவேரி மகத்துவத்தில்
பதிமூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.



## 14-வது அத்தியாயம்.

## ஸ்நாந விதி.

முன்னர் அகஸ்தியர் சொன்னதாவது — ராஜன்! இப்பொழுது நான் உனக்கு துலா ஸ்நாந விதியைச் சொல்லுகிறேன், சாவதானமாகக் கேட்பாய்.

அரசனே! சாதாரணமாய் நியமமின்றி துலா ஸ்நாநம் செய்தாலும் பாபங்களைப் போக்கும். நியமநிஷ்டையுடன் துலா ஸ்நாநம் செய்தால் முக்தியுண்டாகும். அவ்வாறு விதி முறையுடன் ஸ்நாநஞ் செய்ய உத்தேசித்திருப்பவன் துலா ஸங்கிராந்திக்கு முதல் நாளே பிராம்மண போஜனம் செய்வித்து, தாம்பூல தக்ஷிணை கொடுத்து, தான் ஆரம்பிக்கப்போகின்ற துலா ஸ்நாந விரதமானது நிர்விக்கினமாய் முடிய வேண்டும் என்று அவர்களைப் பிரார்த்தித்து, அவர்களின் அனுமதி பெற்று, ஒருவேளை போஜனம் உண்டு, மறுநாள் அதிகாலையில் எழுந்து வாய் கொப்பளித்துக் கொண்டு, ஹரியை ஸ்மரித்து, கிராமத்தின் தென்மேற்கு மூலையில் வெகுதூரம் சென்று வஸ்திரத்தினால் தலையை போர்த்திக்கொண்டும், வாயை கையால் மூடிக்கொண்டும், பூமியில் செத்தைகளைப் பரப்பிக்கொண்டும், அவற்றின்மேல் மலஜலவிஸர்ஜனம் செய்யவேண்டும். நடபாதையிலும் பிராம்மண ஸந்நிதியிலும் நதியிலும் வயல்வரப்புகளிலும் சுத்தமானவிடங்களிலும் மலஜலவிஸர்ஜனம் செய்யக் கூடாது. மலவிஸர்ஜனம் செய்தபின், ஆண்குறியை இடது கையால் பிடித்துக்கொண்டு சென்று புற்றுமண் எலிவளை

மண் தவிர, வேறு மணல்களில் ஏதேனும் கொண்டு ஒரு சாண் ஆழமுள்ள ஜலத்தின் அருகேயிருந்து குதத்துக்கு பதினாறு தரமும், இடது கைக்கு பத்து தரமும், வலது கைக்கு ஏழு தரமும், இரண்டு கால்களுக்கும் முறையே வவ்வேழு தரமும், மண்ணால் கழுவிக்கொள்ளவேண்டும். ஜலஸ்பரிஸம் மாத்திரம் செய்தால், அப்பொழுது ஆண் குறிக்கு ஒரு தரமும் கைகால்களுக்கு மூன்று தரமும் பிரக்ஷாளனம் செய்துகொள்ள வேண்டும். அப்படிக் கொள்ள, மண்ணும் நெல்லிக்காய் அளவே இருக்க வேண்டும். இங்ஙனம் சுத்தி செய்துகொண்ட பின் அந்த இடத்தையும் சுத்தி செய்யவேண்டும்; அன்றேல், தானும் அஸ்பிரிசியாவதுமன்றித் தமது பிதிர்க்களையும் அங்ஙனம் செய்தவனாகிறான். இந்த ஸௌசவிதி கிரஹஸ்தனுக்கு ஏற்பட்டது.

பிரம்மச்சாரிகளுக்கு இதுபோல் இரண்டு மடங்கு. வானப்பிரஸ்தருக்கு மூன்று மடங்கு. சந்நியாஸிகளுக்கு நான்கு மடங்கு. ஸ்திரீகளுக்கும், ஸூத்திரர்களுக்கும் ஸௌசம் இவ்வளவு என்று கணக்கில்லை. எல்லோருக்கும் மனச்சுத்திதான் விசேஷமானது.

இவ்வாறு ஸௌசமான பின் மலவிஸர்ஜனமானால் பன்னிரண்டு முறையும், மூத்திர விஸர்ஜனமானால் ஆறு முறையும், வாய் கொப்பளிக்கவேண்டும். பின்னர் முழங் கை வரையில் நன்றாய் அலம்பிக்கொண்டு ஆசமனம் செய்துகொள்ள வேண்டும் அது எப்படியெனில், கிழக்கு முகமாகத் திரும்பியிருந்துகொண்டு, தியானித்துக்கொண்டு உளுந்து முழுகும் அவ்வளவு ஜலம், அல்லது அகங்கையின்

ரேகை மறையும் அவ்வளவு ஜலத்தை கையை கோகர்ணம் போல குவித்து, தேவதீர்த்தமென்னும் கைவிரல் நுனியால் ஜலமெடுத்து, சூரியனை தியானித்து பிரம்ம தீர்த்தமென்னும் பெருவிரல் அடியால் உட்கொள்ள வேண்டும். பின்னர் தந்ததாவனம் செய்து ஸ்நாந சந்தியாவந்தனம் விதிப்பிரகாரம் செய்து தர்ப்பாஸனத்திலமர்ந்து காயத்திரீ ஜபத்தைச் செய்யவேண்டும். அதாவது, காலையில் கைகளை முகத்துக்கு நேரே வைத்துக்கொண்டும், மத்தியானத்தில் தோளுக்கு நேரே வைத்துக்கொண்டும், மாலையில் நாபிக்கு நேரே வைத்துக்கொண்டும், விரல்களின் நடுவே வெளியில்லாமல் வைத்துக்கொண்டு ஜபம் செய்ய வேண்டும். ஜபம் செய்யும் போது இத்தனை ஆவர்த்தியென எண்ணிக்கொள்ள வேண்டும். கணக்கு யின்றி ஜபம் செய்தால் நிஷ்பலமாய்விடும். அது எப்படியெனில்; கைவிரல்களின் கணுக்களை முறையே எண்ண வேண்டும். அக்ஷமாலை முதலியவைகளால் எண்ணக் கூடாது. முதலாவது பவித்திர விரலின் நடுக்கணுவிலிருந்து ஆரம்பித்து பிரதக்ஷிணமாய் ஒவ்வொரு கணுவையும் எண்ணி, ஆள்காட்டி விரலின் அடிக்கணுவரையில் எண்ணவேண்டும். நடுவிரலின் மேல் கணுபோக மற்ற இரு கணுக்களும் மேருவென்று சொல்லப்படும. அதனைக் கடக்கலாகாதாகையால் அவ்விரு கணுக்களையுமெண்ணாமல் மற்ற கணுக்கள் பத்தும் எண்ணுதல் வேண்டும். இவ்விதம் ஜபம் செய்தபின் விதிப்படி ஔபாஸனாதிகளைச் செய்து துளஸி பத்திரத்தினால் சாளக்கிராம ஸிலாசக்கர ரூபியான ஸ்ரீ ஹரியை ஆராதனை செய்யவேண்டும்.

இவ்வித நேமநிஷ்டையுடன் துலா ஸ்நாநம் செய்து, ஸ்ரீமந் நாராயணனை ஆராதிப்பவர்கள் சூரிய மண்டல வாஸியான ஸ்ரீ ஸூரியநாராயணனுடைய பாதத்தை அடைவார்கள். தவிர, காலையிலும் மாலையிலும் ஔபாஸன அக்னிஹோத்திரம் புரிபவர்கள் உத்தமமான தேவலோகத்தை அடைவார்கள். துளஸீ காஷ்டாக்கினியில் ஔபாஸனம் செய்பவர் ஸ்ரீ வைகுண்டத்தை அடைவர். ஒருவன் மரணமடைந்தக்கால் அவனை தஹனம் செய்யும்போது சிதையில ஒரு துளஸி காஷ்டம் வைத்து தஹனம் செய்தார்களேயானால் அவன் மகா பாபியாயிருந்தாலும் மோக்ஷ மார்க்கத்தை அடைவான். ஔபாஸன அக்கினி ஹோத்திராதிகள் செய்யாதவன் ஒருபொழுதும் முக்தியடையான். அவனுக்கு நாகவாஸமே தவிர வேறில்லை. முன்னம் விஸ்வாமித்திரர் தனது ஆஸ்ரமத்திற்கு அதிதியாகவந்த வஸிஷ்ட மஹா ரிஷிக்கு, தான் செய்த தபஸ்ஸின் புண்ணியத்தில் ஐந்து கோடிபாகம் அளித்தனர். வஸிஷ்டரோவெனில் தமது ஆஸ்ரமத்தைத் தேடிவந்த விஸ்வாமித்திரருக்கு தான் செய்யும் ஔபாஸனத்தில் சாயங்கால ஔபாஸன (ஒரு வேளை) புண்ணியத்தை தத்தம் செய்தார். அந்தப் புண்ணியமானது விஸ்வாமித்திரர் கொடுத்ததைவிட பல மடங்கு அதிகமாயிருந்தது என்று சொல்லி முடித்தார்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்
பதினொன்காவது அத்தியாயம் முற்றிற்று.

---

# 15-வது அத்தியாயம்.

## சந்தாபநனென்னும் பிராம்மணன் கதை.

கேளும் இராசனே! இந்த ஔபாஸன விஷயத்தைப் பற்றி. பூர்வம் தர்மத்தி தர்மலனுக்கும், எமனுக்கும் நடந்த தர்க்கத்தை எடுத்துச் சொல்லுகிறேன் கேளும். சாளக்கிராம க்ஷேத்திரத்தில் வாஸம் செய்யும் சந்தாபனன் என்னும் ஓர் அந்தணன் இருந்தான். அவன் மகா தயாளுவாகவும், பிரதிதினமும் காலை மாலை பத்தினி சமேதராய் இருந்து ஔபாஸனம் செய்து வந்தான். அவனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவன், அந்திய காலத்தில் தன் புத்திரர்களை அருகில் அழைத்து வைத்து, "ஓ புத்திரசிகாமணிகளே! நீங்களிருவரும் ஒரு நாளாகிலும் ஔபாஸனம் செய்யாமலிருக்க வேண்டாம்" என்று உபதேசித்துத் தனது பத்னி சகிதம் திவ்விய விமானமேறி சுவர்க்கலோகம் சென்றனன். அவனது புத்திரர்கள் அவர்களுக்குச் செய்ய வேண்டிய உத்தரகிரியைகளை முடித்து, பின்பு மூத்தோனான தர்மர்த்தி என்பவன் தந்தைசொல் மீருது பிரதிதினமும் ஸபத்னீ ஸகிதம் ஔபாஸனம் செய்து, வரும் அதிதிகளையும் பூஜித்து வந்தான். இளையவனோ சதா அதிதி பூஜை, கோபுர மண்டப பிராகாராதி நிர்மாணம், தானதருமம் முதலியன செய்தும், தேசயாத்திரைசென்று அநேக புண்ணிய தீர்த்தங்களில் நீராடி வேதாத்தியயனம் செய்து வந்தனன். இப்படியிருக்கையில் அவன் தகப்பனுருடைய ஸ்ரார்த்த தினம் வந்தது. அந்தச் சமயத்தில், தர்மலன் பிறந்தகத்திற்குப் போயிருந்த தனது மனைவியை

சிறமி என்று எண்ணிக் கூட்டிக்கொண்டுவாராமலும் ஔபாஸனம் செய்யாமலும் சிராத்தம் செய்தனன். ஔபாஸனமின்றி சிராத்தம் செய்தால் ராக்ஷஸர்களுக்குத் திருப்தி. இதனால் அவனுடைய பித்ரு தேவதைகள் கோபங்கொண்டு, அந்த தர்மலனை, "நீ சந்தானமற்றவனாகவும், தனமற்றவனாகவும், ஞானஹீனனாகவும் ஆகக்கடவை" என்று சபித்துப் போயினர். பின்னர், இவ்விரு சகோதரர்களின் ஆயுள் முடிவுகாலத்தில் யமதர்மராஜன் தன் தூதர்களை நோக்கி, சாளக்கிராம நகரில் வாஸம் செய்யும் தர்மர்த்தி, தர்மலன் என்பவர்களுடைய ஆயுள் இன்றோடு முடிவாகையால் அவ்விருவர்களை அழைத்துவர விமானம் அனுப்ப எத்தனிக்கவே, அங்கிருந்த சித்திரகுப்தனானவன் "சுவாமி! அவ்விருவரில் தர்மலன் அநேக தானதருமங்களைச் செய்திருப்பினும் ஔபாஸனமின்றி பித்ருஸ்ராத்தம் செய்தமையால் இவன் நரகில் செல்லக்கூடியவன்" என, யமனும் அப்படியே மூத்தவனான தர்மர்த்திக்கு விமானமும், இளையோனுக்குப் பயங்கர வேட்டைநாய்களையும் அனுப்பினன். உடனே தர்மர்த்தி விமானத்திலேறி யமனிடம் அடைந்தனன். தர்மலனோ வேட்டை நாய்களால் கடியுண்டு மிக வேதனையுடன் யமனிடம் அழைத்துப் போய் அன்னவன் கட்டளைப்படி நாகத்தில் தள்ளப்பட்டனன். இதைக்கண்ட தர்மத்தி யமனை நோக்கி, "ஸ்வாமி! எனது தம்பி மகா புண்ணியசாலியன்றோ? அவனுக்கு நரக பாதை ஏற்படக் காரணம் என்ன" என்று கேட்க, யமன் அவனை நோக்கி, "அப்பா தர்மர்த்தி! உன் தம்பி அநேக தானதருமங்களைச் செய்திருந்தபோதிலும் ஔபாஸஹீனனாய் பித்ருவுக்கு ஸிராத்தம் செய்தமையால் இக்கதிக்கா

ளானன்" என, தர்மர்த்தி, அப்படியாயின் யான் செய்த ஔபாஸனத்தின் புண்ணியத்தில் பாதி தத்தம் கொடுக்கிறேன். இவனும் என்னுடன் சுவர்க்கம் அடையட்டும்" என, யமதருமன் அது செய்வது தவறு. அன்னபானாதிகளைத் தானம் செய்யும் விஷயத்தில் பாத்திர விசாரணை தேவையில்லை. நீ செய்யும் இப் புண்ணியத்தைத் தானம் செய்யும் விஷயத்தில் சத்பாத்திரமறிந்தே செய்யவேண்டும். இல்லையேல் தானம் கொடுத்தவனுக்கும் பாபம் ஏற்படும். ஆகையால், நீ உன் தம்பிக்காக கவலைப்படாமல் இவ்விமானத்திலேறி சுவர்கம் செல். இவனோ அநேக கோடி ஸம்வத்ஸரம்வரை நரகவேதனை அனுபவிக்கக்கடவன்" என்றுரைத்து அவனை அனுப்பிவிட்டுத் தர்மலனை நரகத்தில் வீழ்த்தினன். ஆகையால் பிராம்மணனுக்கு ஔபாஸனம் முக்கியமானது. ஒருவன் இவ்வாறு அக்நிஹோத்திர ஸஹிதம் துலா ஸ்நாநமும் செய்து ஸ்நாந ஸமாப்தியில் தன் சக்திக்குத் தக்கபடி பிராம்மண போஜனம் செய்யவேண்டும் என்றார்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில் பதினைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

# 16-வது அத்தியாயம்.

## சந்தநு மஹாராஜன் விருந்தாந்தம்.

மீண்டும் நாரதர் தருமராஜனை நோக்கி, "ஓ தரும நந்தனா! பூர்வம் உன் பாட்டனை சந்தநு மகாராஜன் துலா காவேரி ஸ்நாந புண்ணியத்தினால் யோஜனகந்தி யென்பவளை மணந்து சுகித்திருந்தான்" என, யுதிஷ்டிரன், "அது எங்ஙனம்? அதனை அடியேனுக்கு உரைக்க வேண்டும்" என்று வினவ, நாரதர் சொல்லுகிறார்.

கேளும், தருமபூபதி! முன்னம் பீஷ்மர் பிதாவான சந்தநுராஜன் வேட்டைமேல் விருப்பங்கொண்டு தன் சைநியங்களுடன் புறப்பட்டு காடடைந்து, வலைபிறக்கி பறையடித்து தூறுகளை சரித்து விலங்குகளை கலைத்து வேட்டையாடி மிகவும் களைத்து, யமுனா நதிக்கரையில் வந்து சிரமப்பரிகாரஞ் செய்து வீற்றிருக்கும்போது, அது சமயம் அங்கு தோன்றிய யோஜனகந்தி என்னும் அழகிய பெண்ணைக்கண்டு, அதிக மோகங்கொண்டவனாய் அவளைப்பார்த்து, "ஓ ஆரணங்கே! நீ யார்? உன் பெயர் யாது? உனக்கு விவாஹமாயிற்றா? இல்லையேல் யான் உன்னை யடைய விரும்புகிறேன்" என, அவள், என் பெயர் யோஜனகந்தி. நான் என் தந்தையின் வார்த்தைக்குக் கட்டுப் பட்டவள். எனவே, சந்தநுராஜன் அவளை அழைத்துக் கொண்டு அவள் தகப்பனாகிய தாஸபதியிடம் சென்று அவனது மகளை வேண்ட, அச்செம்படவனாகிய தாஸபதி யும், அரசனே நீயோ ராஜகுலத்திற் பிறந்தவராயிருக்கிறீர்.

ஆகையால், என் பெண்ணை உமக்கு வதுவை செய்து வைத்தால் எனது புத்திரிக்குப் பிறக்கும் பிள்ளைக்கு மகுடம் சூட்டவேண்டும். அப்படியாயின் யான் எனது பெண்ணை உமக்கு மணமுடித்துக்கொடுப்பேன். என, இதைக் கேட்ட அரசன், மனதில் கவலையுற்றவனாய் நான் கங்கா புத்திரனுக்கு முடிசூட்டுவதை நிறுத்தி, கேவலம் இச் செம்படவன் பெண் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கா பட்டம் சூட்டுவது, இது நமது சந்திர வம்ஸத்திற்கு அழகா! என்று தன்னுள் நினைத்து, உடனே திரும்பி தன் வீடு வந்து சேர்ந்தும், அந்த யோஜனகந்தி அவன் மனக்கண் முன் ஊஞ்சலாட, அது சமயம் அதிதியாக வந்த தௌம்மியரெனும் பூஸுரருக்குக்கூட மரியாதை செய்யாது ஏக்கமடைந்தவனாய் இருக்க, இதை ஞானத்திருஷ்டியாலறிந்த தௌம்மியரும் அரசனை நோக்கி, ராஜன்! நீ அதிதியாக வந்த என்னை மரியாதை காட்டாமல், மனதில் நீ ஏக்கமுற்றிருக்கும் காரணம் அறிந்தேன். ஆகையால் நான் இவ் வபராதத்தைப் பொறுத்தேன்.

நீ ஸ்ரீரங்க க்ஷேத்திரம் சென்று, துலாகாவேரி ஸ்நானஞ்செய்து, இப்போது யான் உனக்கு உபதேசிக்கப் போகிற ஸ்ரீரங்கராஜ நாமரத்தினஸ்தவம் என்னும் ஸ்தோத்திரத்தினால் ஸ்ரீரங்கநாதனை துதித்து வருவாயேயானால், உமது மனோரதம் நிறைவேறும் என்று அந்த ஸ்தோத்திரத்தை உபதேசம் செய்து, பின்னர் அரசனால் உபசரிக்கப்பெற்று தமதிருப்பிடம் சென்றனர். உடனே அரசனும், தனது அரசை மந்திரி வசம் ஒப்புவித்து தனது பத்துகோடி பத்தினிமார்களுடனும், இரத கஜ துரக பதாதிகளுடனும், ஸ்ரீரங்க க்ஷேத்திரமடைந்து,



★ ஸ்ரீ ரங்கநாதர். ★

ஸ்ரீரங்கநாதரைக்கண்டு, தௌமியரால் உபதேசம் பெற்ற ஸ்தோத்திரத்தினால் துதிப்பானாயினான்.

பின்பு அந்த க்ஷேத்திரத்தில் அநேக மண்டபங்களை கட்டுவித்து, தனது நகராகிய ஹஸ்தினாபுரியை நோக்கி செல்லுகையில், மத்தியில் மாகிஷ்மதி என்னும் பட்டணத்தில் தங்கி, அங்கிருந்த மிலேச்சர்களோடு யுத்தம் செய்து, தனது சேனையை எதிர்த்து வந்த 32 லக்ஷம் அக்ஷோஹிணி வீரர்களையும், துலா ஸ்நான பலத்தினால் வென்று, ஜயலக்ஷ்மியுடன் தந்நகரடைந்து, மறுபடியும் அந்த யோஜனகந்தி தனக்கு எங்ஙனம் கிடைப்பாளோ என, சதா அதே கவலையுடனிருந்தனன். இதனை யுணர்ந்த அவன் புத்திரனான பீஷ்மன், உடனே தாஸபதியிடம் சென்று, ஐயா

தாஸபதி உம் பெண்ணை என் தந்தைக்கு விவாகம் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்க, அவனும் "இளவரசே! உமக்குப் பிறக்கும் பிள்ளைக்கு ராஜ்யத்தை கொடாமல், எனது மகளுக்குப் பிறக்கும் குழந்தைக்குப் பட்டம் கட்டுவிப்பதாக வாக்களித்தால், இவளை உம் தந்தைக்கு பாணிக்கிரஹணம் செய்து வைக்கிறேன்" எனவே, கங்கா புத்திரனை பீஷ்மனும் அதனைக் கேட்டு, "ஓ பரதனே! உன் கோரிக்கையின்படியே உன் பேரனுக்கே பட்டங் கட்டி வைக்கிறேன். ஒருவேளை நான் தவறி நடப்பேன் என்ற சந்தேகம் உனக்கு இருக்குமாகில், இதோ யான் தேவர்கள் முன்னிலையில் சபதம் செய்துகொள்ளுகிறேன். அதாவது: யான் எனது ஜீவியகாலபரியந்தம் விவாஹமே செய்துகொள்ளாமல் நித்திய பிரம்மச்சாரியாய் இருக்கக் கடவேன்" என்று சபதம் செய்துகொண்டான். ஆகாயத்தில் கூடியிருக்கின்ற தேவர்கள் இதைக்கேட்டு, ஆஹா! தன் பிதாவிடத்தில் இருக்கும் பக்திக்கு மெச்சி, அன்று முதல் அவனுக்கு பீஷ்மனெனப் பெயரளித்தார்கள். தவிர, அவனுடைய பித்ருபக்தி மகிமையினால் அபுத்திரவான்கள் அனுபவிக்க வேண்டிய புத் என்னும் நரகம் அவனுக்கு உண்டாகாமலிருக்கக்கடவது என்றும், மேலும் அவன் தனக்கிஷ்டமான காலத்தில் பிராணத்தியாகம் செய்யலாம் என்றும் வரமளித்துச் சென்றனர்.

பின்னர் சந்தநு அரசன், யோஜனகந்தியை மணந்து, அவளிடத்தில் சித்திராங்கன், விசித்திரவீரியன் என இரண்டு புத்திரர்களைப் பெற்றனன். ஆகையால், எவனொருவன் துலா காவேரியில் பக்தியுடன் ஸ்நானஞ் செய்கி

ருமே அவனுக்கு புத்திரலாபம் தனலாபம் முதலியன உண்டாகும். காவேரி ஸ்நாகம் செய்யாது ஹரிபூஜை செய்யின் அவன் குன்மரோயடைவன். தடாகத்தில் ஸ்நாநஞ் செய்தால், நாலுபிடி மண்ணை யெடுத்து வெளியே விட்டே ஸ்நாநஞ் செய்ய வேண்டும். விஷ்ணு பூஜை செய்ய முடியாத அசக்தன் துளஸீதளம் ஒன்றையேனும் ஸிரசில் தரிக்க வேண்டும். ஆஷாட சுக்லபக்ஷ துவாதசி ஸிராவண சுக்லபக்ஷ துவாதசியில் ஸ்ரீ ஹரிக்கு பாலபிஷேகம் செய்பவன், தரித்திரனாயினும் தனவானாவான். அமாவாசையில் பூசை செய்பவன் கயா ஸ்ரார்த்த பலனைப்பெறுவான். பூஜைக்கு வாடி வதங்கின புஷ்பங்கள் உதவா. துளஸீதளம் மாத்திரம் வாடியிருந்தாலும் அதை வர்ஜிக்கக்கூடாது. ஆகையால், ஒவ்வொருவரும் புராண சிரவணம் செய்ய வேண்டும். ஏனெனில், இதிகாசமான இராமாயண பாராயணம் ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமானது. அதன் ஒரு ஸ்லோகத்தைச் சொன்னாலும் நல்ல பலனைத்தரும். அதன் விருத்தாந்தத்தை சற்று கூறுகிறேன்.

## இராமாயண பாராயண மஹிமை.

அக்ரபூமியென்னும் கிராமத்தில் சிவமூர்த்தி என்ற விப்பிரன் வசித்து வந்தார். அவர் எந்த விதத்திலும் இழிந்தவரல்லர். அவர் குண குணங்களை இவ்வளவென்று கூறயியலாது. அன்னவரை, அவ்வூர் பிராம்மணர்கள்கூடி தினமும் ஸ்ரீ ராமாயணத்தை காலக்ஷேபம்

செய்யும்படி மன்றடி வேண்டிக்கொண்டு அநேக திரவிய பூஷண வஸ்திரங்களையும் தந்து நன்கு உபசரித்தனர். நாள் போகப் போக, அவன்மேல் அசூசை கொண்டும், ரொம்பப் பேராசைப் பிடித்தவன் என்றும், தூஷித்து விரட்டிவிட்டார்கள். அந்த சிவமூர்த்தி என்ற பிராமணனும் இக்கிராமவாசிகளுடைய கெட்ட எண்ணத்தையறிந்து குடும்பத்துடன் கிராமத்தைவிட்டு வெளியூருக்குச் சென்றனர். இங்ஙனமிருக்க, சிவமூர்த்தி என்பவரை அவமதித்த மகா தோஷத்தால் நாளுக்குநாள் ஒவ்வொருவரும் பெரும் வியாதியுற்று தாரித்திரிய தசையடைந்தவர்களாய் பரகதியடைந்து, வேதம்கியத்தில் பிராம்மணர்களாய்ப் பிறந்து, பகாசூரனுக்கு இரையானார்கள். இவர்கள் இராமாயண சிரவணம்செய்த புண்ணிய விசேஷத்தால் மறுபடியும் சூரிய வம்ஸத்தில் ஸகரர்களாகப் பிறந்து, கங்கையால் சுத்தமடைந்து, பரமபதம் சேர்ந்தார்கள்.

சிவமூர்த்தியோ, அடுத்த கிராமத்திற்குச் சென்றும் அங்கு எவராலும் அழைக்கப்படாமல் போகவே, பசிநோயால் வருந்தி வாடி சிலநாள் தரித்திர திசையால் பீடிக்கப்பட்டு காலகதியடைந்து பகாசூரனாய் ஜனித்தார். அவ்வாறு ஜனிக்கக் காரணம் யாதெனில், கிராமவிப்பிரர்கள் தன்னை அவமதித்து விரட்டிவிட, இது விஷயம் அவ்வூர் அரசனிடம் முறையிட, அவ்வரசன் அவர்களைத் தண்டித்தான். இதனால் இவன் பகாசூரனாய்ப் பிறந்து அப்பிராம்மணர்களை இரையாக்கிக்கொண்டான். பின்பு இவனும் பீமனால் உயிரிழந்து, இராமாயண பாராயண மகிமையால் பரீக்ஷித்துவாய், இனி பிறப்பான். இதுதான் ராமாயணத்தின் பிரதாபம்.

ஆகையால், ஸ்ரீ ஹரிபக்தியில் ஈடுபடுபவன் ஒருக்கா லும் நரகமடையாது வைகுண்ட பதவியே பெறுவான் என்று நாரதர் தருமபுத்திரருக்கு துலா காவேரி மகிமை யையும் ஸ்நான முறைமையும் புராணச் சிரவணம் பண் ணும் விதத்தையும் இன்னும் பல தர்மோபதேசங்களையும் உபதேசித்தார். இவ்வாறு பல விஷயங்களையும் கேட்ட றிந்த தருமபுத்திரர் ஆனந்தபாஷ்பம் ஆறுய்ப்பெருக, நார தப் பிரம்மத்தை ஸ்வர்ண புஷ்பங்களால் அர்ச்சித்து அநேக நமஸ்காரங்களைச் செய்து, அவருடைய பிரிவினை சகிக்கக்கூடாதவனாய் பயபக்தியுடன் நின்றனன். நாரத ரும் அந்த தருமருக்கு அநேக ஆறுதல்கூறி அவரை ஆசீர் வதித்துப் போகையில், திரௌபதியும் மற்ற நான்கு சகோ தார்களும் தனித்தனியே அவரை நமஸ்கரித்து, அவரிடத் தில் தர்மோபதேசம் கேட்க விரும்பினர்.

ஆக்கினேய புராணத்தில் காவேரி மகத்துவத்தில்
பதினாருவது அத்தியாயம் முற்றிற்று.

## 17-வது அத்தியாயம்.

## நாரதர் திரௌபதிக்கு மோக்ஷோபாயம் கூறுதல்.

முதலில் திரௌபதி நாரதரை வணங்கி—"சுவாமி! அடியாள் தங்கள் தரிஸன விசேஷத்தால் தன்யாளானேன். அடியாள் யாது கைங்கரியம் செய்யின் நற்கதி பெறுவேன். இது விஷயத்தை எனக்கு உபதேசித்தருள வேண்டும்" என்று பிரார்த்திக்க, அவரும், கேளாய் திரௌபதி! ஸ்திரீகள் நற்கதியடைய, புருஷர்களைப்போல் புண்ணிய க்ஷேத்திர யாத்திரை செய்தல், காயக்கிலேஸத்துடன் தவம் செய்தல் முதலிய நிர்ப்பந்தம் இல்லை. நீங்கள் செய்ய வேண்டிய தருமம் யாதெனில், பதிசிஸ்ருஷை ஒன்றுதான். தவிர, பர்த்தா ஜீவனோடிருக்கையில் எவள் உபவாசத்துடன் பற்பல விரதங்களை அனுஷ்டிக்கின்றாளோ அவள் தனது பர்த்தாவின் ஆயுளை அபகரிப்பதுமன்றித் தானும் படுநரகில் வீழ்வாள். மேலும் பிரஹ்மச்சாரிக்கு குரு சிஸ்ருஷையும், புத்திரனுக்குப் பிதுர் சிஸ்ருஷையும், ஸ்திரீகளுக்குப் பர்த்ரு சிஸ்ருஷையுமே பிரதானம். ஆகையால் நீ உன் பர்த்தாக்களுக்குக் கீழ்படிந்து அவர்கள் சாப்பிட்ட சேஷத்தை உண்டு, அவர்கள் நித்திரைக்குப்பின் நீயும் நித்திரைசெய்து, அவர்கள் உன்னை அழைத்த காலத்தில் தாமதியாது அருகில் வந்து அவர்கள் உன்னுடன் சம்பாஷித்த காலத்தில் அவர்களுக்கு தக்க விடையளித்தும், உன்மீது கோபித்த காலத்தில் எதிர் பேசாது பொறுமை வகித்து புன்சிரிப்புடன் இருக்கக்கடவை. அவர்கள்

விளையாட்டாக ஏதாவது பேசினாலும் நீ பொறுத்துக் கொள்ள வேண்டும். தவிர, "நீ, பிரதிதினமும் அஷ்டாக்ஷர ஜபம் செய்தும், மிகவும் பரிசுத்தையாய், வரும் சாதுக்களுக்கு உபசாரங்களைச் செய்துகொண்டிரு. இதில் முக்கியமானது பர்த்ரு சிஸ்ரூஷையே. இவ்வாறு செய்து வருவாயாகில் உனக்கு நல்ல பதவி கிடைப்பதில் சந்தேகமேயில்லை". இதற்கு உபமானமாக உனக்கு ஓர் கதை கூறுகிறேன் கேள்.

அதாவது, முன்னம் ஒரு எறும்பானது தன் முன் பட்ட ஒரு பெண்ணெறும்பை நோக்கி, "ஓ அழகிய பெண்ணே! இப்பொழுது நான், உன் சௌந்தரியத்தைப் பார்த்து உன்மேல் அதிக மோகங் கொண்டுளேன். நீ வேறு ஒருவனுக்கு மனைவியாயிராமல் கன்னிகையாயிருப்பாயேயாகில் எனக்குப் பாரியாளாகயிருக்க உடன்படுவாயா? என, அப் பெண் எறும்பும் அதற்கு உடன்பட்டு, அன்று முதல் அவ்விரு எறும்புகளும் வெகு அன்னியோன்யமாய் இல்லறம் நடத்தி அநேக எறும்புகளைப் பெற்று சுகமாய் இருக்குங்கால், ஓர் நாள் அந்த ஆண் எறும்பு தன் மனைவியை வீட்டில் இருக்கச் செய்து, தன் பரிவாரங்களுடன் இரை தேடப் புறப்பட்டுப் போயிற்று".

அத்தருணத்தில் வேறொரு ஆண் எறும்பு வந்து வீட்டில் தனிமையாகயிருக்கும் பெண்ணெறும்பைக் கண்டு காதலுற்று, "ஓ பெண்ணே! நீ இவ்வெறும்பு ஜன்மமாயிராமல், மானிடப் பெண் ஜன்மமாயிருந்தால், உன் அழகைக் கண்டு தேவர்களும் மயங்கிவிடுவார்கள். உனது

கூட்டத்துள் உன்னை விரும்பாதவர் யாரிருப்பர். ஒருவருமே இரார். இது உண்மை. காமமோ அனலையொத்தது. நான் அதனால் தகிக்கப்படுகிறேன். நீ எனக்கிணங்கி கலந்து இன்பம் தருவையேல், தேவவின்பமும் வெறுப்பேன். கண்ணே! தயை கூர்தல் வேண்டும். இளமனமுடையார் இளம் பெண்களென்பர். உன் மனம் வலிதாகவிருக்கிறது ஆச்சரியம்" என்றது. அதைச் செவியுற்ற அப்பெண்ணெறும்பு, "அடே பாபீ! பஞ்சமா பாதகத்தில் காமம் ஒரு கொடியது என்பது உணராயா? அக்காமத்தை தன் மனைவியிடமும் காலந்தவறி அனுபவிப்பானேல் மகா பாபம் என்று சாஸ்திரம் கூறியிருக்கிறதே? பிறமனைவியிடத்தில் நீ தனியாக வந்து இவ்வாறு அடாத வார்த்தைகளைப் பேசலாமா? பிறன் மனைவிமேல் ஆசை வைத்தவன் மறுபிறப்பில் அவன் ஆணாகப் பிறந்தும் பெண் வேடம் தரிப்பானன்றோ? அற்ப இன்பத்துக்கு ஆசைப்பட்டு பெரும் பயனைப் போக்கத் துணியலாமா?" என்று வெகு புத்திமதி கூறிற்று. அந்த ஆண் எறும்பு இவையெல்லாம் கேளாது பலாத்காரமாய்ப் புணர ஆரம்பிக்கவே, அப்பெண்ணெறும்பு, தன் பாதிவிரத்திய மகிமையால் அதனைச் சாம்பராகும்படி சபித்துவிட்டுத் தனது நாயகன் வந்தவுடன் நடந்த சங்கதிகளைத் தெரிவிக்க, அந்த ஆண் எறும்பும், "ஆ என் பிராண நாயகி! யான் உன்னைப் போன்ற உத்தமியை உலகிற் கண்டதில்லை" என்று சொல்லி அப் பெண்ணெறும்பைப் பலவாறு கொண்டாடிற்று இங்ஙனம் அவ்விரண்டு எறும்புகளும் இரகசியமாய் பேசிக்கொண்ட விஷயம், அதே இடத்தில் தன் பத்தினி சஹிதம் படுத்துக்கொண்டிருந்த கேகய தேசத்து

அரசன் தனது வரத்தின் மகிமையால் இவ்வெறும்புகள் பேசிக்கொண்டதைத் தெரிந்து, தான் சகல ஜந்துக்களின் பாஷையை அறிந்தவனாதலால், கலீர் என்று நகைத்தனன். உடனே அங்கிருந்த அரசபத்தினி அரசனை நோக்கி, பிராணபதி, "இப்பொழுது நீர் அகாரணமாய் நகைப்பதற்குக் காரணம் யாது?" என்று கேட்க, கேகய ராஜன், "யான் நகைத்ததற்குக் காரணம் உனக்குத் தெரிவித்தேனேயானால், என் தலை வெடித்து யானிறந்துவிடுவேன் என்பது நிச்சயம். ஆகையால் அதைப்பற்றி நீ கேட்க வேண்டாம்" என்றனன். அதைக் கேட்டும் அவள், பாபத்துக்கு சற்றும் அஞ்சாது, அவ்வரசனைக் கண்டவாறு ஏசி, "நீ இப்பொழுது என்னைப் பார்த்துத்தான் பரிகாசமாய் நகைத்திருக்கிறாய். இல்லையேல் சிரித்த காரணத்தை ஏன் என்னிடம் தெரிவிக்கக்கூடாது? அப்படி என்னிடம் தெரிவிப்பதினால் உன் உயிர் போனாலும் போகட்டுமே. இது விஷயம் என்னிடம் சொல்லாவிட்டால், நான் என் உயிரை மாய்த்துக்கொள்வேன்" என்று பிடிவாதம் செய்ய, கேகயனும் பரம துஷ்டையான தன் மனைவியை நோக்கி, "அடி சண்டாளி! உலகத்தில் ஸ்திரீகளுக்குப் புருஷனல்லவோ தெய்வம். அப்படிப்பட்ட புருஷனை, நீ இங்ஙனம் கடுஞ்சொற்களைப் பேசி பிடிவாதம் செய்வதினால் பாழ்நரகில் வீழ்வாய். மகா துஷ்டையான நீ உயிரோடிருப்பதிலும் சாவதே உத்தமம். ஆகையால் நீ என்னைத் துறந்தாலும் சரி, இறந்தாலும் சரி, இனி நான் உன் முகத்தைப் பாரேன்" என்று சொல்லி அவளை விலக்கிவிட்டுச் சுகமாயிருந்தனன். கேட்டாயோ திரௌபதி! உலகத்தில் ஸ்திரீகள் இப்படிப்பட்ட குரூர குணமுடையவர்களாகவே

யிருக்கிறார்கள். நீயோ மகா பதிவிரதை; உனக்கு நான் அதிகம் சொல்லத்தக்கது ஒன்றுமில்லை என்றார்.

பின்னர் நாரதர் பஞ்சவர்களை நோக்கி, நீங்கள் ஐவரும் மகா பதிவிரதா சிரோமணியான திரௌபதியிடத்தில் மூத்தவன் முதல், கிரமமாய் வருஷத்திற்கு ஒருவராக இருந்துகொண்டு உங்கள் குரு வம்சத்திற்கு யாதொரு தாழ்வும் ஏற்படாவண்ணம் வாழ்ந்திருக்கக்கடவீர்கள். உங்களில் ஒருவன் திரௌபதியோடு கூடியிருக்குங்கால் மற்றொருவன் பார்த்துவிட்டால், அவன் ஒரு வருடம் தேச யாத்திரை செல்லவேண்டும்'' என்று அருளிச்செய்தார். பாண்டவர் ஐவரும் ''சுவாமி! தேவரீர் பாதத்தாணை கட்டளைப்படியே நடக்கின்றோம்'' என்று சொல்லிப் பின்னும் அவரிடத்தில் பல தர்மோபதேசங்களையும் பெற்று அவரைச் சுவர்ணபுஷ்ப தாம்பூலம் முதலியவைகளால் அர்ச்சித்து, பிரியமில்லாத மனதுடையவர்களாய்க் கண்ணும் கண்ணீருமாய்க் கரைந்து வழியனுப்பிவிட்டு தங்களிருப்பிடம் வந்து நாரதர் உரைத்த பிரகாரம் வருஷம் ஒவ்வொருவராய்த் திரௌபதியுடன் கூடி வாழ்ந்திருந்தார்கள்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில் பதினேழாவது அத்தியாயம் முற்றிற்று.

---

★

## 18-வது அத்தியாயம்.

## அர்ஜுனனுக்கும் பிராஹ்மணனுக்கும் நடந்த சம்வாதம்.

பாண்டவர் ஐவரில் மூத்தோரான தருமர் திரௌபதியோடு சுகித்திருக்குங் காலத்தில், ஓர் பிராம்மணன் அரண்மனை வாசலில் வந்து, "ஓ அரசனே! முறையோ! முறையோ! என்னை ரக்ஷிக்கவேண்டும்" என்று ஓலமிட்டனன். அதைக் கேட்ட அர்ஜுனன் உடனே ஓடிவந்து, "ஓய் பிராம்மணோத்தமா! நீர் ஏன் இவ்வாறு முறையிடுகின்றீர்? என்ன காரணம்" என, அப் பிராம்மணன், "ஐயா! நான் இத்தனை நாள் கஷ்டப்பட்டு சம்பாதித்த தனங்களையும், மாடுகளையும் கள்வர்கள் கொள்ளையடித்துப் போய்விட்டார்கள். அரசர் நீதியுடனும் முறைப்படியும் செங்கோல் செலுத்தாவிட்டால்தான் இங்ஙனம் நடக்கும்" என, அர்ஜுனன் "ஐயா! உமது வீட்டில் களவுபோனால், அரசனை ஏன் நிந்தனை செய்கிறீர்? அது உமது தோஷத்தால் ஏன் நேரிட்டிருக்கலாகாது?" என, பிராமணன் மிக்க சினமடைந்து, ஐயா! "யான் எனக்கு நினைவு தெரிந்த காலந்தொட்டு இதுகாலபரியந்தம் யாதொரு அக்ருத்தியங்களையும் புரிந்ததில்லை. நான் பிரம்மச்சாரியாயிருக்கையில் ஸாங்கமாக வேதம் ஓதுதல், குருகுலவாஸம், பிக்ஷாசரணம் முதலான ஸத்கருமங்களைச் செய்தேன். பின்னர் பிரஸாதையான ஓர் கன்னிகையை விவாஹம் செய்து, முறைப்படி கிரஹஸ்தாஸ்ரமம்நடத்தி, அநேக புத்திர பௌத்திரர்

களையும் பெற்று, அவர்களை நல்லொழுக்கத்தில் நடக்கும்படிச் செய்தும், அவர்களோடு காவேரி, கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நாநமாடியும் ஸ்ரீரங்கநாதனைச் சதா தரிசித்தும் வந்தோம். தவிர இருபத்தையாயிரம் பொன்களை நியமமாகச் சம்பாதித்து, சாதுக்களுக்கு உபசரித்துக்கொண்டும், இங்ஙனம் யாதொரு தோஷமான காரியங்கள் செய்யாமலிருக்க, எனக்குத் தோஷம் எங்கிருந்து வந்தது என்று கோபத்தினால் கண்கள் சிவக்க, புருவங்கள் நெரியப் படபடத்துச் சொன்னான். உடனே, அர்ஜுனன் அவனைச் சமாதானப்படுத்தி, "சுவாமி! தேவரீர் சம்பாதித்த தனங்களை, சாதுக்களுக்கு விநியோகப் படுத்திக்கொண்டேவந்தால் பின்னர் அது குறைந்துவிடுமேயல்லாது விருத்தியடையாதே" என, பிராம்மணன் "சாதுக்கள் விஷயத்தில் செலவழித்த தனம் தனக்குத்தானே விருத்தியடையுமேயல்லாது குறையாது" என்று பதில் சொல்ல, அர்ஜுனன் அந்தப் பிராம்மணனது யோக்யதைக்கு மெச்சி, நல்லது, இதோ இக்நொடியில் உமது தனத்தையும் மாடுகளையும் மீட்டிக்தருகிறேன். திருடர்கள் சென்ற மார்க்கத்தைக் காட்டும் என்று சொல்லி, ஆயுதத்தை எடுக்கும்படி உள்ளே நுழைந்தான். அப்பொழுது அங்கு ஏகாந்தத்தில் ஸரஸமாய் விளையாடிக்கொண்டிருந்த தருமனையும் திரௌபதியையும் பார்த்தனன். அர்ஜுனனைக் கண்ட திரௌபதியும் லஜ்ஜையுடன் ஒழிந்துகொண்டாள். அர்ஜுனனோ தலைகுனிந்தவாறே ஆயுதத்தை எடுத்துக்கொண்டு வெளியே வந்து அந்தப் பிராம்மணன் காண்பித்த மார்க்கமாய் வனத்திற்குள் புகுந்து, அத்திருடர்களை தன் பாணத்தால் கொன்று அவர்கள் கவர்ந்து சென்ற

தனங்களையும் மாடுகளையும் மீட்டி அந்தப் பிராம்மணனிடம் அளித்து, அடியேன் செய்த பிழையைப் பொறுத்து ரக்ஷிக்க வேண்டும் என்றான். பிராம்மணனும் வெகு சந்தோஷத்துடன் அர்ஜுனனை ஆசிர்வதித்து தன்னிருப்பிடம் சென்றனன்.

பின்னர் அர்ஜுனன் தருமபுத்திரரிடம் சென்று, அவரையும் திரௌபதியையும் நமஸ்கரித்து, "அண்ணா! தமது அனுக்கிரஹத்தால் திருடர்களைச் சம்மரித்து பிராம்மணனுடைய சொத்துக்கள் யாவும் மீட்டிக்கொடுத்தேன். நாம் நாரதர் முன்னிலையில் செய்த சபதம் அசத்தியமாய்ப் போகாமலிருக்க அடியேனுக்குத் தீர்த்த யாத்திரை செய்ய விடையளிக்க வேண்டும்" எனப் பிரார்த்தித்தனன்.

தருமபூபதியும் அவனைப்பிரிய இஷ்டமில்லாதவராயும், சத்தியத்தைப் பரிபாலனம் செய்ய வேண்டுமே என்ற ஓர் அபேக்ஷையாலும் அவனுக்குச் செல்ல விடைகொடுத்தார். உடனே பல்குனன் நிராயுதபாணியாய் அநேக பிராம்மணர்களுடன் புறப்பட்டு பிரபாஸ தீர்த்தம் சென்று, அங்கு விதிப்படி ஸ்நானஞ் செய்து, பதரிகாஸ்ரமத்திற்குப் போய், அங்கு வியாஸ பகவானைக்கண்டு நமஸ்கரிக்க, அவர் செய்த ஆதரணையைப் பெற்று பின், அவ்வியாஸரை நோக்கி, "ஸ்வாமி! வஸுதேவ குமாரரான ஸ்ரீ கிருஷ்ணருக்கு சுபத்திரையென்று ஓர் அழகிய தங்கையிருப்பதாகவும், அப்பெண்ணை, பலராமர் துரியோதனனுக்குக் கொடுக்கப்போவதாகக் கேள்விப்பட்டேன். அதுமுதல் எனக்கு அந்தப் பெண் பேரில் அதிக மோகம் உண்டாயிருக்கிறது. ஆத-

-வின் நான் அப் பெண்ணை எங்ஙனமாயினும் மணம்புரிந்து கொள்ளும்படி அனுக்கிரஹித்து, ஓர் உபாயம் சொல்ல வேண்டும்" என்று பிரார்த்தித்தனன்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில் பதினெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## 19-வது அத்தியாயம்.

### வாதராயணர் அர்ஜுனனுக்குச் சுபத்திரா விவாஹம் லப்தமாகும்படி காவேரி ஸ்நாநமாடும் முறையை உபதேசித்தல்.

இவ்வாறு, அர்ஜுனன் பிரார்த்திக்கவே, வியாஸ முனிவரானவர் அன்பினோடு கூறலாயினர்.

"அப்பா அர்ஜுனா! நீ கொண்டிருக்கும் எண்ணம் மிகவும் துர்லபமானது. ஆகிலும், நீ சுபத்திரையை அடையும்படியான மார்க்கம் ஒன்று சொல்லுகிறேன் கேள். அதாவது: லக்ஷ்மீ ஹ்ருதயம் என்றொரு ஸ்தோத்திரம் உண்டு. அது ஸர்வாபீஷ்டமும் கொடுக்கக்கூடிய சக்தியிருக்கிறது. அதனை நான் உனக்கு உபதேசிக்கிறேன். (லக்ஷ்மீ ஹ்ருதய ஸ்தோத்திரம் உபதேசித்தல்) இதனை நீ பரிசுத்தனாயிருந்து பிரதிதினமும் திரிசந்தியிலும் ஜபிப்பதுடன், சுக்கிரவாரங்களில் விசேஷமாய் ஜபம் செய்துவர வேண்டும். தவிர ஸ்ரீரங்கக்ஷேத்திரம் சென்று காவேரி ஸ்நாநஞ் செய்து ஸ்ரீரங்கநாதனையும் ஆராதித்து வரவேண்டும். பின்னும் கீழ் சமுத்திரத்திற்கு இப்பால் இரண்டு

யோஜனை தூரத்தில் மாயூரமென்ற சிவக்ஷேத்திரமிருக்கிறது. அங்கேயும் துலா ஸ்நாநஞ் செய்து சிவபெருமானை சேவிக்க வேண்டும்.

பூர்வம் க்ஷத்திரியராயிருந்த விஸ்வாமித்திர ரிஷியானவர் இந்த மாயூர க்ஷேத்திரத்தில் காவேரி ஸ்நாநம் செய்த புண்ணியத்தினுல் பிராம்மண ஜன்மத்தையடைந்தார். ஆகையால் நீ சீக்கிரம் செல்லென்று அர்ஜுனனுக்கு விடையளித்தார்.

அர்ஜுனனும் வியாஸரிடம் விடைபெற்றுப் புறப்பட்டு பிரயாகைக்குச் சென்று அங்கு ஸ்நாநஞ் செய்து ஜலத்திற்குள்ளிருந்துகொண்டே அந்த லக்ஷ்மீ ஹ்ருதயத்தை அநேக ஆவிர்த்தி ஜபம் செய்யவே, அங்கு உலூபி என்ற ஓர் நாக கன்னிகை முன்தோன்ற, அவளைக் காந்தர்வ விவாஹம் புரிந்து அவளிடத்தில் அதிபலிஷ்டனுன இராவான் என்ற புத்திரனைப் பெற்றுப் பின்னர், காவேரி கூடுகிற இடமாகிய சங்கமுகத்திற்குச் சென்று ஸ்நாநஞ்செய்து, அநேக பிராம்மணர்களுக்கு பத்து லக்ஷம் பொன்னை வழங்கியபின், சுவேதவனம் (திருவெண்காடு) மார்க்கமாய் மாயூரம்வந்து, அங்கும் துலா ஸ்நாநஞ் செய்து, அங்குள்ள சிவபெருமானைச் சேவித்து, அங்கிருந்து புறப்பட்டு ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தனன்.

அங்கே, துலா காவேரி ஸ்நாநஞ் செய்து, காவேரி மகத்துவத்தை சிரவணஞ் செய்து பிரதிதினமும் பிராம்மணர்களுக்கு நூறு பொன் வழங்கி, ஸ்ரீரங்கநாதனைச் சேவித்து, அநேக மண்டபப்பிராகார கோபுரங்களைக்கட்டு

வித்து சந்திர புஷ்கரணியில் ஸ்நாநஞ் செய்து, ஷோடஸ மஹாதானங்களை ஈந்து அற்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய மூன்று மாதகாலம்வரையில் ஸ்ரீரங்கத்திலேயே இருந்துவந்தான். தைமாதத்தில் அங்கிருந்து புறப்பட்டு சேதுவுக்குச் சென்று ஸத்தியகிரியில் தங்கி, கிரீஸனை வணங்கி புஷ்கரணியில் ஸ்நாநஞ் செய்து, பின் ஹிரண்யகசிபுவின் பயத்தால் தேவர்கள் எல்லோரும் சேர்ந்து, சுகமாக வஸித்த இடமான கோஷ்டிபுரம் என்ற திவ்விய க்ஷேத்திரமடைந்து, அமிர்தபுஷ்கரணியில் ஸ்நாநஞ் செய்து ஸ்ரீ நரஸிம்ம மூர்த்தியை ஸேவித்துப் பின்பு விருஷபாத்திரி (சோலைமலை)க்குச் சென்று நூபுர கங்கையாடி அங்கே பன்னிரண்டுநாள் தங்கி பகவானை ஆராதித்து மோஹனபுரம் போய் பிரம்ம தீர்த்த ஸ்நாநஞ் செய்து முன்னம் அஸுரர்களை மயக்கி தேவர்களுக்கு அமிர்தம் படைத்தவரும், மதுவெனும் அஸுரனைக் கொன்று மலர்மகனுக்கு மறையை அளித்தவருமான ஸ்ரீ ஹரியை ஆராதித்து, பின்னர் பாண்டிய நாடாகிய மதுரையை யடைந்து, அங்கு தன்னை ஸுயம்வரமாக வரித்த சித்திராங்கதையென்னும் பெயர்கொண்ட பாண்டியன் மகளை மணந்து, அவளோடு சிறிதுகாள் வஸித்து, மறுபடியும் ஸேதுவையடைந்து தனுஷ்கோடியிலும் ஸ்நாநஞ் செய்து அங்கு முப்பது லக்ஷம் பொன்னைப் பிராம்மணர்களுக்குத் தானஞ் செய்து, தாஸரதியால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மகாலிங்கத்தை வணங்கி, மாசி மாதம் முழுதும் அங்கிருந்து, மாகமகத்துச் சிரவணஞ் செய்து மீண்டும் மதுரையையடைந்து சித்திராங்கதையோடு ஸுகித்து, பின்னர் கர்ப்பவதியான சித்திராங்கதையுடன் சைத்திரோத்ஸவம் ஸேவிக்கக் கருதி ஸ்ரீரங்கப்பட்டணம் வந்துசேர்ந்தனன்.

அங்கு சித்திராங்கதையானவள் பப்ருவாஹன் என்கிற புத்திரனைப் பெற்றனள். அர்ஜுனன், உத்ஸவத்தை ஸேவித்து, பின்னர் மேல்நாட்டை நோக்கிச் சென்று ஸஹ்யகிரியை யடைந்து ஹியாமலக ஸந்நிதியில் காவேரி ஸ்நாநஞ் செய்து, கோகர்ண க்ஷேத்திரம் சென்று மகாபலேஸனென்னும் சிவனை ஆராதித்து, மீண்டும் பிரபாஸ தீர்த்தத்தையடைந்து ஸ்நாநஞ் செய்து தன்னோடுவந்த பிராம்மணர்களை அவ்விடத்தில் இருக்கச் செய்து, துவாரகைக்குப்போய் ஏகாந்தமாய் ஓரிடத்தில் வந்து உட்கார்ந்து, கௌதம ருஷியானவர் பூர்வம் எவ்வாறு அகலிகையை வஹுவில் வந்தடையப் பெற்றாரோ, அங்ஙனம் சுபத்திரை நம்மை வஹுவில் வந்தடைவது எங்ஙனம்? என்று தனக்குள் பலவாறு யோசனை செய்தும், கடைசியில் ஒன்றுந் தோன்றாது, ஸத்புருஷர்களுக்கு நிவாஸமாக, யோக்யமான விருக்ஷமும், ஆபத்தடைந்தவர்களுக்கு பரமமான கதியும், பக்தர்களால் பூஜிக்கப்பட்டவரும், ஸ்ரீ லக்ஷ்மீகாந்தனை ஸ்ரீ கண்ணபிரானே எனக்குக் கதி. அநந்தனும், யதுவம்ஸதிலகனும், பக்தார்த்தி பஞ்சனனும், தயாஸீலனும் என்ற அர்த்தமமைந்த ஒரு ஸ்லோகத்தால் ஆபத்ரக்ஷகனை ஸ்ரீ கிருஷ்ணனை ஸ்மரித்தனன். அடியவர் முறைக்கு அநந்தரமும் செவிசாய்க்கும் ஸ்ரீ கிருஷ்ண பகவானும் உடனே ரதாரூடராய் அவ்விடம் பிரத்யக்ஷமானார்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில் பத்தொன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## 20-வது அத்தியாயம்.

### ஸுபத்திரா விவாஹம்.

இங்ஙனம் ஸ்ரீ கிருஷ்ண பகவானைக்கண்ட மாத்திரத்தில் அர்ஜுனன் ஆனந்தபாவஸனாய் அவர் திருவடிகளில் வீழ்ந்து தொழுது, "ஸ்வாமி! பக்தவத்ஸலா! தாஸனை யான் கொண்டுள்ள மனோரதத்தைப் பூர்த்திசெய்ய வேண்டும். அதாவது: ஸுபத்திரை விஷயத்தில் யான் கொண்டுள்ள மோகம் என் உடம்பை வருத்துகிறது. அது முடிவுபெறுவதுதான் என் கோரிக்கை. ஆகையால் எனது இஷ்டத்தை நிறைவேற்றி ரக்ஷிக்கவேண்டியது உன் கடமை என்றான். இதைக் கேட்ட கண்ணன் அவனை நோக்கி, "அர்ஜுனா! இதுசமயம் நீ வார்த்தையாடின விஷயம் இவ் வடிவால் முடிவதில்லை. நீ ஸந்நியாஸி வேடம் புனைந்து துவாரகையையடுத்த ஓர் வனத்தில் வந்துயிருப்பாயேயானால் உன் அபீஷ்டம் நிறைவேறும்படி செய்கிறேன்" என, அர்ஜுனனும் "ஸ்வாமி! யதிரூபம் தரித்துக் கொண்டால், பிறகு கிரஹஸ்தன் ஆகக்கூடாதே" என, கிருஷ்ணபரமாத்மா "அப்பா அர்ஜுனா! காஷாயதண்ட மாத்திரத்தாலும், வேதாந்த காலக்ஷேபத்தினாலுமே ஒருவன் ஸந்நியாஸியாகமாட்டான். எவனொருவன் எப்பொழுதும் என்னையே மனதில் தியானம் செய்துகொண்டிருக்கிறானோ அவனே யதீஸ்வரன். மனஸ்ஸுத்தியின்றி வேஷத்தினால் மட்டும் யதியாகயிருப்பவன் படுநரகில் வீழ்வான். ஆகிலும் துவாபரயுகத்தில் யதிபோல் நடப்பதினால் தோஷமில்லை. கலியுகத்தில் மட்டும் அப்படிப்பட்ட

ஸந்நியாஸம் கூடாது. ஆகையால் நீ எதற்கும் அஞ்ஜாது யான் சொல்லியவண்ணம் யதிவேடத்துடன் துவாரகை யருகில் இருக்கும் வனத்தில் வந்திரு'' என்று சொல்லி உடனே அந்தர்தானமாயினர்.

அர்ஜுனனும் அவ்வாறே யதிவேடந்தாங்கி கமண்டல திரிதண்டங்களுடன் துவாரகைக்கு அருகாமையிலிருக்கும் ஓர் வனத்தில் வந்து அங்கிருக்கும் மலைக்குகையில் இருந்துகொண்டு, மஹா யோகிபோல் பாவனைசெய்து கண்களை மூடிக்கொண்டு மௌனவிரதத்துடனிருந்தனன்.

இப்படி இங்கிருக்க, துவாரகையில் கிருஷ்ணபகவான், உக்ரஸேனன் பலராமன் முதலிய கோபாலர்களையழைத்து, ''நாமெல்லோரும் இன்று வனபோஜனம் செய்துவரலாம் வாருங்கள்'' என்று சொல்லிக் கபடமாய் பந்துக்களையும், அவர்களையும், மற்றெல்லோரையும் அழைத்துக்கொண்டு அர்ஜுனன் தங்கியிருக்கும் மலையருகில்வந்து சம்பிரமமாய் வனபோஜனம் செய்தார்கள். பின்னர் பலராமன் உக்கிரஸேனன் முதலியவர்கள் கண்ணனைவிட்டு, வேடிக்கை பார்க்கவென அம் மலையைச் சுற்றிப் பார்த்துவருகையில், அங்கு யோகத்திலிருந்த அர்ஜுன ஸந்நியாஸியைக்கண்டு வெகு பயபக்தியுடன் அடிபணிந்து, ''அடிகளே! தாங்கள் எங்களுடைய எல்லைக்குள் வந்திருந்து அடியேங்கள் தங்களுக்கு எது செய்ய வேண்டுமானாலும் உடனே நாங்கள் செய்யக் காத்திருக்கிறோம். கட்டளையிட வேண்டும், யாங்கள் தன்னியர்களாக இதுவே ஹேது'' என்று பலவாறு வேண்டியும், அச் சந்நியாஸி ஏதும் பதில் பேசாது

மௌனமாயிருந்ததையறிந்து, எல்லோரும் மறுபடியும் கிருஷ்ணனிடம் வந்து, "கிருஷ்ணா! உன்னைவிட்டுத் தனியாய் நாங்கள் வனவேடிக்கைப் பார்க்கச் சென்றோம். அங்கு நாங்கள் கண்ட அதிமனோ உல்லாஸத்தை நீயனுபவிக்காது போனாய். தவிர, அம்மலைக்குகையில் ஓர் மகா யோகீஸ்வரர் இருக்கின்றார். அவர் பிரம்ம தேஜஸையும் தேகச்சாயையும் நியமநிஷ்டையும் பார்க்கப் பார்க்க எங்கள் கண்கள் கூசுகின்றன. "அடா கிருஷ்ணா! இந்த யோகீஸ்வரரை எப்படியாவது நாம் இட்டுக்கொண்டு நமது நகரத்தின் உத்தியான வனத்தில் ஓர் ஆஸ்ரமம்கட்டி அதில் இருக்கும்படி செய்து பிக்ஷை அளிப்போம். அதனால் நமக்கு மிக்க க்ஷேமம் கிடைக்கும்" என்றார்கள்.

கிருஷ்ணனோ ஒன்றும் அறியாதவர்போல் அவர்களை நோக்கி, 'ஆம் நீங்கள் சொல்லியபிரகாரம் ஒரு யதிக்கு பிக்ஷை பண்ணிவைப்பதால் பித்ருக்கள் எல்லோரும் திருப்தியடைவார்கள் என்பது வாஸ்தவமே. ஆனால் ஸந்நியாஸி, தானே வலுவில் பிக்ஷைக்கு வராமலிருக்க அவனை வலுவில் நாம் அழைத்துவரப்படாது. அல்லது வலுவில் வந்து அவன் பிக்ஷை ஏற்றுக்கொள்ளுவானாயின் அவன், இந்திரனுடைய நாய்களால் கடிப்பிக்கச் செய்வான் என்பர். ஆகையால், பிக்ஷை பண்ணிவைத்தவன் பிக்ஷை பண்ணினவன் இவ்விருவரும் நரகமே அடைவார்கள். ஆனபடியால் அவர் தாமாக வந்தாலல்லாது நாம் போய் கூப்பிடுவது அவ்வளவு நன்றன்று ஆகையால் இவ்வெண்ணத்தை விட்டொழியும்" என்றனன் கிருஷ்ணபகவான்.

அப்பொழுது பலராமன், "கண்ணனே! நீ இவ்விதம் உரைப்பது தகாது. அம்மகானை யதிக்கு வேண்டுவன செய்து அவர் குக்ஷியில் நமது அன்னம் விழச்செய்வதே யுசிதம். அதுதான் குலவிருத்தியடையக் காரணம். இதை நீ யறியாது கூறுகிறாய்" என்று விடைகூறி உக்கிரஸேநரை நோக்கி, "ஐயா! இக்கக் கிருஷ்ணன் சிறுவனாதலால் விஷயமறியாது பேசுகிறான். இதுவோ மாரிமாதமாயிருப்பதும் தவிர சாதுர்மாஸகாலமாயுமிருக்கிறது. ஆகையால் அவரை அழைத்துக்கொண்டுபோய் ஓர் மடத்திலிருக்கச்செய்து பிக்ஷை செய்விக்க வேண்டும்" என்றுசொல்லி, எல்லோரும் அந்த ஸந்நியாஸியிடம் சென்று பிரார்த்தித்து வேண்டவும், சற்றும் சலியாதுநின்ற அவ்வர்ஜுன ஸந்நியாஸி சிறிது நேரம் கழிந்து, கண்விழித்து அவர்களை நோக்கி ஆசிர்வாதம செய்கதுபோல் ஜாடை செய்து சிறுநகையரும்பி, அவர்கள் விண்ணப்பித்தவைகளுக்கு சசந்திருப்பவன்போல் நடித்துக் காட்டி, அவர் வற்புறுத்தலின் பேரில் துவாரகைக்கு வந்தனன். அவ்வாறு வந்த அர்ஜுனனை ஓர் மடத்தில் தங்கும்படி செய்தார்கள். அர்ஜுனனும் மௌனவிரதத்துடன் வீடுவீடாகச் சென்று, பிக்ஷை வாங்கி புசித்து வந்தனன். இப்படியிருக்கையில், பலராமன் மற்றவர்களை நோக்கி, இப்பொழுது மாரிகாலம் வந்துவிட்டது. யதீஸ்வரர் சாதுர்மாஸ விரதம் அனுஷ்டிக்க வேண்டும். அவர் மடத்திலிருப்பது சரியல்ல. நமது மாளிகையை அடுத்த நந்தவனத்தில் ஓர் குகைக்குள் இருக்கச்செய்து உபசரிப்போம். எனவே, கிருஷ்ணன் "ஆஹா! நன்று! நன்று! ஸந்நியாஸியை வீட்டிற்குள் குடிவைக்கலாகுமா? விரக்தனான ஸந்நியாஸிகள் எவ்விதத்திலும் பூஜிக்

கத்தருந்தவர்களேதவிர வேறில்லை. வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாத யதிகள் தாங்களே ஒன்றும் கோருதலே கிடையாது. அவ்வாறு கோரினாலும் நமக்கு யுக்தமாயின் நாமும் தரவேண்டும். இல்லாவிடில் விடுதலே யுக்தம். அப்படியிருக்க, காட்டிலிருந்தவரை காட்டிற் கழைத்து வந்து இருத்தினீர்கள். அதுவும் போருது வீட்டிலும் இருக்கச் செய்தீர்கள். அங்கு மிகவும் அழகும் யௌவனமுமுடைய பெண்கள் நடமாடிக்கொண்டிருக்கு மிடத்தில் இந்த யதியை யிருக்கச் செய்வது தவறு. - இவ்வாறு நாம் செய்வது நல்லது என்று நினைக்காதீர்கள். அது யதிக்கு இடர் செய்வதாக யிருக்கும். மேலும் தவமுண்டயார் காட்டில் வஸிப்பது ஸ்திரீகள் நோக்கமில்லாமைக்கன்றோ? முன்னம் மகா யோகியாயிருந்த ஸௌபரி என்பவர் ஜலத்திற்குள் தபஸு செய்துகொண்டிருக்கையில், அங்கு தன் பரிவாரங்களுடன் சென்ற ஒரு மீனைக் கண்டு, தானும் அப்படியே பெண்ஜாதி பிள்ளைகளுடன் வாழ்ந்திருக்க வேண்டுமென்று நினைத்து உடனே தபஸை விட்டு மாந்தாதாவினுடைய நூறு பெண்களையும் மணம் புரிந்துகொண்டு சிற்றின்பப் பிரியரானான்றோ! கௌதமர் அஹல்யையைத் தம்மால் சபிக்கப்பட்டபொழுது ஆயிரம் வருஷம் ஜலத்திற்குள்ளேயிருந்தும், பிறகு அவள் சாப விமோசனம் பெற்ற பிறகு அவளுடன்கூடி ரமித்தாரன்றோ? சாக்ஷாத் ஸ்ரீஹரியின் ஹம்ஸமாகிய பராஸரரும் செம்படவனது மகளாகிய யோஜனகந்தியைப் புணர்ந்தாரல்லவா? பிரம்மன் திலோத்தமையை ஸிருஷ்டித்தகாலத்தில் அவனே அவளது ரூபலாவண்ணியத்தைக்கண்டு காமமீறி அவளுடன் புணர நினைக்கவே, மன்மதன் அதனைக்

கண்டு பரிகாஸம் செய்ய, ப்ரம்மனும் கோபித்து நீ பரம ஸிவனுடைய நேத்திராக்னிக்கு இரையாகக் கடவை யென்று ஸபித்தானன்றோ? மகா விரக்தர்களும் ஸ்திரீகளின் வலையிற்சிக்கி அதிக விஷயபரர்களாகிறார்கள். ஆகையால் நீங்கள் செய்யும் காரியத்தால் என்ன தீங்கு விளையுமோ தெரியவில்லை" என்றார். அது கேட்ட பலராமன், "அடா! கிருஷ்ணா! நீ மற்ற ஸந்நியாஸிகளைப் போல் கேவலமாக இவரை நினைக்காதீர். இவரோ மஹாவிரக்தர். ஆகையால் நான் என்னிஷ்டப்படியே செய்வேன். அதற்கு நீ ஒன்றும் தடை செய்யக்கூடாது" என்று சொல்லி, யாதவர்களெல்லோரையும் ஒன்றுகூட்டிச் சென்று அக் கபட ஸந்நியாஸியை வஸுதேவருடைய கிருஹத்தின் உத்தியான வனத்தில் வஸித்துக்கொண்டிருக்கும்படி செய்தார்கள்.

பின்னர் பலராமன் அந்த யோகீஸ்வரரின் விரக்தியையும் மனோதிடத்தையும் கண்டு வியப்புற்று தனது தங்கையான ஸுபத்திரையை அவருக்குப் பணிவிடை செய்யும்படி உத்தேசித்து கிருஷ்ணனைக் கலந்து, "தம்பீ! நான் ஒரு விஷயம் உரைக்கிறேன். அதாவது: நமது தங்கை ஸுபத்திரையை, அந்த ஸந்நியாஸிக்கு ஸிஸ்ருஷை செய்யக் கட்டளையிடப் போகிறேன் கன்னிகைகளுக்குப் பெரியோர்கள் உபசாரமே உசிதமாகும். அதனால் அவர்கள் நல்ல பர்த்தாவை யடைவார்கள். பர்த்தாவன்றிக் கன்னிகைகளுக்கு ஏது விசேஷம். வேறொன்றுமில்லையல்லவா? இந்த ஸந்நியாஸியோ மகா ஸிரேஷ்டர், ஜிதேந்திரியர், தபோ பலம் வாய்ந்தவர், ஸாதுவானவர், புண்ணியதேகி,

தரிஸனமாத்திரத்திலேயே தேவர்களையும் தன்னியராக்கு வார். இத்தகையோருக்கு இக்காலமன்றி வேறு காலத்தில் நமது தங்கை கைங்கரியம் செய்யப் போகிறுளென்பது ஐயம்" என்றனர். இவையெல்லாம் கேட்ட கோபாலரும்: "அண்ணு! உங்களது எண்ணம் உங்களையும் கடந்து செல் கின்றது. முதலாவது வீட்டினுள் யதிகளை வரவழைப் பதே கூடாது. அப்படி வந்தாலும், அவரிடம் நமது தங்கையை ஸிஸ்ருஷைக்கு வகுப்பது தகுதியன்று. இதற்கு என் எண்ணம் இடந்தராது. பெரியோர்களிருக்க எனக்காவதென்ன" என்று கூற, நீலாம்பரர் இளையவர் வார்த்தைக்கு மதிப்புற்று, அவரையும் கூட்டிக்கொண்டு உக்கிரஸேனன் முதலியவர்கள் புடைசூழ ஸந்நியாஸி யிடம் சென்றுர்.

இவர்கள் வருவதையறிந்த அர்ஜுன ஸந்நியாஸியும் பத்மாஸனத்தில் வீற்றிருந்து கிழக்கொக்குபோல் கண்களை மூடிக்கொண்டு அசையாது மௌனயாய் தியானத்திலிருந் தனன். அப்பொழுது சகலமும் அறிந்த கண்ணன் ஸுபத்திரையை அர்ஜுனனுக்குக் கொடுக்க வேண்டு மென்ற நமது எண்ணம் இன்றுதான் பலித்தது என்று தன்னுள் நினைத்து, வெளிக்கு ஏதுமறியாதவர்போல் அந்த யோகியை நமஸ்கரித்து, "ஸ்வாமி! தேவரீர் எப்பொழு தும் பரமாத்மாவையே இருதயத்திடமாக இருத்தி தியாநம் செய்துகொண்டிருக்கிறீர்கள். தங்களைப்போன்ற பாக்கிய வான்கள் யாரிருக்கிறுர்கள்" என்று பலவாறு துதிசெய் தும், அர்ஜுன ஸந்நியாஸி கண் திறவாமலும் மறுமொழி யுரையாமலும் முன்போலவே தியானத்தில் ஆழ்ந்திருக்

கவே, கண்ணபிரான், பலராமனை நோக்கி, "அண்ணா! பார்த்தீரா இந்த ஸந்நியாஸியை. ஆகா! என்ன தியானம்! என்ன பக்தி! என்ன திடம்! என்ன ஸீலம்! இவற்றை யறியாதன்றோ நான் வீண் வார்த்தையாடினேன்" என்று சொல்லி வியந்தார். பிறகு பலராமன் தன் தங்கையாகிய ஸுபத்திரையை அழைத்து அவளுக்குத் தக்க நாயகன் கிடைக்குமாறு அவருக்கு ஸிஸ்ருஷை செய்யும்படி நியமித்தார். அவளும் அண்ணனுடைய வார்த்தைக்கிணங்கி அந்த யதீஸ்வாருக்கு அதிக பக்தி சிரத்தையுடன் பணிவிடை செய்துவரும் நாளில், ஒரு நாள் அந்த யோகீஸ்வரனுடைய அங்கங்களைப் பார்த்து தான் முன்பு கேட்டிருந்த அடையாளப்படி இந்த அர்ஜுனன் யிருக்கக்கண்டு, மனதில் சந்தேகம் தோன்ற, தபஸியை நோக்கி, "ஸ்வாமி! தீர்த்த யாத்திரைக்குச் சென்ற அர்ஜுனனைத் தாங்கள் பார்த்ததுண்டோ? அல்லது தேவரீர் அந்த அர்ஜுனன்தானோ? என்னிடம் சந்தேகமின்றி உரைக்க வேண்டும்" என்று கேட்கவே, அர்ஜுனனும், புன்முறுவலுடன் ஆம் அந்த அர்ஜுனன்தான். உன்மீதுள்ள ஆசையால் உன்னை விவாஹம் செய்துகொள்ள வேண்டியே இங்ஙனம் இக்கபட ஸந்நியாஸி வேடம் புனைந்துகொண்டேன்" என்றான்.

இதைக்கேட்ட ஸுபத்திரையானவள் மனதில் ஆனந்த பரவசமடைந்து நான் கொண்ட எண்ணம் நிறைவேறிற்று என்று அவனை நோக்கி, "ஐயா! எனக்கோ தங்களைத்தவிர வேறொருவரை வரிக்க இஷ்டமில்லை. ஆகையால், என் தமையனான பலராமனோ, என்னைத் துரியோதனனுக்குக் கொடுக்கப் போகிறதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறான்.

ஆகையால் எவ்விதத்திலும் நமது விவாஹம் இரகஸியமாய் முடித்துவிட ஏற்பாடுசெய்யவேண்டும்" என, அர்ஜுனன் "ஓ ஸுபத்திரையே! நீ எதற்கும் அஞ்ஜவேண்டாம். எல்லாவற்றிற்கும் கண்ணன் இருக்கிறார். அவரை நீ தஞ்ஜமென்றடைக்கால் அவர் எவ்விதத்திலும் நமது காரியத்தைப் பூர்த்திசெய்து வைப்பார்" என்றான். உடனே ஸுபத்திரையும் தனது தாயாகிய தேவகியிடம் சென்று தன் கருத்தைத் தெரிவிக்க, அவளும் தன் மகள் வார்த்தைக்கிணங்கி, கிருஷ்ணனைத் தனியாக அழைத்து சங்கதியைத் தெரிவிக்க, கபடநாடக ஸூத்திரதாரியாகிய கிருஷ்ணனும் தன்னுள் மகிழ்ந்து, "அப்படியே ஆகட்டும அம்மா. தங்கைக்கு இதுவிஷயத்தில் வருத்தமடைய வேண்டாமென்று சொல்லுவீராக." தமையனுக்கு விரோதப்படினும் தாய் சொல், பரிபாலனம் செய்வதே தருமம். ஆகையால் உமது வாசா பிரகாரம் உம் எண்ணத்தை முடித்து வைக்கிறேன் என்று சொல்லிவிட்டு, பலராமனிடம் சென்று, பலராமன் முதலிய யாதவர்களை யழைத்து, "நாம் தீர்த்த யாத்திரைக்குச் சென்று சமுத்திர ஸ்நானம் செய்துவரலாம் வாருங்கள்" என்று சொல்லி, வஸுதேவர் தேவகி இவ்விருவரைத்தவிர மற்ற யாதவர்களெல்லோரையும் அழைத்துக்கொண்டு சமுத்திரத்தில் நீராடி எல்லோரும் மிகுந்த களைப்பினால் சமுத்திரக்கரையில் படுத்து உறங்குகையில், இதுதான் சமயமென்று, தான் மட்டும் ஏகாங்கியாய் ரதத்திலேறி தன் இல்லம் வந்து சேர்ந்து, தன் பிதாவாகிய வஸுதேவருக்கும் சங்கதி தெரிவித்து, இப்பொழுது வெகு ரகஸியமாய் ஸுபத்திரைக்கும் அர்ஜுன ஸந்நியாஸிக்கும் விவாஹத்தை முடித்துவிடவேண்

டும் என்று சொல்லி, அதற்கு வேண்டிய ஸகல ஸாமக்கிரி யைகளேயும் ஸித்தப்படுத்தினர்.

அப்பொழுது அர்ஜுனனவன் தனது பிதாவான தேவேந்திரனை மனதில் ஸ்மரிக்கவே, இந்திரனும் இந்திராணி ஸமேதராயும், ஸப்தருஷிகளுடனும், அருந்ததியுடனும் சேர்ந்து வர, அவர்கள் எல்லோரும் குஸலப்ரஸ்னே செய்துகொண்டார்கள். பின்னர் மகபதி ஸப்தருஷிகளைக் கொண்டு நல்ல சுப லக்கினத்தில் வதூவரர்களாகிய ஸுபத்திரை அர்ஜுனன் இருவருக்கும் மங்கள ஸ்நாநம் செய்வித்து, கற்பகத்தருவின் புஷ்பங்களாலும் திவ்விய பூஷணங்களாலும் அர்ஜுனனை இந்திரனும், ஸுபத்திரையை இந்திராணியும் அலங்கரித்தார்கள். பின்னர் வஸுதேவருடைய மடியில் வெட்கத்துடனும் குனிந்த தலையுடனும் உட்கார்ந்துகொண்டிருந்த ஸுபத்திரா தேவியினது கண்டத்தில் அர்ஜுனன் திருமாங்கல்லியம் சூட்ட, அவ்வதூவரர்களை ஸப்தருஷிகளைக்கொண்டே விவாஹத்திற்குரிய ஸகல மந்திரங்களையுமோதி பாணிக்கிரஹணம் செய்து, அம்மி மிதித்து அக்கினியை மூன்றுதரம் வலம் வந்து நெற்பொரியால் ஓமம் செய்வித்துக் களிப்புற்றனர். பின்னர் தம்பதிகள் இருவரும் ஸ்ரீ கிருஷ்ண பகவானையும் மற்றும் சபையிலிருந்த எல்லோரையும் நமஸ்கரிக்க, அவர்களும் அத்தம்பதிகளை ஆசீர்வாதம செய்து மந்திராக்ஷதை தூவினர்கள்.

பின்னர் தேவேந்திரன் ஸப்தருஷிகளோடு தன் மகனேயும் மருமகளேயும் ஆசீர்வதித்து கிருஷ்ணன் முதலானோரிடத்தில் விடைபெற்று தேவலோகம் சென்றான்.

கிருஷ்ணனே, இந்த விவாஹத்தை முடித்துவிட்டு ஒன்றும் அறியாதவர்போல் ஒருவருக்கும் தெரியாமல் மறுபடியும் சமுத்திரக்கரைக்குச் சென்று அங்கு பலராமன் முதலியோர் படுத்துறங்குமிடத்தில் தானும் ஒருவராகப் படுத்துறங்கினர்.

இப் புனிதமான ஸுபத்திரா பரிணயத்தைப் படிப்பவரும் கேட்பவரும் ஸகல பாவங்களினின்றும் விடுபட்டுப் புண்ணியலோகமடைவார்கள். விசேஷமாய் இதனைச் சுக்கிரவாரத்தன்று படிப்பவர்களுக்கு இஷ்டஸித்தியுண்டாகும். முன்னம் சிவபெருமான் தன் மனைவியாகிய தாக்ஷாயணீ உயிர் நீங்கினபின் இந்தப் புண்ணிய சரித்திரத்தைப் படித்ததினுல் மீண்டும் அவர் அந்த தாக்ஷாயணீ ஹம்ஸமான பார்வதியை மணம் புரிந்தார். காமதேவன் ஈஸ்வரனுடைய நெற்றிக்கண்ணுல் எரிந்தபோது அநாதையான ரதிதேவி மகா துக்கத்துடன் புலம்புங்காலத்தில், சிவபிரான் அவளை இக்தப் புண்ணிய சரித்திரத்தை யொருவாறு கேட்கும்படி நியமிக்க, அவளும் அங்ஙனமே இந்த ஸுபத்திரா பரிணயத்தை பக்தியுடன் கேட்டு, மீண்டும் தன் பர்த்தாவையடைந்தனள். ஆகையால் சகல அபீஷ்டத்தையளிக்கக்கூடிய இச்சரிதையைப் போல் வேறு ஒரு புண்ணிய சரிதம் உலகில் கிடையாது என்றார்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில் இருபதாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## 21-வது அத்தியாயம்.

## பலராமன் அர்ஜுனனோடு யுத்தம் செய்ய ஆரம்பித்தது.

மறுநாள் அர்ஜுனன் அருணோதயத்தில் எழுந்து ஸுபத்திரையை ரதத்தில் ஏற்றிக்கொண்டு அவள் கையில் கடிவாளம் கொடுத்து ஸாரத்தியம் செய்யச் சொல்லி, தான் காண்டீவமென்னும் வில்லை வளைத்து குணத்துவனி பண்ணி இராஜவீதி மார்க்கமாய் புறப்பட்டுப் போகவே, அந்நகர பாலகரெல்லாம்கூடி அவனோடு எதிர்த்துப் போராடினார்கள். அர்ஜுனனோ தனுஸால் அநேக பாணங்களைத் தொடுத்து அவர்களை முறியடிக்கவே அவர்களில் அநேகர் திசைதப்பி திக்கு திக்காய் ஓடினார்கள். சிலர் உடனே ஸங்கேத பேரிகையை யடித்தார்கள். அந்தச் சப்தம் காதிற்படவே, பலராமன் தெளிந்து மற்ற யாதவர்களையெல்லாம் எழுப்பி, "ஓஹோ! நம் நகருக்குள் ஏதோ கலகம் நடக்கிறதுபோல் தோன்றுகிறது. நாமங்கு இல்லாத சமயம்பார்த்து யாராவது பகைவர்கள் வந்து நம் நகரை முற்றுகை யிட்டிருக்கிறார்களோ என்னமோ" என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருக்கவே, கண்ணபிரான் கபட நித்திரை தெளிந்து, "அண்ணா! நம் நகர்க்குள் சாக்ஷாத் தேவேந்திரன்கூட அடியெடுத்து வைக்க அஞ்சுவானே, அங்ஙனமிருக்க, இப் பூலோகத்தில் நமக்கு விரோதியாக எவன் வருவன். நான் முன்னமேயே அந்த ஸந்நியாஸியை நம் நகருக்கு அழைத்துக்

கொண்டு வரவேண்டாம் என்று பலமுறை சொல்லியும் என் பேச்சை அலக்ஷியம் செய்ததுமல்லாமல், மறுபடியும் நமது கிருஹத்திற்கே அழைத்துவந்து, நமது சகோதரி ஸுபத்திரையையும் அவனுக்கு விஸ்ருஷை செய்யும்படி நியமித்துவிட்டீர்கள். இப்போது அவனால் ஏதோ அநர்த்தம் விளைந்திருக்குமென்று என் புத்திக்குப் புலப்படுகிறது" என்றார். பின்னர் எல்லோரும் வெகு வேகமாகப் புறப்பட்டு வரவே, வழியில் ஒரு போர் சேவகன் வந்து பலராமரிடமும் யாதவர்களிடமும் அர்ஜுனன் பெயர் வரைந்த ஒரு பாணத்தைத் தந்து, "பிரபுக்களே! நமது கிருஹத்தில் வந்திருக்கும் ஸந்நியாஸியானவன் ஸுபத்திரா தேவியை தேரில் ஏற்றிக்கொண்டு போவதை நாங்களெல்லோரும் கண்டு அவனைத் தடுக்கப்போகையில் அவன் எங்களை இந்த அம்புகளால் அடித்துத் துரத்திவிட்டு கொஞ்சமேனும் இலக்ஷியம் செய்யாமல் செல்லுகின்றான்" என்றான். கிருஷ்ண பலராமர் முதலியவர்கள் எல்லோரும் அந்த பாணத்தில் அர்ஜுனனது பெயர் வரைந்திருப்பதைக் கண்டு கோபமும் ஆச்சரியமுமுற்றவர்களாய், இக்ஷணமே சென்று அக் கபட ஸந்நியாஸியை சம்ஹரிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்பொழுது பலராமன் கையில் தன் ஆயுதமாகிய கலப்பையையேந்தி மகா கோபாவேசத்துடன் புறப்படவே, கண்ணன் அவரை நோக்கி, "அண்ணா! யான் முன்னமே இச் சந்நியாசியை அழைத்து வரவேண்டாமென்று பலதடவைச் சொல்லியும் என்னைச் சிறுவன் சிறுவன் என்று, என் மொழியைக் கேட்காது வயதில் பெரியோர்களான நீங்கள் எல்லோருங்கூடி யோசனை செய்து, அந்த ஸந்நியாஸியை நம் வீட்டில் குடிவைத்

ததுமன்றி நம் சகோதரியையும் அவனுக்குப் பணிவிடை செய்ய அநுமதி கொடுத்தீர்கள். அதன் பலனை இப்பொழுது அநுபவிக்கிறீர்கள். யான் அர்ஜுன சந்நியாசியை ஒரு நொடியில் ஸம்ஹரித்துவிடுவேன். ஆகிலும் காரியம் முடிந்தபின் அவனைக் கொல்லுவதில் வீண் அபகீர்த்தி உண்டாகும். நம் சகோதரிக்குப் புருஷனாய்விட்டதால் அவனைக்கொன்றால், நமது சகோதரி விதந்துவாய் நமது காலில் விழுந்து பிராணனை விடுவாள். அவளே ஆசைப்பட்டு அவனை மாலையிட்டிருப்பதாகத் தெரிகிறது. மேலும் நமது தாய் தந்தையர்களின் சம்மதத்தின்பேரில்தான் கலியாணம் நடந்திருக்க வேண்டும். ஆகையால் இது விஷயத்தில் நாம் கோபித்து அவசரப்படுவதில் ஒரு பிரயோஜனமுமில்லை. மேலும், க்ஷத்திரியர்கள் காந்தர்வ விவாஹம் செய்துகொள்வதால் யாதொரு குற்றமுமில்லை. முன் ஸுக்கிராசாரியாருடைய மகள் தேவயானை யயாதியையும், ஸகுந்தலை துஷ்யந்தனையும் இவ்வாறே காந்தர்வ விவாஹம் செய்துகொண்டார்கள். அச் சகுந்தலையின் வயிற்றில் பிறந்தவன்தான் பரதன். அவனால்தான் பரத வம்ஸம் உண்டாயிற்று. இன்னும் ஸ்ரீ கங்கா தேவியே சந்தநு மகாராஜாவை காந்தர்வ விவாஹம் புரிந்து அவரிடத்தில் வைஷ்ணவ ஸ்ரேஷ்டரான பீஷ்மரைப் பெற்றாள். மற்றவர்களைச் சொல்வானேன். யான் ருக்மணி தேவியை அவள் தாய் தந்தையின் சம்மதமின்றிப் பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டுவந்து காந்தர்வ விவாஹம் செய்துகொள்ளவில்லையா? ஆகையால் இனிமேல் கோபித்துக்கொள்வதில் ஒரு பயனுமில்லை. இப்போது நாமெல்லோரும் இந்திரப்பிரஸ்தம் சென்று, நமது சகோதரியின் மணக்கோலத்தை

நிறைவேற்றி வருவதே லால்வும் சிறந்தது. அதனால் நமது தாய் தந்தை சகோதரி இவர்களுக்கு சந்தோஷமுண்டாவதும் தவிர உலகத்திலுள்ள எல்லோரும் நம்மைப் புகழ்ந்து கொண்டாடுவார்கள்" என்று வெகு தந்திரமாகச் சொல்லி பலராமனுடைய மனதை மாற்றி அவருடைய கோபத்தையும் ஸாந்தப்படுத்தினன்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில் இருபத்தோராவது அத்தியாயம் முற்றிற்று.

---

## 22-வது அத்தியாயம்.

### கிருஷ்ணர் பலராமர் இந்திரப்பிரஸ்தமடைந்து ஸுபத்திரைக்கும் அர்ஜுனனுக்கும் காவேரி மகத்துவத்தை யுரைத்தது.

கிருஷ்ண பகவான் பலராமரிடம் உரைத்த விஷயத்தை யாவையும் கேட்ட உக்ரஸேனன், உத்தவர் முதலிய யாதவர்களோடு ஆலோசனை செய்து, பலராமரையும் கிருஷ்ணரையும் நோக்கி, "நீங்களிருவரும் ரதகஜதுரக பதாதிகளுடன் புறப்பட்டு இந்திரப்பிரஸ்தம் சென்று நம் ஸுபத்திரையின் விவாஹத்தை மங்களகரமாக முடித்து, அவளுக்குக் கொடுக்க வேண்டிய சீர்வரிசையாவும் அளித்து வாருங்கள். நாங்கள் இப்படியே நமது நகரம் செல்லுகிறோம்" என்றுரைக்கவே, இராமகிருஷ்ணரிருவரும் அவ்விதமே அநேக வஸ்து வாகனாதிகளுடன் இந்திரப்பிரஸ்தம் சென்றார்கள். இவர்கள் வரவை, பேரிகை

முதலிய வாத்தியகோஷங்களாலும், துவஜங்களாலும் அறிந்த தருமபுத்திரரும், தனது தம்பிமார்களுடன் புறப் பட்டுப்போய் அவர்களை எதிர்சென்றழைத்துவந்து, குசலப் பிரஸ்னைசெய்து, அதிக சந்தோஷங்கொண்டு, "உங்கள் வரவு எங்கள் மனம் களிப்பித்தது. உங்கள் ஸேவை நம் கண்களை விளக்கிற்று. நாங்கள் தன்னியரானோம்" என்று அடங்கா மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு தகுந்த மரியாதை செய்தார்.

பின், ராமகிருஷ்ணர்களிருவரும், ஸுபத்திரையின் விவாஹ மஹோத்ஸவத்தை வெகு ஸம்பிரமமாகச் செய்து முடித்தபின், அவளுக்குச் ஸ்ரீதனமாக, அநேக ஆடையாப ரணங்களும், இரதகஜதுரகபதாதிகளும், தவிர அநேக தாஸிவர்க்கங்களையும் அளித்து, பொன்னாலும் மணியாலும் அவள் மனதைக் களிப்பித்து, அங்கு சிறிதுநாள் தங்கி, பின்னர் துவாரகைக்குப் புறப்பட நிச்சயித்து, குந்தியிடம் சென்று, "அம்மா! நீ செய்த பாக்கியமே பாக்கியம். தரும ஸ்வரூபனான புத்திரனோடு புஜபல பராக்கிரமம் வாய்ந்த நற்குண மக்களைப் பெற்றாய். உன் குமாரன் அர்ஜுனனுக்கு வாய்ந்த என் தங்கையை உங்களிடம் ஒப்படைத்தோம். அவளோ சிறுமி. அவளை நற்குண விசேஷத்தால் பெருங்குணம் படைத்தவளாகச் செய்வது உமது கடமை" என்று கூறி, அடுத்திருக்கும் திரௌ பதியை நோக்கி, "தங்கையே! நீ மிக்க குணஸீலை, பதி விரதை. ஆயினும் சக்களத்தியின் உறவு சச்சரவுக்கிட மென்பர். ஆகையால் இவையெல்லாம் என் தங்கையிடம் காட்டாது, சிறுமியான அவள் ஏதோ குற்றங்குறை

செய்த போதிலும் நீ அதை குணமாகக்கொண்டு குறை கொள்ளாமல் திருத்தி, பர்த்தாவிடத்திலும் மாமியாரிடத்திலும் உன்னிடத்திலும் பக்திவரும்படி சொல்லிக்காட்டுவாயாக" என்று கூறி, பின்பு ஸுபத்திரையைப் பார்த்து, "அம்மா தங்கையே! நீ அதிகாலையில் எழுந்ததும் புருஷனைத் தியானிக்க வேண்டும். பின்பு கிரமப்படிக் காலைக் கடனை முடித்து பர்த்தாவையும் மாமியையும் தமக்கையான திரௌபதியையும் வணங்கு. அவர்களுக்குக் கைங்கரியம் செய்வதில் நீ சலிப்படையாதே. பர்த்தாவைத்தவிர உனக்கு வேறு தெய்வமில்லை. இது முக்காலத்திலும் உண்மை. பிராதக்காலத்தில் துயில்விடுதலும், நித்தியகர்மாதி முதலிய நியமங்களை நடத்துதலும், மஞ்ஜள், குங்குமம், புஷ்பங்களை இடைவிடாது தரித்துக்கொள்ளுவதாலும் புருஷனுக்கு ஆயுர்விருத்தியைத் தரும். இவற்றைக் கவனித்து ஒழுங்காக நடப்பாய். பெரியோரை எதிர்த்துப் பேசாதே; இவைகள்தான் குருவாக்காகக் கொண்டொழுகுவாய்" என்று கூறி, தருமபுத்திரரையடைந்து, அவரிடம் விடைகேட்க, அவரும் ஸ்ரீ கண்ணனை நோக்கி, "ஓ என் பிரிய மைத்துனரே! இவ்வுலகில் எங்களைவிட நிர்ப்பாக்கியர் எவருமில்லை. நாங்கள் பால்யத்திலேயே நம் தந்தையை யிழந்தோம். பெரிய தந்தையின் மக்களால் அநேக அவமதிப்பை யடைந்தோம். நகரினின்று துரத்தப்பட்டு காடடைந்தோம். அரக்கு மாளிகையினின்றும் தப்பினோம். இன்னும் பலவித ஆபத்துகளையடைந்தோம்; நீங்களோ, நாங்கள் எழ்மை நிலையடைந்தோமென்று எங்களைக் கவனிக்காமலிருந்துவிட்டீர்கள். ஆம், தரித்திரரை யார்தான் இலக்ஷியம் செய்வார்கள்? தரித்திரம் மிகக்

கொடியதல்லவா? அது களிப்புக் கடலுக்கு அக்கினியை யொத்ததல்லவா? துர் எண்ணங்களுக்கு இருப்பிடமும், பல துக்கங்களுக்கு ஆதாரமாகவும், தலைவி தலைவனுக்கும் கலகம் விளைவிப்பதும் அந்த தரித்திரமே? ஆகையால் எங்களுக்கு எப்பொழுதும் ஸுகம் கிடையாது" என்று பலவாறு நிஷ்டூர வார்த்தைகளைச் சொல்லி வியஸனப்பட, கிருஷ்ண பகவான் தருமபுத்திரரை நோக்கி, அநேகவித நல்ல வார்த்தைகளால் தேறுதல் செய்து கூறுகிருர்:

"அப்பா தருமநந்தனு! நாங்கள் இளம் பிராயத்தில் பட்ட துன்பம் நினைக்கில், உன் கஷ்டம் அவ்வளவு பெரிதல்ல? நாம் பூதனை முதலிய பேய்களால் கலக்கமடைந்தோம், இடையில் வனங்களில் நேர்ந்த ஆபத்துக்களுக்கோ அளவில்லை முடிவில் மாமனுகிய கம்ஸனும் மடியநேர்ந்தது. தெய்வ கடாக்ஷத்தால் நாங்கள் தப்பினது ஆச்சர்யமே. கடைசியில் அவனே எங்களால் மடிய நேர்ந்தனன். நீயோ அப்படியல்ல. உனக்கோ நான்கு தம்பிமார்களுண்டு. அவர்களெல்லோரும் குணசீலர்கள். உன் வார்த்தைக்கு எதிர்பேசாதவர்கள். மனைவியோ அக்கினியிற் பிறந்த அணங்கு. இத்தகைய சீரும் சிறப்பும்வாய்ந்த உனக்கு, இனி எக்காலத்திலும் குறைவில்லை. இனிமேல் நீ துலா மாதத்தில் பஞ்ச பஞ்ச உஷத்காலத்தில் காவேரியையடைந்து ஸ்நாநமாடி நியமப்படி விப்பிரர்களுக்கு தானதருமங்கள் செய்து, அங்கு நடக்கும் துலாகாவேரி மகாத்மியத்தை ஸிரவணம் பண்ணி, பௌராணிகோத்தமருக்கு வேண்டிய பொன்னைக் கொடுத்து உபசரிப்பாய். அதனுல் ஸகலபேறுகளையும் பெறுவாய். இதன்றி முன்பு

பார்த்தன் தியானம் பண்ணிய லக்ஷ்மி ஸ்தோத்திரம் ஒன்று உபதேசிக்கிறேன். நீ பக்தியோடு ஜபிக்கவேண்டும். அதனால் கைகூடாத நன்மைகள் ஒன்றுமேயில்லை. எல்லாம் உன்வசமேயாகும்'' என்று கூறி, மைத்துனு! நீ எதற்கும் அஞ்சவேண்டாம் என்று லக்ஷ்மி ஸ்தோத்திரத்தை உபதேசிக்கிறார்.

## கிருஷ்ண பகவான் தருமராஜாவை லக்ஷ்மீ ஸ்தோத்திரம் உபதேசித்தல்.

ஶ்லோகம்.

ஶ்ரீதே3வீ ப்ரத2மம்நாம த்3விதீயம் அம்ருதோத்3ப4வா ।
த்ருதீயம் கமலாப்ரோக்தா சதுர்த2மசந்த்3ர ஶோப4னு ॥
பஞ்சமம் விஷ்ணுபத்னீச ஷஷ்ட2ம் ஶ்ரீவைஷ்ணவீததா2।
சப்தமம்துவராரோஹா ஹ்யஷ்டமம் ஹரிவல்லபா4 ॥
நவமம் ஸார்ங்கி3ணீப்ரோக்தா த3ஸமமதே3வ தே3விகா ।
ஏகாத3ஸம் மஹாலக்ஷ்மீ து3வாத3ஸம் லோகஸுந்த3ரீ ॥

என பன்னிரெண்டு நாமமும், இவையன்றி,

ஸ்லோகம்

ஶ்ரீபத்2மாகமலாமுகுந்த3 மஹிஷீலக்ஷ்மீ ஸ்த்ரிலோகேஸ்வரீ।
மாக்ஷீராப்3தி4ஸுதாவிரிஞ்சிஜனனீ வித்3யாஸரோஜாஸனு॥
ஸர்வா4பீஷ்ட ப2லப்ரதே3திஸததம் நாமானியேத்3வாத3ஸ ।
ப்ராதஸ்ஸு3த்த4தரா: பட2ந்த்யபி4மதான்ஸர்வான்லப4ந்தே ஸுபா4ன் ॥

என்னும் பன்னிரெண்டு திருநாமங்களும் உண்டு. இவற்றைத் தினமும் காலையில் காவேரி ஸ்நாநஞ்செய்து சுத்தி

ச்சியுடனும் பக்தியுடனும் பாராயணம் செய்யவேண்டும். அதனால் ஸகல ஸித்தியும் முத்தியும் ஸாபத்தையும் தரும் என்றும், இதோடு காவேரி மகத்துவத்தையும் உபதேஸித்து, பிறகு திரௌபதி ஸாபத்திரை இவர்களையழைத்து தக்க நற்புத்திகளையுரைத்து, அவர்களெல்லோர்களிடத்தி லும் விடைபெற்று பலராமனுடன் துவாரகைக்குப் புறப்பட்டுச் சென்றார். கேட்டீரோ! ஹரிச்சந்திர மஹாராஜனே, நீர் துலாகாவேரி ஸ்நாநஞ்செய்து அதன் மகத்துவத்தையும் கேட்டு அப்பௌராணிகருக்குச் செய்யவேண்டிய மரியாதையைச் செய்து பட்டணப்பிரவேஸம் செய்து வைப்பீரேல், ஸகல அபீஷ்டங்களையுமடைவீர் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லையென்று அகஸ்திய மாமுனிவர் கூறி அருளினார்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில் இருபத்தி இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## 23-வது அத்தியாயம்.

## அகஸ்தியர் ஹரிச்சந்திரனுக்கு காவேரியின் உற்பத்தியை யுரைத்தல்.

---

பின்னர் ஹரிச்சந்திரன் அகஸ்தியேஸ்வரரை நோக்கி, "ஸ்வாமி! தாங்கள் இதுவரையில் சொன்ன காவேரியின் பிராபவத்தைக்கேட்க அதியற்புதமாயிருந்தது. ஆயினும் அந்நதியின் உற்பத்தி எங்கே, அதற்கு காவேரி என்ற பெயர் வந்த காரணம் எப்படி? பிறகு அந்நதியே அகஸ்தி

யருக்கு பத்தினியாகி லோபமுத்திரையென்ற பெயர் பெற்றதற்கு ஹேதுவையும், தக்ஷிண கங்கையென நாமமுண்டானதற்குக் காரணத்தையும், அடியவனுக்கு உரைத்தருள வேண்டும்" எனப் பிரார்த்திக்க, அகஸ்தியர் அகமகிழ்ந்து சொல்லுவாராயினர்.

கேளும் ராஜன்! ஸுபத்திரா கலியாணத்தின் பிறகு ஸ்ரீ கிருஷ்ண பகவான் தருமபுத்திரருக்கு துலாகாவேரி மகத்துவத்தை யுரைத்து த்வாரகைக்குச் சென்றபின், தருமரும் தௌமமியரென்னும் தபோதனரை அழைத்து காவேரியின் உற்பத்தி விஷயமாய் வினவின காலத்தில் தௌம்மியரானவர் சொன்னதாவது:— "கேளும் தருமபூபதி! பூர்வம் அதிக விரக்தரும் யோகநிஷ்டராயிருந்த கவேரன் என்ற ராஜருஷியானவர் இமையமலைச் சாரலில் பதினாயிரம் வருடம் வரையில் பிரம்மனை நோக்கித் தவம் புரிகையில், அங்கு பிரம்மனும் பிரஸன்னனாகி, என்ன வரம் வேண்டுமென, அரசருஷி, "ஸ்வாமி! அடியேனுக்கு மோக்ஷமளிக்க வேண்டும்" என, சதுர்முகன் "அரசனே! மோக்ஷமளிக்கு ஸக்தி எனக்கில்லை. ஆகிலும் ஸ்ரீ ஹரியின் மாயையே எனக்குக் கன்னிகையாயிருக்கிறாள். அவளை, உனக்கு புத்திரியாகக் கொடுக்கிறேன். அவள் உனக்கு மோக்ஷமளிப்பாள்" என்று சொல்லி, அம் மாயையை ஸ்மரிக்க, அவள் ஸர்வாபரண பூஷிதையாய் கன்னிகை வடிவத்துடன் எதிர்வர, பிரம்மனும், "பெண்ணே! இந்தக் கவேரனுக்குப் பெண்ணாகி, காவேரி என்ற பெயருடன் நதி ரூபமாய் பூலோகத்திற் பிரவேசித்து, இந்த அரசனையும்

மற்றும் உனது ஜலஸ்பரிஸம் பெற்ற மனிதர்களையும் மோக்ஷமடையச் செய்வாய்" என்று கூறி, தனதிருப்பிடம் சேர்ந்தார். கவேரனும் விஷ்ணு மாயையைப் புத்திரியாக அடைந்தவுடன் அவளை நோக்கி, "பெண்ணே! நீயே ஸாக்ஷாத் ஜகதாம்பிகையான விஷ்ணு மாயை. நான் லௌகிக விஷயத்தில் விரக்தியடைந்து, மோக்ஷகாமியாயிருப்பதினால் எனக்கு மோக்ஷமளிக்கக்கடவை" என்று பலவாறு அவளைப் புகழ்ந்து பேச, காவேரியும், அரசனே! ஸகல லோக பாவனையான யான் உமக்குப் புத்திரியாய்விட்டேன். ஆகையால் உமக்கு மோக்ஷம் கையிலிருப்பதாக நினைத்துக் கொள்ளும். இனி நீர் அபேக்ஷிக்கும் இடம் செல்லலாம்" எனவே, கவேரனும் மஹா விரக்தனாய் தேஸமெங்கும் திரிந்து காலாந்தத்தில் மோக்ஷமடைந்தனன். காவேரியோ லோபமுத்திரையென்ற வடிவையடைந்து தனது புண்ணிய ஜலத்திலேயே ஸ்நாநஞ் செய்து ஸ்ரீமந்நாராயணனை நோக்கி துதிசெய்ய, ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் பிரஸன்னராகி, "பெண்ணே! என்ன வரம் வேண்டும்" என, காவேரியும், "ஸ்வாமி! யான் பூலோகத்தில் நதிரூபமாய் செல்லவும், எனது ஜலத்தில் ஸ்நாநஞ் செய்பவர் எவ்வித பாபம் செய்தவர்களாயினும், அவர்கள் முக்தியடையும் படிக்கும் வரமளிக்க வேண்டும்" எனவே, பகவானும் "பெண்ணே! நீ கேட்டபடி வரமளித்தேன். தவிர அதிபாவனமான ஸஹ்யபர்வதத்தருகில் யான் ஒரு நெல்லிமரமாகயிருக்கிறேன். அங்கு பிரம்மதேவன் விரஜாநதி ஜலத்தை ஸங்கில் ஸமேதமாக தாங்கிவந்து எப்பொழுது எனது பாதத்தில் அபிஷேகம் செய்வானோ, அப்பொழுது

அந்த ஜலத்தினின்றும் தக்ஷிணகங்கையென்ற பெயருடன் நதிரூபமாகச் சென்று எல்லோரையும் பரிசுத்தம் பண்ணக்கடவை. தவிர, நீ சகல புண்ணிய நதிகளிலும் சிறந்தவளாகக்கடவை. யாம் தத்தாத்திரேயரென்னும் நாமத்துடன் உனது ஸிரஸ்தானத்திலிருந்துகொண்டிருக்கிறோம். மேலும் கங்கையானவள் என் பாதத்தினின்றும் உண்டானமையால் நதிகளில் சிறந்தவளாகின்றாள். நான் ஸ்ரீரங்கநாதனாக வந்து உனது மடியில் சயனித்துக்கொள்ளப் போகிறேன். ஆகையால் நீ கங்கையைவிட சிறந்தவளாவாய். ஸக்யாமலக தீர்த்தத்தின் மகிமை மற்றெந்த புண்ணிய நதிக்கும் உண்டாகமாட்டாது. உனது தீர்த்தத்துக்கு ஸங்கமென்றும் ஸத்யாமலகமென்றும் இரண்டு நாமங்கள் உண்டாகப் போகின்றன. இவ்விடத்தில் அகஸ்தியரானவர், தவம் செய்யும் உன்னைத் தமது கமண்டலத்தில் எடுத்துக்கொண்டு இங்கிருந்து ஸஹ்யமலைக்குக் கொண்டுபோவார். நீ லோபமுத்திரையென்ற பெயருடன் அவருக்கு மனைவியாகக் கடவை" என்று சொல்லி அந்தர்தானமாயினர்.

இப்படியிருக்க பிரஹ்மதேவரானவர், அம்மலையிலேயே நித்திய பிரஹ்மச்சாரியாய், இல்லற வாழ்க்கையில் வெறுப்புற்ற, மோக்ஷத்தைக் கருதி, தவம் புரிந்துகொண்டிருந்த அகஸ்தியமா முனிவருக்கு பிரஸன்னமாய், "அகஸ்தியரே! நீர் இங்கு தவம்செய்து கொண்டிருக்கும் லோபாமுத்திரையென்ற காவேரியை விதிபூர்வகமாய் விவாஹம் புரிந்து, ஜலரூபமான இவளை உமது கமண்டலத்தில் எடுத்

துக்கொண்டு, சூரிய சந்திரர்களுடைய மார்க்கத்தைத் தகைந்துகொண்டு ஆகாயமட்டும் அளாவியிருக்கின்ற விந்தியகிரியின், கர்வத்தைப்டக்கி, சஹ்யமலைக்குச் சென்று, அங்கே இந்தக் காவேரியை, நதியாகச் செல்லும்படிச் செய்து, பின்னர் மலயகிரிக்குச் செல்லக்கடவீர்'' எனக் கட்டளையிட்டு தான் அந்தர்த்தானமாயினர். அகஸ்தியரும் அவ்வாறே ஹிமயகிரியின் வடஸாரலில் தவம் செய்து-கொண்டிருக்கும் காவேரியைக் கண்டு, அவளது வடிவழகைப் பார்த்து மெச்சி, அவளை நோக்கி, ''ஓ ஜகதாம்பிகையான காவேரியே! நான் உனது மனோபிப்பிராயத்தையறிந்தேன். ஏன் இன்னும் தியானத்திலிருக்கிறாய்? இங்கே, என்னைக் கண் திறந்துபார்'' என்றுரைக்கவே, காவேரியும் கண்களைத் திறந்து பார்க்க, தன் முன்னிலையில் அகஸ்தியமாமுனிவர் இருப்பதைக்கண்டு வெகு பரபரப்புடன் எழுந்து அவருக்கு அர்க்கிய பாத்திய முதலிய உபஸாரங்களைச் செய்தனள்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்
இருபத்திமூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## 24-வது அத்தியாயம்.

## அகஸ்தியர் லோபமுத்திரையென்ற காவேரியை விவாஹம் செய்துகொண்டது.

பின்னர், அகஸ்தியரும் தன்னை உபஸரித்த காவேரியை நோக்கி, உன்னால் உபசரிக்கப்பட்ட நான் மிகவும்

சந்தோஷமடைந்தேன். இப்பொழுது உன் விருப்பம் யாது? என்று வினவ, அவள், "ஸ்வாமி! யான் தங்களுக்குப் பத்தினியாகயிருக்க விரும்புகிறேன். அது தான் என் விருப்பம். ஆகிலும் நான் பூலோகத்தில் காவேரியென்ற நதிரூபிணியாய்ச்சென்று, ஸகல பாபிகளையும் முக்தியடைவிக்கும்படியாயும், ஸகல புண்ணிய தீர்த்தங்களும் சதா என்னிடத்தில் வஸிக்கக்கடவனவென்றும், வரமளிக்கும் பக்ஷத்தில் யான் தேவரீருக்குப் பத்தினியாகின்றேன்" என, அகஸ்தியர் "லோபமுத்திரையே! முன்னமே பிரமதேவன் உமக்கு இவ்வரங்களையளித்திருக்கையில், யான் அளிக்கவேண்டிய வரம் ஒன்றுமில்லை. உன் மனோபீஷ்டப்படி ஸகலமும் ஆகக்கடவது. எனது கமண்டலத்தில் உன்னை எடுத்துக்கொண்டு பிரம்மதேவனின் ஹம்ஸமான ஸஹ்யகிரியில் திவ்யாமலக சமீபத்தில் உன்னை நதியாகச் செல்லும்படி செய்கிறேன்" எனவே காவேரியும் ஜலரூபமாய் அவரது கமண்டலத்தில் பிரவேசித்ததுமல்லாமல், அகஸ்தியர் அருகில் திவ்யாலங்கார பூஷிதையான ஒரு கன்னிகையாகவும் நின்றாள். உடனே கும்பமுனிவரும் கலியாணத்திற்காக பிரஹ்மதேவனை ஸ்மரிக்கவே, பிரஹ்மா விஷ்ணு மஹேஸ்வரர்கள் மூவரும், இந்திரன் முதலிய தேவகணங்களுடன், ஸபத்னீ ஸஹிதம் தங்கள் தங்கள் வாகனங்களில் ஆரோஹணித்து வந்து சேர்ந்து, அகஸ்தியலோபமுத்திரை இவ்விருவர்களுடைய விவாஹமானது வெகு ஸம்பிரமமாய்ச் செய்வித்துத் தம்பதிகளை ஆஸீர்வதித்ததுமன்றி, காவேரிக்கு வெகு வரங்களையுமளித்தார்கள். அப்பொழுது ஸ்ரீ மஹாவிஷ்ணு அளித்த வரமாவது:— "கங்கையில் மூன்று தினம் ஸ்நா

கம் புரிந்தவனும், யமுனையில் ஐந்து தினம் ஸ்நாநம் செய்தவனும், காவேரியில் ஒருதரம் ஸ்நாநமாடுகிறவனும் ஜன்மாந்தரம் வரையில் புரிந்த பாவங்களைப் போக்கிக்கொள்ளக்கடவன்" என்பது. சிவபிரான் அளித்த வரமாவது:- "ஓ காவேரி! தக்ஷிணதிக்கை ரக்ஷிக்குமாறு நதிரூபிணியாய்ச் செல்லப் போகின்ற உன் உற்பத்தி ஸ்தானமுதல் ஸமுத்திர ஸங்கமம் வரையில் யான் அநேக ருஷிபுங்கவர்களுடன் உனது தீரங்களில் வாஸம் செய்கிறேன்" என்பதாம். இவர்கள் களிப்புடன் பல வரங்களைத் தந்தபின், காவேரியானவள், ஸரஸ்வதிலக்ஷ்மி பார்வதி இம்மூவரையும் நமஸ்கரிக்க, அவர்களும் பல ஆசிகள் கூறி, கணவரிடத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டியது என்ற முறையையும் உபதேஸித்து, பின்னர் எல்லோரும் காவேரீ அகஸ்தியரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அவரவர் யதாஸ்தானம் சேர்ந்தார்கள்.

ஆக்னேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில் இருபத்திநான்காவது அத்தியாயம் முற்றிற்று.

---

## 25-வது அத்தியாயம்.

## காவேரி கமண்டலத்தினின்றும் வெளியிற் புறப்பட்டது.

இவ்வாறு அகஸ்திய முனிவர் தீர்த்த ரூபிணியான காவேரியைத் தனது கமண்டலத்தில் வைத்துக்கொண்டும், லோபாமுத்திரையென்ற ஸ்திரீரூபம்கொண்ட அக்காவே-

ரியைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு, இமயமலையி னின்று தக்ஷிண திக்கை நோக்கிப் புறப்படுகையில், அம் மலையில் தவஞ் செய்துகொண்டிருந்த ஸகல ருஷீஸ்வரர் களும் காவேரியினருகில் சென்று, "தாயே! நாங்கள் எல் லோரும் உனது விவாஹ காலத்தில் அங்கு எழுந்தருளி யிருந்த ஸ்ரீ ஹரியினிடத்தில் எங்களுக்கு மோக்ஷமளிக்க வேண்டும் என்று முறையிட்டோம். அப்போது ஸ்ரீ ஹரி யானவர், எங்களைப் பார்த்து, நீங்களெல்லோரும் காவேரி யானவள் எங்கு நதியாகப் பெருகுவாளோ அங்குச்சென்று அவளது தீர்த்தத்தில் ஸ்நாநபானஞ் செய்துகொண்டு, அவளது தீர்த்தக்கரையில் வஸிப்பீரேல் உங்களுக்கு மோ க்ஷம் ஸித்தமாய் லபிக்கும்" என்றார். ஆகையால் இப்பொ ழுது எங்களுக்கு மோக்ஷமளிக்கக்கடவையென்று பிரார்த் திக்க, காவேரியும் அவர்களை நோக்கி, "ஓ முனிபுங்கவர் களே! இப்பொழுது என்னை என் பர்த்தாவான அகஸ்திய முனிவர் தெற்கே ஸஹ்யகிரிக்குக் கொண்டுபோகின்றார். அங்கு யான் காவேரியென்ற ஓர் மகாபுண்ணிய நதியாகப் பெருகப் போகிறேன். அங்குற்று நீங்கள் எனது தீரத் தில் நியமத்தோடு வஸித்து ஸ்நாநபானஞ் செய்துகொண்டி ருங்கள். யான் உங்களை மோக்ஷமடையச் செய்விக்கி றேன்" என்றாள். பின்னர் அகஸ்தியரும் விந்தியகிரியைக் கிட்டி அதனைக் கையால் தட்டி, "ஓ கிரிராஜனே! யான் தெற்கே சென்று மீண்டுவருமளவும் வானமட்டுமளாவி யிருக்கின்ற உனது ஸரீரத்தைத் தணித்துக்கொண்டிருக் கக்கடவை" என்று நல்லவார்த்தை சொல்லி, அதனைத் தாழ்த்தி, பின்னர் பிரம்மனது ஹம்ஸமாகிய ஸஹ்யா சலத்தையுற்று, அதின்மேரில தனது கமண்டலத்தை

வைத்துக் காவேரியை நோக்கி, "ஓ காவேரி! இதுதான் உனது உற்பத்தி ஸ்தானமாகிய ஸஹ்யாசலம். நீ கமண்டலத்தினின்றும் வெளியே புறப்படுவதற்கு ஏற்ற சமயம் சொல்லுவேன். அதுசமயம் நீ இம்மலையினின்றும் நதியாகப் புறப்படலாம்" என்றுரைத்துத் தனது ஸிஷ்யர்களை நோக்கி, ஓ ஸிஷ்யர்களே! இக் கமண்டலத்திலிருக்கும் காவேரியை யான் வருமளவும் ஸாவதானமாகப் பார்த்துக் கொண்டிருங்கள்" என்றுரைத்து ஸுவர்ணமுகி தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்யுமாறு புறப்பட்டுச் சென்றார். கமண்டலத்திலிருந்த காவேரியும் தன்னுள் நமது பர்த்தாவானவர் நம்மை எப்பொழுதுதான் நதியாகப் பெருகும்படிக் கட்டளையிடுவாரோ தெரியவில்லை. அவர் எத்தனை நாள் சென்றாலும் தம் வாயால் நம்மைப் புறப்படென்று ஒருக்காலும் சொல்லப் போகிறதில்லை. ஆகையால் நாம் புறப்பட இதுதான் நல்ல சமயம். அவரே, முன்னம் நம்மை நோக்கி, நீ ஸஹ்யமலை யடைந்ததும் நதியாகப் பெருகலாம் என்று உத்தரவு கொடுத்திருப்பதால், நமக்கு பர்த்தா வார்த்தை மீறி நடந்த தோஷம் ஏற்படாது என்று கமண்டலத்தினின்று வெளிப்புறப்படத் தீர்மானித்தாள். அது சமயம் பிரஹ்மதேவர், ஹம்ஸாரூடராய் ஸகல தேவர்கள் ஸஹிதம் அந்த ஸஹ்யகிரியை யடைந்து, ஸுவர்ணமுகியில் ஸ்நாநஞ்செய்து ஜபம் பண்ணும் காலத்தில் அங்கு ஸ்ரீ ஹரியின் ஹம்ஸமாகிய ஓர் நெல்லிமரம் அவர் முன் தோன்ற, அவரும் மிக்க ஆச்சரியத்துடன் அதனருகில் செல்ல, திடீரென அம்மரம் மறைந்து ஸ்ரீ ஹரியே பிரஸன்னமாய் சேவை தந்தனர். உடனே வானத்தில் ஓர் அசரீரி வாக்கு உண்டாயிற்று. அதாவது: "ஓ பிரம்மனே!

இங்கு ஸ்ரீ ஹரியானவர் நெல்லி (ஆமலக) விருக்ஷமாயிருக்கிறார். இவரை நீ ஆராதிக்கக் கடவை" என்பது. இங்ஙனம் அசரீரி வாக்கைக்கேட்ட பிரமன், மறுபடியும் விருக்ஷ ரூபங்கொண்ட பகவானுக்கு விரஜா தீர்த்த பூரிதமான தனது கமண்டலத்தினின்றும் தீர்த்தத்தை ஸங்கில் வார்த்து அம்மாத்தடியில் அபிஷேகம் செய்து திவ்விய புஷ்பங்களாலும் துளஸீதளங்களாலும் அர்ச்சித்துப் பலவாறு ஸ்தோத்திரம் செய்தார். அதுசமயம் அசரீரி சொன்னதாவது: "ஓ காவேரி! இப்பொழுது பிரம்ம தேவர் விரஜா தீர்த்தத்தை காயத்ரீ ரூபமான ஸங்கில் வார்த்து விஷ்ணுவினுடைய ஹம்ஸமான நெல்லிவிருக்ஷத்தின் பாதஸ்தானத்தில் அபிஷேகம் செய்கின்றார். இது, துலாவிஷு புண்ணியகால தினமாகையால் நீயும் கமண்டலத்தினின்றும் புறப்பட்டு விரஜா தீர்த்தத்துடன் சேர்ந்து திவ்யாமலக ரூபியான பகவானது பாதத்தை அலம்பிக்கொண்டு செல்லலாம்" என்பதே. இந்த அஸரீரியைக் கேட்ட காவேரியும் மிக்க ஆனந்தத்துடன் கமண்டலத்தினின்றும் புறப்பட்டு அநேக புண்ணிய தீர்த்தங்களுட்ன் சேர்ந்து ஸஹ்யாமலகத்தினது வழியாய்ப் புறப்பட்டனள். அதுசமயம் இந்திரனும் மேகங்களை ஏவி வர்ஷிக்கச் செய்ய, அதனால் காவேரியும் அதிக 'ஜலப்பிரவாஹத்துடன் பிரவாஹித்தனள். இப்பால் ஸ்நாநஞ் செய்யப்போன அகஸ்தியரும் திரும்பிவந்து பார்க்க, கமண்டலம் கீழே உருண்டுகிடப்பதையும், காவேரியில்லாதிருப்பதையும் பார்த்து வெகுவிஸனத்துடனும் கோபத்துடனும் ஸீஷர்களை நோக்கிக் கேட்க, அவர்களும் "ஸ்வாமி! நாங்கள் மழைக்காக மரத்தடியிற் சென்று ஒண்டியிருந்தோம். அத்தருணத்தில் காவேரி

தானே நதியாகப் பிரவாஹித்தனள். நாங்கள் எம்மால் கூடியமட்டும் அவளைத் தடுத்துப் போகவேண்டாமென்று சொன்னோம். என்ன சொல்லியும் கேளாது, 'நான் நதியாகச் செல்லுவது உங்களுடைய குருவுக்குப் பிரியந்தான்! அவர் உங்களைக் கோபிக்கமாட்டார் போங்கள்' என்று சொல்லி, வெகுவேகமாய்ப் புறப்பட்டுப்போய்விட்டாள்" என்றார்கள்.

*ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில் இருபத்தி ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.*

---

## 26-வது அத்தியாயம்.
## அகஸ்திய காவேரி ஸம்வாதம்.

அகஸ்தியரானவர் தனது வஷிஷர்கள் சொல்லிய வசனத்தைக் கேட்டமாத்திரத்தில், காவேரியினது பிரிவையும் அவள்மேலுள்ள விரகத்தையும் சகிக்கக்கூடாதவராய் அவளை இங்கு மங்கும் தேடிக் காணாது மகா துக்கமடைந்து பலவாறு துதிசெய்யவே, காவேரியும் ஸஹ்யபர்வதத்திற்கு இரண்டு குரோசத்திற்கு (ஒரு குரோசம் என்பது இரண்டு மைல்) அப்பால் அவர் கண்ணுக்குத் தோன்றினள். அப்போது அகஸ்தியரும் அவளை நோக்கி, "ஓ காவேரி! நீ என் வார்த்தையை மீறி இங்ஙனம் நதியாகச் செல்லலாமா? அப்படிச் சென்றாலும் என் முன்னிலையில் செல்லக்கூடாதா? எனக் காவேரியும், "ஸ்வாமி! நான் தேவரீர் கட்டளையை மீறவில்லை. ஸஹ்யகிரிக்குச்சென்றவுடன் நதியாகப் பிரவேசிக்கக்கடவை" யென்று தேவரீ

ராலும் பிரம்மனாலும் முன்னமே கட்டளையிடப்பட்டிருக்றேன். மேலும், இப்பொழுது துலாவிஷு புண்ணியகாலமானதாலும், பிரம்மா, விரஜா தீர்த்தத்தினால் ஸஹ்யாமலகரூபியான பகவானை அபிஷேகம் செய்தமையாலும், அந்த விரஜா தீர்த்தத்துடன் புறப்படும்படி ஆகாஸவாணி, கூறியபடியாலும் யான் நதியாகப் புறப்பட்டுவிட்டேன். ஆகையால் என்மீது தயைகூர்ந்து யான் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று பலவாறு சொல்லிச் சமாதானப்படுத்த, அகஸ்தியரும் மகிழ்ந்து காவேரியை நோக்கி, "ஓ காவேரி! நீ நதியாகச் செல்லுவதில் எனக்கு மிகவும் சந்தோஷந்தான். நீ, ஸாக்ஷாத் பகவான் மாயையென்றும், பிரஹ்மபுத்திரி யென்றும், ஸகல பாபிகளையும் ரக்ஷிக்க வந்த ஜகதம்பிகையென்றும் யானறிவேன். ஆயினும் உன்மீதுள்ள பிரீதியால் உன்னைக் காணவேண்டுமென்ற ஆவலாலும் யானிங்ஙனம் உரைத்தேன். இனி நீ உன் இஷ்டப்படி செல்லலாம். உனது தீர்த்தம் கங்கை முதல் ஸகல புண்ணிய தீர்த்தங்களைக்காட்டிலும் மிகவும் பரிசுத்தமானது. உனது ஸ்தானத்தில் பகவான் தத்தாத்திரேயரென்ற நாமத்துடன் விளங்கிக்கொண்டிருக்கிறார். இன்று முதல் எல்லோரும் உன்னைக் காவேரி யென்றும், தக்ஷிணகங்கை யென்றும், திவ்யதேவி யென்றும் சொல்லுவார்கள். மேலும் உனது தீர்த்தத்திற்கு ஸஹ்யாமலக தீர்த்தம் என்று பிரஸித்தியுண்டாகும். உனது நதிதீரத்தில் யான் அநேக ருஷிகளுடன் ஸதாவாசஞ் செய்கிறேன். உனது தீர்த்தத்தில் ஸ்நாந திலதர்ப்பணாதிகள் செய்பவர்கள் எவ்வித பாவிகளாயிருந்த போதிலும், அப்பாவங்களையெல்லாம் போக்கிக்கொண்டு மோக்ஷ

ஸாம்ராஜ்யத்தை அடையக்கடவார்கள். மேலும் உனக்கு ஒரு இரகஸியம் கூறுகிறேன் கேள். கங்கை முதலிய புண்ணிய நதிகளும், தீர்த்தங்களும், தங்களுடைய தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்யும் பாபிகளுடைய பாபங்களின் சேர்க்கையால் மிகவும் கலக்கமடைந்தவர்களாய்த் தங்களையடைந்த அப் பாபங்களைப் போக்கிக்கொள்ள பிரம்மனிடம் சென்றார்கள். அப்பொழுது பிரம்மனும் ஸ்ரீ ஹரியினது ஆக்கினைப்படி அவர்களை நோக்கி, "ஓ புண்ணிய தீர்த்தங்களே! நீங்கள் எல்லோரும் துலா விஷு புண்ணிய காலத்தில் காவேரியிலும் ஸஹ்யாமலகத்தினருகிலும் ஸ்ரீ ரங்கநாதன் ஜம்புகேஸ்வரன் இவர்கள் ஸந்நிதிக்கருகிலும் சென்று ஸ்நாநஞ் செய்வீர்களேல் நீங்கள் பரிஸுத்தர்களாவீர்கள் என்று சொல்லியிருப்பதால், துலா சங்கிரமண காலத்தில் அப் புண்ணியத் தீர்த்தங்கள் யாவும் உம்மைவந்து அடையும்" என்றுரைத்து தனது ஸிஷ்யர் எழுபேருடனும் சென்றார். பின்னர் காவேரி அநேக புண்ணிய தீர்த்தங்களோடு ஏகோபித்து திரண்ட அலைகளுடனும், நுரைகளுடனும், குமிழிகளுடனும் மகா பயங்கரமான வேகத்துடனும், மரம் செடிகொடிகளையும் அடியோடு பிடுங்கிக்கொண்டு வேதகோஷம் போன்ற சத்தத்துடன் அநேக காடுகளையும் மலைகளையும் கடந்து சிலவிடங்களில் நேராகவும், சிலவிடங்களில் வக்கிரமாகவும், இன்னும் பலவிடங்களில் மண்டலாகாரமாகவும் இங்ஙனம் வெகு விநோதமான காக்ஷியுடன் புறப்பட்டனள்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்
இருபத்தி ஆருவது அத்தியாயம் முற்றிற்று.

---

## 27-வது அத்தியாயம்

## தேவர் முதலானோர் காவேரியைத் தரிஸித்தது.

இங்ஙனம் வெகு விநோதமான காக்ஷியுடன் புறப்படும் காவேரியைத் தரிஸனம் செய்யத் தேவர்கள், கந்தருவர்கள், கிங்கரர்கள், சித்தர்கள், சாரணர்கள், கிம்புருஷர்கள், பிதிர்கள் முதலிய எல்லோரும் திவ்விய விமான ரூடராய் வந்து, காவேரிநதி கரைபுரண்டு செல்லும் காக்ஷியைக் கண்டு கண்குளிரப் பார்த்து வெகு ஆனந்தமுற்றார்கள். அப்பொழுது தேவர்கள் அக்காவேரியின்மீது புஷ்பமாரி பொழிய, கந்தருவர்கள் திவ்யகானஞ் செய்ய, அப்ஸரஸ்திரீகள் நாட்டியமாட, மற்ற எல்லோரும் ஜய ஜயவென்று துதித்தார்கள். பிரம்மா விஷ்ணு மகேஸ்வரர்களும், ஸனகாதி ருஷிகளும் காவேரியின் பிரவாஹத்தைத் தரிஸிக்குமாறு அங்குற்றார்கள். அப்பொழுது தேவர்களெல்லாம் அடங்கா மகிழ்ச்சியுடன் ஒருவருக்கொருவர் உரையாடிக் கொள்வாராயினர்.

"ஆகா! இக்காவேரியின் மகத்துவமே மகத்துவம். இதன் மகிமையை யாரறிவர். இனி நாம் தன்னியரானோம். ஏனெனில், சகல மாந்தர்களும் இக்காவேரியில் நீராடி, நம்மையுத்தேசித்து யாகயக்ஞங்களும் திலதர்ப்பணாதிகளும் புரிந்து, நமக்குத் திருப்தி செய்விப்பார்கள்" என்று சொல்லிக் காவேரியைப் பலவாறு புகழ்ந்து பேசினார்கள். பிதிர் தேவதைகளும் அவ்வாறே "இனி நமது

வம்ஸத்தவர்களும் இக்காவேரியில் ஸ்நாநாதி, சிராத்த தினத்தில் தர்ப்பணாதிகளைச் செய்து, நமக்குத் திருப்தி பண்ணி வைப்பார்கள்" என்றும், பின்னர் ருஷிகளும் மற்றுமுள்ளவர்களும் அத் தீர்த்தத்தை நோக்கி, "இது மனிதர்களுடைய பாபங்களைப் போக்கவே நதி வடிவம் பெற்றது. இதில் பித்ருக்களை உத்தேசித்து திலதர்ப்பணாதிகளைச் செய்பவர் யமதண்டத்தால் பாதிக்கப்படமாட்டாது ஸ்ரீ வைகுண்டமென்னும் மீளாப்பதவியடைவர். தாமரை, குமுதம், உத்பலம் (கீழாநெல்லி) கல்ஹார முதலிய மலர்களால் அலங்காரமுடையது இக் காவேரி. மேலும் லக்ஷ்மீ நாராயண ஸிவ ஸக்தி வடிவமானது" என்று பலவாறு துதி செய்தார்கள். பின்னர் பிரஹ்மா விஷ்ணு மஹேஸ்வரர்களும் தனித்தனியாகக் காவேரிக்குப் பல வரங்களைத் தர விரும்பி, பிரஹ்மன், "ஓ காவேரி! நாஸ்திகர் முதலிய மகா பாபிகளாயினும், பரதார, பரத்திரவ்யத்தை அபகரித்த தூர்த்தர்களாயினும், உனது ஜலத்தில் ஸ்நாநஞ் செய்த மாத்திரத்தில் மகா பரிஸுத்தர்களாகி என் பதவியை யடையக்கடவார்கள்" என்றார். சதாசிவன், "ஓ காவேரி! ஸ்வேதாரண்யத்தில், நீ ஸமுத்திரத்துடன் ஸங்கமிக்குமிடத்தில் யான் ஸதா வஸித்துக் கொண்டு உனது ஜலத்தில் ஸ்நாநபானஞ் செய்பவர்களுக்கு ஸப்தஸாகரத்திலும் அர்த்தோதய புண்ணியகாலத்தில் ஸ்நாநஞ் செய்பவரடையும் பலனையளிப்பதேயன்றி, கயாவில் ஆயிரம் ஸ்நாநம் நியமநிஷ்டையுடன் செய்தோர் அடையும் பலனை உன்னிடம் ஸ்நாநமாடுபவர்களுக்குத் தவறாது கொடுப்பேன்" என்றார். ஸ்ரீ மஹாவிஷ்ணுவும், "ஓ கவேரபுத்திரி! உனக்கு யாது வரம் வேண்டுமோ

அதைக் கேட்பாயாகில் அட்டியின்றி அளிக்கிறேன்'' என, காவேரியும், "ஓ தேவனே! அடியாள்பேரில் கிருபையிருக்கும்பக்ஷத்தில், மிக பாபிகளாயும், துராசாரர்களாயும், வேதஹீனர்களாயும், குருப்பிராம்மணத் தவேஷிகளாயுமிருக்கிற பிராம்மணர் முதல் சகல வர்ணத்தாரும் என் ஜலத்தில் ஏகாதசி புண்ணிய தினத்தன்று ஒரு தரம் ஸ்நாநஞ் செய்தமாத்திரத்தில் அவர்கள் செய்த தோஷங்களையும் நீங்கி யோகிகளாலு மடைவதற்கரிதான தமது வைகுண்டத்தை யடையவேண்டும்'' என்று கேட்க, உடனே ஸ்ரீமகாவிஷ்ணுவும் அவளை நோக்கி, "அவ்வாறே வரம் தந்தேன். மேலும் இன்னொரு வரமும் தருகிறேன், அதாவது—உனது தீர்த்தத்தில் எவ்விடத்திலேயாவது துலாமாஸத்தில் அதிகாலையில் ஸ்நாநஞ்செய்து எமக்கு சேவை செய்பவர் எமது பதவியை யடையக்கடவர்கள்'' என்று இரண்டாவது வரமும் தந்தார். இவ்வரங்களைப் பெற்ற காவேரியோடு ஸாஜ்யோதிகை, கங்கை யென்ற இரண்டு புண்ணிய நதிகளும் சேர்ந்து காவேரியை பூஜித்தன. இவ்விரண்டு நதிகளும் காவேரியுடன் சங்கமமாகும் கட்டத்தில் ஸ்நாநஞ் செய்பவர்கள் ஸர்வபாபங்களினின்றும் விடுபட்டு முக்தராவார்கள். இப்படி பிரக்யாதிபெற்று சென்ற காவேரி சற்று தூரம் சென்று, ஹேமவதி, கபிலை என்ற நதிகளில் ஸங்கமமடைந்து கடைசியில் ஸாகரத்தோடு சேர்ந்து இன்புற்றது. மேல்சொன்ன ஹேமவதி, கபிலை இவைகள் காவேரியுடன் சந்திக்குமிடங்களில் ஸ்நாநஞ்செய்பவர் சகல பலனையுமடைவார்கள். இவ்விரு நதிகளுடைய ஸங்கமங்களில் ஸிரார்தாதிகள் செய்பவர்களுடைய பித்ருக்கள் பஹு திருப்தியடைவார்கள். இங்கு

வாஸம் செய்பவர் நைமிஸ வனவாஸ பலனை அடைவ தோடு நூறு துலாதான பலனையும் பெறுவார்கள். இது சத்தியம். மேலும், ஸாக்ஷாத் விரஜையே இக்காவேரி ரூப மாய் வந்திருக்கின்றது. ஸ்ரீவைகுண்டமே ஸ்ரீரங்கமாகப் பரிணமித்திருக்கிறது.

இக்காவேரியின் இருகரைகளிலும் உற்பத்தி ஸ்தானம் முதல் சமுத்திர ஸங்கமம் வரை ஆங்காங்கு அநேக சிவா லயங்களும் விஷ்ணுவாலயங்களும் உண்டாயின. அநேக ருஷிகணங்களும் பிராஹ்மண ஸ்ரேஷ்டர்களும் இக்காவேரி யின் தீரத்தில் வாஸஞ் செய்து கொண்டு ஸதா ஜபதபங் களைப் புரிந்து கொண்டிருக்கின்றனர். ஆகையால், எவ னொருவன் காவேரியில் ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தில் துலா விஷு புண்ணிய காலத்தில் ஸ்நாநம் செய்து தனது பித்ருக் களை உத்தேஸித்து திலதர்ப்பணாதிகள் செய்கிறானோ, அவன் குருக்ஷேத்திரம் கயை முதலிய புண்ணிய க்ஷேத் திரங்களில் அநேக மாயிரம் ஸிராத்தம் செய்த பலனைப் பெறுவான். காவேரியினது மகிமையானது இத்தன்மை யானதென்று ஒரு நாவால் சொல்லற்கில்லையென்று முனிவர் கூறி முடித்தனர்.

ஆக்கினேய புராணத்தில் துலா காவேரி மகத்துவத்தில்
இருபத்தேழாவது அத்தியாயம் முற்றிற்று.



## 28-வது அத்தியாயம்.

## ஸமுத்திர ராஜன் காவேரியை விவாகஞ் செய்து கொண்டது

பின்னர் முன் அத்தியாயத்தில் சொல்லிய பிரகாரம் காவேரி நதியானது ஸாகரத்தை வந்தடையு முன், வாயு பகவான் வருணபகவானது கட்டளைப்படி அநேக அப்ஸரஸ்ஸுக்களோடுகூட காவேரியை எதிர் சென்றழைத்தனன். அது சமயம் காவேரிக்கும் ஸமுத்திர ராஜனுக்கும் நடக்கப்போகும் விவாஹத்திற்காக பிரஹ்மா, விஷ்ணு, ஈஸ்வரன், மற்றும் அநேக தேவர்களும் தங்கள் தங்கள் விமானங்களில் ஆரோகணித்து வந்து சேர்ந்தார்கள். இவ்விருவர்களின் விவாஹமானது ஸ்வேதாரண்ணியத்தில் வெகு ஸம்பிரமமாய் நடந்தது. அப்பொழுது தேவதுந்துபிகள் முழங்கின. கந்தருவர்கள் கானம் செய்யவும், அப்ஸரஸ்ஸுகள் நாட்டியமாடவும், இவ்வளவு கோலாஹலத்துடன் பிரஹ்ம தேவரானவர் மஹேஸ்வரரை முன்னிட்டுக் கொண்டு தன் புத்திரி காவேரியை ஸமுத்திர ராஜனுக்கு கன்னிகா தானம் கொடுத்தார். பின் திரிமூர்த்திகளும காவேரிக்கு பல வரங்களைத் தந்து தங்கள் யதாஸ்தானம் சென்றார்கள். காவேரி ஸமுத்திர ஸங்கமத்தில் துலா ஸங்கிரமண புண்ணிய காலத்தில் ஸ்நாநஞ் செய்து தர்ப்பணாதிகள் செய்பவரடையும் பலனைச் சொல்லுவதற்குச் ஸாக்ஷாத் ஸ்ரீ ஜனார்த்தனர் தான் வல்லவராவர். ஸமுத்திர ஸங்கம ஸ்நாநம் புரிபவர் புத்திர பலம் தனலாபம் கன்னிகா லாபம் ஆயுர் லாபம் மோக்ஷப் பிராப்தி முதலிய

வைகளைப் பெறுவார்கள். சுருங்கச் சொல்லில் ஒருவன் காலையில் எழுந்து பயபக்தியுடன் காவேரி! காவேரி!! காவேரி!!! என்று மும்முறை உச்சரிப்பானேயானால், அவன் துலாவிஷுவில் காவேரி ஸ்நாநம் புரிந்தவரடையும் பலனைப் பெறுவான். உதாரணமாக மகாபாபியான சந்திர காந்தையென்பவள் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் ஒரு தடவை காவேரி ஸ்நாநஞ் செய்து ஸ்வர்க்கமடைந்தனளன்றோ? ஆதலின் ஸகல மூடாத்மாக்களும் காவேரியினது மகிமையையறிந்து கொள்வதற்கு இதுவே நிதர்ஸனம எந்த விதவைகள் ஞான வைராக்கிய ஹீனர்களாய் கெட்ட செய்கைகளைச் செய்துகொண்டிருக்கிறார்களோ? அவர்கள் இக்காவேரியைத் தவிர மற்றும் எந்த புண்ணிய தீர்த்தமாடினும் பாபவிமோசனம் அடையாது, ஆகிலும் காவேரி தீரத்தில் வஸிக்கிறவர்கள் ஸதா ஸத்கருமமே புரிந்து வரவேண்டும். துஷ்கிருத்தியங்கள் செய்யக் கூடாது. காவேரி தீரத்தில் புரிந்த புண்ணியமானது எவ்வாறு அக்ஷயமாகுமோ? அவ்வாறே அத்தீரத்தில் செய்த பாபங்களும் அக்ஷயமாகும். மற்ற ஸ்தலங்களில் செய்த பாபங்களுக்கு பிராயச்சித்தம் இக்காவேரி தீர்த்தம் தான். இக்காவேரி தீரத்தில் செய்யும் பாபத்திற்கு பிராயச்சித்தமே கிடையாது. ஆகையால் காவேரி ஸ்நாநஞ் செய்பவர்கள் அனைவரும் ஆசார ஸம்பன்னர்களாயிருந்து ஸ்ரீரங்கநாதர் ஸந்நிதியில் அற்பசி மாதத்தில் துலா ஸ்நாநஞ் செய்து இக்காவேரியின் புராணத்தை பௌராணிகளிடம் பக்தி ஸிரத்தையோடு ஸிரவணம்பண்ணி அவருக்கு வேண்டிய வெகுமதி செய்து ஸுகந்த புஷ்பங்களைக் கொண்டு அர்ச்சிக்கவேண்டும். பௌராணிகரை அவ

மதிப்பவன் அகோரமான ஆரண்யத்தில் ஓர் பிரஹ்ம ராக்ஷஸனாய்ப் பிறப்பான். ஆகையால் முதலாவது துலா மாஸத்தில் புராண ஸ்ரவணம் செய்யவேண்டும். "ஓ தரும புத்திரரே! இக்காவேரியின் மகிமையை எனக்குத் தெரிந்தவரையில் லவலேஸ மாத்திரம் சொன்னேன், என்று உரைத்தார் தௌம்மிய முனிவர்." இதைக் கேட்ட தருமனந்தனரும் அதிக ஆச்சர்யமும் ஆனந்தமுமுற்று அத்தௌம்மியரை அன்புடன் அரியாஸனத்தில் அமரச் செய்து அன்னவருக்கு அநேக உபசாரங்களைச் செய்து அடிபணிந்தார். தௌம்மியரும் ஐவரசருடைய உபசாரத்தைப் பெற்று வெகு சந்துஷ்டியுடன் அவருக்கு பலவாறு புகழ்ந்து வாழ்த்தி தமது இருப்பிடம் சென்றார். கேட்பீரோ மஹாராஜனே! என்று அகஸ்திய மாமுனிவர் ஹரிச்சந்திரனை நோக்கி, இங்ஙனம் காவேரியின் பிரபாவத்தையுரைத்து முடித்தனர்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்
இருபத்தியெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

---

# 29-வது அத்தியாயம்.

## ஹரிச்சந்திரன் காவேரியின் மகத்துவத்தைப் புகழ்ந்தது.

ஹரிச்சந்திர மஹாராஜனுக்கு துலா காவேரியின் மகத்துவத்தை சவிஸ்தாரமாய் எடுத்துரைத்த பின் மறுபடியும் கும்பமுனிவர் அரசனை நோக்கி, "ஓ ராஜ ஸ்ரேஷ்டரே! நீரும் ஸ்ரீரங்க க்ஷேத்திரம் சென்று காவேரியில் ஸ்நானம் செய்து ஸ்ரீரங்கநாதனை ஸேவித்து அங்கு மூன்று நாள் வாஸம் செய்து அங்குள்ள பிராம்மணர்களுக்கு தானதருமங்களைக் கொடுத்தும் ஸ்ரீரங்கநாதருக்கும் அநேக மண்டபப் பிராகாராதி கைங்கரியங்களைச் செய்து, மீண்டும் இங்குற்று அஸ்வமேத யாகத்தை செய்வாயேயானால், நீர் விந்தமரென்றும் மஹாருஷியை மதிக்காமலும் அவரை மரியாதை காட்டாமையாலும், அதனால் உண்டான பிராஹ்மணாபசார தோஷத்தினின்றும் விடுபட்டு ராஜ ஸுகபோகங்களை அனுபவித்து அந்திய காலத்தில் பிராஹ்மலோகத்தையடைவீர்" என்றார். இவை யாவும் கேட்ட அரசன் பேரானந்தமடைந்து அம்முனிவரை பல முறை நமஸ்கரித்து கந்த புஷ்பங்களால் பூஜித்து அஞ்ஜலி செய்தும், அவரை நோக்கி—"ஓ முனீஸ்வரரே! இன்று தான் நான் தன்னியனானேன் என் குலம் ஈடேறிற்று. அடியேனது பிதிர்களும் திருப்தியடைந்தார்கள். இன்று தான் என்னால் ஸகல தருமங்களும் செய்யப்பட்டன. ஏனெனில் நான் தற்செயலாய் தேவரீர் ஸந்நிதியை யடைந்து தங்கள் திருவாக்கினின்றும் அதியற்புதமும்

மகாபுண்ணியம் நிறைந்த இத்துலாகாவேரி மகாத்மியத்தை சவிஸ்தாரமாய் கேட்கும் பாக்கியத்தைப் பெற்றேன். ஏதோ பூர்வஜன்மாந்தரத்தில் என் முன்னோர்களின் பூஜா பல விசேஷத்தினால் அடியவனுக்கு தங்களைப்போன்ற மஹான்களின் ஸஹவாஸம் கிடைத்தது.

இனியான் ஸம்ஸார ஸாகரத்தினின்றும் கரையேறிவிட்டேன்" என்று அவரை பலவாறு கொண்டாடி அவருடைய பாதகமலங்களில் பத்து லக்ஷம் ஸுவர்ணபுஷ்பங்களால் அர்ச்சித்து, அன்னவரின் ஆவீர்வாதம் பெற்று அவரிடத்திலும் மற்றும் அங்குள்ள ருஷீஸ்வரர்களிடத்திலும் விடைபெற்றுக் கொண்டு, ரதத்தில் ஆரோஹணித்து, அநேக சேனாசைன்யங்களுடன் புடைசூழ்ந்து ஸகல வாத்திய கோஷங்களுடன் ஸ்ரீரங்க க்ஷேத்திரம நோக்கி புறப்பட்டுப் போகையில் மார்க்கத்தில் தென்பட்ட கிராமங்கள் நகரங்கள் முதலியவைகளின் காக்ஷியைக் கண்டு களித்து, ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்து, அங்கு, அகஸ்தியர் உரைப்படி மூன்று நாள் இருந்து விதிப்படி துலா காவேரி ஸ்நாநஞ் செய்து, அங்கு புராணஸ்ஸிரவணம் பண்ணி அந்தப் பௌராணிகர்களுக்கு அடிபணிந்து அநேக ஸுவர்ணபுஷ்பங்களை வர்ஷம்போல் வர்ஷித்து, ஸ்ரீரங்கநாதனையும் ஸேவித்து, அநேக மண்டப கோபுர பிராகாரங்களைக் கட்டுவித்து சந்திர புஷ்கரணியில் ஸ்நாநஞ் செய்து, மீண்டும் குருக்ஷேத்திரமடைந்து அகஸ்தியேஸ்வரரை வணங்கி, "ஸ்வாமி! தேவரீர் வாக்குப் பிரகாரம் ஸ்ரீரங்கம் போய் யாவையும் செவ்வையாக முடித்து வந்தேன். இனி அடியேனுக்கு அஸ்வமேத யாகத்தை நடத்திவைக்க

வேண்டும்'' என்று பிரார்த்திக்கவே, கும்பமுனிவரும் அங்கிருக்கும் ருஷிகளைக் கொண்டு மிக ஸம்பிரமமாக அந்த அஸ்வமேதயாகத்தை விதிப்படி நடாத்தி வைத்தார். ஹரிச்சந்திரன் யாகத்தை பூர்த்தியான பின்பு மஹா சந்தோஷ சித்தனாய் அகஸ்தியாதி முனீஸ்வரர்களை அடி பணிந்து தண்டனிட்டு எல்லா ருஷிகளிடத்திலும் ஆசீர் வாதம்பெற்று அவர்களிடம் விடைபெற்று வெகு கோலா ஹலத்துடன் தன் நகரமாகிய அயோத்திமா நகருக்குச் சென்றான். தன் நகரடைந்த ஹரிச்சந்திர மகாராஜன் மகாசந்தோஷமடைந்தவனாய் தன், நகரமாந்தர்களுக்கெல் லாம் விருந்தளித்தும் பிராம்மணர்களுக்கு அநேக தான தருமங்களைச் செய்தும், வெகு நீதியோடும் அரசாண்டு வருகிறான்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்
இருபத்தி ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

# 30-வது அத்தியாயம்.

## காவேரி ஸமுத்திர ஸங்கமத்தின் மகிமை.

இங்ஙனம் தால்பிய மஹாருஷியானவர், தர்மவர்மா வெனும் அரசனை நோக்கி "ராஜன்! நான் இது வரையில் எடுத்துச் சொல்லிய காவேரியின் மகிமையையும், அக்காவேரியில் ஸ்நாநம் செய்வதால் ஏற்படும் புண்ணிய பலத்தையும், யாகயக்ஞ தான தருமங்கள் செய்வதால் ஏற்படும் நற்பதவியையும், அற்பசி மாதத்தில் துலா சங்கிரமண காலத்தில் அன்னதானம் செய்வதால் ஏற்படும் ஸ்ரீ மோக்ஷாதிகாரத்தைப்பற்றியும் எடுத்துக்கூறி, பின்னும் சொல்லுகின்றார். "அரசனே! யாவனொருவன் இக்காவேரியின் விவாஹ கட்டத்தை விசேஷமாக வெள்ளிக்கிழமையன்று கேட்கின்றானோ, அவன் அனேக புத்திர பௌத்திரர்களுடன் சுகமாக வாழ்வான். தவிர அந்தகர், செவிடர், முடவர், ஊமைகள், மலடிகள், பாபிகள், முதலியவர்கள், துலாமாஸத்தில் இந்தக்காவேரியின் கல்யாண வைபவத்தைக் கேட்பதால், அவர்கள் செய்த பாபங்களை அகலச்செய்து மகா புண்ணியசாலிகளாவர்கள். ஆனபடியால், நீரும் துலாகாவேரியில் ஸ்நாநம் செய்யக்கடவீர்" என்று, தால்பிய முனிவர் அரசருக்கு காவேரியின் மகத்துவத்தையுரைக்கவே, தர்மவர்மாவெனும் அரசனும் ஆனந்த பரவசனாய் அம்முனிவருக்குச் செய்யவேண்டிய உபசாரங்களை சாங்கோபாங்கமாகச்செய்து, அவரைப்பல

வாறு கொண்டாடினுன். தால்பியரும் தனக்கு அரசன் செய்த உபசாரங்களுக்கு மிகவும் சந்தோஷமடைந்து, "அரசனே! நீர் நல்ல புண்ணியவானுனபடியால் இப் புண்ணிய சரித்திரத்தைக்கேட்கும்படி உமக்கு புத்தியுண்டாயிற்று. நல்லது நான் சென்று வருகிறேன். எனக்கு விடையளியும்" எனவே, அரசன் அவரைப் பிரிய மனமில்லாது மீண்டும் அவரிடத்தில் அர்த்தோதய மகோதய புண்ணிய காலத்தில் துலா காவேரி ஸ்நாநஞ் செய்வதால் ஏற்படும் பலனையும் அந்த அர்த்தோதய மகோதயங்களின் விசேஷங்களையும் இராமஸேது தனுஷ்கோடி இவைகளின் மகத்துவத்தையும் கேட்டறிந்த பின்னர், அம்முனிவரைப் பிரியமனமில்லாது மிகவும் மனக்கிலேஸத்துடன் அவருக்குச் செல்ல விடையளித்தனன். அப்பால் தால்பிய முனிவர் விடைபெற்று தமது ஸிஷ்யர்களுடன் தன் தபோவனமடைந்தார். கேட்டீர்களோ! ஸௌனகாதி முனீஸ்வரர்களே! இப்பொழுது யான் உங்களுக்குக் காவேரியின் மகிமையில் இலேஸமாத்திரம் சுருக்கமாய் எமக்குத் தெரிந்தமட்டில் எடுத்துக் கூறினேன். அதை விரிவாகக் கூறவேண்டுமானுல் எனக்குத் தாமாகாது என்று ஸூத புராணிகர் கூறினர். ஸௌனகாதி ருஷிகளும் வெகு சந்தோஷமும் ஆச்சரியமும் ஆனந்தமுமுற்றவர்களாய் அந்த ஸூதமாமுனிவரை அடிபணிந்து கந்த புஷ்பாக்ஷதைகளால் அர்ச்சித்து வெகுவாகக் கொண்டாடினுர்கள்.

ஆக்கினேய புராணத்தில் துலா காவேரி மகத்துவத்தில் முப்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

ஓம் தத்ஸத்



वंदे नवघनश्यामं पीतकौशेय वाससम् ।
सानंदं सुंदरंशुद्धं श्रीकृष्णं प्रकृतेःपरम् ॥

வந்தே$^{3}$ நவக$^{4}$னஸ்யாமம்
பீதகௌஸேய வாஸஸம் ।
ஸாநந்த$^{3}$ம்ஸுந்த$^{3}$ரம் ஸுத்த$^{4}$ம்
ஸ்ரீக்ருஷ்ணம் ப்ரக்ருதே:பரம் ॥

மங்களம், மங்களம், மங்களம்.

சுபம்.

# பொருளுதவி செய்த ஸ்ரீமதிகள்.

ஈஸ்வரி. வெ. சீதம்மாள்.
ஈஸ்வரி. சே. ராஜாமணி அம்மாள்.
ஈஸ்வரி. ரெ. ரத்னமணி அம்மாள்.
ஈஸ்வரி. சு. சீதாலெக்ஷிமி அம்மாள்,
ஈஸ்வரி. பா. ஸாவித்திரி அம்மாள்.
ஈஸ்வரி. கி. பத்மாவதி அம்மாள்.
கோட்டைவீட்டு. ரா. சீதம்மாள்.
தொப்பே. ரா. விஸாலாக்ஷி அம்மாள்.
மூலா. ரா. ஸாவித்திரி அம்மாள்.
புள்ளையார்நாட்டாமை. சா. ஜெயமணி.
திம்மா. கி. வத்ஸலா.
அப்பியா. ந. ஸுஸீலா.

# துளசிபிருந்தா அல்லது
# விஷ்ணு ஜலந்தர் யுத்தம்

கூடிய சீக்கிரம் வெளிவரும்.

★

ராஜேஸ்வரி பிரஸ், மதுரை:—60.